**Copies can be had from the Assistant Director, Government Publication Depot, 110, Anna Salai, Chennai-600 002.**

©

**Published under Rules 280 and 283 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Director of Stationery and Printing, Chennai-600 002.**

*வெளியீடு :* 15-11-2011 Issued : 15-11-2011

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை
# நடவடிக்கைகள் செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT

**புதன்கிழமை, ஆகஸ்ட் 10, 2011—தொகுதி 5—எண் 2**

**Wednesday the 10th August 2011—Volume 5—No. 2**

*சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009*

**Legislative Assembly Secretariat, Chennai - 600 009**

விலை ரூ. **3.00]** **[Price Rs. 3.00**

## 10–8–2011

## உள்ளடக்கம்


| | பக்கங்கள் |
|---|---|
| **1. வினாக்கள்-விடைகள்—** | |
| (அ) உடுக்குறியிட்ட வினாக்கள் | 127-168 |
| (ஆ) உடுக்குறியிடாத வினாக்கள் | 169-203 |
| **2. Zero hour – விளக்கம்—** | 203-204 |
| *திரு. க. பாலகிருஷ்ணன் | 203 |
| மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா | 203-204 |
| **3. சிறப்புக் கவன ஈர்ப்பு—** | |
| சிவகாசி வட்டம், காளையார்குறிச்சி பட்டாசு தொழிற்சாலை வெடி விபத்தில் உயிரிழந்தவர்களுக்கு நிவாரணம் | 204-214 |
| *திரு. அ. சவுந்தரராசன் | 204-205 |
| திரு. சு. குணசேகரன் | 205-207 |
| டாக்டர் க. கிருஷ்ணசாமி | 207-208 |
| *மாண்புமிகு திரு. சி.த. செல்லப்பாண்டியன் | 208-214 |
| மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன் | 214 |
| **4. திருத்திய வரவு–செலவுத் திட்டம், 2011-2012, பொது விவாதம்**—தொடர்ச்சி | 214-295 |
| *திரு. ப. சிவக்கொழுந்து | 214-223 |
| *திரு. வி.பி. கலைராஜன் | 224-237 |
| டாக்டர் நான்சி ஆன் சிந்தியா பிரான்சிஸ் | 237-241, 243-246 |
| மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா | 241 |

| | |
|---|---|
| | *பக்கங்கள்* |
| **4. திருத்திய வரவு-செலவுத் திட்டம், 2011–2012, பொது விவாதம்—***தொடர்ச்சி* | |
| *திரு. எம். ரெங்கசாமி* | 246-256 |
| *மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்* | 257 |
| **திரு. ஆர். ராமமூர்த்தி* | 257-266 |
| *திரு. பு. வெற்றிவேல்* | 265 |
| *திரு. ஜெ. குரு என்கிற குருநாதன்* | 266-273 |
| *மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி* | 269 |
| *மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்* | 267,275 |
| *மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்* | 273 |
| *திரு. எஸ்.பி. முத்துக்குமரன்* | 273-278 |
| **திருமதி ம. சக்தி* | 278-282 |
| **திரு. ர.ம. பாபு முருகவேல்* | 282-295 |
| *திரு. சு. குணசேகரன்* | 294 |
| **5. பேரவையில் உரையாற்றும் முறை உள்ளிட்ட நடைமுறைகளை அறிந்துகொள்ளும் வகையில் அனைத்து உறுப்பினர்களுக்கும் பேரவை விதிகள் புத்தகம் வழங்க வேண்டியதன் அவசியம் . .** | 242-243 |
| *மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா* | 242-243 |
| **6. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்** | 296 |

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## திருவள்ளுவர் ஆண்டு 2042, ஆடி 25

## 2011 ஆகஸ்ட் 10, புதன்கிழமை

*சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர்* **திரு. டி. ஜெயக்குமார்** *அவர்கள் தலைமையில் காலை 10–00 மணியளவில் பேரவை கூடியது.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

*“இன்சொலால் ஈத்தளிக்க வல்லார்க்குத் தன்சொலால்*
*தான்கண் டனைத்திவ் வுலகு.”*

*எளிய மக்களிடம் இனிமையாகப் பேசி, தேவையானதைக் கொடுத்து, உதவி செய்யும் ஆட்சியாளருக்குப் புகழ் தானாக வந்து சேரும். அவர் விருப்பம்போல் குடிமக்களும் அமைவார்கள்.*

## 1. வினாக்கள்–விடைகள்

### (அ) உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா வரிசை எண் 15, மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. முத்துராமலிங்கம், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

15—

### தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள்

***345—திரு. ம. முத்துராமலிங்கம்:**

*மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) திருமங்கலம் தொகுதி, பேரையூர் வட்டம், டி. கல்லுப்பட்டியில் தீயணைப்பு நிலையம் புதியதாக அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

[2011 ஆகஸ்ட் 10

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா, முதலமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*(அ) மற்றும் (ஆ) திருமங்கலம் தொகுதி, டி.கல்லுப்பட்டியைச் சுற்றி 25 கிலோ மீட்டர் தொலைவிற்குள் வத்திராயிருப்பு, கள்ளிக்குடி, மயிலாடும்பாறை மற்றும் உசிலம்பட்டி ஆகிய நான்கு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. எனவே, மேற்கண்ட தீயணைப்பு மற்றும் மீட்புப் பணி நிலைய ஊர்திகளைக் கொண்டே இப்பகுதியில் ஏற்படும் தீ விபத்து மற்றும் மீட்புப் பணி அழைப்புகளை மேற்கொள்ள இயலும். எனினும், டி.கல்லுப்பட்டி மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளில் அதிக அளவில் குடிசை வீடுகள் உள்ள காரணத்தாலும், மேலே குறிப்பிட்ட தீயணைப்பு மற்றும் மீட்புப் பணி நிலையங்களிலிருந்து டி.கல்லுப்பட்டி செல்லும் சாலைகள் நல்ல நிலையில் இல்லாததால் தீயணைப்பு வண்டிகள் விரைந்து செல்ல இயலாத காரணத்தாலும், டி.கல்லுப்பட்டியில் ஒரு புதிய தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையம் அமைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

*இப்புதிய தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையத்திற்கு ஒரு நீர்தாங்கி வண்டி வழங்கப்படும். அவ்வாறு ஒரு நீர்தாங்கி வண்டியை அதற்குரிய உபகரணங்களுடன் வாங்க 25 இலட்சம் ரூபாயும் மற்றும் தளவாடங்களுக்கு ஒரு இலட்சம் ரூபாயும், ஆகமொத்தம் 26 இலட்சம் ரூபாய் தொடரா செலவினமாக அனுமதிக்கப்படும்.*

*இந்தத் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையத்திற்கு ஒரு தீயணைப்பு அலுவலர், இரண்டு முன்னணி தீயணைப்போர்கள், ஒரு இயந்திர கம்மியர் ஓட்டி அதாவது,* Driver Mechanic, *இரண்டு தீயணைப்போர் ஓட்டுநர்கள் மற்றும் 11 தீயணைப்போர்கள் ஆகிய பணியாளர்கள் ஒப்பளிப்பு செய்ய மற்றும் கட்டட வாடகை ஆகியவற்றிற்குத் தொடர் செலவினமாக ஆண்டொன்றுக்கு 50 இலட்சம் ரூபாயும் அனுமதிக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. முத்துராமலிங்கம் அவர்கள்.*



2011 ஆகஸ்ட் 10]

**திரு. ம. முத்துராமலிங்கம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அம்மா என்றால் அன்பு, அம்மா என்றால் துணிவு, அம்மா என்றால் பாசம் என்ற எடுத்துக்காட்டுக்கு ஒப்ப தமிழ்நாட்டினுடைய தன்னிகரில்லாத் தலைவர், மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்கி (மேசையைத் தட்டும் ஒலி) அடாவடித்தனமும் அட்டூழியமும் செய்து கொள்ளையடிக்கப்பட்ட பணங்களை, 'திருமங்கலம் ஃபார்முலா' என்ற ஒன்றை திருமங்கலம் இடைத் தேர்தலிலே காண்பித்தார்கள். அந்த இடைத் தேர்தலிலே போட்டியிடுகிற வாய்ப்பினை புரட்சித் தலைவி அம்மா எனக்கு வழங்கி, அதிலே வெற்றிபெறுவதற்குரிய முயற்சிகள் எல்லாம் மேற்கொண்டும்கூட, சூழ்ச்சியின் அடிப்படையிலே அந்த வெற்றிவாய்ப்பு பறிக்கப்பட்டது. 'திருமங்கலம் ஃபார்முலா'-வை முறியடிக்கக்கூடிய வகையில் பொதுத் தேர்தலிலே போட்டியிடுகிற வாய்ப்பினை மீண்டும் எனக்கு வழங்கிய, புரட்சித் தலைவி அம்மாவின் பொற்பாதங்களிலே என்னுடைய நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இந்தியத் திருநாட்டில் 'திருமங்கலம் ஃபார்முலா' என்பதை புரட்சித் தலைவி அம்மா அவர்களால் உடைத்தெறியப்பட்ட நல்ல செய்தியை உருவாக்கியதற்காக (மேசையைத் தட்டும் ஒலி) திருமங்கலம் தொகுதி மக்களின் சார்பில் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

*பின்தங்கிய பகுதிக்கு இந்தத் தீயணைப்பு நிலையத்தை புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கொடுத்து, அதற்கான உபகரணங்கள், வாகனங்கள் அத்தனையும் அனுமதித்ததற்காக என்னுடைய தொகுதி மக்களின் சார்பிலும், டி. கல்லுப்பட்டி பகுதி மக்களின் சார்பிலும், பாதங்கள் பணிந்து நன்றியினைத் தெரிவித்து விடைபெறுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள்.*

**திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1992 ஆம் ஆண்டு குளச்சல் பகுதியிலே ஆரம்பிக்கப்பட்ட தீயணைப்பு நிலையத்திற்குச் சொந்தமான கட்டடம் இல்லை. குறிப்பாக 50 கிராமங்களுக்குத் தேவையான அந்த . . .*

*முற்பகல் 10—05*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இது மூலக் கேள்விக்குத் தொடர்பில்லை.

*வினா வரிசை எண் 16, மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்க. தமிழ்ச்செல்வன், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

16—

**பாதுகாப்பு**

*668—**திரு. தங்க. தமிழ்ச்செல்வன்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

விவசாய நிலங்களைப் பாதுகாத்திட பார்த்தீனியம் செடியை அழிப்பதற்கு அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், வேளாண்மைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

பார்த்தீனியம் செடியை அழிப்பதற்கு எந்தத் திட்டமும் அரசிடம் இல்லை. இந்தச் செடியினை அழிப்பதற்கு உப்புக் கரைசல் தண்ணீரைத் தெளித்து அதன் மூலமாக அது அழிக்கப்படும் என்பதை வேளாண் இணை இயக்குநர் மூலமாக விவசாயிகளுக்கு அறிவுறுத்தப்படுகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்க. தமிழ்ச்செல்வன் அவர்கள்.

**திரு. தங்க. தமிழ்ச்செல்வன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வரலாற்றுச் சிறப்புமிக்க, அனைவராலும் போற்றத் தகுந்த, ஏற்றுக்கொள்ளப்பட்ட நிதிநிலை அறிக்கையை சமர்ப்பித்து, தமிழ்நாட்டில் மூன்றாவது முறையாக தமிழக முதலமைச்சராகப் பொறுப்பேற்றுள்ள, நாங்கள் நித்தம் நித்தம் வணங்கும் தமிழகத்தின் காவல் தெய்வம், கழக நிரந்தரப் பொதுச்





செயலாளர், (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பாதம் பணிந்து வணங்கி எனது கேள்விக் கணையைத் தொடங்குகின்றேன். இந்தக் கேள்வி கேட்கப்பட்டதன் நோக்கம், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் நிதிநிலை அறிக்கையில் முற்போக்கான சிந்தனை, எந்த அரசும் கொண்டுவராத திட்டம், பசுமைப் புரட்சித் திட்டம். இந்த 5 ஆண்டுகளில் இந்தத் திட்டத்தை முடித்துவிடுகிறேன் என்று மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் சொல்லவில்லை. 2025 ஆம் ஆண்டு வரை இந்தத் திட்டத்தை நீட்டித்து அந்தப் பசுமைப் புரட்சித் திட்டத்திற்கு வேண்டிய ஆதாரமான மின் உற்பத்தியைச் செய்து, நீர் வளத்தைக் கொடுத்து, சொட்டு நீர்ப் பாசனக் கருவிகளை வழங்கி, சிறப்புச் செய்திருக்கின்ற மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) இந்தப் பார்த்தீனியம் செடி விவசாய நிலத்தை எப்படிப் பாதிக்கிறதென்றால், முதலில் அந்தச் செடியினுடைய தன்மையைப்பற்றி நான் கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். ஒரு செடி முளைத்து அது விதை விடுகின்றபொழுது, குறைந்தது 100 விதை முதல் 10,000 விதை வரை உற்பத்தி செய்யக்கூடிய தன்மை கொண்டது, அது நிலத்தின் தன்மையைப் பொறுத்தது. அந்தச் செடி விரைவாக வளர்ந்து பயிர்களை நாசம் செய்கிறது. இது தமிழ்நாடு முழுவதும் இருக்கிற செய்தி. இரண்டாவது, இந்த விதை கெடாமல் 2 வருடம் நிலத்திலேயே தங்கியிருக்கிறது. எந்தக் காலத்திலும் இந்த விதை முளைக்கலாம். இப்படிப்பட்ட அபாயகரமான செடி இந்தப் பார்த்தீனியம் செடி. இந்தச் செடியினால் என்னென்ன கொடுமைகள் ஏற்படுகிறதென்றால், மனிதர்களுக்கு அலர்ஜி ஏற்படுகிறது. கையில், காலில் பட்டால் அரிப்பு ஏற்படுகிறது. கால்நடைகள் புல்லைத் தின்கின்றபொழுது பார்த்தீனியம் செடியையும் சேர்த்து தின்கின்றபொழுது, கால்நடைகளுக்குக் காய்ச்சல் வருகிறது. நிலமும் பாதிக்கப்படுகிறது. இப்படிப்பட்ட கொடிய செடியை—மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள், 2 லிட்டர்...

[2011 ஆகஸ்ட் 10

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கேள்விக்கு வாருங்கள் திரு. தங்க. தமிழ்ச்செல்வன்.

**திரு. தங்க. தமிழ்ச்செல்வன்:** கேள்வியைத்தான் கேட்கிறேன், முடித்துவிடுகிறேன். முக்கியமான கேள்வி என்பதால் சொல்கிறேன், பேரவைத் தலைவர் அவர்களே. ஒரு லிட்டர் தண்ணீரில் 200 கிராம் கல் உப்புக் கரைசலோடு, இரண்டு மில்லி லிட்டர் சோப்பு ஆயிலைக் கலந்து செடி முழுவதும் நனையுமாறு தெளித்தால், பார்த்தீனியம் செடி பட்டுப்போகும். நான் வரவேற்கிறேன். இதை ஒவ்வொரு விவசாயியும் செய்ய முடியாது. புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கண்ணுக்குத் தெரியாத காட்டுக்குள் ஒளிந்திருந்த சந்தனக் கடத்தல் வீரப்பனைச் சுட்டு வீழ்த்தி வரலாற்றுச் சாதனை படைத்தவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இந்தச் செடியை அழிப்பதற்கு தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள், கல்லூரிகளில் இருக்கின்ற மாணவ, மாணவிகள், அரசு அலுவலர்கள், பொதுமக்கள், 100 நாட்கள் வேலை செய்யக்கூடிய தொழிலாளிகள் மற்றும் விவசாயிகள் அமைப்புகளின் network–ஐ மொத்தமாக வைத்து, புரட்சித் தலைவி அம்மா அவர்கள் புரட்சி செய்தால் இந்த விஷச் செடியை அழிக்க முடியும் என்பதைப் பேரவைத் தலைவர் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்க. தமிழ்ச்செல்வன் சொன்ன யோசனை நல்ல யோசனை. அரசு இதை மேற்கொண்டு, இந்தப் பார்த்தீனியம் செடி ஒழிப்பை ஓர் இயக்கமாகவே எடுத்துக் கொண்டு (மேசையைத் தட்டும் ஒலி) தமிழ்நாடு முழுவதும் உள்ள நிலங்களில் பார்த்தீனியம் செடியை ஒழிப்பதற்கு தமிழக அரசு தேவையான நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ஆறுமுகம் அவர்கள்.



2011 ஆகஸ்ட் 10]

**திரு. எம். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் இந்தக் கேள்விக்கு விடை அளிக்கின்றபோது, விஷச் செடியான பார்த்தீனியம் செடியை தமிழகம் முழுவதும் ஓர் இயக்கமாகவே நடத்தி முழுமையாக ஒழிப்பதாகச் சொல்லியிருக்கின்றார்கள். உண்மையிலேயே பாராட்ட வேண்டும், நன்றி செலுத்த வேண்டும். விவசாய விளைநிலங்களில் முழுமையாக இந்தச் செடி முளைக்கின்றது. அமெரிக்காவிலிருந்து PL 480 ஏற்றுமதி செய்த கோதுமையிலிருந்து இந்தியாவிற்குள் கொண்டுவரப்பட்ட ஒரு விஷச் செடிதான் இது. இது நம்முடைய விளை நிலங்கள் முழுவதையும் கடுமையாகப் பாதித்துக் கொண்டிருக்கின்றது. எனவே, இச்செடியை அழிப்பதற்காக எடுத்துக் கொண்டிருக்கக்கூடிய முயற்சிகள் சரியானவை. இதனால், மனிதர்களுக்கு ஏற்படக்கூடிய தோல் வியாதியைக் கட்டுப்படுத்தக்கூடிய முறையிலும் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 10—10

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தின் இணையற்ற முதலமைச்சராக இருக்கிற புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டதற்குப் பிறகு, இந்தத் துறை அதை விரைவாகச் செயல்படுத்தும் என்பதை உங்களுக்கு நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்க.தமிழ்ச்செல்வன் அவர்கள்.

**திரு. தங்க. தமிழ்ச்செல்வன்:** மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு, பாதம் பணிந்து, எனது நன்றியைக் கூறிக்கொண்டு விடைபெறுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ந. நஞ்சப்பன் அவர்கள்.

[2011 ஆகஸ்ட் 10

**திரு. ந. நஞ்சப்பன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நச்சுத் தன்மை உள்ள பார்த்தீனியம் செடி எங்கிருந்து, எப்பொழுது நம்முடைய நாட்டிற்குக் கொண்டுவரப்பட்டது? பார்த்தீனியம் செடிகளால் வேளாண்மைக்கும், தாவரங்களுக்கும், மனிதர்களுக்கும் என்னென்ன தீமைகள் ஏற்படுகின்றன? இதை அழிப்பதற்கு அறிவியல்பூர்வமான அறிக்கை ஏதேனும் அரசின் வசம் உள்ளதா என அறிய விரும்புகிறேன்.*

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் மூலமாக இதுகுறித்து ஆய்வு செய்யப்பட்டது. இதைப் பொறுத்தவரையிலும் பல்வேறு மாநிலங்களில் பரவி, தமிழ்நாட்டிலும் பரவியிருக்கிறது. பார்த்தீனியம் செடி என்பது காற்றின்மூலம் விதைகள் பரவி விழுந்து, அதன்மூலமாக ஆயிரக்கணக்கான செடிகள் உற்பத்தி ஆகின்றன. விவசாயிகளுக்கு வேலையாட்கள் கிடைக்காத காரணத்தின் அடிப்படையில், வேளாண்மை செய்கின்றபோது, அவற்றை அப்புறப்படுத்துவதற்கு முடியாத சூழ்நிலை ஏற்படுகின்ற காரணத்தால், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் சொன்னதைப்போல, 100 நாட்கள் வேலை செய்கின்றவர்களைப் பயன்படுத்தி, சாலையோரங்களிலும், விவசாய நிலங்களிலும் இருக்கின்ற பார்த்தீனியம் செடிகளை அப்புறப்படுத்துவதன் மூலமாக, வேளாண்மை செய்யப்படுகிற விவசாய நிலங்களுக்கு அது பரவாமல் பார்த்துக்கொள்வதற்கு உடனடி நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா வரிசை எண் 17, மாண்புமிகு உறுப்பினர் திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

17—

### மின் உற்பத்தி

***735—திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ்:**

*மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*



2011 ஆகஸ்ட் 10]

*(அ) தனியார் மின் உற்பத்தியை ஊக்கப்படுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி தமிழகத்தின் முதலமைச்சர் அம்மா அவர்களுடைய ஆணையின்படி, எனக்கு இந்த மைக்கை உயர்த்திக் கொடுத்த உங்களுக்கு முதலிலே எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். (சிரிப்பு)*

*மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) மத்திய மின்சாரச் சட்டம் 2003—ன்படி தனியார் மின் உற்பத்தி நிலையங்கள் நிறுவ அரசின் அனுமதி எதுவும் தேவையில்லை. தனியார் உற்பத்தி செய்கின்ற மின்சாரத்திற்கு கட்டமைப்பு வசதிகளைப் பயன்படுத்திக்கொள்வதற்கு மட்டும் விண்ணப்பித்தால் போதுமானது. நமது புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு தனியார் மின் உற்பத்தித் திறன்களை நிச்சயமாக ஊக்கப்படுத்தும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ் அவர்கள்.*

**திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களே, மாண்புமிகு சட்டப் பேரவை உறுப்பினர்களே அனைவருக்கும் வணக்கம். வரலாற்றுச் சிறப்புமிக்க தமிழக சட்டப் பேரவையில் என்னையும் சட்டமன்ற உறுப்பினராக ஆக்கி அழகுபார்த்த, நான் வணங்குகிற என் இதய தெய்வம், தேசிய முற்போக்கு திராவிடக் கழகத்தினுடைய நிறுவனத் தலைவரும், தமிழக சட்டமன்றத்தின் எதிர்க் கட்சித் தலைவருமான, மாண்புமிகு டாக்டர் புரட்சிக் கலைஞர், கேப்டன் அவர்களின் பொற்பாதம் பணிந்து (மேசையைத் தட்டும் ஒலி) எனது கோடானுகோடி நன்றி மலர்களைக் காணிக்கையாக்குகின்றேன். என்னை மாபெரும் வெற்றியடையச் செய்து, சட்டமன்றத்திற்கு அனுப்பி*

[2011 ஆகஸ்ட் 10

வைத்த சேலம் (வடக்கு) தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கும், எனது வெற்றிக்காக இரவு பகல் பாராமல் உழைத்திட்ட எனது. கட்சியின் நிர்வாகிகளுக்கும், கழகத் தோழர்களுக்கும், அதிமுக—வின் நாடாளுமன்ற உறுப்பினர், மாமன்ற உறுப்பினர்கள், நிர்வாகிகளுக்கும், கழகத் தோழர்களுக்கும், கூட்டணிக் கட்சியின் தலைவர்களுக்கும், நிர்வாகிகளுக்கும், தொண்டர்களுக்கும், எனது வெற்றிக்காகப் பிரச்சாரம் செய்ய வந்த எங்களின் போற்றுதலுக்குரிய அண்ணியார், திருமதி பிரேமலதா விஜயகாந்த் அவர்களுக்கும், மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கும் என் நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கின்றேன். மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் தாக்கல் செய்யப்பட்ட வரியில்லாத முழு நிதிநிலை அறிக்கையை, அறிஞர்கள், பொருளாதார நிபுணர்கள், தொழில் அதிபர்கள், நடுநிலையாளர்கள், நடுத்தர மக்கள், ஏழையெளிய மக்கள் என அனைவரும் பாராட்டுகின்றனர்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர், கேள்வியைக் கேளுங்கள்.

**திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ்:** ஓரிரு வார்த்தைகள். மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் ஆட்சிக்கு வந்த உடனே, இந்த இரண்டு மாதத்திற்குள்ளாக, இருண்டு கிடந்த தமிழகத்தில் ஒளியேற்றுவதற்காக, சத்தீஸ்கர் மாநிலத்திலிருந்து நிலக்கரிச் சுரங்கம் மூலமாகவும், தமிழ்நாடு, மராட்டியம் மற்றும் தனியார் பங்களிப்போடு யூனிட் ஒன்றுக்கு ஒரு ரூபாய் 99 பைசா விலையில் 630 மெகாவாட் மின் உற்பத்தி வழங்க வேண்டுமென்று ஆணையிட்டிருக்கிறார்கள்.

முற்பகல் 10—15

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மூலக் கேள்விக்குத் தொடர்பில்லை, உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாலகிருஷ்ணன் அவர்கள்.

**திரு. க. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டின் மின் உற்பத்திக்காக தனியார் நிறுவனங்கள் பெற்றிருக்கிற அனுமதியைக் கணக்கிட்டுப் பார்த்தால் சற்றேறக்குறைய 32 ஆயிரம் மெகாவாட் மின்சார உற்பத்திக்கு அனுமதி பெற்றிருக்கிறார்கள். தூத்துக்குடி மாவட்டத்தில் மட்டும்



2011 ஆகஸ்ட் 10]

12 ஆயிரம் மெகாவாட், கடலூரில் 14 ஆயிரம் மெகாவாட், நாகப்பட்டினத்திலே 9 ஆயிரம் மெகாவாட் என்று மின் உற்பத்திக்கு அனுமதி பெற்றிருக்கிறார்கள். ஆனால், நமது தேவை 12 ஆயிரம் மெகாவாட். இன்னும் சில ஆண்டுகளில் 15 ஆயிரம், 20 ஆயிரம் மெகாவாட் என்று கூடலாம். எனவே, உண்மையிலேயே தனியார்கள் மின் உற்பத்திக்காகத்தான் அனுமதியைப் பெற்றிருக்கிறார்களா அல்லது மின் உற்பத்தியைக் காரணம் காட்டி நிலங்களை வளைத்துப் போடுவதற்காக அனுமதி பெற்றிருக்கிறார்களா என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெளிவுபடுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்ற ஆட்சிக் காலத்திலே 10 தனியார் மின் உற்பத்தி நிறுவனங்கள், மொத்தம் 17,140 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்வதற்காக அனுமதி பெற்றார்கள். ஆனால், இடையிலே மத்திய அரசினுடைய சட்டம், மாநில அரசினுடைய அனுமதி தேவையில்லை என்று சொன்னதற்குப் பின்பு அந்த அனுமதிகள் அத்துணையும் ஒட்டுமொத்தமாக இரத்து செய்யப்பட்டுவிட்டன. தனியார் மின் உற்பத்தி நிறுவனங்கள் விரும்பினால் அவர்கள் விருப்பம்போல தனியார் மின் உற்பத்தி நிலையங்களை ஏற்படுத்திக்கொள்ளலாம். அதற்கு மாநில அரசினுடைய எந்த அனுமதியும் பெறத் தேவையில்லை. ஆனால், அவர்கள் உற்பத்திச் செய்வதற்கு இரண்டே இரண்டு அனுமதியைப் பெற்றால் மட்டும் போதும். சுற்றுச்சூழல் துறையிலிருந்து அனுமதியும், தமிழ்நாடு மின்சார வாரியத்தின், அதாவது E.B.-யின் கட்டமைப்பு வசதிகளைப் பயன்படுத்திக் கொள்வதற்கு மட்டும் அவர்கள் விண்ணப்பித்தால் போதும். தனியார் விண்ணப்பித்தால்கூட, அவர்கள் உற்பத்தி தொடங்குகின்ற நிலைக்கு பணிகளை முடித்துவிட்டு விண்ணப்பித்தால், கட்டாயமாக மின் இணைப்பு வசதிகளையும் மின்சார வாரியம் கொடுக்க வேண்டுமென்று மத்திய அரசுச் சட்டம் வலியுறுத்துகிறது. ஆகவே, தனியார்கள் தொடங்குகின்ற எந்தத் திட்டத்திற்கும் அவர்கள் விருப்பப்படி தொடங்கிக்கொள்ளலாம். அதிலே மாநில அரசு தலையிட முடியாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆனாலும்கூட,

[2011 ஆகஸ்ட் 10

நமது உறுப்பினர் சொன்னதுபோல, இந்த 10 நிறுவனங்கள் அனுமதி பெற்றிருந்தாலும், அதிலே 5 நிறுவனங்கள் தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரியத்தால் தடை செய்யப்பட்டிருக்கின்றன. ஏனென்று சொன்னால், காவிரி படுகைக்குப் பக்கத்திலே 5 கிலோ மீட்டர் உட்பகுதியிலே நிலம் கையகப்படுத்தியிருப்பதால், சுற்றுச்சூழல் துறை அதைத் தடுத்திருக்கிறது. எனவே, தடை செய்யப்பட்ட நிறுவனங்கள் வருவதற்கு வாய்ப்பில்லை, மீதி இருக்கின்ற 5 நிறுவனங்கள் உற்பத்தியைத் தொடங்குவதற்கு எல்லா அனுமதியையும் பெற்றிருக்கின்றன. அதிலே 3 நிறுவனங்கள் 3,250 மெகாவாட் அளவிற்கு மின் உற்பத்திச் செய்வதற்குரிய நடவடிக்கைகளை எடுத்துள்ளன. நிச்சயமாக 2012 ஆம் ஆண்டுக்குள் 3,250 மெகாவாட் மின் உற்பத்தியைத் தொடங்குகின்ற நிலையில் இருக்கின்றன. மற்ற நிறுவனங்கள் இன்னும் ஆயத்தப் பணியிலேதான் இருக்கின்றன. அவர்கள் இன்னும் பணிகளைத் தொடங்கவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.ஆர். ரெங்கராஜன் அவர்கள்.

**திரு. என்.ஆர். ரெங்கராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதலிலே இந்த மைக்கை உயர்த்திக் கொடுத்த தங்களுக்கும், எங்களுக்குப் பரிந்துரை செய்த மரியாதைக்குரிய தமிழக முதல்வர் அவர்களுக்கும், உயரமான M.L.A.க்கள் அத்துணை பேரின் சார்பாகவும் என்னுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்தவரையிலே, தென்னை அதிகமாக இருக்கக்கூடிய பகுதி. தென்னை மரங்களிலிருந்து விழக்கூடிய உரி மட்டைகள் அதேபோன்று கிராமப் பகுதிகளிலே கருக்கு மட்டை என்று சொல்வார்கள் அந்த மட்டைகளெல்லாம் வீணாகத்தான் அழிந்து கொண்டிருக்கின்றன. அதையெடுத்து குறிச்சி என்ற பகுதியிலே ஒரு ஆலை அமைத்து தற்போது மின்சார உற்பத்தி செய்து கொண்டிருக்கிறார்கள். அதேபோன்று, மாவட்டங்களிலுள்ள தென்னை மரங்களின் கழிவுகளை முழுமையாகப் பயன்படுத்தக்கூடிய வகையிலே அரசு ஏதேனும் திட்டங்களை அறிவித்து, விவசாயிகளுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தி, புதிய தொழிற்சாலைகளை உருவாக்குவதற்கு ஆவன செய்யுமா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.



2011 ஆகஸ்ட் 10]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னது bio-mass என்று சொல்லக்கூடிய நல்ல திட்டம். அதையும் நம்முடைய அம்மா அவர்களின் அரசு, யார் யார் தொழில் தொடங்க முன்வருகிறார்களோ அத்துணைப் பேருக்கும், அத்துணை உதவிகளையும் செய்வதற்காகத் தயாராக இருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

சில தனியார் நிறுவனங்கள் இதிலே இப்பொழுது ஆர்வம் காட்டத் தொடங்கியிருக்கின்றன. அவர்களை ஊக்கப்படுத்துவதற்கு இந்த அரசு எல்லா நடவடிக்கைகளையும் எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10—20

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள்.

**திரு. ச. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மின் துறை அமைச்சர் அவர்கள் சொன்ன பதில் மாநில நலனுக்கே ஆபத்தான வகையிலே அமைந்திருக்கிறது. மின் பற்றாக்குறைக்கு மாநிலம் பொறுப்பு. ஆனால், தனியார் மின் உற்பத்தி நிறுவனங்கள் மாநில அரசை கலந்தாலோசிக்க வேண்டிய அவசியமில்லை, மத்திய அரசு தன் விருப்பம்போல் அனுமதி அளிக்கலாம் என்ற நிலை இருந்தால், தனியார்கள் மின் உற்பத்தியைச் செய்யாமல் விடுகிறபோது, அதனாலே பாதிக்கப்படுவது மாநில அரசுதான். மாநிலத்திற்குத்தான் பற்றாக்குறை ஏற்படும். ஆகவே, மின்சாரம் என்பது பொதுப் பட்டியலிலே இருக்கின்றபொழுது மத்திய அரசு, தனியார் நிறுவனங்களுக்கு அனுமதி வழங்குகின்றபொழுது குறைந்தபட்சம் மாநில அரசைக் கலந்துகொள்ளவோ அல்லது சம்மதிக்கவோ இருக்கின்ற வகையிலே அந்தச் சட்டத்தைத் திருத்துவதற்கு தமிழ்நாடு அரசு மத்திய அரசை வற்புறுத்துமா என்பதை அறிய விரும்புகிறேன். இன்னும்

[2011 ஆகஸ்ட் 10

சொல்லப்போனால், தனியார்களுக்கு அனுமதி வழங்கியதன் விளைவுதான் இன்றைக்கு காலதாமதமும், மின் பற்றாக்குறையும். அதனாலே அனைத்து நஷ்டங்களும் தமிழ்நாட்டிற்கு ஏற்பட்டிருக்கின்றன. ஆகவே, மின் உற்பத்திக்கு அரசு முன்னுரிமை அளிக்கின்ற வகையில் சட்டத்தில் வழிவகை செய்வதற்கு தமிழக அரசு நடவடிக்கை எடுக்குமா எனத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதலில் மின் உற்பத்தி செய்கின்ற தனியார் நிறுவனங்களுக்கு அனுமதி கொடுத்திருந்தாலுங்கூட, அவர்கள் எந்த மாநிலத்திலும், குறிப்பாக தமிழ்நாட்டிலே உற்பத்தி செய்யப்படுகின்ற மின்சாரத்திற்கு– wheeling charges – அவர்கள் நமது கட்டமைப்பு வசதிகளைப் பயன்படுத்திக்கொள்வதற்கு அனுமதி கேட்டு வருகின்றபொழுது—அவர்களை இரண்டு வகையாகப் பிரிக்கலாம். ஒன்று. C.P.P. Captive Power Plant – தன்பயன் மின்னாக்கித் திட்டம். Captive Power Plant–ல் அவர்கள் உற்பத்தி செய்கின்ற மின்சாரத்தை தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு விற்கலாம் அல்லது தமிழ்நாட்டின் எல்லைக்குள்தான் விற்க வேண்டும். தனியாருக்கு விற்றாலும்கூட, பிற மாநிலங்களுக்கு விற்க இயலாது. அப்படி ஒரு நிலையிருக்கிறது.

இரண்டாவது, தனியார் மின் உற்பத்தி நிலையங்கள் – I.P.P. Independent Power Plant. அவர்கள் சுயமாக உற்பத்தி செய்து, தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு விற்கலாம் அல்லது மாநில எல்லையைவிட்டுக்கூட பிற யாருக்கு வேண்டுமானாலும் விற்றுக்கொள்ளலாம். இப்படி இரண்டு வகையான தனியார் மின் உற்பத்தி நிலையங்கள் இங்கே செயல்படுகின்றன. மற்றொரு வகை தனியார் மின் உற்பத்தி நிலையங்கள் Joint venture – கூட்டமைப்பு தமிழ்நாடு மின்சார வாரியத்தோடு இணைந்து தனியாருடைய முதலீட்டுடன் மின்சார வாரியத்தோடு இணைந்து Joint venture முறையிலும், கூட்டமைப்பு முறையிலும் அந்தத் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன. அப்படி Joint venture முறையிலே



2011 ஆகஸ்ட் 10]

வருகின்ற மின் நிறுவனங்களிடமிருந்து முழுமையாக நூறு சதவிகித மின் உற்பத்தியையும் தமிழ்நாடு மின்சார வாரியமே பெற்றுக்கொள்ளும். இந்த மூன்று அடிப்படை பிரிவுகளிலேதான் தனியார் மின் உற்பத்தி நிறுவனங்களை நிறுவ முடியும். ஆகவே, தனியார் மின் உற்பத்தி நிறுவனங்கள் வருவது தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு ஏற்புடையதுதான் என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

மற்றொரு வகையிலே, பொதுப் பட்டியலிலே வருகின்ற மின்சார வாரியத்தினுடைய சட்டத்தை தன்னிச்சையாக மத்திய அரசு கொண்டுவந்திருக்கிறது என்று மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் சொன்னார்கள். ஏற்கெனவே, பொதுப் பட்டியலிலே வருகின்ற பல துறைகளை மத்திய அரசு எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். அந்த வகையிலே நிச்சயமாக இதுவும் மாநில அரசினுடைய உரிமையை மீறிய செயல்தான். ஆனாலும், இந்தத் திட்டங்கள் ஏற்கெனவே நடைமுறைக்கு வந்துவிட்டன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். தனியார் மின் உற்பத்தி நிறுவனங்கள் மாநில அரசு மட்டுமல்ல, மத்திய அரசினுடைய அனுமதியைக்கூட பெறத் தேவையில்லை என்பதுதான் விதி. மத்திய சுற்றுச்சூழல் துறையினுடைய அனுமதி, மாநிலத்தில் இருக்கின்ற சுற்றுச்சூழல் துறையினுடைய அனுமதி ஆகிய இந்த இரண்டுத் துறைகளினுடைய அனுமதியை மட்டும் பெற்றால் போதும் என்றுதான் அதில் குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆகவே, மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் சொன்னதைப்போல, இதில் மாநில அரசினுடைய உரிமையை மத்திய அரசு தட்டிப் பறித்திருக்கிறது. இது கொள்கை விஷயம் என்பதால், நமது மாண்புமிகு அம்மா அவர்கள் இதில் ஒரு சுமுகமான முடிவு எடுத்து அதற்குரிய நடவடிக்கையை எடுப்பார்கள் என்பதை உங்களுக்கு அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10–25

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2001–இலே இந்தச் சட்டம் கொண்டுவரப்பட்டபோது, அன்றைய முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மிகக் கடுமையாக அதற்கு எதிர்ப்புத் தெரிவித்து வாதிட்டார்கள்,

[2011 ஆகஸ்ட் 10

போராடினார்கள். இருந்தாலும், அதை மத்திய அரசு புறக்கணித்துவிட்டு, அவர்கள் இந்தச் சட்டத்தை நிறைவேற்றியிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதோடு மட்டுமல்ல, தமிழ்நாடு மின்சார வாரியத்தை மூன்று வகையாகப் பிரிப்பதற்கும் மத்திய அரசு சட்டம் கொண்டு வந்தது. அந்தச் சட்டத்திலே, உற்பத்தி, பகிர்மானம் மற்றும் மின் தொடர்பு என மூன்றாகப் பிரிக்க வேண்டுமென்று சொன்னார்கள். இப்படி மூன்றாகப் பிரிப்பது நிருவாகத்திற்கு வீணான செலவுகளை ஏற்படுத்தும் என்று புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அன்றைக்கு வாதிட்டார்கள். அதோடு மட்டுமல்லாமல், மாநில அரசினுடைய அதிகாரத்திற்குட்பட்ட தமிழ்நாடு மின்சார வாரியத்தை, பொதுப் பட்டியலிலே இருப்பதை, தன்னிச்சையாகப் பிரிக்க வேண்டுமென்று சட்டம் கொண்டுவந்தது தவறு என்பதையும் அன்றைக்கு அம்மா அவர்கள் கடுமையாக எதிர்த்தார்கள். இருந்தாலும்கூட அந்த எதிர்ப்புகளையெல்லாம் அவர்கள் புறக்கணித்துவிட்டு இந்த இரண்டு சட்டங்களையும் மத்திய அரசு நிறைவேற்றிவிட்டது என்பதை மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களுக்கு அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி அவர்கள்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அண்மையில் தமிழகத்தில் தொடங்கப்பட்ட தனியார் மின் நிறுவனங்கள், குறிப்பாக தூத்துக்குடி மாவட்டத்தில் Coastal Energen என்று சொல்லக்கூடிய ஒரு மிகப் பெரிய கம்பெனி, அதேபோல Ind-Bharath என்ற கம்பெனி, 3,000 ஏக்கர், 4,000 ஏக்கர் என ஏழையெளிய மக்களுடைய நிலங்களை. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மூலக் கேள்வி, தனியார் மின் உற்பத்தியை ஊக்கப்படுத்துவது சம்பந்தப்பட்டது. அதிலே ஏதாவது கேளுங்கள். Existing Companies பற்றி கேட்க வேண்டுமென்றால் நீங்கள் தனிக் கேள்வி போடலாம். (குறுக்கீடு) Separate question போடுங்கள் டாக்டர். மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன் அவர்கள்.



2011 ஆகஸ்ட் 10]

**திரு. சு. குணசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மின்சாரம் பல வகைகளிலே உற்பத்தி செய்யப்படுகிறது. அணுமின் உற்பத்தி, அனல் மின்சாரம், நீர் மின்சாரம், சூரிய ஒளியிலிருந்து bio-mass. தனியார் துறையின்மூலம் மின் உற்பத்தி என்பது, இப்படி எல்லா வகைகளிலும் மின்சாரத்தை உற்பத்தி செய்வதற்கும், கொடுப்பதற்குமான வழிவகைகளை மத்திய அரசு செய்திருக்கிறதா என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவிக்க வேண்டுமென்று தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனியார் உற்பத்தி செய்கின்ற மின் திட்டங்கள், அது நிலக்கரி மூலமாக இருந்தாலும் சரி அல்லது வாயுக்கள் மூலமாக இருந்தாலும் சரி அல்லது bio-mass- இயற்கை எரிவாயு மூலமாக இருந்தாலும் சரி அல்லது காற்றாலை மூலமாக இருந்தாலும் சரி அல்லது சூரிய சக்தியின் மூலமாக இருந்தாலும் சரி, எல்லா வகைகளிலும்—தெர்மல், நிலக்கரி—ஆக, அனைத்து வகையான மின் உற்பத்தியிலும் தனியார்கள் மின் உற்பத்தி நிலையங்களைத் தொடங்கிக் கொள்ளலாம். ஆனால், ஒரே ஒரு விதிவிலக்கு உள்ளது. அதாவது, நீர் மின் நிலையங்கள்—Hydro project-க்கு மட்டும் தனியார் உற்பத்தி செய்வதற்கு அனுமதியில்லை. மின்சார வாரியம்தான் அந்த உற்பத்தியைச் செய்ய வேண்டுமென்று ஒரே ஒரு விதிவிலக்கு மட்டும் இருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி அவர்கள்.

**செல்வி கே. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்ற ஆட்சியின்பொழுது, சென்னை நகரையொட்டி இருக்கக்கூடிய பன்னாட்டு நிறுவனங்கள் பயன்படுத்தக்கூடிய மின்சாரத்திற்கான கட்டணம் மிகக் குறைவாக அமைந்திருந்தது என்று தெரியப்படுத்திக்கொண்டே இருந்தோம்.

[2011 ஆகஸ்ட் 10

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இது related question இல்லை. Please sit down. இந்தக் கேள்வி மின் உற்பத்தி சம்பந்தமானது. அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். அருள்செல்வன். (குறுக்கீடு) நீங்கள் கேட்கிற கேள்வி மூலக் கேள்விக்குத் தொடர்பில்லாதது. (குறுக்கீடு) சரி, சொல்லுங்கள்.

**செல்வி கே. பாலபாரதி:** மின் கட்டணம் மிகக் குறைவாக இருப்பதனால், அரசுக்கு நஷ்டம் ஏற்படுகிறது, மின் துறைக்கு நஷ்டம் ஏற்படுகிறது. அடுத்த மின் உற்பத்தியைச் செய்வதற்கு சிரமங்களைத் தருகிறது. ஆகவே, பன்னாட்டு நிறுவனங்கள் பயன்படுத்தக்கூடிய மின் கட்டணம் எவ்வளவு என்பதனை ஆய்வு செய்து, அதை தமிழகத்தினுடைய நிறுவனங்களுக்குச் சமமாக மாற்றுவதற்கு அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனிக் கேள்வி போட்டால் இதற்கான அனைத்து விவரங்களையும் தருவதற்கு வசதியாக இருக்கும். மானியக் கோரிக்கையில் வேண்டுமென்றால் அதற்குரிய. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** Generation is different from tariff. நீங்கள் கேட்பது tariff. எனவே, தனிக் கேள்வி போடுங்கள், பதில் வரும்.

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** மானியக் கோரிக்கையில் இதற்குரிய முழு விவரங்களையும் பதிலாகத் தருகிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10–30

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். அருள்செல்வன் அவர்கள்.

**திரு. ஆர். அருள்செல்வன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு வணக்கம். என் நெஞ்சமெல்லாம் நிறைந்த தலைவர் கேப்டன் அவர்களுக்கு என்னுடைய வணக்கத்தினைத்



2011 ஆகஸ்ட் 10]

தெரிவித்துக்கொண்டு, மரியாதைக்குரிய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசியபோது, சுற்றுச்சூழல் அனுமதியில்லாத காரணத்தினால், காவிரிக் கரையோரமாக இருக்கின்ற காரணத்தினாலே, தனியார் மின் உற்பத்திக்கு அனுமதி மறுக்கப்படுகிறது என்று சொன்னார்கள். நான் சார்ந்து இருக்கின்ற நாகை மாவட்டத்திலே, கடலோரப் பகுதியிலே பார்த்தீர்கள் என்று சொன்னால், மீனவர்கள் வாழ்கின்ற கடலோரப் பகுதிகள் அனைத்திலுமே தனியார் மின் நிலையங்கள் தொடர்ந்து அமைக்கப்பட்டு வருகின்றன. தொடர்ந்து பொதுமக்கள் மத்தியிலும் போராட்டங்கள் நடந்து கொண்டே இருக்கின்றன. ஆனால், அந்தப் பகுதியிலே சுற்றுச்சூழல் பாதித்து மீனவர் குடும்பங்கள் எல்லாம் பாதிக்கப்பட்டு வருகின்றன. அதற்கு சுற்றுச்சூழல் அனுமதி மறுக்கப்படுமா என்று கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 10 தனியார் மின் உற்பத்தி நிறுவனங்கள் மத்திய அரசினுடைய சுற்றுச்சூழல் துறையினுடைய அனுமதியைப் பெற விண்ணப்பிக்கப்பட்டு, காவிரிக் கரையோரத்தில் உள்ள ஐந்து நிறுவனங்களுக்கு மட்டும் மத்திய அரசின் சுற்றுச்சூழல் துறை அனுமதி அளித்திருக்கிறது. மற்ற ஐந்து நிறுவனங்கள் காவிரிக் கரைக்கு உட்பகுதியிலே ஐந்து கிலோ மீட்டர் எல்லைக்குள் அமைய இருக்கின்ற சூழ்நிலையால், அதையெல்லாம் அவர்கள் இரத்து செய்திருக்கிறார்கள். ஆகவே, ஐந்து கிலோ மீட்டர் தொலைவிற்கு அப்பால் அமைக்கப்படுகின்ற தனியார் மின் உற்பத்தி நிலையங்களைத் தடுப்பதற்குச் சட்டத்தில் எந்த வகையிலும் இடம் இல்லை. ஆனால், பொதுமக்களுடைய எதிர்ப்பு இருந்தால், அதை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கவனத்திற்குக் கொண்டு சென்று அதற்குரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 18, மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. தாமோதரன், மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

18—

## பேருந்து நிலையம்

***73—திரு. செ. தாமோதரன்:**

*மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*கிணத்துக்கடவு தொகுதி, குறிச்சி நகராட்சியில் பேருந்து நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*குறிச்சி நகராட்சிப் பகுதியில் பேருந்து நிலையம் அமைக்கும் செயல்திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. தாமோதரன் அவர்கள்.*

**திரு. செ. தாமோதரன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மீண்டும் எனக்கு கிணத்துக்கடவு தொகுதியிலே சட்டமன்ற வேட்பாளராகப் போட்டியிட வாய்ப்பு அளித்து, மூன்றாவது முறையாக என்னை வெற்றிபெறச் செய்த மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்களுக்கு என்னுடைய கோடானுகோடி நன்றியையும், வணக்கத்தையும் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

*மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குறிச்சி நகராட்சிப் பகுதியானது சுமார் ஒன்றேகால் இலட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் வசித்து வருகின்ற பெரிய நகராட்சிப் பகுதியாகும். குறிச்சி நகராட்சியானது, கோவை நகருக்கு மிக அருகில் உள்ள பகுதியாகும். எனவே பள்ளி, கல்லூரி, அலுவலக வேலைக்குச் செல்வோர் வசதிக்காக குறிச்சி நகராட்சிப் பகுதியில் வசித்து வருகிறார்கள். இவர்கள் 80 சதவிகிதம் பேருக்கு மேல் பேருந்து வசதியைப் பயன்படுத்தி வருகிறார்கள். இவர்கள் பொள்ளாச்சி–கோவை முக்கிய*





*சாலையிலுள்ள சுந்தராபுரம் பேருந்து நிறுத்தத்தில் பேருந்தில் ஏறி, இறங்கி வருகிறார்கள். இதனால் போக்குவரத்து நெரிசல் ஏற்படுகிறது. அத்துடன் அருகில் நான்கு முனை சாலை சந்திப்பில் சிக்னல் இருப்பதால் அடிக்கடி போக்குவரத்துத் தடையும் ஏற்படுகிறது. எனவே, இப்பகுதியில் பேருந்து நிலையம் அமைத்துக் கொடுத்தால் போக்குவரத்து நெரிசல் குறைவதோடு, இப்பகுதி மக்களின் நீண்டகாலக் கோரிக்கை நிறைவேறும். இதுபற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்து அங்கே பேருந்து நிலையம் அமைத்துக்கொடுக்க முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குறிச்சி மூன்றாம் நிலை நகராட்சி ஒரு இலட்சத்து இருபத்தேழாயிரத்து தொள்ளாயிரம் மக்கள் தொகை கொண்ட ஒரு நகராட்சி ஆகும். இந்த நகராட்சி இப்பொழுது கோவை மாநகராட்சியோடு இணைக்கப்பட்டுள்ளது. மேலும், இந்த நகராட்சியில் புறநகர் பேருந்துகள் இயக்கப்படுவதில்லை. அதோடு, நகரப் பேருந்துகளுக்கு இந்த நகராட்சியினுடைய அலுவலகத்தின் அருகில் 20 சென்ட் நிலம், இரயில்வே துறையினுடைய நிலத்தில் நகரப் பேருந்துகள் சென்று வருகின்றன. மேலும் உக்கடம் பகுதியில் இந்த நகராட்சியிலிருந்து நான்கு கிலோ மீட்டர் தூரத்தில் உள்ள உக்கடம் பகுதியில் நவீனப் பேருந்து நிலையம் இருக்கிறது. எனவே, இங்கு பேருந்து நிலையம் அமைக்க வாய்ப்பில்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. தாமோதரன் அவர்கள்.*

*முற்பகல் 10–35*

**திரு. செ. தாமோதரன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குறிச்சி நகராட்சி கோவை மாநகராட்சியுடன் இணைக்கப்பட்டதாகும். இங்கே பேருந்து நிலையம் அமைத்தால் தெற்கேயிருந்து அதாவது மதுரை, திண்டுக்கல், பழனி, உடுமலை, கோவை போன்ற நகரங்களிலிருந்து வருகின்ற பேருந்துகளை இப்பேருந்து நிலையத்திலேயே நிறுத்திவிடலாம்.*

[2011 ஆகஸ்ட் 10

இதனால் போக்குவரத்து அதிகரித்து வருகின்ற இக்காலக்கட்டத்தில், தற்போது மட்டுமின்றி; எதிர்காலத்திலும் கோவை மாநகராட்சியில் போக்குவரத்து நெரிசல் அதிகமாக ஏற்படுவதைத் தடுக்க ஏதுவாக இருக்கும். எனவே, தொலைநோக்குப் பார்வையோடு இதைக் கவனத்தில் கொண்டு, பேருந்து நிலையம் அமைத்துத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பொள்ளாச்சி—கோவை முக்கியச் சாலையில், பொதுப் பணித் துறைக்குச் சொந்தமாக, குறிச்சி ஆரம்பப் பள்ளிக்குப் பின்புறம் உள்ள இடம், பயன்பாடற்று காலியாக இருக்கிறது. அந்த நிலத்திலே பேருந்து நிலையம் அமைக்கலாம்; அல்லது பொள்ளாச்சி—கோவை முக்கிய சாலையில் சுந்தராபுரம் பகுதியிலே, தக்காளிச் சந்தைக்கு அருகில் காலியாக உள்ள உழவர் சந்தைக்கு, இப்போது செயல்பட்டு வருகின்ற தக்காளிச் சந்தையை இடம் மாற்றம் செய்து, அந்த இடத்திலே பேருந்து நிலையத்தை அமைத்தால், அங்கேயுள்ள மக்களுக்கு உதவிகரமாக இருக்கும். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதைச் சற்றுக் கூர்ந்து கவனித்து, அங்கே ஒரு பேருந்து நிலையம் அமைத்துத் தரக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. தாமோதரன் அவர்கள் கோரியதைக் கூர்ந்து கவனித்தேன். ஆகவே, அவரது கோரிக்கை ஏற்றுக்கொள்ளப்படுகிறது. *(மேசையைத் தட்டும் ஒலி)* அவர் கேட்ட இடத்தில், குறிச்சி நகராட்சியில் பேருந்து நிலையம் அமைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. டில்லி பாபு அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. தாமோதரன் அவர்கள்.*

**திரு. செ. தாமோதரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேருந்து நிலையம் அமைக்கப்படும் என்று மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அறிவிப்பு செய்தமைக்கு, என்னுடைய தொகுதி மக்களின் சார்பாகவும், எனது சார்பாகவும் கோடானுகோடி நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*



2011 ஆகஸ்ட் 10]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம், தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், சட்டமன்றத்திலே, உறுப்பினர்கள் கேட்கின்ற அத்தனை கோரிக்கைகளையும் கனிவுடன் பரிசீலனை செய்து, *(மேசையைத் தட்டும் ஒலி)* அதுவும் இந்தத் துறையில், உடனடியாக இங்கே உத்தரவு பிறப்பித்த மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு, என்னுடைய சார்பிலும் மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. டில்லி பாபு அவர்கள்.*

**திரு. ப. டில்லி பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தருமபுரி மாவட்டம், தருமபுரி நகராட்சியில், ஏறக்குறைய 46 ஆண்டுக் காலமாக சிறிய பேருந்து நிலையமாக இருப்பதை ஒன்றுபட்ட தருமபுரி மாவட்டத்தினுடைய...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *திரு. ப. டில்லி பாபு, இதையெல்லாம் மானியக் கோரிக்கையில் பேசலாம்.*

**திரு. ப. டில்லி பாபு:** பேருந்து நிலையம்தான்; அதனால் கேட்கிறேன். தங்களின் மூலமாக...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர், இதற்குத் தனிக் கேள்வி கேட்கவும்.*

*வினா எண் 19, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. உலகநாதன், மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

[2011 ஆகஸ்ட் 10

19—

## அரசுக் குடியிருப்புகள்

***1189—திரு. கே. உலகநாதன்:**

மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருத்துறைப்பூண்டியில் அரசுக் குடியிருப்புகள் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தமிழ்நாட்டின் காவல் தெய்வம், எங்கள் உயிரோடு, ஊனோடு, வாழ்வோடு கலந்த இதய தெய்வத்தை வணங்கி, முதல் விடையை அளிக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

திருத்திய விடை: (அ) மற்றும் (ஆ) இயலாது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. உலகநாதன் அவர்கள்.

**திரு. கே. உலகநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் எடுத்த எடுப்பிலே முடியாது என்று சொல்லிவிட்டார்கள். மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இதனைப் பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். திருத்துறைப்பூண்டி நகரம் என்பது தாலுகா தலைநகரமாக இருக்கக்கூடிய நகரம். இந்த நகரத்தில் வட்டாட்சியர் அலுவலகம், ஊராட்சி ஒன்றிய அலுவலகம், நகராட்சி கருவூலம், பத்திரப் பதிவு அலுவலகம், மின்சார வாரிய அலுவலகம், பொதுப் பணித் துறை அலுவலகம், நெடுஞ்சாலைத் துறை அலுவலகம், தொடக்கக் கல்வி அலுவலகம், தீயணைப்பு நிலையம், வணிக வரித் துறை அலுவலகம், வங்கிகள் ஆகியவை செயல்பட்டு வருகின்றன. அதேபோல, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் இன்றைக்குப்



2011 ஆகஸ்ட் 10]

புதிதாக கல்லூரியைத் தொடங்கி வைத்திருக்கிறார்கள். இரண்டு அரசு மேல்நிலைப் பள்ளிகள்; இரண்டு தனியார் பள்ளிகள் அங்கே இயங்குகின்றன. ஆகையால், மாறுதலாகி அந்தப் பகுதிக்கு வருகிறபோது, பணியாளர்களுக்குத் தேவையான அளவிற்கு வீடுகள் வாடகைக்குக் கிடைக்காத காரணத்தினாலே, தங்களுடைய சொந்த இடத்திலேயிருந்து வருகிறபோது, உரிய நேரத்தில் அலுவலகத்திற்கு அல்லது பள்ளி நிறுவனங்களுக்கு வரமுடியாத சூழல் இருக்கிறது. ஆகவே, இதையெல்லாம் கருத்தில்கொண்டு, திருத்துறைப்பூண்டி நகரத்தில் அரசுக் குடியிருப்புகள் கட்டிக் கொடுப்பதற்கான முயற்சியை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மேற்கொள்வாரா என்பதைத் தங்களின் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவாரூர் மாவட்டத்தில், மாவட்டத் தலைநகரமான திருவாரூர், மன்னார்குடி போன்ற நகரங்களில் பொது மக்கள், அரசு ஊழியர்கள் பயனடைகின்ற விதத்தில் வீட்டு வசதி வாரியம் பல திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. திருவாரூரில் அரசு அலுவலர்களுக்கென்று வீட்டு வசதி வாரியம் வீடுகளைக் கட்டி அங்கே வாடகைக்கு விடுகின்றது. அதேபோல், மன்னார்குடியிலும் செயல்படுத்தி வருகிறது. இந்த இரண்டு நகரங்களும் திருத்துறைப்பூண்டியைவிட பெரிய நகரங்கள். தலைநகரத்தில் பல அரசு அலுவலகங்கள் இருக்கின்றன; கல்லூரிகள் இருக்கின்றன. ஆனால், அங்கேயே கட்டிய வீட்டில் இன்னும் 56 வாடகை வீடுகள் காலியாக இருக்கின்றன. அதேபோல், மன்னார்குடியிலும் 63 வாடகை வீடுகள் காலியாக இருக்கின்றன. இப்படிப்பட்ட சூழ்நிலையில், திருத்துறைப்பூண்டியில் அரசுக் குடியிருப்புகள் கட்டுவதற்கு இயலாது என்பதை பேரவைத் தலைவர் வாயிலாக அறிவிக்கின்றேன்.

முற்பகல் 10—40

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. உலகநாதன் அவர்கள்.

**திரு. கே. உலகநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய திருத்துறைப்பூண்டி தொகுதியினுடைய

[2011 ஆகஸ்ட் 10

*நீண்டகாலத் தேவையை, கோரிக்கையை நிறைவேற்றித் தந்த, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்னுடைய கோரிக்கையினைக் கனிவுடன் பரிசீலித்து, திருத்துறைப்பூண்டியில் அரசுக் குடியிருப்புகள் கட்டிக் கொடுக்க வேண்டுமாய் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் கேட்கின்ற கேள்விகளையெல்லாம் அந்தந்தத் துறைச் செயலாளர்கள் மாண்புமிகு பேரவைத் தலைவருக்கு அனுப்பி வைக்கிறார்கள். பேரவைத் தலைவர்தான் அந்தக் கேள்விகளைத் தேர்ந்தெடுத்து எந்தெந்த நாளில், என்னென்ன கேள்விகள், எடுத்துக்கொள்ளப்படும் என்று தேர்வு செய்கிறீர்கள். ஆகவே, ஆரம்பத்தில், முதன்முதலாக சில அமைச்சர்கள் கேள்விகளுக்குப் பதில் சொல்லும்போது* positive *ஆக பதில் வரக்கூடிய கேள்விகளைத் தாங்கள் தேர்ந்தெடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஒரு சில கேள்விகள் இருக்கின்றன. என்ன செய்தாலும் அதற்கு* negative *ஆன பதில்தான் கொடுக்க முடியும். அத்தகைய கேள்விகளை ஆரம்பத்தில் எடுத்துக்கொள்ளாமல், இப்போது இந்த* session-Minister *வைத்திலிங்கம் அவர்கள் முதன்முறையாக இந்தக் கேள்விக்கு இயலாது என்றுதான் சொல்ல வேண்டியிருக்கிறது. ஆகவே, தவறு தங்களுடையதுதான் என்பதை நான் அன்புடன் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இனிமேலாவது,* positive *பதில் வரக்கூடிய கேள்விகளைத் தேர்ந்தெடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் சுட்டிக்காட்டிச் சொன்ன அந்தத் தவறுக்குப் பொறுப்பை நான் ஏற்றுக்கொள்கின்றேன். இனிமேல், அதுபோன்ற தவறுகள் நிச்சயமாக வருங்காலத்தில் நடைபெறாது என்கின்ற உறுதியை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கின்றேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. வி. சோமசுந்தரம் அவர்கள்.*

**திரு. வி. சோமசுந்தரம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "நம்பினார் கெடுவதில்லை; இது நான்குமறை தீர்ப்பு". மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களை நம்பியவர்கள்*



2011 ஆகஸ்ட் 10]

*என்றுமே தாழ்ந்தது இல்லை, இது காலத்தின் தீர்ப்பு. வரலாற்றுச் சிறப்புமிக்க நிதிநிலை அறிக்கையைத் தாக்கல் செய்து, ஏழை எளிய மக்களின் துயர் துடைத்த எங்கள் ஆராதனைக்குரிய தெய்வமே! மூன்றாவது முறையாக தமிழ்நாட்டு முதல்வராகப் பொறுப்பேற்றுள்ள மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பாதம் பணிந்து வணங்கி எனது கேள்வியைத் தொடுக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

*காஞ்சிபுரத்தில் உள்ள தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்திற்குச் சொந்தமான அரசுக் குடியிருப்புகள் மிகவும் பழுதடைந்துள்ளன. கடந்தகால மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியில் எந்தப் பராமரிப்புப் பணியும் செய்யவில்லை. மோசமான நிலையில் உள்ள அந்த அரசுக் குடியிருப்புகளைப் பழுதுபார்க்க சிறப்பு நிதி ஒதுக்கீடு செய்து, அந்தப் பகுதி மக்களினுடைய நெடுங்காலப் பிரச்சினையைத் தீர்க்க அரசு முன்வருமா என்று தங்களின் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பழுதடைந்த குடியிருப்புகளைச் சீர் செய்து, 40 வருடங்களுக்கு முன்னால் கட்டப்பட்ட மிகவும் பழுதடைந்த குடியிருப்புகளை அப்புறப்படுத்திவிட்டு, அந்த இடத்திலேயே புதிய குடியிருப்புகள் கட்ட அம்மா அவர்கள் அறிவுறுத்தியிருக்கிறார்கள். அதன்படி வீட்டு வசதி வாரியம் தக்க நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் வைகைச்செல்வன் அவர்கள்.*

**டாக்டர் வைகைச்செல்வன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு வீட்டு வசதி வாரிய குடியிருப்புகள் சிதிலம் அடைந்திருக்கின்றன. கடந்த தி.மு.க. ஆட்சியில் அவற்றைப் பழுதுபார்க்காமலும், பராமரிக்காமலும் அப்படியே விட்டுவிட்டார்கள். பல்வேறு முறை கோரிக்கைகள் விடுத்தும் அவற்றை நிராகரித்து விட்டார்கள். "மானுடப் பற்றும், மனித நேயமும், கருணையும், காருண்யமும்" மிக்கதொரு அரசாங்கமாக*

[2011 ஆகஸ்ட் 10

இயங்கி வருகிற புரட்சித் தலைவி அம்மாவினுடைய அரசு, இக்கோரிக்கையை கனிவுடன் பரிசீலனை செய்யுமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, துறை ஆய்வு நடத்தியபோது, இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், வீட்டு வசதி வாரியம் பழுதடைந்த வீடுகளைச் சரிபார்க்கவும், மிகவும் மோசமாகப் பழுதடைந்த வீடுகளை அப்புறப்படுத்தி புதிய கட்டடங்கள் கட்டவும் ஆணையிட்டிருக்கின்றார்கள். அதன்படி மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் வைகைச்செல்வன் சொல்வதுபோல் நிச்சயமாக மிகமிகப் பழுதடைந்த வீடுகள் கடந்த ஆட்சியில் சரி செய்யப்படாமல் இருக்கின்றன. அவற்றை அப்புறப்படுத்திவிட்டு அந்த இடத்தில் புதிய வீடுகள் அம்மாவின் ஆணை பெற்று கட்டிக் கொடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 10—45

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன் அவர்கள்.

**திரு. அ. சவுந்தரராசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வளர்ந்து வரும் வீட்டு வசதித் தேவைகளைக் கணக்கில்கொண்டு, விவசாயம் அல்லாத இதர நிலங்களிலிருந்து வீட்டு வசதி வாரியம் நிலங்களை முன்கூட்டியே கொள்முதல் செய்து வைப்பதற்கான ஏற்பாடுகள் ஏதேனும் உண்டா? ஏற்கெனவே வீட்டு வசதி வாரியத்தில் தவறாக அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்து பலர் நிலம், மனை, வீடு வாங்கி இருப்பதாக நிறைய தகவல்களை நாங்கள் கேள்விப்பட்டுக்கொண்டு வருகின்றோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் தனிக் கேள்வி போடவும். (குறுக்கீடு) மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.



2011 ஆகஸ்ட் 10]

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் தமிழ்நாடு முழுவதும் கையகப்படுத்தியதில் பயன்படுத்தப்படாத கிட்டத்தட்ட 3 ஆயிரம் ஏக்கர் நிலங்கள் இருக்கின்றன. அதிலே ஆக்கிரமிப்புகள் இருக்கின்றன. அம்மா அவர்கள் தலைமையில் நடைபெற்ற துறை ஆய்வுக் கூட்டத்தில் அந்த ஆக்கிரமிப்புகளை உடனே அகற்ற வேண்டுமென உத்தரவிட்டிருக்கின்றார்கள். சில தவறுகள், குறிப்பாக வீட்டு வசதி வாரியத்தில் இடமோ, வீடோ வாங்கினால்—தமிழ்நாட்டில் எந்த மாநகராட்சியிலோ, முனிசிபாலிட்டியிலோ, டவுன் பஞ்சாயத்திலோ வீடுகள் இருக்கக்கூடாது. கடந்த ஆட்சியில் அப்படிப்பட்ட தவறுகள் நிறைய நடைபெற்றிருக்கின்றன. அதை ஆய்வு செய்து அவர்கள்மீது கடுமையான நடவடிக்கை எடுக்க அம்மா அவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்கள். கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைப் பேரவைத் தலைவர் வாயிலாக தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 20, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் ச. சுந்தரராஜ், மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

20—

### புறவழிச் சாலை

***151—டாக்டர் ச. சுந்தரராஜ்:**

மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தேசிய நெடுஞ்சாலை 49 இல் பரமக்குடிக்கு புறவழிச் சாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

[2011 ஆகஸ்ட் 10

இந்தியத் திருநாடே வியக்கும் வண்ணம் இமாலய வெற்றி பெற்று மூன்றாம் முறையாக தமிழக முதல்வராகப் பொறுப்பேற்றுள்ள மாண்புமிகு எங்கள் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதம் தொட்டு வணங்கி என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விடை: (அ) மற்றும் (ஆ) தேசிய நெடுஞ்சாலை எண் 49, மதுரை—இராமேஸ்வரம் தேசிய நெடுஞ்சாலையில் நான்கு வழிச் சாலை விரிவாக்கம் இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையம்மூலம் ரூபாய் 667 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்பட கருத்துரு தேசிய நெடுஞ்சாலை ஆணையத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. மேற்படி கருத்துருவில் பரமக்குடி புறவழிச் சாலையும் இடம்பெற்றுள்ளது என்பதைத் தங்கள்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் ச. சுந்தரராஜ் அவர்கள்.

**டாக்டர் ச. சுந்தரராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வளர்ந்து வருகின்ற நகராட்சிப் பகுதிகளில் வாகனப் போக்குவரத்து அதிகமாக உள்ளதாலும், போக்குவரத்து நெரிசலைக் குறைத்திடவும், சாலை விபத்துகளைத் தவிர்த்திடவும், மக்கள் நலப் பணிகளை விரைவாகச் செய்து முடிக்கின்ற, சிறப்பாக செய்து வருகின்ற மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சியில் ஒரு கால அளவை நிர்ணயித்து விரைந்து நடவடிக்கை எடுப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதை அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேசிய நெடுஞ்சாலை எண் 49, மதுரை—இராமேஸ்வரம் தேசிய நெடுஞ்சாலை விரிவாக்கம், தேசிய நெடுஞ்சாலை ஆணையம் மூலம் செயல்படுத்தப்பட உள்ளது. இதற்கான நில அளவை, நிலம் எடுப்பு மற்றும்



2011 ஆகஸ்ட் 10]

மதிப்பீட்டுப் பணிகள் இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையம்மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இச்சாலை மதுரை சுற்றுச் சாலையிலிருந்து பரமக்குடி வரையில் சுமார் 80 கிலோ மீட்டர் நீளத்திற்கு நான்குவழிச் சாலையாகவும், பரமக்குடியிலிருந்து இராமநாதபுரம் வரையிலான 37 கிலோ மீட்டர் சாலையைப் பலப்படுத்துவதற்காகவும் ஏற்பாடுகள் செயல்படுத்தப்பட உள்ளன. மதுரையிலிருந்து பரமக்குடி வரை 4 வழிச் சாலை அமையும்போது, பரமக்குடி புறவழிச் சாலையும் அமைக்கப்படும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்து, விரைந்து இந்தப் பணியை முடிக்க ஆவன செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா அவர்கள்.

**முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை முதல் இராமேஸ்வரம் வரை மாண்புமிகு அமைச்சர் சொல்லி இருக்கக்கூடிய அந்த தேசிய நெடுஞ்சாலை, முக்கியத்துவம் வாய்ந்தது. குறிப்பாக இராமேஸ்வரத்திற்குச் செல்ல ஏராளமான வெளி மாநில யாத்திரிகர்கள் அந்தச் சாலையைப் பயன்படுத்தி வருகிறார்கள். இப்போதுள்ள சாலை மிகவும் குறுகலாக இருப்பதன் காரணமாக ஏராளமான விபத்துகள் ஏற்பட்டு வருகின்றன. பரமக்குடிக்கு ஒரு புறவழிச்சாலை அமைக்க திட்டம் இருப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டிருப்பதைப்போல், இராமநாதபுரத்திற்கும் ஒரு புறவழிச்சாலை அமைப்பதற்கு ஏற்பாடு செய்யப்படுமா என உங்கள் வாயிலாகக் கேட்க விரும்புகிறேன்.

முற்பகல் 10—50

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டம் நடைபெறுகின்றபோது இராமநாதபுரம் புறவழிச் சாலை அமைக்கின்ற பணியும் தொடங்கப்படும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கின்றேன்.

[2011 ஆகஸ்ட் 10

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா வரிசை எண் 21, மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. குமரகுரு, மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

21—

## தடுப்பணை

***848—திரு. இரா. குமரகுரு:**

*மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*உளுந்தூர்பேட்டை தொகுதி, தென்பெண்ணை ஆற்றின் குறுக்கே பேரங்கியூர் கிராமத்தில் தடுப்பணை அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

**மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம், பொதுப் பணித் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*தெருக்கோடியிலே இருக்கின்ற ஏழையை குபேரனாக்குகின்ற வல்லமை தேவி அலைமகளுக்கு உண்டு; பிறவியிலேயே ஊமையாக உள்ள ஒருவனை கவிஞனாக்குகின்ற வல்லமை தேவி கலைமகளுக்கு உண்டு; கோழையாகப் பிறந்த ஒருவனை வீரனாக்குகின்ற வல்லமை தேவி மலைமகளுக்கு உண்டு. அலைமகள், கலைமகள், மலைமகள் ஆகிய முப்பெரும் தேவியரின் பரிணாம காட்சியாக விளங்கிக் கொண்டிருக்கின்றவரும், தமிழ், தமிழ் என்று தன்னையும், தன் குடும்பத்தாரையும் வளர்த்துக் கொண்டிருக்கின்ற மைனாரிட்டி தலைவர்கள் மத்தியிலே தமிழக மக்களுக்காக வாழ்ந்து, தமிழர்களுக்காக குரல் கொடுத்துகொண்டு, அதனை செயல்படுத்திக் காட்டிக்கொண்டிருக்கின்ற உன்னதத் தலைவி, அறிவின் உச்சம், அச்சமின்மை, அன்பின் உச்சம், தன்னம்பிக்கை என்பதற்குச் சான்றாக விளங்கிக் கொண்டிருக்கின்றவரும், வல்லரசே நேரில் வந்து பாராட்டும் நல்லரசை நடத்திக்கொண்டிருக்கின்ற கழகத்தினுடைய வாழ்நாள் பொதுச் செயலாளர் (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு தமிழ்நாட்டின் முதலமைச்சர், எங்கள் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்களில் கோடானுகோடி நன்றி மலர்களைச் சமர்ப்பித்து, எனது விடையினை இந்த மன்றத்தில் கூற விழைகிறேன்.*



2011 ஆகஸ்ட் 10]

*விழுப்புரம் மாவட்டம், உளுந்தூர்பேட்டை தொகுதியிலே, தென்பெண்ணை ஆற்றின் குறுக்கே பேரங்கியூர் கிராமத்தில் தடுப்பணை அமைக்க ரூ.1,094.26 இலட்சத்திற்கு 2010–2011 ஆம் ஆண்டின் விலை விகிதப்படி மதிப்பீடு தயாரிக்கும் பணி தலைமைப் பொறியாளர், திட்ட உருவாக்கம், பொதுப் பணித் துறை அவர்களின் பரிசீலனையில் உள்ளது என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. குமரகுரு அவர்கள்.*

**திரு. இரா. குமரகுரு:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூன்றாவது முறையாக தமிழக முதல்வராகப் பொறுப்பேற்றுள்ள எங்களின் குல விளக்கே, எங்கள் வாழ்வும், எங்கள் வளமும் மங்காத தமிழே! என் தமிழுக்கு எட்டாவது உலகத் தமிழ் மாநாடு கண்ட எங்கள் தமிழ் அன்னையே! சுட்டெரிப்பது கதிர் என்றாலும், அதை வெட்டி எறிந்த வீரத் தாயே! குடும்பத்தைக் கொழுக்க வைத்த கொள்ளைக் கூட்டத்திற்குப் புத்தி புகட்டிய புரட்சித் தலைவியே! வானம் போற்றும், வானுறை தேவர் போற்றும், வையகம் போற்றும் தமிழக மக்களின் உள்ளம் போற்றும் நிதிநிலை அறிக்கையைத் தயார் செய்த எங்கள் அன்னையே! (மேசையைத் தட்டும் ஒலி) சாதாரண குடும்பத்தைச் சேர்ந்த என்னை இரண்டு முறை சட்டமன்றத் தேர்தலில் போட்டியிட வைத்து, வெற்றிபெறச் செய்து, இந்த மாமன்றத்தில் பேச வாய்ப்பளித்த மாண்புமிகு தமிழக முதல்வர், கழகத்தின் நிரந்தரப் பொதுச் செயலாளர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்களில் என்னுடைய நன்றியைக் காணிக்கையாக்குகின்றேன்.*

*கடந்த மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியிலே, எனது தொகுதி மக்களின் பிரச்சினை சம்மந்தமாக நான் கோரிய வினா ஒன்றிற்குக்கூட அவர்கள் பதில் அளிக்கவில்லை. ஆனால், தாய் உள்ளம் கொண்ட மாண்புமிகு அம்மா அவர்கள் 14–வது பேரவையில் முதல் கூட்டத் தொடரிலேயே உளுந்தூர்பேட்டை தொகுதிக்குட்பட்ட பேரங்கியூர் கிராமத்தின் அருகில் உள்ள தென்பெண்ணை ஆற்றின் குறுக்கே தடுப்பணை அமைக்க கோரிய*

*வினாவிற்கு எனது தொகுதி மக்களின் நலனைக் கருதியும், ஏழை எளிய விவசாயிகளின் நலனைக் கருதியும், நிலத்தடி நீரை உயர்த்தும் நோக்கில் தடுப்பணை அமைக்க ரூ.1,094.26 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டிருக்கிற மகிழ்ச்சியான செய்தியை வழங்கிய மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர் அம்மா அவர்களுக்கு, உளுந்தூர்பேட்டை தொகுதி மக்களின் சார்பாகவும், எனது சார்பாகவும் கோடானுகோடி நன்றியைப் பொற்பாதங்களில் காணிக்கையாக்கி அமர்கிறேன் தாயே! (மேசையைத் தட்டும் ஒலி)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா வரிசை எண் 22, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி, மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.*

**22—**

### சுற்றுலா நகரம்

***154—டாக்டர் க. கிருஷ்ணசாமி:**

*மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*ஒட்டப்பிடாரத்தைச் சுற்றுலா நகரமாக்க அரசு ஆவன செய்யுமா?*

**மாண்புமிகு திருமதி எஸ். கோகுல இந்திரா, சுற்றுலாத் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*மாண்புமிகு இதய தெய்வம், புரட்சித் தலைவி, தங்கத் தாரகை, மூன்றாவது முறையாக தமிழக முதலமைச்சராகப் பொறுப்பேற்று தமிழக மக்களின் காவல் தெய்வமாக விளங்கக்கூடிய மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய (மேசையைத் தட்டும் ஒலி) பொற்பாதக் கமலங்களில் என்னுடைய கோடானுகோடி நன்றியினைச் சமர்ப்பித்து, தென் மாவட்டமான சிவகங்கை மாவட்டத்தைச் சேர்ந்த சாதாரண தொண்டனாக இருந்த என்னை, அண்ணாநகர் தொகுதியின் வேட்பாளராக்கி, வெற்றிப்பெறச் செய்து, அமைச்சராக்கி, இங்கே பதில் அளிக்கக்கூடிய*





*வாய்ப்பையெல்லாம் கொடுத்து, அங்கீகாரம் கொடுத்து, தொண்டர்களையெல்லாம் கண்ணின் இமைபோல காத்து வரும் எங்கள் குல தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு மீண்டும் ஒரு முறை என்னுடைய பணிவான நன்றி கலந்த வணக்கத்தைச் சமர்ப்பிக்கிறேன்.*

*முற்பகல் 10—55*

*விடை: சுற்றுலாத் துறையைப் பொறுத்தவரையில், ஒரு குறிப்பிட்ட இடத்திற்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையைக் கருத்தில்கொண்டு, அங்கு தேவையான சுற்றுலா அடிப்படை வசதிகளை மேற்கொள்வது குறித்து தொடர்புடைய மாவட்ட ஆட்சித் தலைவரின் பரிந்துரையின்பேரில் பெறப்படும் கருத்துரு பரிசீலிக்கப்பட்டு, சுற்றுலாத் துறையின்மூலம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, அவ்விடத்தில் சுற்றுலா மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்த அடிப்படையில், அதிக அளவில் சுற்றுலாப் பயணிகள் ஒட்டப்பிடாரம் தொகுதிக்கு, அந்தப் பகுதியிலே வருகை புரிவதாக மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுடைய பரிந்துரையைப் பெற்று, ஒட்டப்பிடாரம் தொகுதியில், அங்கே வரக்கூடிய சுற்றுலாப் பயணிகளுக்கு வசதிக்கேற்ப திட்டங்களை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அறிவுறுத்தலின்படி செய்யப்படும் என்பதை இந்த நேரத்திலே தங்கள் வாயிலாக நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி அவர்கள்.*

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒட்டப்பிடாரம் சட்டமன்றத் தொகுதி ஒட்டப்பிடாரம் என்பது, இந்திய நாட்டினுடைய சுதந்திரத்திற்காக 200 வருடங்களுக்கு முன்பே பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தை எதிர்த்துப் போரிட்ட வீரபாண்டிய கட்டபொம்மன் அவர்கள் வாழ்ந்த இடம் பாஞ்சாலங்குறிச்சி. அதேபோல, செக்கிழுத்த செம்மல் வ.உ. சிதம்பரனார் அவர்கள் பிறந்த இடம் ஒட்டப்பிடாரம். அவருடைய இல்லம் ஒட்டப்பிடாரத்தில் அமைந்திருக்கிறது. மகாகவி பாரதியார் அவர்கள் பிறந்ததும் முந்தைய ஒட்டப்பிடாரம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட எட்டயபுரம்.*

[2011 ஆகஸ்ட் 10

உமறுப்புலவர் அவர்கள் பிறந்ததும் அதே இடம். கட்டலாங்குளம் வீரன் அழகுமுத்துக்கோன், வல்லநாடு வெள்ளையத்தேவன், சுவர்னகிரி சுந்தரலிங்கம், வாஞ்சிநாதன் போன்ற எண்ணற்ற சுதந்திரப் போராட்ட வீரர்களை உள்ளடக்கியது ஒட்டப்பிடாரம் தொகுதி. அண்மைக்காலமாக இளைஞர்கள், மாணவர்கள் மத்தியில் மெல்ல மெல்ல நாட்டுப்பற்று குறைந்து வரக்கூடிய இந்த வேளையில், தங்களுடைய உயிரைத் தியாகம் செய்த இதுபோன்ற மாவீரர்களுடைய வரலாறுகளையெல்லாம் தெரிந்துகொள்ளக்கூடிய வகையில் பாஞ்சாலங்குறிச்சியை மையமாக வைத்து இந்த வீரர்களுடைய வரலாறுகளையெல்லாம் ஒலி, ஒளிக் காட்சியாகக் காண்பிப்பதற்கும், பள்ளி மாணவர்களுக்கு சலுகைக் கட்டணத்திலே அந்தப் பகுதியைச் சுற்றிக் காண்பிப்பதற்கும், வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளை ஈர்ப்பதற்குமுண்டான நடவடிக்கைகளை அரசு செய்யுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

தமிழகத்தையே விவசாயத்திலும், தொழிலிலும், கல்வியிலும் முதல்நிலை மாநிலமாக ஆக்கி வருகின்ற மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சுற்றுலாத் துறையின்மூலம் இந்த ஒட்டப்பிடாரம் மற்றும் சுற்று வட்டாரப் பகுதிகளை முன்னிலை ஆக்குவதன்மூலமாக நிச்சயமாக தென் தமிழகத்திற்கே ஒரு முக்கியத்துவம் கொடுக்கக்கூடிய சூழ்நிலை ஏற்படும். அதைத் தமிழக அரசு செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திருமதி எஸ். கோகுல இந்திரா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல, பாஞ்சாலங்குறிச்சியில் வீரபாண்டிய கட்டபொம்மனுக்கு மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் (மேசையைத் தட்டும் ஒலி) 2005–2006 ஆம் ஆண்டு முதல் நினைவுக் கோட்டை தொடர்ச்சியாக மேம்பாடு செய்து வரப்படுகின்றது. அதைப்போலவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல, வ.உ. சிதம்பரனார் பிறந்த இடமான ஒட்டப்பிடாரத்திலே உள்ள அந்த இல்லம் செய்தித் துறையால்



2011 ஆகஸ்ட் 10]

பராமரிக்கப்பட்டு வருகின்றது. வீரபாண்டிய கட்டபொம்மன் அவர்களுடைய நினைவுக் கோட்டை சுற்றுலாத் துறைமூலமாக பராமரிக்கப்பட்டு, ஒவ்வொரு வருடமும் மே மாதம் 11, 12 ஆம் தேதிகளிலே சுற்றுலாத் துறை சார்பாக அரசு விழா எடுக்கப்பட்டு அங்கே நடத்தப்பட்டு வருகின்றது. தொடர்ச்சியாக வீரன் சுந்தரலிங்கம் மணி மண்டபம் சுவர்னகிரி பகுதியிலும், வீரன் அழகுமுத்துக்கோன் மணி மண்டபம் கட்டலாங்குளம் பகுதியிலும், அமுதகவி உமறுப் புலவர் அவர்களுடைய நினைவு இல்லம் எட்டையபுரத்திலும், வீரன் வெள்ளையத்தேவன் மணி மண்டபம் வல்லநாடு பகுதியிலும், மகாகவி பாரதியார் அவர்களுடைய நினைவு இல்லம் எட்டையபுரத்திலும், வாஞ்சிநாதன் அவர்கள் ஆஷ் துரையை சுட்டுக்கொன்ற மணியாச்சி பகுதியையும் அரசு பராமரித்து வருகின்றது. அரசு விழா எடுப்பது சம்பந்தமாகவும், சுற்றுலாத் துறை மூலமாக மேம்பாடு செய்வது சம்பந்தமாகவும், மாணவ, மாணவிகளை கவரக்கூடிய வகையில் ஒலி, ஒளிக் காட்சியாகக் காண்பிக்கவும் . . .

முற்பகல் 11–00

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் அனுமதியுடன் வினாக்கள்—விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**மாண்புமிகு திருமதி எஸ். கோகுல இந்திரா:** மாணவ, மாணவிகள் வரக்கூடிய வகையிலும் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு சென்று அவர்களுடைய அறிவுரையைப் பெற்று, சுற்றுலாத் துறையை வளமிக்க துறையாகவும், தமிழக மக்கள் மட்டுமல்லாமல் அண்டை மாநிலங்களிலிருந்தும், வெளிநாட்டவரும் வரவேண்டுமென்பதை புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு சென்று உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதையும் இந்த நேரத்திலே நான் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. கணேஷ்குமார் அவர்கள்.

**திரு. அ. கணேஷ்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வரலாற்றுச் சிறப்புமிக்க செஞ்சிக் கோட்டை தொல்பொருள் ஆய்வுத் துறை வசம் உள்ளதால், ஆண்டுதோறும்

அதற்கு சரியான பராமரிப்பு இல்லாத காரணத்தினால், அங்கு வரக்கூடிய சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை குறைந்து கொண்டே வருகிறது. இதுபோன்று தமிழகத்தில் உள்ள தொல்பொருள் ஆய்வுத் துறை வசம் உள்ள புராதனச் சின்னங்களைச் செம்மைப்படுத்திட சுற்றுலாத் துறை மூலமாக தமிழக அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திருமதி எஸ். கோகுல இந்திரா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்பது விழுப்புரம் மாவட்டத்திலே வரக்கூடிய சூழல் இருக்கின்றது. அந்தப் பகுதியிலே ஏற்கெனவே சுற்றுலாத் துறைமூலமாக பல பணிகள் நடைபெற்று வருகின்றன. விழுப்புரம் மாவட்டத்தைச் சேர்ந்த பகுதி என்பதால், தனிக்கேள்வியாகப் போடும்பட்சத்திலே பராமரிப்பு சம்பந்தமான புள்ளிவிவரங்களைப் பெற்று, அவர்களுக்கு உரிய முறையிலே பதில் தெரிவிக்கப்படும் என்பதை நான் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா வரிசை எண் 23, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. நாஞ்சில் முருகேசன், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

23—

## பேருந்து வசதி

*44—**திரு. அ. நாஞ்சில் முருகேசன்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

*கன்னியாகுமரியிலிருந்து களியக்காவிளைக்கு மேற்குக் கடற்கரைச் சாலை வழியாக பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?*

**மாண்புமிகு திரு. வி. செந்தில் பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,





கன்னியாகுமரியிலிருந்து மேற்குக் கடற்கரைச் சாலை வழியாக களியக்காவிளைக்குச் செல்வதற்கான சாலையில் கீழமணக்குடிக்கும், மேலமணக்குடிக்கும் இடையிலுள்ள பாலம் கடந்த 2004 டிசம்பர் 26 அன்று ஏற்பட்ட சுனாமியால் முழுமையாகச் சேதமடைந்துவிட்டது. இந்தப் பாலத்திற்கு அருகில் பாதசாரிகளும் சிறு வாகனங்களும் செல்லும் வகையில் 2005–ல் தற்காலிகமாக ஒரு பாலம் அமைக்கப்பட்டுள்ளது. மேலும், ரூபாய் 23.30 கோடி செலவில் புதிய பாலம் கட்டுவதற்கானப் பணி நடைபெற்று வருகிறது. இந்தப் பணி டிசம்பர் 2011–ல் முடிவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது. பாலம் வேலை முடிவடைந்தவுடன் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் உத்தரவினைப் பெற்று மேற்குக் கடற்கரைச் சாலை வழியாக கன்னியாகுமரியிலிருந்து களியக்காவிளைக்குப் பேருந்து இயக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. நாஞ்சில் முருகேசன் அவர்கள்.*

**திரு. அ. நாஞ்சில் முருகேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த விடையை அளிக்க வாய்ப்பு அளித்த புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு நன்றி. அதுபோல, நாகர்கோயில் தொகுதியிலே, தி.மு.க. காங்கிரஸ் உள்ள பகுதியிலே என்னை 31 வருடங்களுக்குப் பிறகு அங்கே நிற்க வைத்து, ஜெயிக்க வைத்த புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு நானும், என் குடும்பத்தாரும் நன்றியுடன் இருப்போம்; அவர்களை எப்போதும் மறக்க மாட்டோம் என்றும், எப்போதும் நன்றியுடன் அம்மா அவர்களுடனே இருப்பேன் என்று மீண்டும் சொல்லுகிறேன். எங்களுடைய பகுதியிலே கடந்த தி.மு.க. ஆட்சியிலே பஸ்களை எல்லாம் hawker கடையிலே விற்றுவிட்டார்கள் அம்மா. அதனால் கிராமப் பகுதிகளிலே பஸ்கள் சரியாகப் போவதில்லை. கிராமப் பகுதிகளிலே குறிப்பாக பள்ளிக்குச் செல்லும் மாணவிகளும் பொது மக்களும் சரியாக பஸ் வராத காரணத்தினாலும், free pass கிடைக்காத காரணத்தினாலும், அந்தப் பகுதி மக்கள் மிகவும் தொலைவிலே உள்ள பள்ளிகளுக்குப் போகாமல் இருக்கக்கூடிய பகுதிகள்

[2011 ஆகஸ்ட் 10

*நிறைய இருக்கின்றன அம்மா. அதனாலே பிரைவேட் பஸ்கள்தான் போகும் அம்மா. அந்த பிரைவேட் பஸ்ஸில் செல்ல பஸ் பாஸை பெறுகின்ற அளவுக்கு எப்படியாவது உதவி செய்து தர வேண்டுமென்று அம்மா அவர்களைத் தாழ்மையுடன் கேட்டுக்கொண்டு விடைபெறுகிறேன். நன்றி அம்மா.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. வி. செந்தில் பாலாஜி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 2004 ஆம் ஆண்டு சேதமடைந்த அந்தப் பாலம், கடந்த மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியில் மேற்படி பாலப் பணிகளை முடிப்பதற்கு எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்கள் இந்தப் பாலப் பணியை விரைந்து முடிக்க வேண்டுமென்றும் உத்தரவிட்டுள்ளார்கள். இப்பணிகள் டிசம்பர் 2011—க்குள் முடிவடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அந்தப் பாலப் பணிகள் முடிவுற்றவுடன் கன்னியாகுமரியிலிருந்து மேற்குக் கடற்கரைச் சாலை வழியாக களியக்காவிளைக்கு மாணவிகள், பொதுமக்கள் செல்வதற்கு ஏதுவாக மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்களின் உத்தரவினைப் பெற்று பேருந்து இயக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

*முற்பகல் 11—05*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. இராமச்சந்திரன் அவர்கள்.*

**திரு. டி. இராமச்சந்திரன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . . (குறுக்கீடு)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *எப்போதும் நன்றி சொல்ல வேண்டுமென்றால், உடனே நீங்கள் பேசிவிட்டு உட்கார்ந்த பிறகு, கையைக் கொஞ்சம் உயர்த்தினால் எனக்குத் தெரியும். இல்லையென்றால் தெரியாது.*

**திரு. அ. நாஞ்சில் முருகேசன்:** *அம்மா அவர்களுக்கு நான் மீண்டும் ஒரு முறை நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். எல்லோரும் மாண்புமிகு அம்மா அவர்கள் மூன்றாம் முறையாக முதலமைச்சராக வந்திருக்கிறார்கள் என்றுதான் சொல்லிக்கொண்டிருக்கின்றார்கள். ஆனால், உண்மையிலேயே அம்மா அவர்கள்தான் இதுபோல எப்பொழுதும் முதலமைச்சராக இருக்க வேண்டும் என்று சொல்லி, கண்டிப்பாக அதை எல்லோரும் அப்படியே எப்போதும் சந்தோஷமாகச் சொல்லுங்கள் என்று நான் உங்களிடம் கேட்டுக்கொள்கிறேன். நன்றி. (மேசையைத் தட்டும் ஒலி)*



2011 ஆகஸ்ட் 10]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. இராமச்சந்திரன் அவர்கள்.*

**திரு. டி. இராமச்சந்திரன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர்களுக்கு அவரவர்களுடைய தொகுதிகளிலே, பேருந்துகள் இயக்கப்பட வேண்டும் என்று பொது மக்களிடமிருந்து மனுக்கள் வருகின்றன. நிதிநிலை அறிக்கையிலே 3,000 பேருந்துகள் வாங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. அப்படிப் பேருந்துகள் வாங்கப்படும்போது, ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினருடைய தொகுதியிலேயும் குறைந்தபட்சம் 10 புதிய பேருந்துகள் இயக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதைத் தாங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. வி. செந்தில் பாலாஜி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த கால மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியில் பல்வேறு இடங்களில் பேருந்துகள் இயக்குவதாக அறிவிக்கப்பட்டு சில மாதங்கள் மட்டுமே இயக்கப்பட்டு, அந்தப் பேருந்துகள் எல்லாம் சில மாதங்களிலேயே நிறுத்தப்பட்டிருக்கின்றன. பொது மக்களினுடைய நலன் கருதி எங்கெல்லாம் பேருந்துகள் தேவையோ அங்கெல்லாம் இயக்கப்பட வேண்டும் என்பதற்காக மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 3,000 பேருந்துகளைப் போக்குவரத்துக் கழகத்திற்கு வாரி வழங்கியிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் பொது மக்களுடைய வேண்டுகோளை ஏற்று எங்கெல்லாம் பேருந்து வசதிகள் இல்லையோ அங்கெல்லாம்*

[2011 ஆகஸ்ட் 10

*மாண்புமிகு அம்மா அவர்கள் 3,000 பேருந்துகளை வழங்கியதன்மூலம் அந்தப் பகுதிகளுக்கு பேருந்து வசதிகள் செய்வதற்கு ஏற்பாடு செய்யப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாலகிருஷ்ணன் அவர்கள்.*

**திரு. க. பாலகிருஷ்ணன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக இன்றைக்குப் போக்குவரத்து அதிகமாகி கொண்டிருக்கின்ற சூழ்நிலையில் பஸ்ஸுக்கு மேலேயே பயணம் செய்யக்கூடிய நிலைமை பல மாவட்டங்களிலே, குறிப்பாக, கடலூர் மாவட்டம், சிதம்பரம் தொகுதியிலே, காலையிலே மாணவர்கள் பள்ளிகளுக்குச் செல்கிற நேரத்திலேயும், மாலையிலே வீடுகளுக்குத் திரும்புகிற நேரத்திலேயும் பேருந்து வசதிகள் இல்லாத காரணத்தால் பேருந்துகளுக்கு மேலேயே பயணம் செய்கிற நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இதைப் போக்குவதற்கு அதிகப் பேருந்துகளை விடுவதற்கு, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. வி. செந்தில் பாலாஜி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பள்ளிக்குச் செல்கின்ற மாணவ, மாணவிகள் காலையிலும், மாலையிலும் இட நெருக்கடியின் காரணமாகப் பேருந்துகளில், ஒரு சில இடங்களில் அதுபோன்ற சூழ்நிலைகள் ஏற்படுகின்றன. பள்ளி மாணவ, மாணவிகள் செல்வதற்காக, சென்னையில் முதல்கட்டமாக மாண்புமிகு அம்மா அவர்களுடைய உத்தரவினைப்பெற்று சிறப்புப் பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன. அதேபோன்று, எங்கெல்லாம் காலை, மாலை வேளைகளில் பேருந்து வசதிகள் தேவையோ, மாண்புமிகு அம்மா அவர்களுடைய உத்தரவைப்பெற்று அங்கெல்லாம் பேருந்துகள் இயக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*



2011 ஆகஸ்ட் 10]

## (ஆ) உடுக்குறியிடாத வினாக்கள் (பட்டியல் 1)@

1—

### பாராளுமன்றத் தொகுதி

**வினா எண் 487—திரு. எஸ்.பி. முத்துக்குமரன்:** *மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) புதுக்கோட்டை மாவட்டத்திற்கு மீண்டும் புதுக்கோட்டை பாராளுமன்றத் தொகுதி கிடைக்க நமது அரசு மத்திய அரசுக்கு பரிந்துரை செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், நிதி அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) உச்ச நீதிமன்ற முன்னாள் நீதிபதி திரு. குல்திப் சிங் அவர்கள் தலைமையில் அமைக்கப்பட்ட தொகுதி மறுசீரமைப்பு ஆணையமானது* (Delimitation Commission of India) *2001 ஆம் ஆண்டு மக்கள் தொகை மற்றும் பூகோள அமைப்பு முறையில் சட்டமன்ற மற்றும் நாடாளுமன்றத் தொகுதிகளை மறுவரையறை செய்ய வரைவு ஆணை* (Draft order) *ஒன்றை வெளியிட்டது. மேற்கண்ட ஆணையத்தின் பொது அமர்வில்* (Public Sitting) *வரைவு ஆணையின்மீது, தமிழகத்தில் இருந்து நியமிக்கப்பட்ட அலுவல்சாரா உறுப்பினர்கள்* (Associate Members) *மற்றும் பொதுமக்களிடம் இருந்து பெற்ற கருத்துகளை ஆராய்ந்து கடந்த 2007 ஆம் ஆண்டு தனது இறுதி ஆணையை வெளியிட்டது. நாடாளுமன்றத்தால் சட்டம் இயற்றப்பட்டு, மத்திய அரசால் புதிய மறுவரையறை ஆணையம்* (Delimitation Commission of India) *அமைக்கப்படும் பட்சத்தில் மட்டுமே*

---

*@ இப்பட்டியலில் உள்ள வினாக்களுக்கான விடைகள் அந்தந்த அமைச்சர்கள் ஒப்புதல் அளித்த தேதியன்று உள்ளபடி அமைந்தனவாகும்.*

தொகுதிகளின் மாற்றங்கள் குறித்து பரிசீலிக்க இயலும். எனவே, இதுகுறித்து மத்திய அரசுக்கு பரிந்துரையேதும் அனுப்பப்பட வேண்டிய அவசியம் எழவில்லை.

2—

**ஊக்கத் தொகை**

**வினா எண் 286—திரு. எஸ்.பி. முத்துக்குமரன்:** *மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) புதுக்கோட்டை மாவட்டம், குடுமியான் மலை பண்ணைத் தொழிலாளர்களுக்கு 2010–2011–க்கு அரசு அறிவித்த ஊக்கத் தொகையை (போனஸ்) வழங்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) குடுமியான் மலை அரசு தோட்டக்கலைப் பண்ணையில் பணிபுரியும் தினக்கூலி தொழிலாளர்கள் மற்றும் நிரந்தர பண்ணைப் பணியாளர்களுக்கு 2010–2011 ஆம் ஆண்டுக்கு ஊக்கத் தொகை (போனஸ்) உரிய காலத்தில் வழங்கப்பட்டுவிட்டது. போனஸ் தொகை வழங்க வேண்டி நிலுவை ஏதும் இல்லை.*

3—

**காய்–கனி சந்தை**

**வினா எண் 638—திரு. சி. மைக்கேல் ராயப்பன்:** *மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், காவல்கிணறு சந்திப்பு பகுதியில் உள்ள பெருங்குடி கிராமம் 11, சர்வே எண் 1973, 1974, 1975–ல் உள்ள 4 ஏக்கர் நிலத்தில் காய்-கனி சந்தை அமைக்க அரசு ஆவன செய்யுமா?*





**விடை—**

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

*திருநெல்வேலி மாவட்டம், காவல்கிணறு சந்திப்பு பகுதியில், சர்வே எண் 1973, 1974, 1975–ல் உள்ள 4 ஏக்கர் பரப்பளவில், வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத் துறை மூலமாக ஆகஸ்ட் 2009–ல் மலர் வணிக வளாகம் ஆரம்பிக்கப்பட்டது. அவ்வளாகத்தில் நவம்பர் 2010–ல் காய்கனி சந்தையும் துவக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றது.*

*2) காவல்கிணறு ஒரு கிராம பஞ்சாயத்து ஆகும். மேலும், இதனைச் சுற்றியுள்ள கிராமங்கள் அனைத்தும் காய்கறி விளைவிக்கக்கூடிய கிராமங்களாக உள்ளதால், நுகர்வோர் வருகை மிகவும் குறைவாக உள்ளது. எனவே, மேலும் புதியதாக ஒரு காய்-கனி சந்தை திறப்பதற்கான சாத்தியக்கூறுகள் குறைவாக உள்ளன.*

4—

**விவசாயம் சார்ந்த தொழில்**

**வினா எண் 1081—திரு. ம. குணசேகரன்:** *மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) மானாமதுரை தொகுதி, மானாமதுரையில் விவசாயம் சார்ந்த தொழில் தொடங்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

*(அ) தற்போது மானாமதுரை தொகுதி, மானாமதுரையில் விவசாயம் சார்ந்த தொழில் தொடங்கும் திட்டம் குறித்து அரசின் பரிசீலனையில் இல்லை.*

*(ஆ) வினா எழவில்லை.*

[2011 ஆகஸ்ட் 10

5—

## தென்னை வணிக வளாகம்

**வினா எண் 1133—திரு. என்.ஆர். ரெங்கராஜன்:** *மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*பட்டுக்கோட்டையில் அமைக்கப்பட்டுள்ள தென்னை வணிக வளாகத்தினை முழுவதுமாக விவசாயிகள் பயன்பாட்டிற்கு ஒப்படைக்க அரசு ஆவன செய்யுமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

*தென்னை விவசாயிகள் பயன்பெறும் வகையில் தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டையில் பொன்னவராயன்கோட்டை, உக்கடை கிராமத்தில் 20.00 ஏக்கர் பரப்பில் தென்னை வணிக வளாகம், தமிழ்நாடு மாநில வேளாண் விற்பனை வாரியத்தின் விற்பனை மேம்பாட்டு நிதியிலிருந்து ரூ.4.00 கோடி செலவில் அரசாணை (நிலை) எண் 197, வேளாண்மை (வேவி3) துறை, நாள் 30–9–2009—ன்படி அமைக்கப்பட்டுள்ளது.*

*இவ்வணிக வளாகத்தில் ஊரக கிடங்கு, பரிவர்த்தனைக் கூடம், இயந்திர கூடம், தரம் பிரிப்பு கூடம், கொப்பரை தேங்காய் பிரிக்கும் கூடம், உலர்களம், சேமிப்பு கிட்டங்கி, சூரிய ஒளி கொப்பரை உலர்விப்பான், மின்னணு எடைக்கருவி, தானியங்கி சிப்பம் கட்டும் வசதியுடன்கூடிய எண்ணெய் எடுக்கும் ஆலை, இடுபொருள் கடைகள், வியாபாரிகள் கடைகள், விவசாயிகள் ஓய்வறை, தகவல் மையம் போன்ற உட்கூட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.*

*மேலும், அதில் எண்ணெய் பிழியும் கருவி பொருத்துதல், மின்சாரப் பணிகள், பிரதான சாலை மற்றும் இணைப்பு சாலை அமைத்தல் போன்ற பணிகள் முடிவுறும் நிலையில் உள்ளன. இப்பணிகள் இன்னும் இரண்டு மாதத்திற்குள் முடிக்கப்படும். இப்பணிகள் முடிவுற்றதும் விவசாயிகள் பயன்பாட்டிற்கு முழுமையாக ஒப்படைக்கப்படும்.*



2011 ஆகஸ்ட் 10]

6—

## சிறப்புப் பயிற்சி

**வினா எண் 1730—திரு. இரா. காமராஜ்:** *மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*திருவாரூர் மாவட்டத்தில் இயற்கை உரம் உற்பத்தி செய்ய விவசாயிகளுக்கு சிறப்பு பயிற்சி அளிக்க அரசு ஆவன செய்யுமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

*தமிழக அரசு வேளாண்மைத் துறையால் ஆண்டுதோறும் மாநிலத் திட்டத்தின்கீழ் இயற்கை உரமான மண்புழு உரத் தயாரிப்பு குறித்த 300 செயல் விளக்கங்கள் மற்றும் பயிற்சிகள், மாநிலம் முழுவதும் 15,000 விவசாயிகள் பயனடையும் வண்ணம் நடத்தப்பட்டு வருகின்றன. திருவாரூர் மாவட்டத்தில் 2010–2011 ஆம் ஆண்டில் மண்புழு உரத் தயாரிப்பு குறித்து 10 செயல் விளக்கங்களும் மற்றும் பயிற்சிகளும் நடைபெற்றுள்ளன. இதன் வாயிலாக 500 விவசாயிகள் பயனடைந்துள்ளனர்.*

7—

## சாலை செப்பனிடல்

**வினா எண் 98—திரு. ஓ.கே. சின்னராஜ்:** *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*மேட்டுப்பாளையம் தொகுதி, வெள்ளியங்காடு முதல் பில்லூர் அணை வரையிலுள்ள மின் வாரியத்துக்கு சொந்தமான சாலையைச் செப்பனிட அரசு ஆவன செய்யுமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:**

*வெள்ளியங்காடு–பில்லூர் அணைக்கு இடைப்பட்ட சாலை தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்தைத் தவிர,*

[2011 ஆகஸ்ட் 10

*பொது மக்களும், மற்ற துறைகளும் அதிகமாக பயன்படுத்துவதால் அச்சாலையின் பராமரிப்புத் தொகை அதிகமாக உள்ளது. ஆகவே, அந்தச் சாலையை நெடுஞ்சாலைத் துறையே பராமரிப்பு செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது.*

*இதுகுறித்து நெடுஞ்சாலைத் துறையிடம் தகவல் பரிமாற்றம் செய்யப்பட்டுள்ளது.*

8—

## பழுது நீக்குதல்

**வினா எண் 190—திரு. எஸ்.பி. முத்துக்குமரன்:** *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) புதுக்கோட்டை தொகுதி, கருக்காக்குறிச்சி ஊராட்சி, நல்லாண்டவர் கொல்லை மின்பரிமாற்றப் பெட்டியை பழுது நீக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை தொகுதி, கருக்காக்குறிச்சி ஊராட்சி, நல்லாண்டான்கொல்லையில் பழுதடைந்த கருகிலத்தெரு* IX *மின்மாற்றி மாற்றப்பட்டு 27–06–2011 அன்று இயக்கி வைக்கப்பட்டது. மேலும், இப்பகுதிக்கு புதிய மின்மாற்றி அமைக்க உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இப்பணி 90 நாட்களுக்குள் முடிக்கப்படும்.*

9—

## மின்சாரப் பிரிவு அலுவலகங்களை இணைத்தல்

**வினா எண் 319—திரு. எஸ்.பி. முத்துக்குமரன்:** *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*



2011 ஆகஸ்ட் 10]

*புதுக்கோட்டை தொகுதி, புதுப்பட்டி பிரிவில் உள்ள கரு. தெற்குதெரு, கருக்காக்குறிச்சி மற்றும் முக்கூட்டுக்கொல்லை கிராமங்களை அதன் அருகில் உள்ள கறம்பக்குடி மின்சார பிரிவு அலுவலகத்தில் சேர்க்க அரசு ஆவன செய்யுமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:**

*புதுக்கோட்டை தொகுதி, புதுப்பட்டி பிரிவில் உள்ள கரு. தெற்கு தெரு, கருக்காக்குறிச்சி மற்றும் முக்கூட்டுக்கொல்லை கிராமங்களை அதன் அருகில் உள்ள கறம்பக்குடி மின்சார பிரிவு அலுவலகத்தில் சேர்ப்பதற்கு பரிசீலனை செய்து உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.*

10—

## மின்மாற்றிகள்

**வினா எண் 320—திரு. எஸ்.பி. முத்துக்குமரன்:** *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) புதுக்கோட்டை தொகுதி, கறம்பக்குடி ஒன்றியம், வெள்ளாளவிடுதியில் புதிய மின்மாற்றி அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை தொகுதி, கறம்பக்குடி ஒன்றியம், வெள்ளாளவிடுதியில் தற்போது 10 மின்மாற்றிகள் உள்ளன. தற்போது உள்ள மின் பளுக்களுக்கு மேற்படி மின்மாற்றிகளின் எண்ணிக்கை போதுமானது ஆகும். மின் பளு அதிகரிக்கும் நேரத்தில் தேவைக்கு ஏற்ப கூடுதல் மின்மாற்றிகள் அமைப்பதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும்.*

[2011 ஆகஸ்ட் 10

**11—**

**புதிய கோட்டம்**

**வினா எண் 378—திரு. எஸ்.பி. முத்துக்குமரன்:** *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) அறந்தாங்கி கோட்டத்தை இரண்டாகப் பிரித்து ஆலங்குடியை மையமாகக் கொண்டு புதிய கோட்டம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:**

*(அ) ஆம்.*

*(ஆ) தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்தின் நிதிநிலைமை சீரானவுடன் அறந்தாங்கி கோட்டத்தை இரண்டாகப் பிரித்து ஆலங்குடியை மையமாகக் கொண்டு, புதிய கோட்டம் அமைக்கும் செயற்குறிப்பின்மீது பரிசீலனை செய்து உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.*

**12—**

**இட மாற்றம்**

**வினா எண் 379—திரு. எஸ்.பி. முத்துக்குமரன்:** *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) புதுக்கோட்டையில் மேற்பார்வை பொறியாளர் அலுவலகத்தில் உள்ள சிறப்பு பராமரிப்புப் பிரிவு மற்றும் மின் அளவி சோதனைக்கூடம் ஆகியவற்றை சிப்காட் மத்திய பண்டக சாலைக்கு மாற்ற அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*



2011 ஆகஸ்ட் 10]

**விடை—**

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டையில் மேற்பார்வை பொறியாளர் அலுவலகத்தில் உள்ள சிறப்பு பராமரிப்பு மற்றும் மின் அளவி சோதனைக்கூடம் ஆகியவற்றை சிப்காட் மத்திய பண்டக சாலைக்கு மாற்றும் திட்டம் எதுவும் தற்போது பரிசீலனையில் இல்லை.*

**13—**

**மின்சார வசதி**

**வினா எண் 381—திரு. எஸ்.பி. முத்துக்குமரன்:** *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*புதுக்கோட்டை மாவட்டம், வெட்டன் விடுதியிலுள்ள நீரேற்று நிலையத்திற்கு 24 மணிநேர மின்சாரம் வழங்க அரசு ஆவன செய்யுமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:**

*புதுக்கோட்டை மாவட்டம், வெட்டன்விடுதி கிராமத்தில் நீரேற்று நிலையத்திற்கு 24 மணிநேரம் மின்சாரம் வேண்டி மின் நுகர்வோரிடமிருந்து விண்ணப்பம் ஏதும் பெறப்படவில்லை. தற்போதுள்ள வாரிய விதிகளின்படி (தமிழ்நாடு ஒழுங்குமுறை ஆணைய விதி) சம்மந்தப்பட்ட மின் நுகர்வோர் புதிய தனி மின்பாதை மற்றும் புதிய மின்மாற்றி அமைக்க ஆகும் மதிப்பீட்டுத் தொகையைக் கட்ட சம்மதம் தெரிவித்து விண்ணப்பித்தால் 24 மணிநேர மின்சாரம் வழங்க ஆவன செய்யப்படும்.*

[2011 ஆகஸ்ட் 10

**14—**

**மின்மாற்றிகள்**

**வினா எண் 382—திரு. எஸ்.பி. முத்துக்குமரன்:** *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*புதுக்கோட்டை மின்பகிர்மான வட்டத்தில் அதிகமான மின்மாற்றிகள் பழுதடைவதைத் தடுக்க அரசு ஆவன செய்யுமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:**

*புதுக்கோட்டை மாவட்டத்தில் விவசாயிகள், அனுமதிக்கப்பட்ட மின்பளுவைவிட கூடுதல் மின் பளுவுள்ள மோட்டார்களை இயக்குவதாலும், இருமுனை மின்சாரம் வழங்கும் நேரங்களிலும் மின்மோட்டார்களை இயக்குவதாலும் அதிக அளவில் மின்மாற்றிகள் பழுதாகின்றன. எனினும், பழுதடைந்த மின்மாற்றிகளை உரிய காலத்திற்குள் மாற்றுவதற்கு துரித நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.*

**15—**

**தடையில்லா மின்சாரம்**

**வினா எண் 508—திருமதி ர. சுபா:** *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) கெங்கவல்லி தொகுதியில் அதிக தொழிற்சாலைகள் உள்ளதால் தடையில்லா மின்சாரம் வழங்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*



2011 ஆகஸ்ட் 10]

**விடை—**

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) ஆத்தூர் கோட்டம், கெங்கவல்லி தொகுதிக்குட்பட்ட பகுதிகளுக்கு தெடாவூர் மற்றும் தலைவாசல் 110/22 கே.வி. துணை மின் நிலையங்களிலிருந்து 13 எண்ணம் 22 கே.வி. மின்னூட்டிகள்மூலம் மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது. அதில் ஒரு மின்னூட்டி உயர் அழுத்த மின் இணைப்புக்கானது. தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் மின்பகிர்மான கழக விதிகளின்படி மின்னூட்டிகளில் 300-க்கும் மேற்பட்ட தொழிற்சாலை மின் இணைப்புகள் இருந்தால் மட்டுமே மும்முனை மின்சாரம் 24 மணி நேரம் வழங்கப்படும். ஆனால் மேற்கண்ட 12 உயர் அழுத்த மின்பாதைகளில் ஒவ்வொரு மின்பாதைகளிலும் 300-க்கும் குறைவான தொழிற்சாலை மின் இணைப்புகள் மட்டுமே உள்ளதால், அனைத்து மின்பாதைகளும் கிராமிய மின்பாதைகளாக வரையறுக்கப்பட்டுள்ளன. தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழக விதிகளின்படி தொழிற்சாலை மின் இணைப்புகளின் எண்ணிக்கை அதிகரிக்கும்போது தொடர்ந்து மும்முனை மின்சாரம் (தடையில்லா மின்சாரம்) வழங்க ஆவன செய்யப்படும்.*

**16—**

**மின்சார வசதி**

**வினா எண் 522—திரு. கே.பி. கந்தன்:** *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சோழிங்கநல்லூர் தொகுதி, ஒக்கியம் துரைப்பாக்கம் ஊராட்சி, கண்ணகி நகர் பகுதியில் தடையில்லா மின்சார வசதி செய்ய அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

[2011 ஆகஸ்ட் 10

**விடை—**

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) சோழிங்கநல்லூர் தொகுதி, ஒக்கியம் துரைப்பாக்கம் ஊராட்சி, கண்ணகி நகர் பகுதியில் 5 எண்கள் 250 கேவிஏ மின்மாற்றி நிறுவப்பட்டு, 6,190 மின் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன. மேலும் 5 எண்கள், 250 கேவிஏ மின் மாற்றி மற்றும் தாழ்வழுத்த மின்பாதைகள் அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது. இப்பணிகள் விரைவில் முடிக்கப்படும்.*

17—

## மின் இயந்திரங்கள் பராமரிப்பு

**வினா எண் 736—திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ்:** *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) தமிழக அனல் மின் நிலையங்களில் உள்ள இயந்திரங்களை போதிய பராமரிப்பு செய்து உற்பத்தியை மேம்படுத்த அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) தற்போதைய தமிழக மின் தேவையைக் கருத்தில்கொண்டு அனைத்து மின் உற்பத்தி நிலையங்களிலும் அதிகபட்ச உற்பத்தி செய்யத் தகுந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று தமிழக அரசினால் அறிவுறுத்தப்பட்டுள்ளது. அதன்படி, தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தினுடைய தூத்துக்குடி, மேட்டூர், வடசென்னை மற்றும் எண்ணூர் அனல் மின் நிலையங்களில் உள்ள அனைத்து இயந்திரங்களுக்கும் தேவையான பராமரிப்பு பணிகள் முறையாக மேற்கொள்ளப்பட்டு மின் உற்பத்தி செய்யப்படுகிறது.*



2011 ஆகஸ்ட் 10]

18—

## பணியிடம் நிரப்புதல்

**வினா எண் 738—திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ்:** *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) தமிழக அனல் மின் நிலையங்களில் காலியாகவுள்ள பொறியாளர் பணியிடங்களை நிரப்ப அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) தமிழக அனல் மின் நிலையங்களில் காலியாக உள்ள பொறியாளர் பணியிடங்களை நிரப்புவதற்கான ஆரம்ப வேலைகள் நடைபெற்று வருகின்றன. விரைவில் காலியாக உள்ள உதவிப் பொறியாளர் பணியிடங்கள் நிரப்பப்படும்.*

19—

## மின்சார வசதி

**வினா எண் 739—திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ்:** *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) குப்பைக் கழிவு இயற்கை வாயுவிலிருந்து மின்சாரம் உற்பத்தி செய்வதை ஊக்கப்படுத்த அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) குப்பையிலிருந்து மின்சாரம் உற்பத்தி செய்வதற்கு அதிக அளவில் குப்பை தேவைப்படும். ஒரு*

[2011 ஆகஸ்ட் 10

*மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்ய நாள் ஒன்றுக்கு 130—150 டன் வரை குப்பை தேவைப்படுகிறது. தற்பொழுது சிறிய அளவிலுள்ள பிரித்தெடுக்கப்பட்டட குப்பைக் கழிவுகளை (20 டன்) கொண்டு பயோ கம்போஸ்டிங் முறையில் உரம் தயாரிக்கவும், பயோ மெத்தனேஷன் முறையில் மின்சாரம் தயாரிக்க பரிட்சார்த்த முறையில் முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன. அவற்றின் செயல்பாட்டின் அடிப்படையில் பிற இடங்களிலும் அத்தகைய சிறிய மற்றும் நடுத்தர அளவில் திட்டங்களை மத்திய மரபுசாரா எரிசக்தி அமைச்சகத்தின் உதவியுடன் செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.*

20—

## சூரிய மின் சக்தி

**வினா எண் 741—திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ்:** *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சூரிய சக்தியை மின்சக்தியாக மாற்ற முன்னுரிமை அளிக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) இந்திய அரசின் உற்பத்திக்கு தகுந்த ஊக்கத் தொகை வழங்கும் இத்திட்டத்தின் அடிப்படையில் சிவகங்கையில் ஒரு 5 மெகாவாட் சூரிய ஒளி மின் உற்பத்தித் திட்டம் மற்றும் நாகப்பட்டினத்தில் ஒரு (1) மெகாவாட் சூரிய ஒளி மின் உற்பத்தித் திட்டம் ஆக மொத்தம் 6 மெகாவாட் மின் கட்டமைப்பில் இணைக்கக்கூடிய மின் திட்டம் அமைக்கப்பட்டு மின் உற்பத்தி நடைபெற்று வருகிறது.*

*இன்னும் சில ஆண்டுகளில் இந்த சூரிய ஒளி மின் உற்பத்தி திட்டங்களின் முதலீட்டுச் செலவு குறைய வாய்ப்புகள் உள்ளன.*



2011 ஆகஸ்ட் 10]

*தமிழ்நாட்டில் சூரிய ஒளி மின் உற்பத்திக்கு ஏற்ற ஆற்றல் அதிகமாக உள்ளதால், தமிழக அரசு தனியார் சூரிய ஒளி மின் உற்பத்தியை படிப்படியாகப் பெருக்க ஊக்குவிக்கும். மேலும், உற்பத்தியாளர்கள் சூரிய சக்தி மின் திட்டங்களில் முதலீடு செய்ய ஊக்கப்படுத்தும் வகையில், புதுப்பிக்கத்தக்க எரிசக்திக் கொள்கையை அரசு வெளியிடவுள்ளது.*

21—

## மின் கட்டண வசூல் மையம்

**வினா எண் 744—திரு. சி. மைக்கேல் ராயப்பன்:** *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், ஊரல்வாய்மொழியில் மின் கட்டண வசூல் மையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:**

*ஊரல்வாய்மொழியில் மின் கட்டண வசூல் மையம் அமைக்க ஆவன செய்யப்படும்.*

22—

## பணியிடம் நிரப்புதல்

**வினா எண் 767—திரு. எஸ்.பி. முத்துக்குமரன்:** *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) புதுக்கோட்டை மின் பகிர்மான வட்டத்தில் காலிப் பணியிடங்களை நிரப்ப அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

[2011 ஆகஸ்ட் 10

**விடை—**

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்தில் காலிப் பணியிடங்களை விரைவில் நிரப்ப ஆவன செய்யப்படும்.*

23—

### மின் கம்பியை சீரமைத்தல்

**வினா எண் 1201—திரு. கே. உலகநாதன்:** *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*திருத்துறைப்பூண்டி தொகுதி, செருகளத்தூர் ஊராட்சியிலுள்ள மின்கம்பங்களையும் தாழ்வான நிலையில் உள்ள மின்கம்பிகளையும் சீரமைக்க அரசு ஆவன செய்யுமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:**

*திருத்துறைப்பூண்டி தொகுதி, செருகளத்தூர் ஊராட்சியிலுள்ள பழுதான மின்கம்பங்கள் மற்றும் தாழ்வான நிலையில் உள்ள கம்பிகள் கள ஆய்வு செய்யப்பட்டு மதிப்பீடு தயார் செய்து அனுமதி பெற்று விரைவில் பணி முடிக்கப்படும்.*

**24—**

### மின் இணைப்பு

**வினா எண் 1249—திரு. கே.பி. பரமசிவம்:** *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) பல்லடம் தொகுதியில் உள்ள விவசாயிகளுக்கு மின் இணைப்பு வழங்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*



2011 ஆகஸ்ட் 10]

**விடை—**

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) விவசாய மின் இணைப்பு ஒவ்வொரு ஆண்டும் அரசு வழங்கும் ஆண்டுக்குறியீட்டின்படியும், பதிவு மூப்பு அடிப்படையிலும் வழங்கப்பட்டு வருகிறது. பல்லடம் தொகுதிக்குட்பட்ட பகுதிகளில் 2010–2011 ஆம் ஆண்டு 867 மின் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன. 1-4-2011 முதல் 15-7-2011 வரை 24 மின் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன. தயார்நிலை பதிவு செய்துள்ள 338 நபர்களுக்கு 31-3-2012-க்குள் விவசாய மின் இணைப்பு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. நிலுவையில் உள்ள 1,605 விண்ணப்பங்களுக்கு அரசு வழங்கும் ஆண்டுக், குறியீட்டின்படி இனிவரும் ஆண்டுகளில் மின் இணைப்பு வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.*

25—

### மின்மாற்றி அமைத்தல்

**வினா எண் 1284—திரு. சு. ரவி:** *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) அரக்கோணம் தொகுதி, பின்னவரம் ஊராட்சி, சேந்தமங்கலம் உயர்நிலைப்பள்ளி அருகிலுள்ள மின்மாற்றியை வேறு இடத்தில் மாற்றி அமைக்க அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) அரக்கோணம் தொகுதி, பின்னவரம் ஊராட்சி, சேந்தமங்கலம் உயர்நிலைப்பள்ளி அருகிலுள்ள மின்மாற்றியை வேறு இடத்திற்கு மாற்றும்படி அப்பள்ளி தலைமை ஆசிரியர் கேட்டுக் கொண்டதற்கிணங்க, உரிய மதிப்பீடு அனுமதிக்கப்பட்டு, ரூபாய் 1,48,800/– தொகை செலுத்த தலைமை*

[2011 ஆகஸ்ட் 10

*ஆசிரியர் அவர்களுக்கு கோப்புக் கடிதம் அனுப்பப்பட்டதன் பேரில் ரூ.1,15,000/— தொகை செலுத்தப்பட்டுள்ளது. மீதமுள்ள தொகை ரூ.33,800/—ஐ செலுத்தும்பட்சத்தில் மின்மாற்றி வேறு இடத்திற்கு மாற்றியமைக்கப்படும்.*

26—

## தடையில்லா மின்சாரம்

**வினா எண் 1339—திரு. ப. சம்பத்குமார்:** *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) திருச்செங்கோடு தொகுதியில் தடையில்லா மின்சாரம் வழங்க அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) திருச்செங்கோடு தொகுதியில் தற்போது அறிவிக்கப்பட்டு நடைமுறையில் உள்ள 2 மணி நேர மின் நிறுத்தத்தை தவிர மற்ற நேரங்களில், தொடர்ந்து சீரான மின்சாரம் விநியோகிக்கப்பட்டு வருகிறது.*

27—

## அலுவலகத்தை இரண்டாகப் பிரித்தல்

**வினா எண் 1341—திரு. இரா. குமரகுரு:** *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*விழுப்புரம் மாவட்டத்தில் இயங்கும் தமிழ்நாடு மின் வாரிய மின் மேற்பார்வையாளர் அலுவலகத்தினை இரண்டாகப் பிரித்து இயக்க அரசு ஆவன செய்யுமா?*



2011 ஆகஸ்ட் 10]

**விடை—**

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:**

*விழுப்புரம் மாவட்டத்தில் இயங்கும் தமிழ்நாடு மின் வாரிய மேற்பார்வையாளர் அலுவலகத்தினை கீழ்க்கண்ட காரணங்களுக்காக இரண்டாகப் பிரித்து இயக்க பரிசீலிக்கப்படும்:*

*1) தமிழ்நாட்டில் உள்ள மாவட்டங்களில் அதிக பரப்பளவு மற்றும் மக்கள்தொகை கொண்ட மாவட்டங்களில் விழுப்புரமும் ஒன்று.*

*2) விழுப்புரம் மின் பகிர்மான வட்டத்தில் மற்ற வட்டங்களில் உள்ளதை காட்டிலும் அதிக அளவில் அதாவது எட்டு கோட்டங்கள் இயங்கி வருகின்றன. சாதாரணமாக ஒவ்வொரு மின் பகிர்மான வட்டத்திலும் 3 முதல் 4 கோட்டங்கள் இயங்கி வருகின்றன. இந்நிலையில் விழுப்புரத்தில் 8 கோட்டங்கள் இயங்கி வருவதால், மற்ற வட்டங்களைவிட அதிகமான பணியாளர் எண்ணிக்கை உள்ளதால் அதிக கூடுதல் செலவினங்களும் நிர்வகிப்பதில் கூடுதல் பணிச்சுமையும் இருந்து வருகிறது.*

*3) பொதுமக்கள் மற்றும் மின் நுகர்வோர்கள், மேற்பார்வை பொறியாளர்/விழுப்புரம் அவர்களைச் சந்திக்க நெடும் பயணம் மேற்கொள்ள வேண்டியுள்ளது.*

*4) வருங்காலத்தில் விழுப்புரம் மின் பகிர்மான வட்டம் கட்டமைப்பு மற்றும் இதர பணிகளும் தற்போதுள்ள நிலையைவிட மூன்று மடங்காக உயர வாய்ப்புள்ளது.*

*5) ஏற்கெனவே அனைத்து தரப்பிலிருந்தும் மற்றொரு விநியோக வட்டம் அமைக்க வேண்டும் என்ற கோரிக்கையும் இருந்து வருகிறது.*

*6) இந்நிலையில் தற்போது செயல்பட்டுவரும் விழுப்புரம் மின் பகிர்மான வட்டத்தை நுகர்வோர் நலன் கருதி இரண்டாகப் பிரித்தால் கூடுதல் செலவினங்களைக் குறைக்கவும், மின் வாரிய பணிகளை விரைந்து முடிக்கவும், நிர்வாக அடிப்படையில் நிர்வகிக்கவும் இயலும்.*

[2011 ஆகஸ்ட் 10

28—

**தடையில்லா மின்சாரம்**

**வினா எண் 1351—திரு. ம. குணசேகரன்:** *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) மானாமதுரை தொகுதி, இளையான்குடி ஒன்றிய பகுதியில் தடையில்லா மின்சாரம் வழங்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதி, இளையான்குடி ஒன்றிய பகுதியில் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்தால் அறிவிக்கப்பட்ட (காலை 8 மணி முதல் காலை 10.00 மணி வரை) மின்தடை நேரம் தவிர்த்து மற்ற நேரங்களில் சீரான மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது.*

29—

**மின்மாற்றி அமைத்தல்**

**வினா எண் 1352—திரு. ம. குணசேகரன்:** *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம் ஒன்றியப் பகுதியில் செல்லப்பனேந்தல், பழையனூர், கொத்தங்குளம் ஆகிய பகுதிகளில் புதிய மின்மாற்றிகள் அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம் ஒன்றியம், செல்லப்பனேந்தல் பகுதியில் மூன்று 100* KVA/



2011 ஆகஸ்ட் 10]

11KV *மின்மாற்றிகள் மூலம் மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது. பழையனூர் பகுதியில் இரண்டு 100* KVA/*11*KV *மின்மாற்றிகள் மற்றும் ஒரு 63* KVA/*11*KV *மின்மாற்றி மூலம் மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது. கொத்தங்குளம் பகுதியில் இரண்டு 100* KVA/*11*KV *மின்மாற்றிகள் மூலம் மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது. மேற்கண்ட மின்மாற்றிகளில் கூடுதல் மின்பளுவோ அல்லது குறைந்த மின்னழுத்தமோ எதுவும் இல்லாததால் மேற்கண்ட இடங்களில் புதிய மின்மாற்றி அமைக்க வேண்டிய அவசியம் இல்லை.*

30—

**மின்மாற்றி அமைத்தல்**

**வினா எண் 1358—திரு. கே.பி. கந்தன்:** *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சோழிங்கநல்லூர் தொகுதி, கோவிலம்பாக்கம் ஊராட்சிக்குட்பட்ட இன்ஜினியர்ஸ் அவின்யூ பகுதியில் 250 கே.வி. திறன் கொண்ட மின்மாற்றிகள் அமைக்கவும், 30 சோடியம் ஆவி விளக்குகள் அமைக்கவும் அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) சோழிங்கநல்லூர் தொகுதி, கோவிலம்பாக்கம் ஊராட்சிக்குட்பட்ட இன்ஜினியர்ஸ் அவின்யூ பகுதியில் ஒரு 250 கே.வி. திறன் கொண்ட மின்மாற்றி அமைப்பதற்கான மதிப்பீடு தயார் செய்யப்பட்டு திருத்தியமைக்கப்பட்ட, விரைவுபடுத்தப்பட்ட மின் மேம்பாடு மற்றும் சீரமைப்புத்* (R-APDRP) *திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளது. இப்பணிகள் விரைவில் முடிக்கப்படும். சோடியம் ஆவி விளக்குகள் அமைப்பதற்கான விண்ணப்பம் ஊராட்சியிலிருந்து இதுவரை பெறப்படவில்லை. விண்ணப்பம் பெறப்பட்டவுடன் தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.*

[2011 ஆகஸ்ட் 10

31—

## மின் கம்பம் பழுதுபார்த்தல்

**வினா எண் 1359—திரு. கே.பி. கந்தன்:** *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சோழிங்கநல்லூர் தொகுதி, கோவிலம்பாக்கம் ஊராட்சி எல்.ஐ.சி. நகர் பகுதியில் மின் கம்பங்களைப் பழுதுபார்க்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) சோழிங்கநல்லூர் தொகுதிக்குட்பட்ட கோவிலம்பாக்கம் ஊராட்சியைச் சார்ந்த எல்.ஐ.சி. நகர் பகுதியில் உள்ள 7 பழுதான மின் கம்பங்களில் 4 கம்பங்கள் ஏற்கெனவே மாற்றப்பட்டுவிட்டன. மீதமுள்ள 3 மின் கம்பங்களும் விரைவில் மாற்றப்படும்.*

32—

## மின் வடக்கம்பி அமைத்தல்

**வினா எண் 1360—திரு. கே.பி. கந்தன்:** *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சோழிங்கநல்லூர் தொகுதி, உத்தண்டி ஊராட்சி, நைனார்குப்பம் மீனவ பகுதியில் உப்புக்காற்று மின் கம்பத்தில் படிந்து, அடிக்கடி பழுதடைவதால் மின் வடக்கம்பி பூமிக்கு அடியில் பதிக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*



2011 ஆகஸ்ட் 10]

**விடை—**

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) சோழிங்கநல்லூர் தொகுதி, உத்தண்டி ஊராட்சிக்குட்பட்ட நைனார்குப்பம் மீனவ பகுதியில் உள்ள மின் வடக்கம்பிகளை புதைவடமாக மாற்றுவதற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டு அனுமதி பெறப்பட்டுள்ளது. இப்பணிகள் விரைவில் முடிக்கப்படும்.*

33—

## மின் இணைப்பு

**வினா எண் 1399—திரு. மு. திராவிடமணி:** *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*நீலகிரி மாவட்டம், பந்தனூர், கூடலூர் வட்டத்தில் வீட்டு வரி செலுத்தும் அனைவருக்கும் மின்னிணைப்பு வழங்க அரசு ஆவன செய்யுமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:**

*தமிழ்நாடு மின்சாரப் பகிர்மான விதித் தொகுப்பில் 27 விதியின்படி, வீட்டு மின்னிணைப்பு பெற அதற்கு உரிய முழுமையான விண்ணப்பத்துடன் கீழ்க்கண்ட ஆவணங்களை சமர்ப்பிக்க வேண்டும்:*

*1. உரிமைச் சான்று (விற்பனைப் பத்திரம் அல்லது சொத்து/தண்ணீர்/வடிகால் வரியின் பற்றுச்சீட்டு)*

*2. உரிமையாளரது சம்மதக் கடிதம் தேவைப்பட்டால் மட்டும்.*

[2011 ஆகஸ்ட் 10

34—

## மின்மாற்றி அமைத்தல்

**வினா எண் 1774—திரு. கா. தமிழரசன்:** *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*மதுரை கிழக்கு தொகுதி, சின்னமாங்குளம் ஊராட்சி, துக்களப்பட்டியில் புதிய மின்மாற்றி அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:**

*மதுரை கிழக்கு தொகுதியில் உள்ள சின்னமாங்குளம் ஊராட்சியில் துக்களப்பட்டி உட்கடை கிராமத்தில் சுமார் 40 வீடுகள் மட்டுமே உள்ளன. தற்போது அவ்வீடுகளில் உள்ள மின் இணைப்புகளில் குறைந்த தாழ்மின்னழுத்தம் ஏதும் இல்லை. இனிவரும் காலங்களில் அக்கிராமத்தின் மின்பளு வளர்ச்சியின் அடிப்படையில் புதிய மின்மாற்றி அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.*

35—

## மின்மாற்றி அமைத்தல்

**வினா எண் 1775—திரு. கா. தமிழரசன்:** *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*மதுரை கிழக்கு தொகுதி, புதுத்தாமரைப்பட்டியில் புதிய மின்மாற்றி அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:**

*மதுரை கிழக்கு தொகுதியில் உள்ள புதுத்தாமரைப்பட்டி கிராமத்தில் 100* KVA *திறன் உள்ள மின்மாற்றியை 250* KVA *திறன் உள்ள மின்மாற்றியாக மாற்றி அமைக்கும் பணி முடிக்கப்பட்டு மின்னூட்டம் செய்யப்பட்டது.*



2011 ஆகஸ்ட் 10]

36—

## வங்கி கடன்

**வினா எண் 852—திரு. சோழன் சித. பழனிச்சாமி:** *மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) காரைக்குடி தொகுதியில் மரச்சிற்பம் மற்றும் கல்சிற்ப வேலைப்பாடு கலைஞர்களுக்கு தொழில் துவங்க வங்கி கடன் வழங்கியும், அரசே கொள்முதல் செய்யவும் அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. சி. சண்முகவேலு, ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

*(அ) காரைக்குடி மரச்சிற்பம் மற்றும் கல்சிற்ப வேலைப்பாடு கலைஞர்களுக்கு தொழில் துவங்க வங்கி கடன் வழங்கும் திட்டம் எதுவும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.*

*(ஆ) இவ்வினா எழவில்லை.*

37—

## ஆழ்குழி வெட்டுதல்

**வினா எண் 95—திரு. ஓ.கே. சின்னராஜ்:** *மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) மேட்டுப்பாளையம் தொகுதியிலுள்ள வனப் பகுதி எல்லைகளில் காட்டு யானைகளின் தொந்தரவுகளைக் கட்டுப்படுத்த ஆழ்குழி வெட்ட அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

[2011 ஆகஸ்ட் 10

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.டி. பச்சைமால், வனத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) கோவை வனக்கோட்டத்தில் பட்டா / விவசாய நிலங்களுக்கும் ஒதுக்குக் காட்டுக்கும் இடையேயுள்ள எல்லையின் மொத்த நீளம் 315 கி.மீ. ஆகும். இந்த வன எல்லைக்கு அருகிலுள்ள கிராமங்களில் யானைகளின் நடமாட்டத்தால் அடிக்கடி பாதிக்கப்படும் என 58 கிராமங்கள் கண்டறியப்பட்டுள்ளன.*

*2. மேட்டுப்பாளையம் தொகுதியில் வன எல்லையின் மொத்த நீளம் 151 கி.மீ. ஆகும். 2011–2012 ஆம் ஆண்டில் கோவை வனக் கோட்டத்திற்குட்பட்ட 79 கி.மீ. நீளத்திற்கு யானைகள் புகா அகழிகள் வெட்டுவதற்கு நிதி ஒப்பளிப்பு செய்வது சம்மந்தமாக அரசு பரிசீலித்து வருகிறது.*

38—

### கலையரங்கம்

**வினா எண் 321—திரு. எஸ்.பி. முத்துக்குமரன்:** *மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) புதுக்கோட்டை தொகுதி, அதிரான் விடுதியிலுள்ள பிள்ளையார் கோயிலுக்கு கலையரங்கம் கட்ட அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. எஸ்.பி. சண்முகநாதன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை மாவட்டம், கறம்பக்குடி வட்டம், அதிரான்விடுதி அருள்மிகு பிள்ளையார் திருக்கோயில் இந்து சமய அறநிலையத் துறை கட்டுப்பாட்டின்கீழ் வராத, வருமானம் இல்லாத மிகச்சிறிய கிராமக் கோயிலாகும். இத்திருக்கோயிலில் சுமார் இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் கிராமப் பொதுமக்களால் சாலையோர புறம்போக்கில் புதிதாக கட்டப்பட்டுள்ளது. தற்போது கிராமப் பொதுமக்களால் பராமரிக்கப்பட்டு வருகிறது. இத்திருக்கோயிலில் உண்டியல் இல்லை. இந்து சமய அறநிலையத் துறை கட்டுப்பாட்டில் இல்லாத நிலையில் இத்திருக்கோயிலுக்குக் கலையரங்கம் அறநிலையத் துறை மூலம் கட்டுவதற்கு வழிவகை இல்லை.*



2011 ஆகஸ்ட் 10]

39—

### கோயில் மண்டபம்

**வினா எண் 615—திரு. ஓ.கே. சின்னராஜ்:** *மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) மேட்டுப்பாளையம் தொகுதி, காரமடை அருள்மிகு அரங்கநாதர் கோயிலில் முன் மண்டபம் கட்டவும், கழிப்பிட வசதி செய்யவும் அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. எஸ்.பி. சண்முகநாதன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூர் மாவட்டம், மேட்டுப்பாளையம் வட்டம், காரமடை அருள்மிகு அரங்கநாதர்சுவாமி திருக்கோயில் இந்து சமய அறநிலையத் துறை கட்டுப்பாட்டில் உள்ள திருக்கோயிலாகும். இத்திருக்கோயிலின் நிர்வாகம் செயல் அலுவலரால் கவனிக்கப்பட்டு வருகிறது. இத்திருக்கோயிலின் ஆண்டு வருமானம் ரூ.1.23 கோடி ஆகும். இத்திருக்கோயிலில் தற்போது ஏழு நிலை இராஜகோபுரம் கட்டும் பணி ரூ.86.50 இலட்சம் மதிப்பீட்டில் நடைபெற்று வருகிறது. தற்போது கல்கார பணி முடிவுற்று கான்கிரீட் போடப்பட்டுள்ளது. இராஜகோபுர திருப்பணி ஓராண்டு காலத்திற்குள் நிறைவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது. இப்பணி முடிவுற்றபின் இராஜகோபுரத்திற்கு முன்பு கிழக்குப்புறம் முன் மண்டபம் கட்டப்பட உள்ளது.*

[2011 ஆகஸ்ட் 10

*இத்திருக்கோயிலில் தற்போது 4 கழிவறைகள் மற்றும் 6 குளியலறைகள் உள்ளன. இவை திருக்கோயிலின் ஈசான்ய பாகத்தில் அமைந்துள்ளதால், ஆகம விதிகளுக்கு புறம்பாக உள்ளது. எனவே, இவற்றினை இடித்து அப்புறப்படுத்திவிட்டு நவீன கழிவறை மற்றும் குளியலறைகளை சுமார் ரூ.15.00 இலட்சம் மதிப்பீட்டில் திருக்கோயில் நிதியின் மூலம் கட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இத்திருக்கோயிலுக்கு 11.31 ஏக்கர் நன்செய் நிலம் மற்றும் 5.54 ஏக்கர் புன்செய் நிலமும் உள்ளன.*

40—

## மண்டபம் கட்டுதல்

**வினா எண் 618—திரு. ஓ.கே. சின்னராஜ்:** *மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) மேட்டுப்பாளையம் அருள்மிகு வனபத்ர காளியம்மன் கோயிலின் முன்புற பகுதியில் தார் தளம் அமைக்கவும், முன் மண்டபம் கட்டவும் அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. எஸ்.பி. சண்முகநாதன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூர் மாவட்டம், மேட்டுப்பாளையம் வட்டம், அருள்மிகு வனபத்ர காளியம்மன் திருக்கோயில் இந்து சமய அறநிலையத் துறை கட்டுப்பாட்டில் உள்ள திருக்கோயிலாகும். இத்திருக்கோயிலின் ஆண்டு வருமானம் ரூ.3.26 கோடியாகும். இத்திருக்கோயிலில் ரூ.15.38 கோடி முதலீடு உள்ளது. இத்திருக்கோயிலின் முன்பகுதியில் தார்ச்சாலை அமைக்கும் பணியினை சுமார் 3 இலட்சம் மதிப்பீட்டில் உபயதாரர் மூலம் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. முன்மண்டபம் கட்டும் பணியினை திருக்கோயில் நிதியிலிருந்து ரூ.44 இலட்சம்*



2011 ஆகஸ்ட் 10]

*மதிப்பீட்டில் மேற்கொள்ள மதிப்பீடு அங்கீகாரம் 28-10-2010 அன்று வழங்கப்பட்டது. 28–12–2010 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், ஒப்பந்தப்புள்ளி ஏதும் வரப்பெறவில்லை. இதனால் ஒப்பந்தப்புள்ளி தள்ளி வைக்கப்பட்டது. 2011–2012 விலை விகிதப்படி திருத்திய மதிப்பீடு தயார் செய்து அங்கீகாரம் பெற்று பணி மேற்கொள்ளப்படவுள்ளது. இத்திருக்கோயிலுக்குச் சொந்தமாக நன்செய், புன்செய் நிலமில்லை.*

41—

## நலத் திட்டங்கள்

**வினா எண் 1737—திரு. எஸ்.பி. முத்துக்குமரன்:** *மாண்புமிகு சிறப்புத் திட்ட அமலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) நலத் திட்டங்கள் சரியாக பொது மக்களுக்குச் சென்றடைவதைக் கண்காணிக்கக் குழு அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், சிறப்புத் திட்ட அமலாக்கத் துறை அமைச்சர்:**

*(அ) அரசின் சிறப்புத் திட்டங்கள் சரியாக பொது மக்களுக்குச் சென்றடைவதை கண்காணிக்க சிறப்புத் திட்ட அமலாக்கத் துறையென தனியாக ஒரு துறை 16–05–2011 அன்று உருவாக்கப்பட்டுள்ளது. எனவே, தனியாக ஒரு குழு அமைக்க செயற்குறிப்பு ஏதும் பரிசீலனையில் இல்லை.*

*(ஆ) எழவில்லை.*

42—

## சாதிச் சான்றிதழ்

**வினா எண் 839—திரு. என்.ஆர். ரெங்கராஜன்:** *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

[2011 ஆகஸ்ட் 10

*பட்டுக்கோட்டை நகரில் வசிக்கும் காட்டுநாயக்கர் இனத்திற்கு ஆய்வு செய்து சாதிச் சான்றிதழ் முறையாக வழங்க அரசு ஆவன செய்யுமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி, வருவாய்த் துறை அமைச்சர்:**

*காட்டுநாயக்கன் வகுப்பு பழங்குடியினர் பட்டியலில் (வரிசை எண் 9) இடம் பெற்றுள்ளது. இந்த வகுப்பிற்கான வகுப்புச் சான்றிதழ் வருவாய் கோட்டாட்சியரால் வழங்கப்படுகிறது. இந்நிலையில், பட்டுக்கோட்டையில் வசிக்கும் காட்டுநாயக்கன் இனத்தைச் சேர்ந்தவர்கள் அந்த ஊரை பூர்வீகமாக கொண்டிருந்தால் அதற்கான ஆதாரங்களுடன் வருவாய் கோட்டாட்சியருக்கு விண்ணப்பித்து விசாரணை மற்றும் தகுதியின் அடிப்படையில், சான்றிதழ் பெற்றுக்கொள்ளலாம்.*

43—

## பட்டா வழங்குதல்

**வினா எண் 840—திரு. என்.ஆர். ரெங்கராஜன்:** *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*பட்டுக்கோட்டை தொகுதி, பட்டுக்கோட்டை நகரில் பாசன வாய்க்கால் ஓரங்களில் குடியிருப்பவர்களுக்கு மாற்று இடம் வழங்கி பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி, வருவாய்த் துறை அமைச்சர்:**

*பட்டுக்கோட்டை நகரில், பாசன வாய்க்கால் ஓரங்களில் குடியிருப்பவர்கள் ஆட்சேபகரமான வாய்க்காலில் ஆக்கிரமிப்புச் செய்தவர்கள் ஆவார்கள். நீர்நிலை புறம்போக்குகளில் உள்ள ஆக்கிரமிப்புகளை வரன் முறைப்படுத்திடக்கூடாது என உயர்நீதிமன்றத்தில் தடையாணையும் மற்றும் அரசாணையும் உள்ளது. எனவே, ஆக்கிரமிப்புச் செய்தவர்களுக்கு ஆட்சேபனை இல்லாத தகுதி வாய்ந்த மற்றும் அரசு புறம்போக்கு நிலங்களைத் தேர்வு செய்து*



2011 ஆகஸ்ட் 10]

*தகுதியின் அடிப்படையில், இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கிட நடவடிக்கை எடுக்கப்படும்.*

44—

## புதிய வட்டம் உருவாக்குதல்

**வினா எண் 865—திரு. எஸ்.எஸ். சிவசங்கர்:** *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) புன்னம் தொகுதி, புன்னம் வட்டத்தை இரண்டாகப் பிரித்து புதிய ஆலத்தூர் வட்டம் உருவாக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி, வருவாய்த் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) புன்னம் தொகுதி, புன்னம் வட்டத்தை இரண்டாக பிரித்து, புதிய ஆலத்தூர் வட்டம் உருவாக்குவது தொடர்பான கருத்துரு அரசின் ஆய்வில் உள்ளது. இதுபற்றி விரைவில் முடிவெடுக்கப்படும்.*

45—

## மாவட்ட ஆட்சியர் அலுவலகம்

**வினா எண் 935—திரு. கே.பி. பரமசிவம்:** *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) திருப்பூர் மாவட்டத்தின் மையப் பகுதியில் பல்லடம் தொகுதி அமைந்துள்ளதால் அப்பகுதியில் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் மற்றும் இதர துறை அலுவலகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

[2011 ஆகஸ்ட் 10

**விடை—**

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி, வருவாய்த் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) திருப்பூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் மற்றும் இதர துறை அலுவலகங்கள் அமைக்க இடம் தேர்வு செய்யப்பட்டு நடவடிக்கையில் உள்ளது. இது குறித்து அரசு உரிய பரிசீலனை மேற்கொண்டு முடிவெடுக்கும்.*

46—

## பட்டா வழங்குதல்

**வினா எண் 1646—திரு. டி. இராமச்சந்திரன்:** *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) தளி தொகுதி, கெலமங்கலம் பேரூராட்சியில் குடியிருக்கும் வீடுகளுக்குப் பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி, வருவாய்த் துறை அமைச்சர்:**

*(அ) தளி தொகுதி, கெலமங்கலம் பேரூராட்சியில், கிராம நத்தத்தில் குடியிருக்கும் வீடுகளுக்கு மட்டும், பொதுமக்கள் பட்டா கேட்டு மனு செய்தால், நடவடிக்கை மேற்கொள்ளப்படும். பட்டாளம்மன் ஏரி புறம்போக்கு புல எண் 513–இல் வசித்து வரும் நபர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க இயலாது.*

*(ஆ) தகுதியான நபர்கள் கிராம நத்தம் புறம்போக்கில் வீட்டுமனைப் பட்டா கேட்டு மனு செய்தால், வீட்டுமனைப் பட்டா வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.*

47—

## வீட்டுமனைப் பட்டா

**வினா எண் 1648—திரு. டி. இராமச்சந்திரன்:** *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*



2011 ஆகஸ்ட் 10]

*(அ) தளி தொகுதி, கெலமங்கலம் பேரூராட்சியில் அண்ணா நகர் மற்றும் ஜீவா நகர் பகுதிகளில் குடியிருப்பவர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி, வருவாய்த் துறை அமைச்சர்:**

*(அ) தளி தொகுதி, கெலமங்கலம் பேரூராட்சியில், அண்ணா நகர் மற்றும் ஜீவா நகர் பகுதி, கெலமங்கலம் கிராம புல எண் 121/1, 121/1ஏ, 153/1, 153/3 மற்றும் 150/1–இல் அமைந்துள்ள நிலங்கள், விருப்பாச்சி ஈஸ்வரன் மற்றும் பட்டாளம்மன் கோயில் மான்ய நிலமாக உள்ளதால், மேற்படி புல எண்களில் குடியிருப்பவர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க இயலாது.*

*(ஆ) கோயில் மான்ய நிலமாக உள்ளதால், பட்டா வழங்க இயலாது.*

48—

## அலுவலகக் கட்டடம்

**வினா எண் 1714—திரு. அ. சௌந்தரபாண்டியன்:** *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*இலால்குடியில் வட்டாட்சியர் அலுவலகத்திற்குப் புதிய இடத்தில் அலுவலகக் கட்டடம் கட்டும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி, வருவாய்த் துறை அமைச்சர்:**

*திருச்சிராப்பள்ளி மாவட்டம், இலால்குடி வட்டாட்சியர் அலுவலகத்திற்குப் புதிய இடத்தில் அலுவலகக் கட்டடம் கட்டுவதற்கு கருத்துரு பெறப்பட்டுள்ளது. இதன்மீது பரிசீலனை செய்து அரசு உரிய முடிவெடுக்கும்.*

[2011 ஆகஸ்ட் 10

**49—**

### பட்டு கொள்முதல்

**வினா எண் 792—திரு. வி. சோமசுந்தரம்:** *மாண்புமிகு கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*காஞ்சிபுரம் பட்டு கூட்டுறவு சங்கங்களில் உற்பத்தி செய்யும் பட்டு சேலைகளை கோ—ஆப்டெக்ஸ்மூலம் கொள்முதல் செய்யும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. பி.வி. ரமணா, கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர்:**

*காஞ்சிபுரத்தில் உள்ள பட்டு நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் உள்ள சுத்த சரிகை பட்டு சேலைகளை அனுப்பீடு முறையிலும், ஆப் பைன் சரிகை பட்டு சேலைகளை கொள்முதல் அடிப்படையிலும் கோ—ஆப்டெக்ஸ் கொள்முதல் செய்து வருகிறது.*

50**—**

### மகளிர் பேருந்து

**வினா எண் 30—திரு. ம. குணசேகரன்:** *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) மானாமதுரை தொகுதி, மானாமதுரையிலிருந்து சிவகங்கை மாவட்ட ஆட்சியர் அலுவலகம் வரை மகளிர் நகரப் பேருந்து காலை மற்றும் மாலையில் இயக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*



2011 ஆகஸ்ட் 10]

**விடை—**

**மாண்புமிகு திரு. வி. செந்தில் பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) மானாமதுரையிலிருந்து, சிவகங்கைக்கு அரசு பேருந்து 80 நடைகளும், தனியார் பேருந்து 11 நடைகளும் இயக்கப்பட்டு வருகின்றன. மேலும், பயணம் செய்யும் பயணிகளின் அடர்வு விகிதம் மிகவும் குறைவாகவே உள்ளது. பயணிகளின் அடர்வு விகிதம் அதிகரிக்கும் போது தேவையின் அடிப்படையில் தனியாக மகளிர் பேருந்து காலை மற்றும் மாலையில் இயக்க ஆவன செய்யப்படும்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.*

*[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]*

## 2. Zero hour — விளக்கம்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *சிவகாசி அருகே, காளையார்குறிச்சி பட்டாசு தொழிற்சாலையில் . . . (குறுக்கீடு)*

**திரு. க. பாலகிருஷ்ணன்:** வினாக்கள்—விடைகள் நேரம் முடிந்த பிறகு, வழக்கமாக 'zero hour' என்கிற நிகழ்ச்சி இடம்பெறும். நம்முடைய அவையிலே அது தொடர்ந்து இடம் பெறாமல் இருந்துகொண்டிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இப்போது, இது 'zero hour' தான். (குறுக்கீடு) மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நான் தெரிவித்துக்கொள்வது, மாநில சட்டமன்றப் பேரவைகளிலும் சரி, நாடாளுமன்றத்திலும் சரி, அதிகாரப்பூர்வமாக 'zero hour' என்று எதுவுமே கிடையாது. பத்திரிகையாளர்களும், ஊடகங்களும் அதை 'zero hour' என்று குறிப்பிடுவார்கள். அவ்வளவுதான். பொதுவாக ஒரு சட்டமன்றம் நடைபெறும்போது,

[செல்வி ஜெ ஜெயலலிதா] [2011 ஆகஸ்ட் 10

நாடாளுமன்றம் நடைபெறும்போது, கேள்வி நேரம் முடிந்த பிறகு, உறுப்பினர்கள் தாங்கள் விரும்புகின்ற பிரச்சினைகளை எழுப்புவார்கள். அதை நடைமுறையில் 'zero hour' என்று சொல்கிறோமே தவிர, 'zero hour' என்று விதிமுறைகள்படி எதுவும் கிடையாது. (மேசையைத் தட்டும் ஒலி).

## 3. சிறப்புக் கவன ஈர்ப்பு

### சிவகாசி வட்டம், காளையார்குறிச்சி பட்டாசு தொழிற்சாலை வெடி விபத்தில் உயிரிழந்தவர்களுக்கு நிவாரணம்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சிவகாசி அருகே, காளையார்குறிச்சி பட்டாசு தொழிற்சாலையில் 5–8–2011 அன்று ஏற்பட்ட வெடி விபத்தில் 10 பேர் உயிரிழந்த சம்பவம் குறித்து, இந்திய கம்யூனிஸ்டு (மார்க்சிஸ்ட்) கட்சியைச் சார்ந்த மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. அ. சவுந்தரராசன், செல்வி கே. பாலபாரதி, திரு. க. பாலகிருஷ்ணன், திரு. கே. தங்கவேல், திரு. ஏ. லாசர், திரு. ப. டில்லி பாபு, திரு. இரா. அண்ணாதுரை, திரு. க. பீம்ராவ், திரு. ஆர். ராமமூர்த்தி, திரு. பெ. மகாலிங்கம், இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பில் மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. எம். ஆறுமுகம், திரு. சு. குணசேகரன், புதிய தமிழகம் கட்சியைச் சார்ந்த மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி ஆகியோர் சட்டப் பேரவை விதி 55–இன்கீழ் அறிவிப்புக் கொடுத்துள்ளார்கள். இதனை சிறப்புக் கவன ஈர்ப்பாக எடுத்துக்கொள்கிறேன். இதுகுறித்து அறிவிப்புக் கொடுத்தவர்களில் கட்சிக்கு ஒருவர் என்ற முறையில் சுருக்கமாக மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வரலாம். இந்திய கம்யூனிஸ்டு (மார்க்சிஸ்ட்) கட்சி சார்பாக மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன் அவர்கள்.

முற்பகல் 11–10

***திரு. அ. சவுந்தரராசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிவகாசியில், காளையார்குறிச்சியில் நடந்த பட்டாசுத் தொழிற்சாலை வெடி விபத்து, மிகக் கொடுமையாக இதற்கு முன்பு நடந்த பல விபத்துகளைவிட அதிக உயிரிழப்புகளை உண்டாக்கியிருக்கிறது. தொடர்ந்து அந்தப் பகுதியிலே



2011 ஆகஸ்ட் 10] [திரு. அ. சவுந்தரராசன்]

இதுபோன்ற விபத்துகள் நடப்பது மிகுந்த வேதனை அளிக்கிறது. அரசு பாதுகாப்பு ஏற்பாடுகளோடும், உரிய உரிமங்கள் பெற்று நடத்துகின்ற வகையிலும், நம்முடைய தொழிற்சாலை ஆய்வகத் துறை கறாரான, கண்டிப்பான முறைகேடற்ற நடவடிக்கைகளை எடுத்தாலொழிய, இதுபோன்ற விபத்துகளை நாம் தடுக்க முடியாது. ஆகவே, இதுபோன்ற விபத்துகளைத் தடுப்பதற்குரிய நடவடிக்கைகளைக் கறாராகவும், கண்டிப்பாகவும் எடுக்க வேண்டுமென்று நான் வலியுறுத்துகின்றேன். இந்த விபத்தில் பாதிக்கப்பட்ட 8 பேர்கள் உயிரிழப்பு என்பது, தற்போது 10 பேர்கள் என்றாகிவிட்டது. அந்த 10 பேர்களுடைய குடும்பத்திற்கு நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கருணையோடு ஒரு இலட்சம் ரூபாய் நிவாரணம் அறிவித்திருக்கிறார்கள். அதற்காக நான் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேநேரத்தில், இந்த ஆட்சி அமைந்தபிறகு, எல்லா உதவித் தொகைகளையும் நாம் இரண்டு மடங்காக உயர்த்தியிருக்கிறோம். 500 ரூபாய் உதவித் தொகையை ஆயிரம் ரூபாயாக ஆக்கியிருக்கிறோம், திருமண உதவித் தொகையை நாம் உயர்த்தியிருக்கிறோம். தமிழகத்திலே இந்தத் தேவை, விலைவாசி போன்றவற்றையெல்லாம் கணக்கில்கொண்டு, இந்த உயர்வுகளை நாம் வழங்கியிருக்கிறோம். இந்த விபத்திலே உயிரிழந்தவர்கள், அவர்களுடைய குடும்பத்திற்கு உணவுக்கான வருமானத்தை ஈட்டிக்கொண்டிருந்தவர்கள். அவர்கள் விட்டுச்சென்றிருக்கின்ற குழந்தைகள் இருக்கின்றன, இளைஞர்கள் இருக்கின்றார்கள், பெண்கள் இருக்கின்றார்கள். ஆகவே, அவர்கள் வாழத்தக்க ஒரு சூழ்நிலையை ஏற்படுத்த இந்த ஒரு இலட்சம் ரூபாய் நிவாரணம் போதாது என்று நான் தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே, ஒரு குடும்பத்திற்கு, அவர்களுக்குத் தேவையான பாதுகாப்பைத் தரத்தக்க வகையில் ஒரு தொகையை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உயர்த்தி வழங்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பில், மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன் அவர்கள்.

**திரு. சு. குணசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிவகாசி வட்டம், சுக்கிரவாரப்பட்டியில், சுப்ரீம் பையர் ஒர்க்ஸ் என்ற நிறுவனத்தில், கடந்த வாரம் ஏற்பட்ட

[திரு. சு. குணசேகரன்] [2011 ஆகஸ்ட் 10

வெடி விபத்தில், 8 பேரும், பின்னால் 2 பேரும் ஆகச் சேர்த்து, 10 பேர் உயிரிழந்திருக்கிறார்கள். மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் உடனடியாக சம்பந்தப்பட்ட துறை அமைச்சரை அங்கே அனுப்பி, அந்த மாவட்டத்தினுடைய அமைச்சரையும் அனுப்பி பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணத் தொகை வழங்கியிருக்கிறார்கள். ஆறுதலையும் வழங்கியிருக்கிறார்கள். அதேசமயத்தில், இந்த வெடிவிபத்து தொடர்ந்து பல ஆண்டுகளாகத் திடீர் திடீரென்று ஏற்படுகிறது. கடந்த 2 ஆண்டுகளுக்கு முன்னால்கூட மதுரை மாவட்டம், உசிலம்பட்டி பக்கத்திலே வெடி விபத்து ஏற்பட்டு, ஒரே நேரத்தில் இருபதுக்கும் மேற்பட்டவர்கள் அங்கே பலியானார்கள். இப்படி பலியாகின்றவர்கள் யார் என்று சொன்னால், வேலைவாய்ப்பு கிடைக்காத சாதாரண கிராமப்புறத்து விவசாயத் தொழிலாளிகள். எனவே, அவர்களுடைய குடும்பங்கள் மிகப் பெரிய பாதிப்புக்கு உள்ளாக்கப்படுகின்றன. இந்த வெடிவிபத்தில்கூட, 2 பெண்கள் கரிசல்குளத்தைச் சேர்ந்தவர்கள் இறந்திருக்கிறார்கள். குறிப்பாக, விசாரிக்கின்ற நேரத்தில் அந்த 2 பேருமே, அன்றைக்குத்தான் வேலைக்குச் சேர்ந்திருக்கிறார்கள். அதிலே இலட்சுமி என்ற பெண்ணுக்கு 3 பெண் குழந்தைகள் இருக்கின்றன. கணவன் இல்லை. தாயையும், தகப்பனையும் இழந்த 3 பெண் குழந்தைகள் அந்தக் குடும்பத்தில் நிர்கதியாக நின்றுகொண்டிருக்கிறார்கள். எனவே, இப்படிப்பட்ட சூழ்நிலையில் அந்தப் பெண் குழந்தைகளில் ஒருவருக்கு அரசு வேலை கொடுக்க வேண்டுமென்ற கோரிக்கையை வைக்கின்றேன். இப்படிப்பட்ட பரிதாபம் தொடர்ந்துகொண்டிருப்பதை எப்படித் தடுத்து நிறுத்தப்போகிறோம் என்பதை, நமது மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் ஆழ்ந்து யோசித்து வழிவகைக் காணவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். எங்களுக்குத் தெரிந்த வகையில், ஆய்வாளர்கள் எல்லா வெடி நிறுவனங்களுக்கும் முறையாக ஆய்வுகளை மேற்கொள்வதில்லை. பாதுகாப்பு நடவடிக்கைகள் எப்படி சட்டதிட்ட விதிகளில் இருக்கின்றனவோ அப்படி முறையாக எந்த நிறுவனங்களிலும் பின்பற்றப்படுவதில்லை. அதேபோல, இப்போது புதிது புதிதாக வெடி ஏற்றுமதி செய்யப்படுகின்ற காரணத்தினால், நவீனமான வெடிகளை எல்லாம் உற்பத்திச் செய்கின்றார்கள். அந்த நவீன வெடிகளுக்காக அவர்கள் கலவையைச் சேர்க்கின்ற



2011 ஆகஸ்ட் 10] [திரு. சு. குணசேகரன்]

நேரத்தில் ஏற்படக்கூடிய அழுத்தம் என்பது கலவையின் விகிதங்கள் மாறுகின்ற நேரத்தில், உஷ்ணம் எற்பட்டு வெடிவிபத்து ஏற்படுவதாகச் சொல்கிறார்கள். அப்படிச் செய்கின்ற நேரத்தில் அதற்கான மேற்பார்வையாளர்கள் அல்லது அதிலே ஈடுபடக்கூடியவர்கள் ஒரு தொழில்நுட்பத்தைப் புரிந்தவர்களாக அல்லது அதிலே பயிற்சி பெற்றவர்களாக இல்லாமல்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர், சுருக்கமாகச் சொல்லவேண்டும். கவனத்தை ஈர்க்கிறேன் என்று சொல்லுங்கள். அவ்வளவுதான்.

**திரு. சு. குணசேகரன்:** அதனாலே அப்படிப்பட்ட நிலையில் வேலைபார்க்கின்ற காரணத்தால்தான் வெடி விபத்துகளும் தொடர்ந்து ஏற்படுகின்றன. எனவே, அந்த வகையில் நமது அரசு கவனத்தை செலுத்தி இனிமேல் இப்படிப்பட்ட வெடிவிபத்துகள் ஏற்படாதவண்ணம் பார்த்துக்கொள்ள வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டு இந்திய கம்யூனிஸ்டு கட்சி சார்பிலே கவனத்தை ஈர்க்கிறேன். அதைப்போல, நமது மாண்புமிகு உறுப்பினர் திரு. சவுந்தரராசன் அவர்கள் கூறியதைப்போல அந்த ஒரு இலட்சம் ரூபாயை இன்னும் கூடுதலாக ஆக்கி நிவாரணம் வழங்க வேண்டுமென்று மாண்புமிகு தமிழக முதல்வரைக் கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 11–15

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** புதிய தமிழகம் கட்சியின் சார்பில் மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி அவர்கள்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிவகாசி மற்றும் விருதுநகர் மாவட்டத்தில் மட்டும் ஏறக்குறைய 591 பட்டாசுத் தொழிற்சாலைகள் இருக்கின்றன. அதேபோல, இரண்டாயிரத்திற்கும் மேற்பட்ட தீப்பெட்டித் தொழிற்சாலைகள் இருக்கின்றன. இவற்றில் ஏறக்குறைய 60 ஆயிரத்திற்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் ஒட்டுமொத்தமாகப் பணிபுரிகிறார்கள். பணிபுரியக்கூடிய அனைவருமே ஏழை எளியவர்கள். அவர்களில் பெரும்பாலானவர்கள் பெண்கள். இவ்வளவு தொழிற்சாலைகள் இருக்கக்கூடிய இந்த விருதுநகர் மாவட்டம் மற்றும் சுற்றுவட்டாரப் பகுதிகளில் முறையான, சட்ட விதிமுறைகளைக் கடைப்பிடிக்காததனுடைய விளைவாகக்

*[டாக்டர். க. கிருஷ்ணசாமி]* [2011 ஆகஸ்ட் 10

*குறிப்பாக தொழிற்சாலைகளின் உற்பத்திக் கூடங்களில் அதிகமாகத் தொழிலாளர்கள் பணியாற்றுவது, கூடுதலாக இரசாயனப் பொருட்களைப் பயன்படுத்துவது, முழுமையாக உற்பத்திச் செய்யப்படாத பட்டாசுகளை அதற்கென ஒதுக்கப்பட்ட இடங்களில் வைக்காதது, மரங்களின் அடியில் கூடங்கள், ஷீட்டுகள்மூலம் தடுப்புகள் அமைத்து பட்டாசுகளைத் தயார் செய்வது, கூடங்களில் ரப்பர் ஷீட்டுகள் அமைக்காமல் இருப்பது, தொழிலாளர்களுக்கு உண்டான பாதுகாப்பு உறைகளை அணியாதது போன்ற பல்வேறுவிதமான விதிமுறைகளைக் கடைப்பிடிக்காததனுடைய விளைவாக இப்படி அடிக்கடி கடந்த 5 ஆண்டுக்காலத்தில் மட்டும் ஏறக்குறைய 42 மரண விபத்துகள் ஏற்பட்டிருக்கின்றன. அதிலே 200–க்கும் மேற்பட்ட ஏழையெளிய மக்கள் இறந்திருக்கிறார்கள். எனவே, இது தடுத்து நிறுத்தப்பட வேண்டிய மிகப் பெரிய ஒரு முக்கியமான விஷயமாகும். எனவே, விதிமுறைகளைக் கடைப்பிடிக்காத தொழில் நிறுவனங்கள், தீபாவளி நேரத்திலே திடீர் திடீரென்று முளைக்கக்கூடிய நிறுவனங்கள் ஆகியவற்றின்மீது தொழிலாளர் நலத் துறையின் மூலமாகக் கடுமையான நடவடிக்கை எடுத்து எதிர்காலத்தில் இதுபோன்ற விபத்துகள் நடக்காதவண்ணம் தடுக்க வேண்டும். அதேபோல அந்தத் தொழிலாளர்களுக்கு* insurance *திட்டம் என்பதே கிடையாது;* Out of the court settlement*–லேதான் கொடுக்கிறார்கள். எனவே, அந்தத் தொழிலாளர்கள் அனைவரையும் இன்சூரன்ஸ் செய்யவும், தமிழ்நாடு அரசு அறிவிக்கக்கூடிய நிவாரணங்களை அதிகப்படுத்திக் கொடுக்கும்படியும், ஒட்டுமொத்தத்தில் இந்தப் பட்டாசு மற்றும் தீப்பெட்டித் தொழிற்சாலைகளில் எதிர்காலத்தில் விபத்துகளே நடைபெறாதவண்ணம் விதிகளைக் கடுமையாக்கவும், அதற்காக அங்கே கூடுதலாக தொழில் துறை அதிகாரிகளை நியமிக்கவும் வேண்டி விடைபெறுகிறேன். வணக்கம்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. சி. த. செல்லப்பாண்டியன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கழக நிரந்தர பொதுச் செயலாளர், இதய தெய்வம், தொழிலாளர்களின் விடிவெள்ளி புரட்சித் தலைவி மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்களே, இந்தக் கடைக்கோடி தொண்டன் தங்களின்*



2011 ஆகஸ்ட் 10] *[திரு. சி. த. செல்லப்பாண்டியன்]*

*பொற்பாதங்களை வணங்கி அகமகிழ்ந்து, என் நன்றியைக் காணிக்கையாக்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

*"யார் தருவார் இந்த அரியாசனம், புவி*
*அரசோடு எனக்கும் இந்த சரியாசனம்"*

*என்ற கவியரசரின் கவிதை, மாண்புமிகு அம்மா அவர்களின் கடைக்கோடி தொண்டனான எனக்கெனப் பாடப்பட்டதோ? தூத்துக்குடி மாவட்டத்தில் விவசாயக் குடும்பத்தில் பிறந்த என்னை தூத்துக்குடி மாவட்ட அண்ணா தொழிற்சங்கத்தின் தலைவராகவும், செயலாளராகவும் ஆக்கி, அழகு பார்த்த அன்னையே! குடும்ப அரசியல் நடத்திய கோமான்களை, அரசியல் கோமாளிகளாக்கிய அரும்பெரும் தலைவியே, தூத்துக்குடி வீதியில் பிள்ளையாய் விளையாடிய என்னை வேட்பாளராக்கி வெற்றி பெறச் செய்த கொற்றவையே! எங்கள் காவல் தெய்வமே! தாயே! தாயே என்னைக் கொண்டு கபட சாமியின் வேஷத்தை மக்களுக்கு வெளிச்சம் காட்டிய வீரமங்கை எங்கள் தாயே, அம்மா அவர்களே! நாட்டு மக்களில் பாதிப்பேர் தொழிலாளர்களே, ஜனத்தொகையில் மருத்துவர்கள், பொறியாளர்கள், சட்ட வல்லுநர்கள், பெரு, சிறு முதலாளிகள், விற்பனையாளர்கள், குழந்தைகள், மாணவர்கள், முதியோர் நீங்கலாக தொழிலாளர்கள் மட்டும் சுமார் 50 விழுக்காடு எனப் புள்ளியியல் கணக்கு சொல்கிறது. மக்களின் பாதிப்பேர்களின் துயர்துடைத்து நலன் காக்கும் துறையாம் தொழிலாளர் நலன் மற்றும் வேலைவாய்ப்புத் துறைக்கு என்னை அமைச்சர் ஆக்கிய அன்னையே! பண்பு தெரியாத மிருகம் பிறந்தாலும் பால்தரும் கருணை அது! பல பசித்த முகம் பார்த்து பதறும் நிலை பார்த்து பழம் தரும் சோலை அது! இருக்கும் பிடி சோறு தனக்கென எண்ணாமல் கொடுக்கின்ற கோயில் அது; அதன் பெயர் தாய்மை! தாய்மை உள்ளம் கொண்ட அன்னையே! (மேசையைத் தட்டும் ஒலி)*

*முற்பகல் 11–20*

*"ஈன்றாள் பசிகாண்பான் ஆயினுஞ் செய்யற்க*
*சான்றோர் பழிக்கும் வினை"*

*என்ற வள்ளுவரின் வாக்கிற்கிணங்க பணியாற்றி, மாண்புமிகு அம்மா அவர்களுக்கு மேலும் புகழ் சேர்க்கும் வகையில் உழைத்திட ஒன்றரைக் கோடி செல்லப் பிள்ளைகளில்*

[திரு. சி.த. செல்லப்பாண்டியன்] [2011 ஆகஸ்ட் 10

கடைக்கோடி செல்லப் பிள்ளையான செல்லப்பாண்டியனாகிய என்னுடைய கன்னிப் பேச்சிற்கு ஆசி கூறுங்கள் அம்மா! (மேசையைத் தட்டும் ஒலி)

தியாகிகள் நிறைந்த பூமி எங்கள் பூமி. வீரத்தின் விளைநிலம், சொத்தைப் பயிர்களை வேரோடு அழிப்பது எங்களுக்குப் பிள்ளை விளையாட்டு; பாரத மண்ணிலிருந்து வெள்ளையனை விரட்டியதில் எங்களுக்குப் பெரும் பங்கு உண்டு; இன்று நம் நாட்டில் கொள்ளையர்களை விரட்டி விட்டீர்கள். இடி அமீனின் குடும்ப ஆட்சியை அகற்றி தமிழ்நாட்டிற்கு மீண்டும் ஒரு சுதந்திரத்தைப் பெற்றுத் தந்துள்ளீர்கள்.

பதுங்கி ஒளிந்து இருக்கும் இந்தப் பெருச்சாளிகளை ஒழித்துக் கட்டும் மீதி வேலைக்கு சுட்டு விரல் காட்டுங்கள் அம்மா! அன்னையின் ஆணையை அசங்காமல், பிசங்காமல் அப்படியே செய்து முடிப்போம். உங்கள் ஆசைப் பிள்ளைகளுக்கு வேட்டையாடும் வித்தையைக் கற்றுக் கொடுத்துவிட்டீர்கள். வித்தையை வேலையாகச் செய்வோம் கச்சிதமாக அம்மா.

"ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும் தன்மகனைச்
சான்றோன் எனக்கேட்ட தாய்"

என்ற வள்ளுவரின் வாக்கிற்கேற்ப பணிசெய்வான் உங்கள் பிள்ளை, வாழ்த்தி அருளுங்கள் அன்னையே! இந்த மாபெரும் சபையில் எனக்கு இது கன்னிப் பேச்சு, அம்மா உங்களுக்கோ உங்கள் பிள்ளையின் மழலைப் பேச்சு, கன்னிப் பேச்சை மழலையில் உச்சரிக்க வாய்ப்புத் தந்த கழக நிரந்தரப் பொதுச் செயலாளர் தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்பாதம் பணிந்து என் உரையை இப்பேரவையில் முன்வைக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 5–8–2011 அன்று சிவகாசி வட்டத்தில் நடந்த தீ விபத்து குறித்த அறிக்கை ஒன்றை இப்பேரவைக்குச் சமர்ப்பித்துக்கொள்கிறேன். விருதுநகர் மாவட்டம், சிவகாசி வட்டம், காளையார்குறிச்சி கிராமத்தில் அமைந்துள்ள சுப்ரீம் பைஃப்ரோ ஒர்க்ஸ் என்னும் தொழிற்சாலையில் 5–8–2011 அன்ற பிற்பகல் 1–45 மணிக்கு தீ



2011 ஆகஸ்ட் 10] [திரு. சி.த. செல்லப்பாண்டியன்]

விபத்து ஏற்பட்டது. இதில் சம்பவ இடத்தில் 5 பேரும், மூன்று பேர் மருத்துவமனையிலும் ஆக மொத்தம் 8 பேர்கள் 5–8–2011 அன்று உயிரிழந்துள்ளனர். மேலும் 7–8–2011 அன்று இரண்டு பேர்கள் உயிரிழந்துள்ளனர். ஆக மொத்தம் 10 பேர் உயிரிழந்துள்ளனர். மேலும் இரண்டு பேர் காயம் அடைந்துள்ளனர். அந்த இரு நபர்களுக்கும் தற்போது மதுரையில் உள்ள கென்னட் தனியார் மருத்துவமனையில் சிகிச்சை அளிக்கப்பட்டு வருகின்றது என்பதனைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேற்கண்ட தீ விபத்து சம்பவம் குறித்து கேள்விப்பட்டவுடன், கருணை உள்ளத்தோடு இறந்தவர்களின் குடும்பத்திற்கு தலா ரூபாய் ஒரு இலட்சமும், பலத்த காயம் அடைந்தவர்களுக்கு தலா ரூபாய் பதினைந்தாயிரமும் மற்றும் லேசான காயம் அடைந்தவர்களுக்குத் தலா ரூபாய் ஆறாயிரமும் வழங்க இதய தெய்வம் மாண்புமிகு தமிழக முதல்வர் கருணை உள்ளம் கொண்ட புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருபவர்களுக்கு சிறப்பான சிகிச்சை அளிக்கவும் உத்தரவிட்டுள்ளார்கள். மேலும் இறந்தவர்களின் குடும்பத்திற்கு ஆழ்ந்த இரங்கலையும் தெரிவித்துள்ளார்கள். மேலும், அந்த மாவட்டத்தைச் சேர்ந்த மாண்புமிகு தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் திரு. ஆர்.பி. உதயகுமார் அவர்களை அனுப்பி இறந்தவர்களின் குடும்பத்திற்கு ஆறுதலும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் பொது நிவாரணத் தொகையும் உடனடியாக வழங்க மாண்புமிகு தமிழக முதல்வர் இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டு இருந்தார்கள்.

கடந்த மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியில் இதுபோன்ற விபத்துகளில் நிர்வாகத்தின் தரப்பிலிருந்து ரூபாய் இரண்டு இலட்சம் மட்டுமே வாங்கி வழங்கப்பட்டது. ஆனால் மாண்புமிகு அம்மாவின் அரசுதான் நிர்வாகத்திடம் பேசி நிர்வாகத்தின் தரப்பில் விபத்தில் மரணம் அடைந்தவர்களின் ஈமச்சடங்கிற்காக தலா ரூபாய் பத்தாயிரமும், இழப்பீடாக தலா ரூபாய் நான்கு இலட்சமும் பெற்று வழங்கியுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

[திரு. சி.த. செல்லப்பாண்டியன்] [2011 ஆகஸ்ட் 10

இந்தத் தொழிற்சாலையின் உரிமம் எண் 6138. இதற்கான உரிமம் 2007-ல் மைனாரிட்டி தி.மு.க. அரசால் வழங்கப்பட்டுள்ளது என்பதை இந்தச் சபைக்கு நான் தெரிவிக்க விரும்புகிறேன். இத்தொழிற்சாலையின் உரிமம் 2011 வரை புதுப்பிக்கப்பட்டுள்ளது. இதன் உரிமையாளர் திரு. கனக பிரபு. இத்தொழிற்சாலையில் சுமார் 94 தொழிலாளர்கள் பணிபுரிந்து வருகின்றனர். மேற்கண்ட விபத்தின் காரணமாக, இத்தொழிற்சாலையின் உற்பத்தி 1948 ஆம் வருடம், தொழிற்சாலைகளின் சட்டம் பிரிவு 40 (2)-ன்கீழ் தடை செய்யப்பட்டுள்ளது. இவ்விபத்து தொடர்பாக தொழிற்சாலைக்கு படைக்கலச் சட்டப்படி வழங்கப்பட்ட உரிமம், படைக்கலச் சட்ட விதிகள் பிரிவு 11 (அ) (3)-ன்படி, தற்காலிக நிறுத்தம் செய்து உத்தரவிடப்பட்டுள்ளது. மேலும் இந்த விபத்து குறித்து காரணம் மற்றும் சூழ்நிலைகளை அறியும் பொருட்டு இந்திய வெடிபொருள் சட்டம் 1884 பிரிவு 9(1)-ன்கீழ் கூடுதல் மாவட்ட நீதித் துறை நடுவர் மற்றும் மாவட்ட வருவாய் அலுவலர் அவர்களின் விசாரணைக்கு மாண்புமிகு தமிழக முதல்வர் கருணை உள்ளம் கொண்ட அம்மா அவர்களின் அறிவுரையின்படி உத்தரவிடப்பட்டுள்ளது என்பதனையும் இம்மாமன்றத்திற்குத் தெரிவித்துக்கொள்கிறேன். இத்தொழிற்சாலையின் மூலப்பொருட்கள் அறைகளின் முன் பகுதியில் உள்ள சிமென்ட் தரையில் சிந்தியிருந்த அலுமினியம் பவுடர் மற்றும் இதர இரசாயனங்களான சல்பர் போன்றவற்றைச் சுத்தம் செய்யும்போது தரையில் உராய்வு ஏற்பட்டதனால் தீப்பொறி உண்டாகி தீப்பிடித்து, மூலப்பொருட்கள் அனைத்துக்கும் தீ பரவி, கடும் விபத்து ஏற்பட்டது. இவ்வாறான விபத்துகளைத் தடுப்பதற்கு மாண்புமிகு அம்மா அவர்களின் வழிகாட்டுதலின்படி ஏற்கெனவே, தொழிற்சாலைகள் தலைமை ஆய்வாளர், இணைத் தலைமை ஆய்வாளர் மற்றும் துணைத் தலைமை ஆய்வாளர்களின் கூட்டங்களைக் கூட்டி, தொழிற்சாலைகளை, குறிப்பாக பட்டாசுத் தொழிற்சாலைகளை அடிக்கடி ஆய்வு செய்து, பாதுகாப்பு நடவடிக்கைகளைத் தீவிரமாகக் கண்காணிக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. மேலும், பட்டாசுத் தொழிற்சாலைகளின் விபத்துகளைத் தடுத்திட கீழ்க்கண்ட பாதுகாப்பு முறைகளும் தொழிற்சாலைகளில் ஆய்வுத் துறையினரால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன:



2011 ஆகஸ்ட் 10] [திரு. சி.த. செல்லப்பாண்டியன்]

முற்பகல் 11-25

தொழிற்சாலை சட்டம், 1948 மற்றும் தமிழ்நாடு தொழிற்சாலை விதி 1950-ன்கீழ் பட்டாசு மற்றும் தீப்பெட்டித் தொழிற்சாலைகளில் பாதுகாப்பு விதிமுறைகளைக் கடைப்பிடிப்பதற்கென தனியாக விதி 95-ன்கீழ் அட்டவணை 24 ஏற்படுத்தப்பட்டுள்ளது.

பட்டாசுத் தொழிற்சாலைகளில் மூன்று மாதங்களுக்கு ஒரு முறை ஆய்வு செய்யப்படுகிறது. மேலும் கூடுதலாகப் பாதுகாப்பு ஷரத்துக்கள் அட்டவணை 24-ல் சேர்க்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

தொழிலாளர்கள் பாதுகாப்பாகப் பணிபுரிவது குறித்து விழிப்புணர்வுகளை ஏற்படுத்தும் வகையில் பாதுகாப்புப் பிரச்சாரக் குழுக்கள் அமைக்கப்பட்டு, விழிப்புணர்வு முகாம்கள் மற்றும் பாதுகாப்புப் பயிற்சி வகுப்புகளும் நடத்தப்படுகின்றன.

பட்டாசுத் தொழிற்சாலைகளில் அடிக்கடி விபத்துகள் நிகழாமல் தடுக்கும் வகையில் நிபுணர் குழு ஒன்று அரசால் அமைக்கப்பட்டு குழுவின் பரிந்துரைகள் பெறப்பட்டு, அரசின் பரிசீலனையில் உள்ளது என்பதை இந்த மாமன்றத்திற்குத் தெரிவித்துக்கொள்கிறேன். பாதுகாப்பினை மேலும் உறுதிசெய்வதன் நோக்கத்திலும், தொழிலாளர்களின் உயிரிழப்பைத் தடுத்திடும் நோக்கத்திலும் ஆண்டுதோறும் சிறப்பு ஆய்வுக் குழுக்கள் அமைக்கப்பட்டு காவல் துறை, வருவாய்த் துறை, தீயணைப்புத் துறை ஆகிய துறைகளின் அலுவலர்களைக் கொண்டு பட்டாசுத் தொழிற்சாலைகளில் குழுக்கள் ஆய்வுகளை மேற்கொண்டு, உரிய நடவடிக்கை அரசால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இவ்வரசு தொழிலாளர்களைப் பாதுகாக்க முனைப்புடன் செயல்படும் என்பதை இந்த மாமன்றத்திற்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்லாமல், எனக்கு முன்னால் பேசிய மரியாதைக்குரிய மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன் அவர்கள் கூறும்போது இது எப்போதும் நடக்காத பெரும் விபத்து என்று கூறினார்கள். அது தவறு என்பதை இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இதே சிவகாசி பகுதியிலே கடந்த மைனாரிட்டி தி.மு.க.வினுடைய ஆட்சியில்

*20 பேர் இறந்துள்ளார்கள் என்பதை இந்த நேரத்தில் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன். மாண்புமிகு தமிழக முதல்வர், இதய தெய்வம், புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு இன்றைக்கு அவர்களுக்கு கூடுதல் இழப்பீடாக நான்கு இலட்சம் ரூபாயும், அம்மா அவர்கள் ஒரு இலட்சம், பத்தாயிரம் ரூபாய் ஈமச் சடங்கிற்கும் ஆக 5 இலட்சத்து 10 ஆயிரம் ரூபாயை கொடுத்திருக்கிறது என்பதை இந்த அவைக்குக் கூற விரும்புகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *2011–2012 ஆம் ஆண்டுக்கான திருத்திய நிதிநிலை அறிக்கை மீதான பொது விவாதம்—தொடர்ச்சி. தே.மு.தி.க. உறுப்பினர் மாண்புமிகு திரு. ப. சிவக்கொழுந்து அவர்கள். (குறுக்கீடு) விரிவான பதிலை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொடுத்திருக்கிறார்கள். பொதுவாக கவன ஈர்ப்பில் துணைக் கேள்வியை அனுமதிப்பது இல்லை (குறுக்கீடு) நீங்கள் நோட்டீஸ் கொடுத்திருக்க வேண்டும். கொடுக்கவில்லை. வேறு ஒரு சந்தர்ப்பத்தில் நீங்கள் அதைப் பற்றிப் பேசுங்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்கமாகச் சொல்லி இருக்கிறார்கள்.*

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் குறிப்பிட்டதற்குப் பிறகு இந்த சபையில் மீண்டும் ஒரு கேள்வி எழுப்ப இயலாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

## 4. திருத்திய வரவு–செலவுத் திட்டம், 2011–2012, பொது விவாதம்—*தொடர்ச்சி*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *2011–2012 ஆம் ஆண்டுக்கான திருத்திய நிதிநிலை அறிக்கைமீதான பொது விவாதம். மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. சிவக்கொழுந்து அவர்கள்.*

***திரு. ப. சிவக்கொழுந்து:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்களே, மாண்புமிகு எதிர்க் கட்சி தலைவர் கேப்டன் அவர்களே, வணக்கம். இம்மாமன்றத்தில் மக்கள் பிரதிநிதிகளாய் அமர்ந்திருக்கக்கூடிய மாண்புமிகு அமைச்சர்கள் மற்றும் அனைத்துக் கட்சி சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவருக்கும் எனது பணிவான வணக்கம் கூறி எனது கன்னிப் பேச்சைத் தொடங்குகின்றேன்.*





*முக்கனிகளில், தேன்சுவை நிறைந்த கனி, பலாக் கனி. அந்தக் கனி நிறைந்த பண்ருட்டி சட்டமன்றத் தொகுதியில் என்னை போட்டியிட வைத்து வெற்றிபெறச் செய்த தேசிய முற்போக்கு திராவிடக் கழகத்தின் நிறுவனத் தலைவர், எங்கள் இதயங்களில் என்றென்றும் நிலைத்து நிற்பவர், ஏராளமான இளைஞர்களின் உள்ளத்திற்குச் சொந்தக்காரர், புரட்சிக் கலைஞர் என்ற பட்டத்தைப் பொன்னேடுகளில் பதித்து தொண்டர்கள் இதயங்களில் குடியிருப்பவர், முத்தான தலைவர், எங்களுக்கெல்லாம் சொத்தான தலைவர் கேப்டன். (மேசையைத் தட்டும் ஒலி)*

*முற்பகல் 11-30*

*கேப்டன் அவர்கள் அ.தி.மு.க-வுடன் வெற்றிக் கூட்டணி அமைத்து தமிழக மக்கள் எல்லோரும் வியந்து பாராட்டக்கூடிய வெற்றிக் கனியைப் பெற்றுள்ளோம். இந்த மகத்தான வெற்றியினை நமது கூட்டணிக்கு வாரித் தந்த தமிழக வாக்காளர்களுக்கு முதற்கண் நெஞ்சார்ந்த நன்றியினை அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

*சிறு வயதில் தந்தையை இழந்து, தாயின் அரவணைப்பில் வளர்ந்துவந்த சாதாரண ஏழைக் குடும்பத்தைச் சேர்ந்த நான், வளர்ந்துவரும் காலத்தில் எங்களின் அன்புத் தலைவர் கேப்டன் அவர்களின் திரைப்படங்களைப் பார்த்து அவரது தீவிர ரசிகன் ஆனவன். ஒவ்வொரு திரைப்படத்திலும் ஏழை மக்களின் துயரம் கண்டு போராடும் பாத்திரம் எனது சிறு வயது மனதைக் கவர்ந்தது. ஏழையாய்ப் பிறந்த நான் அவரது திரைப்படங்களைப் பார்த்து நானும் ஏழைகளுக்குக் குரல் கொடுக்க வேண்டுமென்ற எண்ணத்தின் வெளிப்பாட்டால் கேப்டன் அவர்களின் ரசிகர் மன்றத்தை எனது சிறு வயதில் ஆரம்பித்தேன். அன்று முதல் எங்கள் கேப்டனை எனது அன்னையாய், தந்தையாய், நல்லாசிரியனாய் ஏற்றுப் போற்றி வளர்ந்தேன். அவரால் நான் இன்று பார் போற்றும் வரலாற்றைப் பெற்ற தமிழக சட்டமன்றத்தில் சட்டப்பேரவை உறுப்பினராக ஏழைகளுக்குக் குரல் கொடுக்கும் தகுதி வழங்கப் பெற்றுள்ளேன். இந்த நேரத்தில் எனது அன்னை, தந்தையை நினைவுகூர்ந்து, அதற்கு சமமான எனது கேப்டன் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக்கொள்வதைப் பெரும் பேராகக் கருதுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

"அன்னையைப் போல் ஒரு தெய்வம் இல்லை, அவர் அடி தொழ மறுப்பவர் மனிதர் இல்லை" என்ற பாடல் வரிகளுக்கேற்ப அன்னை மனம் கொண்ட எங்கள் பாசமிகு அண்ணியார் அவர்கள் எனது தொகுதி உள்ளிட்ட தமிழகத்தின் அனைத்துத் தொகுதிகளுக்கும் (மேசையைத் தட்டும் ஒலி) முரசினின்று எழும் ஒலியைப் போல் முழங்கிய தேர்தல் பிரச்சாரம் அனைவராலும் மறக்க முடியாதது. பாசமிகு அண்ணியார் அவர்களுக்கு எனது சிரம் தாழ்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

அன்னைத் தமிழ் பேசி வாழ்ந்துவரும் தமிழக மக்களின் உணர்வுகளை மதித்து இலங்கைத் தமிழர்களின் இன்னலைத் தீர்த்திட இலங்கைக்குப் பொருளாதாரத் தடையை இந்தியா விதித்திட வேண்டுமென்கின்ற மாண்புமிகு முதல்வர் அவர்களின் தீர்மானம் இன்று உலகெங்கும் வாழும் தமிழக மக்களால் பெரிதும் பாராட்டப்படுகின்றது. அவர்களுக்கும் என் நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கடலூர் மாவட்டத்தில் ஒன்பது தொகுதிகளிலும் ஒருசேர வெற்றிக் கனிகளை அள்ளித் தந்த எனதருமை கடலூர் மாவட்ட வாக்காளர் பெருமக்களுக்கும், பண்ருட்டி தொகுதியில் பிறந்து வளர்ந்து மக்களோடு மக்களாக ஒன்றிணைந்து அத்தொகுதி மக்களில் ஒருவனாக இருந்த எனக்கு வாக்களித்து வெற்றிபெற வைத்து இப்பேரவைக்கு அனுப்பி வைத்த பண்ருட்டி சட்டமன்றத் தொகுதி பொதுமக்களுக்கும், எனது வெற்றிக்குப் பாடுபட்ட அ.தி.மு.க. கட்சி உறுப்பினர்களுக்கும், அதன் கூட்டணியில் உள்ள தோழமைக் கட்சியினர் அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இத்தேர்தலில் தமிழக மக்கள் தங்கள் தீர்ப்புமூலம் எங்களைத் தமிழ்நாட்டின் பிரதான எதிர்க்கட்சியாகச் செயல்பட அனுமதித்துள்ளார்கள். நாங்கள் எதிரிக் கட்சியாகச் செயல்பட மாட்டோம். கேப்டன் தலைமையில் நல்ல ஆக்கபூர்வமான எதிர்க்கட்சியாகவே செயல்படுவோம். தமிழக மக்கள் எங்களுக்கு அளித்த அங்கீகாரத்திற்காக தேசிய முற்போக்கு திராவிடக் கழகத்தின் சார்பாக எனது நெஞ்சார்ந்த நன்றியைக் காணிக்கையாக்குகிறேன்.



மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நடப்பு நிதியாண்டில் முன்வைக்கப்பட்ட பட்ஜெட் சமூகக் கண்ணோட்டத்தோடு வரி, விலை ஏற்றம் இல்லாத பட்ஜெட்டாகவும் அமைந்துள்ளதை தேசிய முற்போக்கு திராவிடக் கழகத்தின் சார்பில் வரவேற்கின்றோம்.

தொழில் வளர்ச்சி குறித்த அரசின் பார்வை விசாலமானதாகவும், அதே நேரத்தில் எச்சரிக்கையுடனும் சொல்லப்பட்டிருப்பது சரியான அணுகுமுறையாகும். கடந்த ஆட்சியில் பல்லாயிரக்கணக்கான வேளாண் விளை நிலங்கள் கையகப்படுத்தப்பட்டன. விவசாயிகளிடமிருந்து நிலங்கள் அபகரிக்கப்பட்டன. பன்னாட்டுத் தொழிற்சாலைகள் தங்கு தடையின்றி தமிழகத்தில் நுழையும்பொருட்டு, தொழிற்சாலைக்குக் குறைந்த விலைக்கு நிலங்கள் அபகரிக்கப்பட்டு கூடுதல் விலைக்கு கடந்த ஆட்சியாளர்களால் வெளிநாட்டு நிறுவனங்களுக்கு விற்கப்பட்டன.

கடலூரிலிருந்து நாகப்பட்டினம் வரையிலும் கடல் வளங்கள் மாசுபடும் அளவிற்கு ஏராளமான தொழிற்சாலைகள் அனுமதிக்கப்பட்டுவிட்டன. இந்த பட்ஜெட் உரையில் தொழிற்சாலைகளுக்கு நிலங்கள் கையகப்படுத்தப்படுவதற்குக் கட்டுப்பாடுகள் இருப்பதும், எந்த நிலையிலும் நிலத்தின் சொந்தக்காரர்கள் பாதிக்காதவண்ணம் புதிய கொள்கைகளை உருவாக்க அரசு உறுதியளித்திருப்பதும் பாராட்டுக்குரியது.

மேலும், பட்ஜெட்டில் கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள முக்கியமான அம்சங்களை தேசிய முற்போக்கு திராவிடக் கழகம் வரவேற்கிறது,

தமிழ்நாடு அரசின் வரவு செலவுத் திட்ட மதிப்பீடு ரூபாய் ஒரு இலட்சம் கோடியைத் தாண்டியது, அரசு கேபிள் டி.வி.க்கு மீண்டும் உயிர் கொடுத்தது, எம்.எல்.ஏ.—க்கள் தொகுதி மேம்பாட்டு நிதியை இரண்டு கோடி ரூபாயாக அதிகரிப்பு செய்தது, 10 ஆம் வகுப்பு மற்றும் 11 ஆம் வகுப்பு மாணவர்களுக்கு 1,500/- ரூபாயும், 12 ஆம் வகுப்பு மாணவர்களுக்கு 2,000/- ரூபாயும் ஊக்கத் தொகை வழங்கியது, மாணவர்களுக்கு இலவச Laptop அளிக்க 912 கோடி ரூபாய், 2012 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதத்தில் மின்வெட்டு அடியோடு இரத்தாகும் என்று அறிவித்தது, தீயணைப்புத் துறை மேம்பாட்டிற்கு 170 கோடி ரூபாய்,

கூட்டுறவுத் துறைமூலம் பெற்ற கடனை முறையாகச் செலுத்துவோருக்கு வட்டியில்லா பயிர்க் கடன் வழங்க 3,000 கோடி ரூபாய், உணவு தானிய சேமிப்புக் கிடங்குகள் அமைக்க 237 கோடி ரூபாய், சூரிய சக்தியால் இயங்கும் ஒரு இலட்சம் தெரு விளக்குகள் அமைக்க 248 கோடி ரூபாய், இலவச ஆடுகள் வழங்கும் திட்டத்திற்கு 135 கோடி ரூபாய், வறுமையில் வாடும் குடும்பங்களுக்கு 60,000 இலவச கறவை மாடுகள் ஆகியன இந்த நடப்பு பட்ஜெட்டில் முக்கிய அம்சங்களாகத் திகழ்கின்றன.

முற்பகல் 11—35

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மகிழ்ச்சியான நேரத்தில் எங்கள் தொகுதி குறித்த சில முக்கியமான அடிப்படைக் கோரிக்கைகளை நிறைவேற்றித் தரக் கேட்டுக்கொள்கிறேன்.

சென்னையிலிருந்து தமிழ்நாட்டின் எந்த மாவட்டத்திற்கும் விரைந்து செல்ல நெடுஞ்சாலைகள் உள்ளன. ஆனால், கும்பகோணம், தஞ்சாவூர் மார்க்கமாக விரைந்து செல்ல முடியாது என்பது அனைவருக்கும் தெரிந்த ஒன்றாகும். தேசிய நெடுஞ்சாலைத் துறைமூலம் விக்கிரவாண்டி முதல் தஞ்சாவூர் வரையிலான 45-சி என்கின்ற சாலைத் திட்டப் பணிகளை விரைந்து முடித்து விக்கிரவாண்டி முதல் கும்பகோணம், தஞ்சாவூர் சாலைப் பணித் திட்டத்தை விரைவாகச் செயல்படுத்திட நடவடிக்கை மேற்கொண்டு தமிழக மக்களின் நலன் காக்க வேண்டுகிறேன்.

முந்திரியின் வெளிநாட்டு வணிகத்தால் ஒவ்வோர் ஆண்டும் கோடிக் கணக்கில் அந்நியச் செலாவணியை ஈட்டித் தரும் தொகுதி பண்ருட்டியாகும். மக்கள் தொகை அதிகரிப்பு, போக்குவரத்து நெரிசலால் சிக்கித் தவிக்கிறது பண்ருட்டி. போதுமான சாலை வசதியின்றி போக்குவரத்தை ஒழுங்குபடுத்த முடியாமல் அதிகாரிகள் திணறுகிறார்கள். தமிழ்நாட்டில் பல நகரங்களில் புறவழிச் சாலை உள்ளது. ஆனால், பண்ருட்டியில் இன்றளவும் புறவழிச் சாலை இல்லாமல் விபத்துகள் அதிகரித்து வருகின்றன. எனவே, தமிழக அரசு உடனடியாக பண்ருட்டி—சித்தூர் சாலைக்குப் புறவழிச் சாலை அமைத்துத் தர வேண்டுகிறேன்.



பண்ருட்டி தொகுதியில் பெண்களுக்கெனத் தனியாக அரசு உயர்நிலைப் பள்ளியோ, அரசு மேல்நிலைப் பள்ளியோ இல்லை. அதேபோல், கலைக் கல்லூரியே இல்லாத நிலை. முப்பது கிலோ மீட்டர் தூரம் பயணித்து கடலூர், விழுப்புரம், நெய்வேலி சென்றால்தான் பெண்கள் கல்லூரிகளில் படிக்க முடியும். இளம் பெண்கள் இப்படி பேருந்தில் பயணம் செய்வது எவ்வளவு சிரமம் என்பது தாயுள்ளம்கொண்ட மாண்புமிகு முதல்வர் அவர்களுக்குத் தெரியும்.

"நன்றி மறப்பது நன்றன்று நன்றல்லது
அன்றே மறப்பது நன்று"

என்ற வள்ளுவர் வாக்குக்கு ஏற்ப, சென்னை மக்களுக்குத் தண்ணீர் கொடுத்த பண்ருட்டி தொகுதி மக்களுக்கு நன்றி பாராட்டும்விதமாக பெண்களுக்கென மகளிர் மேல்நிலைப்பள்ளி, மகளிர் கல்லூரி இவற்றை மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவிப்பார்கள் என்று பண்ருட்டி தொகுதி மக்கள் ஆவலுடன் எதிர்பார்த்துள்ளார்கள்.

பண்ருட்டியில் சுமார் 15 ஏக்கர் பரப்பளவுள்ள இடத்தில் வட்டாட்சியர் அலுவலகம் மட்டுமே உள்ளது. மீதம் உள்ள இடங்கள், அப்படியே புதர் மண்டி முட்காடுகளாக உள்ளன. இந்த இடத்தில் தமிழக அரசு அலுவலகங்களான, நெடுஞ்சாலைத் துறை, சார் பதிவாளர் அலுவலகம், கிளைக் கருவூலம் போன்ற இன்னபிற அலுவலகங்களை இடம் மாற்றி மேற்படி ஒரே இடத்தில் பொது மக்களின் சிரமங்களைத் தவிர்க்கும் வண்ணம் ஒருங்கிணைந்த அரசு அலுவலக வளாகமாகக் கட்டுவதற்கு அரசு முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பண்ருட்டி நகரம் ஆன்மீகத்திற்குப் புகழ்பெற்ற நகரம். ஒரு காலத்தில் "நடுநாடு" என்று அழைக்கப்பட்ட பண்ருட்டியைச் சேர்ந்த திருவதிகை, பல மன்னர்களின் தலைநகரமாக இருந்து ஆட்சி செய்யப்பட்டது. ஆன்மீகத்தின் வாயிலாக தமிழ் வளர்த்த சமயக் குறவர்கள் என அழைக்கப்படும், சைவ குறவர்கள் நால்வரில், அப்பர் என திருஞானசம்பந்தராலும், நாவுக்கரசு என இறைவனாலும் அழைக்கப்பட்டவர் திருநாவுக்கரசு சுவாமிகள் ஆவார். சுமார் 18,000 பாடல்களை உள்ளடக்கிய தேவாரத்தில், முதல் பாடல் திருநாவுக்கரசு சுவாமிகளால் பாடப்பெற்றது.

பண்ருட்டி, திருவதிகையில் அமைந்துள்ள அருள்மிகு வீரட்டானேசுவரர் ஆலயம் சிவபெருமான் எட்டு வீரச் செயல்களைப் புரிந்த இடங்கள் எனக் குறிப்பிடப்பட்டுள்ளதில் மூன்றாவது தலமாக விளங்கி வருகிறது. தீராத வயிற்று வலியால் துடித்த திருநாவுக்கரசருக்கு அருள்புரிந்து, வலியைப் போக்கி, இறைவனின் திருப்புகழைப் பரப்பிட அருள்புரிந்த இடம். இதனை ஆன்மீக சுற்றுலாத் தலமாக மாற்றிட வேண்டுமென பலகாலமாக மக்கள் கோரிக்கை வைத்து வருகின்றனர். சுமார் பத்து ஏக்கர் பரப்பளவில் மிகப் பெரிய ஆலயமாக ஆயிரத்து ஐநூறுக்கும் மேற்பட்ட ஆண்டுகளாக விளங்கிவரும் இத்திருத்தலம், சைவ சமயத்தவர்களால் மிகவும் போற்றப்பட்டு வருகிறது. அதுமட்டுமல்லாது, இவ்வாலயத்தைச் சுற்றி அருகில் பல்லவ மன்னரால் கட்டப்பட்ட குணபரீஸ்வரர் ஆலயம், புகழ்பெற்ற சரநாராயணப் பெருமாள் ஆலயம், ரங்கநாதர் ஆலயம், ஆஞ்சநேயர் ஆலயம், *15* கிலோ மீட்டர் தொலைவில் திருநாவுக்கரசு சுவாமிகள் பிறந்த திருவாமூர், சுந்தரர் சுவாமிகள் பிறந்த திருநாவலூர் ஆகிய புகழ்மிக்க திருத்தலங்கள் உள்ளன. இவ்வாலயத்தைச் சுற்றுலாத் தலமாக அறிவித்தால், பழம் பெருமை மிக்க வணிக நகரமான பண்ருட்டி நகரம், மிகப் பெரிய வளர்ச்சியடைய உதவியாக இருக்கும் என உறுதியிட்டுச் சொல்லக் கடமைப்பட்டுள்ளேன்.

பண்ருட்டி—கடலூர் சாலையில் உள்ள பொதுப் பணித் துறைக்குச் சொந்தமான இடம், முன்பு அரசு பொது மருத்துவமனையாகவும், அதன் பிறகு நீதிமன்றமாகவும் இருந்தது. தற்போது எந்தப் பயன்பாட்டிற்கும் இல்லாமல் காலியாக உள்ளது. கடைவீதியில் உள்ள போக்குவரத்து நெரிசலைக் குறைக்கவும், பொது மக்கள் நலன் கருதியும், அந்த இடத்தை சிறு வியாபாரிகளுக்கான புதிய மார்க்கெட்டாக அமைப்பதற்கு ஆவன செய்யும்படி கேட்டுக்கொள்கிறேன்.

பண்ருட்டியில் கடந்த *30* ஆண்டுகளுக்கு முன்பு குடிநீர்த் தேக்கத் தொட்டி கட்டப்பட்டது. அதனைத் தொடர்ந்து பராமரிப்புப் பணிகளில் மந்தநிலை ஏற்பட்டு, பழைய குடிநீர்த் தேக்கத் தொட்டியின் பயன்பாடு சரிவர இல்லை. அதனைப் புனரமைத்து, பயன்பாட்டுக்குத் தந்திடவும், மேலும் ஒரு புதிய குடிநீர்த் தேக்கத் தொட்டி அமைத்துத் தருமாறும் கேட்டுக்கொள்கிறேன்.





பண்ருட்டி வீதிகளில் போர்வெல் போட்டு அதனை குடிநீர் இணைப்புகளுடன் நேரடியாக இணைத்து, மக்களின் குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்க்கிறது பண்ருட்டி நகராட்சி. இதனால் குடிநீர் குளோரின் பிளான்டுகள்மூலம் சுத்திகரிக்கப்பட்டு பாதுகாக்கப்பட்ட குடிநீர் தரப்பட வேண்டும் என்ற அரசின் பொது விதி மீறப்படுகிறது. பண்ருட்டியில் சில பகுதிகளில் உள்ள குடிநீர்த் தொட்டிகளில்கூட அரசின் வழிகாட்டுதலின்படியான குளோரின் பிளான்டுகள் இல்லை என்பது வருத்தத்திற்குரிய ஒன்றாகும். எனவே, பண்ருட்டி நகர வாழ் மக்களுக்குப் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்குவதற்கு உத்தரவாதமான ஒரு வழிமுறையை மேற்கொள்ள வேண்டுமென இந்த அரசைப் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

*முற்பகல் 11—40*

பண்ருட்டி நகரம் ஒரு வணிக நகரம். இந்நகரத்திற்குச் சுற்றுப்புற கிராமங்களிலிருந்து பல்வேறு விவசாயிகள் விளை பொருட்களை விற்பனைக்காக பல்வேறு நகரங்களுக்கு குறிப்பாக சென்னை போன்ற பெரு நகரங்களுக்கு அனுப்பி வைக்கின்றனர். குறிப்பாக பச்சை மிளகாய், கத்தரிக்காய், வெண்டைக்காய், புடலை, நாட்டு அவரை போன்றவை இங்கிருந்து அன்றாடம் சென்னைக்கு அனுப்பி வியாபாரம் செய்யப்படுகிறது. விளை நிலங்களில் மேற்கண்ட காய்களின் மகசூல் அதிகமாகும்போது சந்தை விலை சரிந்து விவசாயிகள் கடும் நஷ்டத்திற்கு ஆளாகிறார்கள். இதனைச் சரிசெய்யும் பொருட்டு மகசூல் அதிகமாகும்போது அவற்றைப் பதப்படுத்தி வைத்து தேவை வரும்போது விற்பதற்கு அரசின் குளிர்பதனக் கிடங்குகள் வேண்டுமென்ற கோரிக்கை இப்பகுதி விவசாயிகளின் நீண்டநாள் கோரிக்கையாக உள்ளது. எனவே, பண்ருட்டியில் குளிர்பதனக் கிடங்குகள் நிறுவி ஏழையெளிய விவசாயிகளின் வாழ்வில் ஒளியேற்றிடுமாறு பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

நெல்லிக்குப்பம் நகரத்தில் புதிய பேருந்து நிலையம் கட்டப்பட்டு செயல்படாத நிலையில் உள்ளது. பலமுறை அரசு அதிகாரிகள், ஓட்டுநர்களிடம் வலியுறுத்தியும் எந்தப் பேருந்துகளும் பேருந்து நிலையத்தின் உள்ளே செல்வதில்லை. எனவே, அதனைப் பயன்படுத்திவரும் சமூக விரோதிகளின் பயன்பாட்டிலிருந்து தடுத்து அந்த இடத்தை மக்களுக்குப்

பயன்படும் வகையில் மாற்று ஏற்பாடு செய்தால் மக்கள் மட்டற்ற மகிழ்ச்சி அடைவர். ஆகவே, தக்க நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

பண்ருட்டி மற்றும் நெல்லிக்குப்பம் நகரங்களில் அரசு நூலகங்கள் வாடகைக் கட்டடத்தில் பல ஆண்டுகளாக இயங்கி வருகின்றன. அவை மிகவும் பழமையான கட்டடங்களில் இயங்கி வருவதால் பருவ நிலை மாறுதலால் புத்தகங்கள் வீணாகி வருகின்றன. மேலும், வாசகர்கள் பெருக்கத்தின் காரணமாகப் படிக்க இடவசதி இல்லாமல் தவித்து வருகின்றனர். பலமுறை இந்தக் கோரிக்கை முன்வைக்கப்பட்டும் நிறைவேறாத நிலையில் மாணவச் செல்வங்களின் படிப்பிற்கான தேடல்கள் அரசு நூலகங்களின் வழியாக நிறைவேறுகிறது என்பதைக் கருத்தில்கொண்டு மாண்புமிகு முதல்வர் அவர்களின் உத்தரவால் அரசு புதிய நூலகக் கட்டடங்களை பண்ருட்டி, நெல்லிக்குப்பம் நகரங்களில் திறக்கும் என்ற நம்பிக்கையோடு, இதற்கு ஆவன செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

பள்ளி மாணவர் நலன் கருதி, ஏழ்மையில், வறுமையில் வாழும் பெற்றோர் நலன் கருதி இலவச சீருடைகள், இலவச புத்தகங்கள், இலவச சைக்கிள், சத்தான மதிய உணவு, இலவசமாக காலணி, உயர் கல்விக்கு உதவித் தொகை, லேப்—டாப் அனைத்தும் வழங்கி பெற்றோர்களைப் பரவசமாக்கிய மாண்புமிகு முதல்வர் அவர்கள், இந்தப் புத்தகங்களை எடுத்துச் செல்வதற்கு இலவசமாக ஒரு புத்தகப் பையையும் அளித்தால் மாணவர்களும், பெற்றோர்களும் கூடுதல் மகிழ்ச்சியடைவார்கள்.

நெல்லிக்குப்பம் நகராட்சியில் குப்பைகளை மக்க வைத்து எரு தயாரிக்கும் திட்டம் கடந்த அ.தி.மு.க. ஆட்சியில் கொண்டு வரப்பட்டது. ஆனால், தி.மு.க. ஆட்சியில் அத்திட்டம் முடக்கப்பட்டு நெல்லிக்குப்பம் நகராட்சியின் வருமானத்தைக் குறைத்ததோடு சுகாதாரச் சீர்கேடும் ஏற்பட்டுள்ளது. அதனால் இந்தத் திட்டத்தை மீண்டும் செயல்படுத்தி நெல்லிக்குப்பம் மக்களின் நலன் கருதி சுற்றுச்சூழலைப் பாதுகாத்து நெல்லிக்குப்பம் நகராட்சியின் வருமானத்தை உயர்த்துமாறு வேண்டுகிறேன்.



கடந்த தி.மு.க. அரசின் காலத்தில் பெண்ணையாற்றில் புலவனூர், ஏனாதிரிமங்கலம் குவாரிகளில் பல்லாயிரக்கணக்கான லாரிகளில் மணல் அள்ளியதால் நிலத்தடிநீர் மட்டம் வெகுவாகக் குறைந்துள்ளது. அதனால் ஏனாதிரிமங்கலம், கண்டரக்கோட்டை ஆகிய இடங்களில் செக் டேம் கட்டி நீரைச் சேமிக்க திட்டம் ஏற்படுத்தி நிறைவேற்றிட வேண்டுகிறேன்.

அண்ணா கிராமம் ஊராட்சி ஒன்றியத்தில் தோட்டக்கலை பயிர்கள் அதிக அளவில் பயிரிடுவதால் விதைகள், உரங்கள் ஆகியவற்றை மானிய விலையில் வழங்கி விவசாயிகள் பயனடைய புதிய திட்டங்கள் தீட்டி அமல்படுத்த வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

மணம்தவிழ்ந்தபுத்தூர், திருத்துறையூர், சாத்திப்பட்டு ஊராட்சிகளில் ஆரம்ப துணைச் சுகாதார நிலையம் துவங்கி மக்களின் சுகாதாரத் தொடர்புடைய துயர் துடைத்திட ஆவன செய்ய வேண்டுகிறேன்.

தொரப்பாடி புதுப்பேட்டை பேரூராட்சி அரசு மேல்நிலைப் பள்ளி இந்த ஆண்டு 88 சதவீதம் தேர்ச்சி பெற்றுள்ளது. இந்தப் பள்ளி மாணவர்கள் ஊக்குவிக்கப்பட்டு அவர்கள் பயன்பெறும் விதமாக அறிவியல் ஆய்வுக்கூடம், பொது நூலகம் மற்றும் கூடுதல் வகுப்பறைக் கட்டடங்கள் கட்டித் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், பள்ளியில் புவியியல், உயிரியல், பொறியியல், தொழிற் கல்வி, உடற் கல்வி மற்றும் பல துறைகளுக்கு ஆசிரியர்கள் இல்லை. ஆதலால் உடனடியாக அவ்விடங்களில் தகுதியான ஆசிரியர்களை நியமித்து ஊக்குவிக்க வேண்டுகிறேன்.

கண்ணியம் மிக்க இந்த ஆட்சியிலே முதன்முதலாக எனது கன்னிப் பேச்சின் மூலமாக தங்களின் முன்னால் வைக்கப்பட்ட பண்ருட்டி சட்டமன்றத் தொகுதியின் கோரிக்கைகளை நிறைவேற்றித்தாருங்கள் என்று கோரி மனம் நிறைந்த நம்பிக்கையோடு எனது பேச்சை நிறைவு செய்கிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.பி. கலைராஜன்.

***திரு. வி.பி. கலைராஜன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கு நெஞ்சார்ந்த வணக்கம். தாயே, தமிழே, தவப்பயனே, தகத்தகாய பேரொளியே, கோடித் தொண்டர்கள் கும்பிட்டு தொழும் கொற்றவரே, வாடிடும் மக்கள் வாட்டம் களையப் பிறந்தவரே, தேடி மக்கள் நாடி வரும் முன்னே ஓடி உதவும் உத்தமரே, நாடு காக்க பிறப்பெடுத்து நடுநிசியும் உழைப்பவரே; வீழ்த்த முடியா விருட்சமே, கண் இமை போல் கழகத்தைக் காப்பவரே, தன் நலத்தை முன் நிறுத்தாத தாய் வடிவே; வஞ்சகம் அற்றவரே, எம் நெஞ்சகம் ஆள்பவரே, அம்மா தாயே! வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 11—45

எளிய குடும்பத்தில் பிறந்த என்னை, மாணவர் அணி இணைச் செயலாளராக்கி, மாணவர் அணி செயலாளராக்கி, தி. நகர் சட்டமன்ற உறுப்பினராக்கி, தென் சென்னை மாவட்டச் செயலாளராக்கி, இலக்கிய அணி இணைச் செயலாளராக்கி, இளைஞர் பாசறை மற்றும் இளம் பெண்கள் பாசறை செயலாளராக்கி, மீண்டும் தி. நகர் தொகுதியில் இரண்டாம் முறையாக சட்டமன்ற உறுப்பினராக்கி தன் அகம் மகிழும் என் அகம் நிறைந்த அம்மா! உங்களை நன்றியோடு இந்தத் தருணத்தில் வணங்குகிறேன்.

எப்பொழுதும் உங்களைத் தொழுவேன். காலை, மாலை, இரவென எப்பொழுதும் உம் அடி பணிவேன். எப்பிறப்பும் உங்கள் தொண்டன் நான். முப்பிறப்பு, இப்பிறப்பு, மறுபிறப்பு என்னும் எப்பிறப்பும் எம் அன்னை நீங்கள். முப்பிறப்பு, இப்பிறப்பு, மறுபிறப்பு என்னும் எப்பிறப்பும் எம் அன்னை நீங்கள். உச்சரிக்கும் என் தாய் மொழியின் அகரம் நீங்கள். உழைப்பென்னும் சொல்லுக்கோ சிகரம் நீங்கள். தமிழகத்தின் விடிவிளக்கே! எம் தலைவி என்னும் தாய் சுடரே, உங்களால் முகவரி பெற்றேன். உயிர் உள்ளவரை ஊனும், உணர்வும் உங்களுக்கே. அம்மா! நீங்கள் உதயமானீர்கள், சூரியன் அஸ்தமித்தது. நீங்கள் எழுந்தீர்கள், சாம்ராஜ்யங்கள் உற்றுப் பார்த்தது. நீங்கள் நடந்தீர்கள், நாடே வாழ்த்தி வரவேற்றது. நீங்கள் தலைமையானீர்கள், தமிழகமே தலை நிமிர்ந்து நின்றது. நீங்கள் முதல்வரானீர்கள், தமிழகத்தை உலகமே உற்று நோக்கியது.



நீங்கள் முதல்வரானீர்கள், தமிழகத்தை உலகமே உற்று நோக்கியது. அன்னிய மொழியாம் ஆங்கிலம், அம்மா! நீங்கள் பேசிய அழகைப் பார்த்து சொக்கி மயங்கியது. தாய் மொழித் தமிழோ நீங்கள் நான்காம் தமிழ் தந்ததனால் நன்றியோடு வணங்கியது. அம்மா நீங்கள் மாளிகையில் தோன்றிய மாணிக்கம், மக்கள் மனதினை கவர்ந்திட்டது உங்கள் சாணக்கியம். நீங்கள் சுட்டு விரலில் சூரியனைச் சுருட்டிப் போட்ட சூத்திரதாரி. நீங்கள் தமிழகத்தின் வழிகாட்டி மட்டுமல்ல, இளைஞர் பாசறை, இளம் பெண்கள் பாசறையின் திசைக் காட்டியும் நீங்களே. அம்மா! அண்ணல் பிறந்தார், அகிம்சை பிறந்தது. புத்தர் பிறந்தார், போதனை பிறந்தது. நபிகள் பிறந்தார், நேசம் பிறந்தது. அண்ணா பிறந்தார், அன்பு பிறந்தது. அன்னை தெரசா பிறந்தார், கருணை பிறந்தது. எங்கள் அம்மா நீங்கள் பிறந்தீர்கள், அனைத்தும் பிறந்தது. (மேசையைத் தட்டும் ஒலி)

வள்ளலுக்கெல்லாம் வள்ளல் நீங்கள். மொத்தத்தில் நீங்கள்தான் தமிழ்நாடு. வள்ளலுக்கெல்லாம் வள்ளல் நீங்கள், மொத்தத்தில் நீங்கள்தான் தமிழ்நாடு. உங்கள் நெஞ்சம்தான் எங்கள் இளைஞர் பாசறையின் தாய் வீடு. அம்மா! மகம் மகிழ்ந்தது. அம்மா! மகம் மகிழ்ந்தது, மாதரசி உங்களை ஈன்றதனால். ஜெகம் குளிர்ந்தது, சிங்கத் தாயே உங்களைப் பெற்றதனால். கழகம் வென்றது, காவியத் தாய் உங்கள் தலைமையினால். தமிழகம் நிமிர்ந்தது அம்மா நீங்கள் முதல்வர் ஆனதினால். (மேசையைத் தட்டும் ஒலி)

அம்மா! செதுக்காமல் சிற்பம் இல்லை, அரைக்காமல் சந்தனம் இல்லை, ஜொலிக்காமல் வைரம் இல்லை, தியாகம் இல்லாமல் வரலாறு இல்லை. அம்மா! அன்னை சந்தியா தாய் ஈன்றெடுத்த தங்கமே! நீங்கள் இல்லாமல் இந்தியாவே இல்லை; நீங்கள் இல்லாமல் இந்தியாவே இல்லை. அம்மா! என் நெஞ்சைத் திறந்தாலும் நின் உருவே அங்கு இருக்கும். நீண்ட உறக்கத்தும் நின் உருவே வந்திருக்கும். நின் பெயர் உச்சரித்தே நித்தமும் நான் கண் விழிப்பேன்; நின் பெயர் உச்சரித்தே நித்தமும் நான் கண் விழிப்பேன். அம்மா! உண்ணும் ஒவ்வொரு வாய்ச் சோறும், அம்மா! நான் உண்ணும் ஒவ்வொரு வாய்ச் சோறும் நின் பெயர்தான் என்று நான் மொழிவேன்.

ஏசுநாதர் தொட்டார் தண்ணீர் திராட்சை ரசமானது என்கிறது பைபிள். கல்லாய் கிடந்த அகலிகை உயிர் பெற்றாள்

இராமபிரான் பாதம் பட்டதால் என்கிறது புராணம். அம்மா! உங்கள் பார்வை பட்டது, எளியோன் நான் வாழ்வில் உயர்வு பெற்றேன். அதனால் நாடினும் அம்மா நின் அடியே நாடுவேன். நாளெல்லாம் பாடினும் உயிர் உள்ளவரை, நாளெல்லாம் பாடினும் உயிர் உள்ளவரை அம்மா நின் புகழே பாடுவேன்.

கடந்த கால ஆட்சியின் கடைசி சட்டமன்றக் கூட்டத் தொடரில் ஆணவம் அடக்கப்படும், அடக்கு முறை ஒடுக்கப்படும், மைனாரிட்டி தி.மு.க. ஆட்சி வீழ்த்தப்படும், கருணாநிதியின் குடும்பம் தமிழகத்தை விட்டு விரட்டப்படும், எங்கள் அம்மா ஆட்சி மீண்டும் மலரும் என்று நாங்கள் பேசியபொழுது (மேசையைத் தட்டும் ஒலி) அமைச்சராக அன்றைக்கு இருந்த துரைமுருகன், அமைச்சராக இருக்கிறோம் என்ற ஆணவத் திமிரில் உங்கள் அம்மா முதல்வராக வரவே முடியாது, ஏன் உங்களில் யாருமே இந்த சட்டசபைக்கு திரும்பி வர மாட்டீர்கள் என்று திமிரோடு பேசினார். ஆனால், இன்றைக்கோ எதிர்க்கட்சியாக அமரக்கூட அருகதை இல்லாத தி.மு.க. கூட்டம், (மேசையைத் தட்டும் ஒலி) எதிர்க்கட்சியாக அமரக்கூட அருகதை இல்லாத தி.மு.க. கூட்டம், இருக்கைகளைக் காரணம் கூறி சபைக்குள்ளே வர மறுத்து, வெளியே சண்ட மாருதம் புரிகிறார்கள். கருணாநிதியோ நாங்கள் பார்க்காத பாளையங்கோட்டையா என்று கேட்கிறார். ஆமாம், திருக்குவளை திருட்டுக் கூட்டமான நீங்கள் திருட்டு வழக்கிலே திகார் சிறையையே பார்த்தவர்கள்தான். (மேசையைத் தட்டும் ஒலி) சிலர் கவலைகளுக்காகக் கண்ணீர் சிந்துவார்கள், சிலர் இலட்சியங்களுக்காக இரத்தம் சிந்துவார்கள் என்றார் மாவீரர் லெனின். ஆனால், கருணாநிதியோ கனிமொழியால் ஏற்பட்ட கவலைக்காக இன்றைக்குக் கண்ணீர் சிந்துகிறார். எங்கள் அம்மாவோ தமிழகத்தை இந்தியாவின் முதன்மை மாநிலமாக்கிட வேண்டும் என்ற இலட்சியத்திற்காக 22 மணி நேரம் இரவு பகல் பாராது உழைக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) நித்திரை துறந்த எங்கள் பத்தரைமாற்றுத் தங்கம் உங்களைத்தான் சட்டசபைக்குள் சந்திக்கத் திராணியின்றி அறைக்குள் அமர்ந்துகொண்டு அறிக்கை விடுகிறார் கருணாநிதி. (மேசையைத் தட்டும் ஒலி) அம்மா தங்களை நன்றியோடு வணங்குகிறேன்.



முற்பகல் 11—50

கடந்த ஆட்சிக் காலத்தில் முதல் கூட்டத் தொடரிலேயே கழக சட்டமன்ற உறுப்பினர்களை எல்லாம் மொத்தமாக வெளியேற்றி சித்தம் மகிழ்ந்தார் கருணாநிதி. ஆனால், வீர வேங்கையாக சீறும் வரிப் புலியாக சட்டசபைக்கு வந்தார் எங்கள் தங்கத் தலைவி அம்மா.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

அன்றைக்கு சேலை கட்டிய சிங்கத் தலைவியை எதிர்த்து வீழ்த்திட (மேசையைத் தட்டும் ஒலி) அன்றைக்கு சேலை கட்டிய சிங்கத் தலைவி எங்கள் அம்மாவை எதிர்த்து வீழ்த்திட கருணாநிதி தலைமையில் வேட்டிகள் எல்லாம் ஒன்றுகூடி வியூகம் வகுத்தது. அறிவாற்றலில் சிறந்த எங்கள் அம்மா அடுக்கடுக்காய் வினாக்களைத் தொடுத்தார். நடை தளர்ந்த கருணாநிதி கூட்டமோ தொடை நடுங்கி பதில் சொல்ல வக்கற்று தோற்றுப் போனது. அன்றைக்கு எதிரிகள் எங்கள் அம்மாவுக்கு எதிராக வீசியதெல்லாம் வஞ்சக வசைச் சொற்கள். அதன் பின்போ அரசியல் போருக்கு வா என்றால் அருகதையற்றவர்கள் கழகத்தின்மீது ஆயுதம் தூக்கி அடக்குமுறையை ஏவினார்கள். களவாணி கருணாநிதி கூட்டம் எங்கள் அம்மாவுக்கு எதிராக காகிதக் கணைகளை எய்தது. தங்கம் அமர்ந்த இடத்தில் தகரம் அமரலாமா? எங்கள் தங்கம் அமர்ந்த இடத்தில் தகரம் அமரலாமா? குயில் இருந்த சபையில் கோட்டான் இருக்கலாமா? சிங்கம் இருந்த இடத்தில் சிறு நரி அமரலாமா? எங்கள் அம்மா அமர்ந்த இடத்தில் கருணாநிதி அமரலாமா? பொறுத்திட முடியாமல் மக்கள் பொங்கி எழுந்தார்கள். ஆத்திரம் கொண்ட மக்கள் தமிழகத்தின் ஆட்சியில் எங்கள் தங்கத் தலைவி அம்மாவை அமர்த்தினர்.

அம்மா அரசின் நிதிநிலை அறிக்கை அற்புதத்திலும் அற்புதம். அழிக்க முடியா காவியம். பக்கங்களைப் புரட்டப் புரட்ட தித்திக்கும் தேனாக திக்கெட்டும் போற்றும் திட்டங்கள் அதில் பலப் பல. அத்தனையும் முத்துக்கள். இருப்பதையெல்லாம் இல்லாதோர்க்குக் கொடுத்து மகிழ் என்றார் ஏசுபிரான்; மண்டிலி ஞானத்து வாழ்வோருக்கெல்லாம் உண்டி கொடுப்பீர், உயிர் கொடுப்பீர் என்று பசிக்கு உணவளிக்கச் சொன்னார் சீத்தலைச் சாத்தனார்; உடம்பார் அழியின், உயிரால் அழிவர்; திறம்பட

[திரு. வி.பி. கலைராஜன்] [2011 ஆகஸ்ட் 10

மெய்ஞானம் சேரவும்மாட்டார்; உடம்பை வளர்க்கும் உபாயம் அறிந்து உடம்பை வளர்த்தேன் உயிர் வளர்த்தேனே என்றார் சித்தரில் சிறந்த திருமூலர்; வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன் என்றார் வள்ளலார்; தனியொரு மனிதனுக்கு உணவில்லையென்றால் ஜெகத்தினை அழித்திடுவோம் என்றார் மகாகவி பாரதியார்; பசி என்று வருவோருக்கு புசிக்க உணவு கொடு என்றார் பாவேந்தர் பாரதிதாசன்; பாசப் பிள்ளைகளுக்குத் தனது இரத்தத்தைப் பாலாக்கிப் பருகிடத் தந்து மகிழ்வாள் நல்ல தாய். அப்படித்தான் எங்கள் அம்மா இந்த நிதிநிலை அறிக்கையில் 1 கோடியே 83 இலட்சம் குடும்பங்களுக்கு இலவச அரிசியைத் தந்துள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) பசியினால் வாடாவண்ணம் முதியோருக்கும், ஆதரவற்றோருக்கும் ஓய்வூதியத் தொகையை மாண்புமிகு அம்மா உயர்த்தித் தந்துள்ளார்கள் ரூபாய் 500-லிருந்து 1,000 ஆக. வறுமையில் வாடும் குடும்பங்களுக்கு 60,000 கறவை மாடுகள் இலவசமாக வழங்கப்படும் என்றும், 2011-2012 ஆம் ஆண்டில் வறுமையே வீட்டின் வாசலுக்கு வந்திடாவண்ணம் கிராமப்புற ஏழைக் குடும்பங்களுக்கு ஜெர்சி போன்ற கலப்பினக் கறவை மாடுகள் வழங்கப்படும் என்றும் மாண்புமிகு அம்மா அவர்கள் அறிவித்துள்ளார்கள். மாடுகள் தந்தால் போதுமா? வறுமையில் வாடும் விவசாயக் கூலித் தொழிலாளர்களின் குடும்பங்களுக்கு ஆடுகளும் வழங்கப்படும் என்று அறிவித்துள்ளார்கள். கடந்த காலத்தில் முதல்வராக இருந்தபோது தமிழகத்தில் பசியினால் எந்தப் பாமரனும் வாடக் கூடாது என்பதற்காக ஆலயங்கள் தோறும் அன்னதானத் திட்டத்தை வழங்கிய எங்கள் அம்மா தற்போது 106 கோயில்களுக்கு இத்திட்டம் விரிவுபடுத்தப்படும் என்று அறிவித்துள்ளார்கள். நாள்தோறும் ஒருகால பூஜையாவது மேற்கொள்வதற்கு வட்டி வருமானம் கிடைக்கும் வகையில் 11,931 கோயில்களுக்கு ரூபாய் 25,000 வீதம் நிரந்தர வைப்பீடு செய்யப்பட்டிருந்ததை ரூபாய் ஒரு இலட்சமாக உயர்த்தித் தந்துள்ளார்கள்.

முற்பகல் 11-55

கோயில் அர்ச்சகர்கள், ஓதுவார்கள், இசைவாணர்கள், கிராமப் பூசாரிகள் ஆகியோருக்கான மாத ஓய்வூதியத்தை ரூ.750/-லிருந்து ரூ.1,000/- ஆக உயர்த்தித் தந்த உயர் தமிழ்த் தாய் எங்கள் அம்மா உள்ளம் மகிழ்ந்துள்ளீர்கள். பாமர மக்களை நிஜமாய் நேசித்த நேசத்தாய் நீங்கள். வற்றிப் போகாத, வரைய வரைய இனிக்கும் வண்டமிழ் வரலாறு நீங்கள். அம்மா நீங்கள் தெவிட்டாத திருவாசகம், நற்றிணை, நல்ல குறுந்தொகை. ஆம், வறியோர்க்கு வறுமையை அகற்றி, பசிப்பிணி போக்கும் அட்சயப் பாத்திரம் நீங்கள்.



மழைநீர் மக்களின் உயிர் நீர். உலகில் எதிர்காலத்தில் மூன்றாம் உலகப் போர் மூளுமென்றால் அதற்குக் காரணம் தண்ணீராகத்தான் இருக்கும் என்று அறிஞர்கள் கூறுகிறார்கள். உலகிலுள்ள தண்ணீரில் 97.5 விழுக்காடு கடல் நீர். மீதமுள்ள 2.5 விழுக்காடுதான் தண்ணீர். அதிலும் பனிக்கட்டியாக 2.4 விழுக்காடு உள்ளது. மீதமுள்ளதுதான் மக்களுக்குப் பயன்படும் குடிதண்ணீர். அதனால்தான் நிலத்தடி நீரை உயர்த்த வேண்டுமென்று மழைநீர் சேகரிப்புத் திட்டத்தை அம்மா நீங்கள் அறிவித்தீர்கள். உலகம் உங்களைப் பாராட்டியது. 'Asian Urban Information Centre of Kobe, Japan. The First 2007 Workshop on Population and Appropriate Water Environment in Urban Area' என்ற தலைப்பில் 10 நாட்கள் conference 2007-ல் நடைபெற்றது. அதில் அம்மா அவர்களே, உங்களுடைய மழைநீர் சேகரிப்புத் திட்டத்தைப் பாராட்டி, அமெரிக்காவிலிருந்தும், உலக நாடுகளிலிருந்தும் பல அறிஞர்கள் வந்திருந்தாலும் அமெரிக்காவிலிருந்து வந்த அறிஞர்கள் தமிழ்நாட்டில் இருக்கிற தங்கத் தலைவி ஆட்சியை மனதாரப் பாராட்டினார்கள் என்பதை இங்கே நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

புதிய வீராணம் திட்டத்தைச் சென்னைக்குக் கொண்டு வர முயன்றபோது இது வீணான திட்டம் என்று விதண்டாவாதம் பேசிய கருணாநிதிதான் கடந்த கால மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியில் மழை நீர் சேகரிப்புத் திட்டத்தைக் கிடப்பில் போட்டார். சென்னை மாநகரக் குடிநீர்த் தேவைக்கு தற்போதுள்ள நீர் சேமிப்பிற்கான கொள்ளளவை 1,851 கோடி ரூபாய் மதிப்பில் மேலும் 4.20 டி.எம்.சி. அதிகரிக்கப்படும் என்று எங்கள் அம்மா அறிவித்துள்ளீர்கள்.

சென்னையிலே போக்குவரத்து நெரிசலைச் சரிசெய்ய மோனோ இரயில் திட்டத்தைச் செயல்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று அம்மா அறிவித்துள்ளீர்கள்.

சென்னை பெருநகர வளர்ச்சித் திட்டத்திற்கு 500 கோடி ரூபாயும், ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்திற்கு 750 கோடி ரூபாயும் நிதிநிலை அறிக்கையில் ஒதுக்கி மாண்புமிகு அம்மா நீங்கள் தந்துள்ளீர்கள். சென்னையிலும் அதன் புறநகர்ப் பகுதிகளிலும் திடக்கழிவு மேலாண்மைக்காக ஒரு விரிவான திட்டத்தையும், மாண்புமிகு அம்மாவின் அரசு தயாரித்து அறிவித்துள்ளது. இதனால், கழிவு நீர் சுத்திகரிப்பு, மறுசுழற்சி, குடிநீரில் கழிவு நீர் கலப்பதைத் தடுக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று அறிவித்துள்ளதை, தாயே என் நெஞ்சார உங்களை இந்த நேரத்திலே நான் நன்றியோடு வணங்குகிறேன். அது மட்டுமல்ல தாயே, சென்னையிலே 3 நாட்களுக்கு முன்னாலே வான்வெளியிலிருந்து சென்னையிலிருக்கும் குப்பைக் கூளங்களையெல்லாம் பார்த்து, சாக்கடை நீரைப் பார்த்து இன்னும் 3 மாதங்களில் சென்னையில் குப்பைகள் அகற்றப்படும் என்று அறிவித்தீர்கள் அம்மா, உங்களை நான் நன்றியோடு வணங்குகிறேன்.

அம்மா, திராவிட இயக்கம் கண்ட திறன்மிக்க தலைவி நீங்கள். அண்ணாவின் அறிவும், பெரியாரின் துணிவும், புரட்சித் தலைவரின் பொறுமையும் நிரம்பப் பெற்ற நீங்கள் ஆட்சித் திறனிலோ அறிஞர் அரிஸ்டாட்டிலின் அற்புத வெளிப்பாடு. நல்லதையெல்லாம் பிள்ளைகளுக்குத் தாருங்கள் என்றார் விவேகானந்தர். கல்வியின் அவசியத்தைக் கருத்தாகச் சொன்னார் அறிஞர் ரூசோ. பெண் கல்வி அவசியம் என்றார்கள் தந்தை பெரியாரும் அறிஞர் அண்ணாவும். அதைப்போல, கல்விக்காக, மாணவர் சமுதாயத்திற்காக கடந்த கால ஆட்சியிலே வாரி வாரி வழங்கி மகிழ்ந்தவர்தான் மாண்புமிகு அம்மா நீங்கள்.

மாணவர்களால் திராவிட இயக்கம் அறிஞர் அண்ணா தலைமையில் ஆட்சியில் அமர்ந்தது. அந்த மாணவர்களைச் சுட்டு வீழ்த்தி சுகம் கண்டார் கருணாநிதி. அடித்து நொறுக்கி அகம் மகிழ்ந்தார் கருணாநிதி. குண்டாந்தடி கொண்டு கொலை வெறித் தாக்குதல் நடத்தி கொண்டாட்டம் போட்டார் கருணாநிதி. ஆனால், மாணவர் சமுதாயத்திற்கு சத்துணவு தந்தார் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். ஆனால், எங்கள் அம்மா, மாணவர்கள் பள்ளிக்கு நடந்து சென்றால் பாதம் வலிக்கும் என்று கடந்த ஆட்சிக் காலத்திலே சைக்கிளை வழங்கி சிந்தை மகிழ்ந்தீர்கள். If a man changes, an individual will change. If a



"woman changes, a society will change" என்ற தத்துவத்திற்கிணங்க பெண்கள் கல்வி அறிவு பெற்றால் சமுதாயமே கல்வி அறிவு பெறும். அறிவாளிகள் நாட்டில் அடுக்கடுக்காய்த் தோன்றுவார்கள் என்பதை உணர்ந்துதான், படிக்கிற வேலையை மட்டும் மாணவர் சமுதாயத்திற்கு விட்டுவிட்டு அனைத்துச் சலுகைகளையும் அம்மா நீங்கள் வழங்கி கடந்த கால ஆட்சியிலே உள்ளம் மகிழ்ந்திட்டீர்கள்.

இந்த நிதிநிலை அறிக்கையிலும் இடைநில்லா கல்விக்கு ஊக்கத் தொகையாக அனைத்து மாணவர்களுக்கும் 10 ஆம் வகுப்பிலிருந்து 12 ஆம் வகுப்பு வரை 1,500 ரூபாய், 1,500 ரூபாய் 2,000 ரூபாய் என மொத்தம் ரூ.5,000/- வழங்கி அந்தத் தொகை வைப்புத் தொகையாக வைப்பீடு செய்யப்பட்டு, பள்ளிப் படிப்பு முடிக்கும்போது வழங்கப்படும் என்றும், இதற்காக 394.04 கோடி ரூபாய் ஒதுக்கீட்டில் 24 இலட்சத்து 94 ஆயிரத்து 649 மாணவர்கள் பயன் பெறுவார்கள் என்றும் இந்தியாவிலேயே எந்த மாநிலத் தலைவருக்கும் இல்லாத சிந்தையோடு மாணவ சமுதாயம் நலம் பெற மாண்புமிகு அம்மா நீங்கள் அறிவித்துள்ளீர்கள். அனைத்து மாணவக் கண்மணிகளுக்கும் சீருடை வழங்கப்படும் என்றும், சென்னை டி.பி.ஐ. வளாகத்தில் ஒருங்கிணைந்த அறிவுசார் பூங்கா அமைக்கப்படும் என்றும் அறிவித்துள்ளீர்கள்.

நண்பகல் 12-00

பிளஸ் 1, பிளஸ் 2 படிக்கும் மாணவக் கண்மணிகளுக்கும், கல்லூரியில் பயிலும் மாணவக் கண்மணிகளுக்கும், இலவச மடிக்கணினி வழங்கப்படும் என்று மாண்புமிகு அம்மா அவர்கள் அறிவித்துள்ளீர்கள். உலகத்தில், உயர் கல்வி கற்பதில், இந்தியா மிகவும் பின்தங்கிய நிலையில் இருப்பதை உணர்ந்து, வளர்ந்த உலக நாடுகளுக்கு இணையாக, உயர் கல்வியைத் தமிழகத்தில் உயர்த்திக் காட்டிட, வெளிநாட்டு விரிவுரையாளர்களையும், ஆசிரியர்களையும் வரவழைத்து, பயிற்சியளிக்க வழிவகை செய்ததோடு, நமது பாடத்திட்டங்களை, உலகத் தரத்திற்கு உயர்த்தி, நமது கல்வி நிறுவனங்களை, உலக அளவில் தரம் உயர்த்த நடவடிக்கை எடுக்கப்படும் என்று மாண்புமிகு அம்மா அவர்கள் அறிவித்துள்ளீர்கள். இதன்மூலம், இந்தியாவில், தமிழகம் கல்வியில் முதல் மாநிலமாக நிலைபெற மாண்புமிகு அம்மா அவர்கள் வழி வகுத்துள்ளீர்கள்.

ஏழைப் பெண்களுக்குத் திருமணத்திற்காக நிதி உதவி 25,000/- ரூபாயும், பட்டப்படிப்பு முடித்த பெண்களுக்கு நிதி உதவி 50,000/- ரூபாயும், தாலிக்கு, பெண்களுக்கு 4 கிராம் இலவசத் தங்கமும் வழங்கப்படும் என்று பெண்ணினத்திற்குப் பெருமை சேர்க்கும் எங்கள் மாண்புமிகு அம்மா நீங்கள் அறிவித்துள்ளீர்கள்.

கருணாநிதி ஆட்சியின் கடந்த காலப்போக்கில், தங்கம் என்று பிள்ளைகளுக்குப் பெயர்தான் வைக்க முடிந்தது. ஆனால், தங்கத்தைப் பார்க்கவே முடியவில்லை. தங்கத் தலைவியே, நீங்கள்தான் தங்கத்தைத் தருகிறீர்கள் தாலிக்கு. (மேசையைத் தட்டும் ஒலி)

மகப்பேறு நிதி உதவித் திட்டத்தின்கீழ், ஏழைப் பெண்களுக்கு 2 மகப்பேறு வரை வழங்கப்படும் உதவித் தொகை 6,000 ரூபாயிலிருந்து 12,000 ரூபாயாக மாண்புமிகு அம்மா, நீங்கள் உயர்த்தித் தந்துள்ளீர்கள். தாயின் மனதை, ஒரு தாய்தான் நன்கு அறிவார் என்பதை உங்களுடைய அறிவிப்பு வெளிக்காட்டியிருக்கிறது. அம்மா, தாயே, நன்றியோடு வணங்குகிறேன்.

முதலமைச்சரின் பெண்கள் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ், ஒரு பெண் குழந்தைக்கான வைப்புத் தொகை ரூ.50,000/-ஆகவும், 2 பெண் குழந்தைகளுக்கான வைப்புத் தொகை தலா ரூ.25,000/- ஆகவும் மாண்புமிகு அம்மா நீங்கள் உயர்த்தி அறிவித்துள்ளீர்கள். பெண் சிசுக்கொலையைத் தடுப்பதற்கு, அம்மா நீங்கள் அறிவித்துள்ளது, சிறப்பானத் திட்டமாகும்.

அம்மா, இலட்சிய தாகத்தில் எங்களுக்குக் கிடைத்த இங்கர்சால் நீங்கள். மாபெரும் சபையில் சிறப்பாகப் பேசுவதில், இங்கிலாந்தின் எட்மண்ட் பர்க்கை மிஞ்சியவர்கள் நீங்கள். சிந்தனையாற்றலில், கிரேக்கத்து சாக்ரடீஸ் நீங்கள். அரசியல் சிந்தனையில், அம்மா பிளாட்டோ நீங்கள். இளைய சமுதாயத்தைக் கவர்வதில், இத்தாலியின் மாஜினி நீங்கள். தத்துவ விளக்கம் தருவதிலே அம்மா, பெர்னாட்ஷா நீங்கள். மொத்தத்தில், ஆளுமைத் திறனில் அம்மாவுக்கு நிகர், எங்கள் அம்மா நீங்கள்தான். (மேசையைத் தட்டும் ஒலி)



அமெரிக்க அமைச்சராக ஹிலாரி கிளிண்டன் சென்னைக்கு வந்தார். எதிர்கால இந்தியாவாம் எங்கள் இதயத்து தலைவியை, ஆம், எம் அம்மாவை சந்தித்தார். தங்கத் தாரகையாம் எங்கள் அம்மாவும், வெள்ளைக்கார வெண்புறா ஹிலாரி கிளிண்டனும் நேசக்கரம் நீட்டினர். பாசத்தைப் பகிர்ந்து கொண்டனர். இலங்கைக்கு எதிராக அமெரிக்கா பொருளாதாரத் தடை விதிக்க, எம் அம்மா கேட்டுக்கொண்டார். ஹிலாரியும் அதனை ஏற்றுக் கொண்டார். வென்றது எம் அம்மா சபதம். மிரண்டது சிங்களர் கூட்டம். எட்டுத் திக்கும் வாழும் பத்து கோடி தமிழர்களையும் பாதுகாக்கப் பிறந்த அம்மாவை, பத்தரை மாத்துத் தங்கத்தை, நன்றியோடு வணங்கினார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

அடுத்தவர் அம்மாவை வாழ்த்தினால், பொறாமை கொண்ட கருணாநிதிக்குப் பொறுக்குமா? குந்தி குழந்தை பெற்றதற்காக, காந்தாரி தனது அடிவயிற்றில் கல்லால் குத்திக் கொண்டதைப்போல, ஓலமிடுகிறார், கருணாநிதி ஒப்பாரி வைக்கிறார். இலங்கைத் தமிழர்களுக்கு நான் செய்யாததா என்று கேட்டுள்ளார். ஆம் கருணாநிதியே, குட்டி மணி, ஜெகனைப் பிடித்து, சிங்கள அரசிடம் கொடுத்தது நீதான். இலட்சக்கணக்கான தமிழ் நெஞ்சங்கள் செத்து மடிவதற்கு இரண்டு மணி நேர உண்ணாவிரத நாடகத்தை நடத்தி, போர் நிறுத்தம் என்று சொல்லி போலியாகப் பேசியது நீதான். போர்க்குற்றவாளியாக அறிவிக்கப்பட வேண்டிய கொலைகார இராஜபக்சே வீட்டிற்கு உன் தங்க மகள் கனிமொழியையும், நாடாளுமன்ற உறுப்பினர் சிலரையும் அனுப்பி, பரிசுப் பொருள்களை வாங்கி மகிழ்ந்து பார்த்ததும் நீதான். மொத்தத்தில், இராஜபக்சே மட்டுமல்ல, இந்த அவையில் கூறுகிறேன், கருணாநிதியே நீயும் ஒரு போர்க் குற்றவாளிதான் என்பதை நான் தெளிவாகக் கூறுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அம்மா அவர்களின் அபாரமான ஆங்கிலப் புலமை, அந்த stylish உச்சரிப்பு. உலகத் தகவல்களை உதட்டு நுனியில் வைத்திருக்கும் சாமர்த்தியம், அதைப்போன்று பேரழிவை ஏற்படுத்திய சுனாமியைக் கையாண்ட விதம், இவற்றையெல்லாம் ஹிலாரி கிளிண்டன் பாராட்டியுள்ளார் என்று அமெரிக்காவில் இருந்து வந்த பிரகாஷ் சுவாமி என்ற எழுத்தாளர் குமுதம் பத்திரிகையில் பாராட்டியுள்ளார். அதேபோல, இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகையில், “During the meeting, Mrs. Clinton

described Amma as a great personality, who had many achievements to her credit and was all praise for the welfare schemes being implemented by the Amma Government. So much so that the American delegation has requested Amma to send the details of all her welfare schemes to U.S. Consulate General here for use in various forums" என்று மகிழ்ச்சி பொங்க அம்மாவைப் பாராட்டி இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகை எழுதியுள்ளது. இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகை மட்டுமல்ல, தமிழகத்தில் இருந்து வருகிற பத்திரிகைகள் மட்டுமல்ல, அமெரிக்காவில் இருந்து வருகிற பத்திரிகைகளும் அம்மாவினுடைய திறமையைப் பாராட்டி, மகிழ்ந்து எழுதியுள்ளன என்பதை இங்கே நான் குறிப்பிட்டுக் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

சுனாமி வந்தபோது, அடுத்து ஒரு சுனாமி வரப்போகிறது என்று ஆய்வாளர்கள் அறிவித்தபோதும், என் தமிழ் மக்களைவிட என் உயிர் எனக்குப் பெரியதல்ல என்று கடற்கரைக்கு ஓடிச் சென்று மக்களைக் காப்பாற்ற எம் அம்மா கடும் நடவடிக்கை எடுத்தீர்கள். அம்மாவின் மீட்பு நடவடிக்கைகளைப் பார்த்து அடிக்கடி சுனாமியைச் சந்திக்கும் ஜப்பான் அரசு அம்மாவைப் பாராட்டியது. இந்தோனேசியா அரசு அம்மாவை வாழ்த்தியது. தாய்லாந்து அரசோ எங்கள் அம்மாவின், தாயின் செய்கைகளைப் பார்த்து போற்றிப் பாராட்டியது. இலங்கை அரசோ அம்மாவை வாழ்த்தியது. பின்னர், சுனாமி பாதித்த இடங்களைப் பார்க்க வந்த ஐ.நா.வின் சிறப்புப் பிரதிநிதி, அமெரிக்காவின் முன்னாள் குடியரசுத் தலைவர் திரு. பில் கிளின்டன் அவர்கள் தமிழகத்தில் சுனாமி வந்த சுவடே தெரியாத அளவிற்கு அம்மா எடுத்த மீட்பு நடவடிக்கைகளைப் பாராட்டி "Excellent Relief Measure taken by local Tamil Nadu Government and its Chief Minister Amma" என்று மனதாரப் பாராட்டினார்கள்.

பிற்பகல் 12-05

ஆனால், சுனாமி வந்தபோதோ இந்த வாய்ஜால வித்தகர் கருணாநிதி சுனாமி தூக்கிச் சென்றுவிடுமோ என்று பயந்து, மருத்துவமனை மாடியில் போய் படுத்துக்கொண்டார். மகன் ஸ்டாலினோ ஒரு வாரம் அறையைவிட்டு வெளியே வரவேயில்லை. அந்த ஸ்டாலினுக்குதான் முதலமைச்சருக்குரிய பாதுகாப்பு இன்றைக்கும் வழங்கப்பட்டு வருகிறது. அம்மா நான்



கேட்கிறேன், இதே ஸ்டாலின் உள்ளாட்சித் துறை அமைச்சராக இருக்கிறபோது அவருக்கு முதலமைச்சர் பதவிக்குரிய தகுதி வழங்கப்பட வேண்டுமென்பதற்காக ஒரு கத்திக் குத்து சம்பவத்தை நாடகமாக அரங்கேற்றினார். கத்தியால் குத்த வந்தவன், இரயில் நிலையத்தில் பட்டப் பகலில், ஆயிரம் பேர் நிற்கிறபோது தப்பித்துச் சென்றுவிட்டானாம்; இன்றைக்கு வரை அவன் கைது செய்யப்படவில்லையாம்; பார்த்தீர்களா அம்மா! இப்படிப்பட்ட போலி நாடக திரிபுவாதிதான் இந்தக் கருணாநிதி. அந்த ஸ்டாலினுக்கு இன்றைக்கும் அந்தப் பாதுகாப்பு வழங்கப்படுவதாக நான் அறிகிறேன். அம்மா! அதற்கு நீங்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும். அட்டைக் கத்திக்கு, பட்டுக் குஞ்சம் தேவையில்லை. ஒருவேளை மத்திய அரசுதான் அந்தப் பாதுகாப்பை வழங்குகிறது என்று சொன்னால் உடனே அந்தப் பாதுகாப்பை ஸ்டாலினிடமிருந்து எடுக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்கிறேன்.

"The empires of the future will be empires of the mind" என்று வின்ஸ்டன் சர்ச்சில் கூறியுள்ளார். அறிவாளிகள் மட்டுமே இந்த உலகத்தை ஆளமுடியும். இராணுவம், காவல் படைகளெல்லாம் இரண்டாம்பட்சம்தான். ஆம்! அதனால்தான் பண்மொழி வித்தகராம் அறிவார்ந்த என் அம்மாவிடம் தமிழக மக்கள் ஆட்சியைத் தந்திருக்கிறார்கள்.

இந்தச் சபையிலே சொல்கிறேன், ஒரு சட்டமன்ற உறுப்பினராக சட்டசபையிலே நான் பேசுகிறேன். கடந்த ஆட்சியிலே, ஆணவத் திமிரோடு கொச்சைத் தமிழிலே எங்கள் அம்மாவை திட்டிப் பேசிய கருணாநிதியைக் கண்டித்தோம் என்பதற்காக என்னுடைய வீட்டை இரவோடு இரவாக-ஒரு சட்டமன்ற உறுப்பினர் வீட்டை-இரவோடு இரவாகத் தாக்கி, வீட்டில் படுத்திருந்த என் தந்தையை அடித்ததோடுமட்டுமல்ல பாவிகள், வீட்டில் கட்டிவைக்கப்பட்டிருந்த பசு மாட்டின் வாலையும் வெட்டினார்கள் என்று சொன்னால், அந்தக் கேடுகெட்டவர்களை, கருணாநிதி அரசாங்கம் கடந்த ஐந்தாண்டு காலத்திலே-இங்கே மாண்புமிகு அமைச்சராக இருக்கின்ற திரு. ஆர். வைத்திலிங்கம் அவர்களும், மாண்புமிகு பேரவைத் தலைவராக இருக்கின்ற என் அருமைச் சகோதரர் திரு. டி. ஜெயக்குமார் அவர்களும் பலமுறை எடுத்துச் சொல்லியும்-நடவடிக்கை எடுக்கிறோம், நடவடிக்கை எடுக்கிறோம்

என்று சொன்ன கருணாநிதி, ஐந்தாண்டுகளும் நடவடிக்கை எடுக்கவில்லை. தாயே! என் தந்தை இன்று இல்லை, இறந்துவிட்டார். அவருடைய ஆன்மா சாந்தி அடையும்வகையில் அந்தக் குற்றவாளிகளை, என் வீட்டைத் தாக்கிய அயோக்கியர்கள்மீது நீங்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே தாயே! நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல, என்னுடைய தொகுதிப் பிரச்சினைக்கு வருகிறேன். தி.நகர் தொகுதியிலே, வணிக நிறுவனங்கள் பல இருக்கின்றன. ஏராளமான மக்கள் இலட்சக்கணக்கிலே வந்து செல்கிறார்கள், நான் கடந்த தி.மு.க. ஆட்சியிலே ஐந்தாண்டுகளாகத் தொடர்ந்து வைத்த கோரிக்கை இது. பேருந்து நிலையம் சிறியதாக இருக்கிறது, அது போதாது. அதேபோல வாகனங்கள் நிறுத்துவதற்கு தி.நகர் தொகுதியிலே இடமில்லை. அதையும் நீங்கள் சரி செய்ய வேண்டும். எனவே, அந்தப் பேருந்து நிலையத்தை மூன்றடுக்கு நிலையமாக மாற்றி கீழே வாகனங்கள் நிறுத்துவதற்கும், மேலே பேருந்துகள் நிறுத்துவதற்கும், அதற்கு மேலே வணிக வளாகங்கள் அமைப்பதற்கும் ஏற்பாடு செய்யும் விதத்திலே நீங்கள் பேருந்து நிலையத்தைச் சரி செய்யுங்கள் என்று கேட்டேன், பார்த்தேன். ஆனால், அடக்குமுறை ஆட்சியாளர்களின் காதுகளில் கேட்கவேயில்லை. செவிடன் காதில் ஊதிய சங்காகத்தான் இருந்தது.

அதுமட்டுமல்ல அம்மா, என்னுடைய தொகுதியிலே தீயணைப்பு நிலையம் கொடுத்திருக்கிறார்கள். ஆனால், அதற்கான கட்டடத்தைக் கடந்த தி.மு.க. மைனாரிட்டி ஆட்சி தரவில்லை. மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா, இதயதெய்வம், வாரி வாரி வழங்குகிற அம்மா, கேட்காமல் கொடுக்கிறவர்கள் நீங்கள். இறைவனிடம்கூட கையேந்தினால்தான் கொடுப்பார், அதனால்தான் தட்டுங்கள் திறக்கப்படும், கேளுங்கள் கிடைக்கும் என்றார்கள். ஆனால் எங்கள் அம்மா, கேட்டதும் கொடுப்பவனே கிருஷ்ணா என்பார்கள். ஆனால், சொல்வதற்கு முன்னாலேயே, எங்கள் அம்மா நீங்கள் கேட்காமல் கொடுப்பவர்கள். எனவேதான், உங்கள் பாதச்சுவட்டில் வந்த நான், தீயணைப்பு அதிகாரிகள் தங்குவதற்கு என்னுடைய சட்டமன்ற அலுவலகத்திலே கடந்த மூன்று வருடமாக இடத்தைக் கொடுத்திருக்கிறேன். ஆகவே, அவர்களுக்குச் சொந்தக்



கட்டடம் கட்டித் தர வேண்டுமென்று உங்கள் பாதம் பணிந்து நான் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல, கடந்த ஆட்சிக் காலத்திலே அழகிரியின் ஆதரவோடு, அழகிரிக்கு பங்கு தந்து, அழகிரி கொள்ளையடிப்பதற்குக் காரணமாக தி.நகர் தொகுதியிலே பல சூதாட்டக் கிளப்புகள் இருந்தன. அத்தனைக்கும் பாதுகாவலனாக அழகிரி இருந்தார், பல கோடி ரூபாய் கொள்ளை அடிக்கப்பட்டது. கடந்த ஆட்சியில் நான் நான்குமுறை பேசியும் அவர்கள் நடவடிக்கை எடுக்கவில்லை. அம்மா! தி.நகர் தொகுதியில் இருக்கின்ற சூதாட்டக் கிளப்புகளையெல்லாம் நீங்கள் உடனடியாக நடவடிக்கை எடுத்து மூடுவதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே பணிவோடு கேட்டு தாயே! வணங்குகிறேன், தமிழே! வணங்குகிறேன்.

இறுதியாக, ஒரே ஒரு வரி நான் எழுதிய பாடல் "பூமி உள்ளவரை எங்கள் அம்மா புகழே நிலைத்திருக்கும், புரட்சித் தலைவி புகழ் என்றென்றும் மக்கள் மனதில் நிறைந்திருக்கும்" என்று கூறி அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் திருமதி நான்சி ஆன் சிந்தியா பிரான்சிஸ் அவர்கள்.

பிற்பகல் 12-10

**DR. NANCY ANN CYNTHIA FRANCIS:** Respected Hon'ble Chief Minister of Tamilnadu, Amma, Hon'ble Speaker, Hon'ble Governor of Tamilnadu, Respected Leader of the House, Ministers, Members of Legislative Assembly, fellow colleagues and others, This is my maiden speech and I thank you Amma, for giving me this opportunity to speak in this Assembly.

At the outset, let me place on record my deep and sincere gratitude to our beloved Amma and the Governor of Tamilnadu for having confidence in me and having nominated me as an M.L.A. for the Anglo Indian community, giving me this great honour and privilege to stand before this August gathering today, enabling me to speak at this budget session of 2011-2012 and to work under your able leadership. I can assure you Amma, that the deep gratitude I express now, will be proved beyond doubt in action by carryingout

sincerely all that is allotted to me and at all times upholding the name and fame of the State, Country and my Community.

'My heart leaps up when I behold
A Rainbow in the sky'

says the famous poet William Wordsworth.

Yes, that was the day, the 13th of May 2011, when the election results were announced and once again, we the people of Tamilnadu knew that we were in the safe hands of a great, loving and powerful leader (Thumping of Desks) our beloved Amma. Once again the State of Tamilnadu would enjoy the peace, joy, love, justice, discipline and many more gifts. (Thumping of Desks)

'Patience is the companion of wisdom'

says the great St. Augustine and true to this saying,I must mention that Amma was very patient for the last five years and with the strong will and determination, Amma you made a sweeping victory to lead the State once again (Thumping of Desks) on the road of peace, prosperous, love and determination.

The Revised Budget Estimate for 2011-2012, I would say, is the mega venture and I would like to call it a budget par excellence. (Thumping of Desks) There was a huge deficit on the financial side when this Government tookover. But nevertheless Amma was not perturbed. Amma knew that she would be able to take it up and handle any problem that lay ahead of her. (Thumping of Desks)

Good governance is the sine qua non for speeding socio-economic development. This Government will address the governance dificit by bringing in better accountability, transparency and ensuring effective delivery of public services through our governance initiating without corruption. This initiation will reduce leakages and ensure prompt disbursement of the benefits to the genuine beneficiaries. Tamilnadu has been a fore-runner in taking e-governance initiatives and this Government will take it to pre-eminent position.



பிற்பகல் 12-15

The intention of the Government is that all Government related schemes will be available in a seamless manner to the public in urban and rural areas through Common Service Centres.

Coming to the Law and Order, Amma, thanks a million for looking into this area and taking immediate action against anti-social elements. (Thumping of desks) Yes, that is what I mentioned earlier. Once again, the people of Tamil Nadu and especially the people of temple city of Madurai would enjoy peace and tranquility. (Thumping of desks)

Amma, you not only have given the Police Department the freedom to discharge their duties but also intend to modernize the police force with the special weapons, equipments and speedy and rapidly moving vehicles. You are also taking steps to increase the numbers of the police force, increasing the number of cyber cells to reduce the ever increasing cyber crimes and have made provision for increasing their allowances. Yes, when people are appreciated and are comfortable physically and mentally, the work turn out improves and as a visionary Amma, you have identified and taken care of this aspect.

Education - After the enactment of the Right of children to Free and Compulsory Education Act, 2009, education has become a fundamental right and a constitutional mandate. In line with the Central Act, this Government will provide schooling access and quality education to all children at the primary and upper primary level. The Sarva Siksha Abhiyan - a mission is being implemented to achieve the above goal. Efforts to improve the infrastructure in schools and for training teachers are being taken care of. There are about 56,113 out of school children and all of them will be enrolled this year through an intense campaign. This Government is also taking steps to bridge the gender gaps in schools. Thank you, Amma for improving the rights of the female gender. The National Programme for the education of girls at the elementary level is being implemented. Girls' hostels have been started to provide

boarding and lodging facilities for girls at secondary and higher secondary level.

Amma, you have increased the marriage assistance from Rs.25,000/- to Rs.50,000/- along with 4 gram gold coin for girls who are graduates and diploma holders (Thumping of desks) and I am sure this will encourage parents to educate girl children on par with the male children and ultimately bring the gender equity in education.

To reduce the drop out level further, you have decided to give a special incentive to the students of standard 10th, 11th and 12th studying in Government and Government aided schools. The decision to provide adequate uniforms along with foot wear to the School children along with the change in dress code e.g., full pants against the half pants and salwar kameez against the pavadai-thavani will have a positive point in the minds of the students. (Thumping of desks) Thank you, Amma for this great boon to our children.

Increasing the number of Colleges both Arts and Science as well as professionals, will again provide more room for many more students to further their education thus, striving to make this State a more literate State.

*பிற்பகல்* 12–20

The scheme to distribute free laptop Computers to the Plus One, Plus Two and College students in the Government and Government-aided institutions will enhance their skills and ability in the Computer usage, which is a must in the modern world.

Amma, all these above measures you are taking to improve education at all levels and especially of the girl child, speaks of the great interest you have in education and projects a vision that soon Tamilnadu will be the most literate State in the Country. (Thumping of desks)

Regarding health and family welfare, I wish to state that Tamilnadu is, in fact, ranked very high in socio-economic indicators, particularly health. Amma, the two major schemes, the National Rural Health Mission and the Tamilnadu Health Systems Project which are under



implementation will definitely further bring down the infant mortality rate and the maternal mortality rate to zero in the years to come. (Thumping of desks)

One has to be a witness to see the tragic end of mothers after delivery, for lack of medical assistance. When a women dies after child birth, especially for want of blood, oxygen, life-saving medicine and facilities, she not only leaves behind her husband, who has the freedom to marry again, but she leaves behind her child who does not have the freedom to call the next lady Amma. Having this in mind our beloved Amma is very keen on eradicating this unpleasant scenario so that every child born in Tamil Nadu will not forget the word Amma. (Thumping of desks) All the other services like the Emergency Transport Services, Upgrading of Primary Health Care, Super-speciality Diagnostic Centres, Hospital on Wheels and increase in the assistance in the already existing Dr. Muthulakshmi Reddy Maternity Benefit Scheme for pregnant women and the promotion of menstrual hygiene to adolescent girls will all go a long way in reducing the incidents of maternal morbidity and mortality.

May I, at this juncture, with the kind permission of the Hon'ble Speaker, make my request to our beloved Amma. If every girl child in Schools, at least from class Six, has a check of the haemoglobin at the beginning of every School year and if found to be anaemic, she can be treated with iron and along with the nutritious meal provided, it will go a long way to overcome anaemia in pregnancy, a common condition existing but easily treatable; for the child of today is the mother of tomorrow . Thank you Amma for giving me this permission, to say this.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,* I would like to inform the Hon'ble Member that Anaemia is a common problem amongst Indian girls and women. So, in our Government we already have a programme to supply iron capsules and tablets to all girl children and women. It is being implemented by the Health Department. (Thumping of desks)

## 5. பேரவையில் உரையாற்றும் முறை உள்ளிட்ட நடைமுறைகளை அறிந்துகொள்ளும் வகையில் அனைத்து உறுப்பினர்களுக்கும் பேரவை விதிகள் புத்தகம் வழங்க வேண்டியதன் அவசியம்

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டமன்றப் பேரவைக்கு என்று தனி விதிமுறைகள் இருக்கின்றன. ஆகவே, இந்தப் புதிய சட்டமன்றத்தில் பல புதிய உறுப்பினர்கள் இருப்பதால் அவர்கள் அனைவருக்கும் சட்டமன்ற விதிகள் அடங்கிய புத்தகம் ஏற்கெனவே வழங்கப்பட்டுவிட்டதா என்று தெரியவில்லை. அனைவருக்குமே சட்டமன்றப் பேரவை விதிகளின் ஒரு பிரதியை வழங்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அவை விதிகளின்படி Rules of Procedure and Business of the Assembly, எந்த மாமன்ற உறுப்பினர் இங்கே பேசினாலும், சபாநாயகரைப் பார்த்து "மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே" என்று குறிப்பிட்டுப் பேச வேண்டும். எந்தக் கருத்தைத் தெரிவித்தாலும், அவர்கள் பேரவைத் தலைவரைப் பார்த்துத்தான் தெரிவிக்க வேண்டும். பல புதிய உறுப்பினர்கள் பேசுகின்றபோது, அவர்களுக்கு இங்கே நடைமுறைகள் பற்றி சரியாகத் தெரியாததால், பேசுகின்றபோது, "மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே" என்று குறிப்பிட்டுவிட்டு, அதன்பின்னர், "மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே", "மாண்புமிகு அமைச்சர் பெருமக்களே", "மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்களே" என்றெல்லாம் அனைவருக்கும் வணக்கம் தெரிவித்துப் பேசினார்கள். இது பொதுக் கூட்ட மேடையில் பேசக்கூடிய ஒரு பாணி. ஆனால், சட்டமன்றப் பேரவையில் பேசுகின்றபோது, பேரவைத் தலைவர் அவர்களைத் தவிர, வேறு யாரையும் குறிப்பிட்டுப் பேசக்கூடாது. "பேரவைத் தலைவர் அவர்களே" என்று சொல்லிவிட்டு, பேச்சை ஆரம்பித்த பின்னர், யாருக்கு வேண்டுமானாலும் நன்றி தெரிவித்துப் பேசலாம்; யாரை வேண்டுமானாலும் பாராட்டலாம்; எத்தனை பேருக்கு வேண்டுமானாலும் நன்றி தெரிவித்துப் பேசலாம். ஆனால், address செய்கின்றபோது, "மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே" என்பதை மட்டும்தான் சொல்ல வேண்டும். "மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே", "மாண்புமிகு அமைச்சர்



பெருமக்களே" என்று சொல்லக் கூடாது. இதைத் தாங்களே சொல்லியிருக்க வேண்டும். *(மேசையைத் தட்டும் ஒலி)* இருந்தாலும், தங்கள் வாயிலாக நான் சொல்லிக் கொள்கிறேன். இதை இனிமேலாவது தாங்கள் வலியுறுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

பிற்பகல் 12-25

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவருக்கும், மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் குறிப்பிட்டவாறு, ஏற்கெனவே சட்டமன்ற விதிகள் அடங்கிய நூல்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அன்புகூர்ந்து அதைத் திரும்பவும் ஆழ்ந்து படித்து, அதன்படி நடக்க வேண்டுமென்று உங்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன். புத்தாக்கப் பயிற்சியிலும் இதுகுறித்து தகவல் அளிக்கப்பட்டிருக்கின்றது.

## 4. திருத்திய வரவு–செலவுத் திட்டம், 2011–2012, பொது விவாதம்–தொடர்ச்சி

**HON'BLE SPEAKER:** Dr. Nancy Ann Cynthia Francis, you may continue.

**DR. NANCY ANN CYNTHIA FRANCIS:** The Chief Minister's Comprehensive Health Insurance Scheme which would be launched shortly will upgrade the deficiencies in the earlier scheme of the previous Government. Amma, thank you for this wonderful gift of this Health Scheme and its upgradation, which will definitely be a boon to our less privileged Sisters and Brothers - I mean your Children.

May I once again request permission of the Hon'ble Speaker to make my request. I would like to bring a suggestion here. It would be a good idea, if at the time of issuing the cards for the scheme, it should be made mandatory that every married woman in the family has had a papsmear and at least a clinical breast examination. This will go a long way to prevent those two malignancies which are common to women. Cancer in cervix is the second most common cancer in the Country and accounts for 3 lakh deaths of which 80%

in the lower and middle income groups. This, if diagonised early, is almost completely curable. Many a time, women in the families neglect themselves or get neglected while the father is the head of the family. Let us all remember that the mother is the heart of the family and we should all strive to keep the heart beating to the end.

The Cradle Baby Scheme introduced in 1992 with the aim of eradicating female infanticide and recently launched Chief Minister's Girl Child Protection Scheme and enhancement of remuneration for the above will go hand in hand to eradicate female infanticide. I always wonder why parents had a preference for the male child. After all, the child is the gift from God for a couple and any gift in the right sense is not chosen. Imagine what would be the state of the world, if there were no women? Trap and done, I would say, and in an era, when women are competing equally with men, if not at an higher level, we should definitely eradicate female infanticide.

Elizabeth Cady, the most famous free-thinking woman of the United States in 1902, stated, ".. because man and woman are the complement of one and other, we need women's thoughts in national affairs to make a safe and stable Government" - and this holds good for the State of Tamil Nadu and we have the most powerful and loving woman Amma to lead us. (Thumbing of Desks)

I have not touched upon many of the other Departments, like the Rural and Urban Development, Water supply, Transport, Adi Dravidar Welfare Scheme and all the others, not because, I am not appreciative of the changes and improvements, but it is too vast and I fear, I may be asked by the Hon'ble Speaker to put a full-stop.

Amma your concern for the Aged and Destitutes is commendable. Immediately after assuming charge, you ordered for the increase in the pension to all the beneficiaries under the Social Security Pension Scheme. These are the group of people who are most neglected and forgotten everywhere, but your kind heart reaches out to them. Thank you, Amma for this great gesture of yours.



பிற்பகல் 12-30

Regarding welfare Of Srilankan Tamils, Amma, you have been magnanimous once again, when you have extended all the welfare schemes implemented for the people of Tamil Nadu to benefit Srilankan refugees in Camps. This will definitely improve the living conditions in the Camps for Srilankan Tamils.

Amma, the very fact, that you have looked into the very minutest area in the State and you have been able to find ways and means to change, improve or upgrade those in existence - gives me the feeling that, we the people of Tamil Nadu are very lucky to have you as our leader. We have been not only in your thoughts and in your heart but also in the very air you breathe. You love us so much and I hope and pray that each of us repay your immense love by abiding by all that you expect of us and thus strive to make this State, a Star State in this Country. (Thumping of Desks)

Once again, I request the kind permission of the Hon'ble Speaker to put forth a petition to our beloved Amma.

Amma, I need to place before you a request for the Anglo Indian Community. The Christian Community is a minority Community and the Anglo Indian Community in it is a micro minority. In Tamil Nadu we have about 35,000 to 40,000 people. In the yester years, the Anglo Indian Community contributed to the field of Education, Railways, Post and Telegraphs, Army, Navy and the Police Force. Gone are those days, and the present day youth of this small community have also started competing for the field of Medicine, Engineering, Nursing and the Corporate sector. And I must mention, they are doing good. Amma, I hereby request your kind self to restore and also enhance the seats that were once allotted to us in these areas and for reasons unknown to us have been taken away, thereby making us compete in the general quota. Even though we are a micro minority Almost every State in India has this reservation and I am sure Tamil Nadu did have it as I stand here as a beneficiary of that seat in the year 1972. It will be a real boon to the Anglo Indian Community if this could be restored and also the number enhanced during your regime as the Hon'ble Chief

Minister. We will be ever grateful to you for this and thank you Amma, for granting me the permission to make my request.

Before I conclude, I would like to recall to mind the quote of the Late John F. Kennedy "As we express our gratitude, we must never forget that the highest appreciation is not in uttering words but to live by them" and in his Presidential Speech after he was elected as the President of the United States, he said "ask not what the Country" can do for you but see what you could do for the Country" and I think everyone of us here will try to follow these sayings. With these above quotes, I once again thank my beloved Amma and all those gathered here for giving me this opportunity to stand in this Assembly and share my thoughts. (Thumping of Desks)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ரெங்கசாமி அவர்கள்.*

**திரு. எம். ரெங்கசாமி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களின் குல தெய்வம், கழகத்தின் நிரந்தரப் பொதுச் செயலாளர், தமிழ்நாட்டின் மூன்றாவது முறையாக முதல்வராகப் பொறுப்பேற்று தமிழகத்தைக் காப்பாற்ற வந்த காவல் தெய்வம் எங்கள் அம்மாவே. ஒப்பாரும், மிக்காரும் இல்லா ஞானச்சுடரே; தென்றலே; தீயோர்க்கு வெந்தழலே; அரசியல் பிழைத்தோருக்கு அறம் கூற்றாக அவதரித்த அன்னையே! எளிய தொண்டனான என்னை மாவட்டக் கழகச் செயலாளராக, தஞ்சை தொகுதி சட்டமன்ற உறுப்பினராக அடையாளம் தந்து மக்கள் பணியாற்ற ஒரு மகத்தான வாய்ப்பை வழங்கிய வள்ளல் அம்மா அவர்களே! தங்கள் பொற்பாத மலர்களில் கோடானுகோடி நன்றியைக் காணிக்கையாக்கி உங்களை வணங்கி என் உரையைத் துவக்குகின்றேன் தாயே! (மேசையைத் தட்டும் ஒலி)*

*பிற்பகல் 12-35*

*எளிய தொண்டனான எனக்கு தஞ்சை சட்டமன்றத் தொகுதியிலே வேட்பாளராகப் போட்டியிட வாய்ப்பளித்து தஞ்சையிலே சுற்றுப் பயணம் செய்து, தகதகிக்கும் வெயிலையும் பொருட்படுத்தாமல் பிரச்சாரம் செய்து என்னை வெற்றிபெறச் செய்த என் தாய்க்கு என் முதல் வணக்கத்தையும் நன்றியையும் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) என்னை*





*சட்டமன்ற உறுப்பினராக வாக்களித்து வெற்றிபெறச் செய்த தஞ்சை சட்டமன்றத் தொகுதியின் வாக்காளப் பெருமக்களுக்கு இந்தப் பேரவையின் வாயிலாக நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கின்றேன். எனது வெற்றிக்காக உழைத்த கழகத்தின் நிர்வாகிகள் மற்றும் தொண்டர்களுக்கும், அனைத்து தோழமைக் கட்சிகளின் தலைவர்கள், நிர்வாகிகள் மற்றும் தொண்டர்களுக்கும் என் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

*தமிழக வாக்காளர்களின் ஏகோபித்த ஆதரவுடன் மூன்றாவது முறையாக முதல்வராகப் பொறுப்பேற்றிருக்கின்ற தாங்கள் வரலாற்றில் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய ஒரு சாதனைப் படைப்பாய் இந்த நிதி நிலை அறிக்கையை உருவாக்கி, அந்த அறிக்கையின்மீதான பொது விவாதத்தில் எளியவனான எனக்குப் பேசுவதற்கு வாய்ப்பளித்த அம்மா அவர்களுக்கு மீண்டும் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

*வரவு-செலவு படிப்பதே நிதி நிலை அறிக்கை என்ற நிலையை மாற்றி, ஜீவனுள்ள ஒரு நிதி நிலை அறிக்கையை மக்களின் வாழ்க்கை நிலையைப் படித்து, அவர்கள் முன்னேற திட்டங்களை வகுத்து உலகமே வியக்கும்வண்ணம் தந்திருக்கிறீர்கள் அம்மா! கடந்த ஆட்சியின் நிதி நிலை அறிக்கையில் இருந்தது போன்ற நிதி நிலைப் பற்றாக்குறை இல்லை. புதிய வரிகள் இல்லை; மாறாக, உபரி நிதியை உருவாக்கித் தந்திருக்கிறீர்கள் அம்மா! இதைச் சாதனை என்று ஒரு வரியில் சொன்னால் நான் பிழை செய்தவனாகி விடுவேன். கடந்த தி.மு.க. ஆட்சியிலே, நீங்கள் ஆட்சிக் கட்டிலிலே அமர்வதற்கு முன்னால், கடந்த ஆட்சியிலே எப்படிப்பட்ட அலங்கோலங்கள். ஆட்சியில் எதிலும் நஷ்டம், எங்கும் ஊழல், அதிகார துஷ்பிரயோகம், ஆடம்பர ஆர்ப்பாட்ட கேளிக்கை விழாக்களில் மூழ்கி ஆட்சி நிர்வாகம் முடக்கப்பட்ட சூழலிலே இந்த அபார வெற்றியைச் சாதித்திருக்கிறீர்கள் அம்மா! இதன் பின்னணியில் உங்களின் கடுமையான உழைப்பு, உங்களின் அறிவார்ந்த தொலைநோக்குச் சிந்தனை, உங்களின் தாய் உள்ளம் தெரிகின்றது தாயே! (மேசையைத் தட்டும் ஒலி)*

[திரு. எம். ரெங்கசாமி] [2011 ஆகஸ்ட் 10

அம்மா! நீங்கள் பதவியேற்றவுடன் மக்கள் நன்மைக்காக ஏழு முத்தான திட்டங்களை நாட்டிற்கு அளித்தீர்கள். தமிழகத்திலுள்ள ஏழை எளியோர், விவசாயிகள், தொழிலாளர்கள், நெசவாளர்கள், மீனவர்கள், மாணவர்கள், முதியோர், மாற்றுத் திறனாளிகள், விதவைகள், ஆதரவற்றோர், திருநங்கைகள், சிறுபான்மையினர், பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், ஆதி திராவிடர் என்று எல்லாத் தரப்பினரையும் பார்த்துப் பார்த்து ஒரு தாய் எப்படி தன் பிள்ளைகளின் தேவைகளைக் குறிப்பறிந்து பூர்த்தி செய்வாரோ அதுபோல அவர்களின் வாழ்வாதாரத்திற்கு இந்த நிதிநிலை அறிக்கையிலே வித்திட்டிருக்கிறீர்கள் அம்மா!

ஒரு கோடியே 83 இலட்சம் குடும்பங்களுக்கு இலவச அரிசி! முதியோர், விதவைகள், ஆதரவற்றோருக்கான உதவித் தொகையை மாதம் ரூ.500/-லிருந்து ரூ.1,000/- ஆக உயர்த்தியது; ஏழைப் பெண்கள் திருமண உதவித் தொகையாக ரூ.25,000/- மற்றும் 4 கிராம் தங்கம்; பட்டம், பட்டயம் படித்த பெண்களுக்கு திருமண உதவித் தொகையாக ரூ.50,000/- மற்றும் 4 கிராம் தங்கம்; மீன்பிடித் தடைக் காலத்திலே மாதாந்திர உதவித் தொகையாக மீனவர்களுக்கு ரூ.1,000/-லிருந்து ரூ.2,000/- ஆக உயர்த்தியது; கர்ப்பிணிப் பெண்களுக்கு பேறு கால உதவித் தொகையாக ரூ.6,000/-லிருந்து ரூ.12,000/- ஆக உயர்த்தியது; அரசு பெண் ஊழியர்களுக்குப் பேறு கால விடுப்பை ஆறு மாதமாக நீட்டிப்புச் செய்தது; 60,000 ஏழைக் குடும்பங்களுக்கு இலவசக் கறவை மாடுகள் வழங்குவது; அதைப்போல 7 இலட்சம் ஏழைக் குடும்பங்களுக்கு இலவசமாக குடும்பத்திற்குத் தலா நான்கு ஆடுகள் வீதம் வழங்குவது மற்றும் பள்ளி மாணவர்களுக்கு முழுக் கால் சட்டை 4 செட்களும், அதைப்போல பள்ளி மாணவியர்களுக்கு 4 செட் பாவடை, தாவணி என்பதற்குப் பதிலாக சல்வார் கமீஸ்களும் உயர்த்தப்பட்ட தையல் கூலியுடன் வழங்குகின்ற திட்டம்; அதுமட்டுமல்லாமல், இலவசக் காலணி, அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் +1, +2 பயிலும் மாணவ, மாணவியர்களுக்கு, அரசு மற்றும் அரசு உதவி பெறும் கல்லூரி மாணவ, மாணவியர்களுக்கு இலவச மடிக்கணினி வழங்குகின்ற திட்டம் ரூ.912 கோடியிலே உருவாக்கியது; அதேபோல, சூரிய ஒளியில் மின் வசதியுடன்கூடிய பசுமை வீடுகள் 60,000 கட்டுவதற்காக இந்த நிதிநிலை அறிக்கையிலே ரூ.1,080 கோடியை ஒதுக்கி இருப்பது; ஆதி திராவிட விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவ, மாணவியர்களுக்கான மாத உணவுப்படி 450 ரூபாயிலிருந்து 650 ரூபாயாக உயர்த்தியது, கல்லூரி விடுதிகளில் பயிலும் மாணவ, மாணவியர்களுக்கு மாத உணவுப்படி ரூ.550/-லிருந்து ரூ.750/- ஆக உயர்த்தியது; தொட்டில் குழந்தைத் திட்டத்தைக் கூடுதலாக ஐந்து மாவட்டங்களுக்கு விரிவாக்கியது; (மேசையைத் தட்டும் ஒலி) பெண் குழந்தைகள் பாதுகாப்புக்கென ஒரு பெண் குழந்தையுடன் கருத்தடை செய்துகொண்டவர்களுக்கு ரூ.50,000/- டெபாசிட், இரண்டு பெண் குழந்தைகளுடன் கருத்தடை செய்து கொண்டவர்களுக்கு ரூ.25,000/- டெபாசிட் என உயர்த்தி வழங்கியது; அனைத்துக் குடும்பங்களுக்கும் கிரைண்டர், மிக்ஸி, மின்விசிறி என மகளிர்கான திட்டங்களுக்காக இந்த ஆண்டிற்கு மட்டும் நிதி ஒதுக்கீடாக 1,250 கோடி ரூபாய் வழங்கியுள்ளீர்கள். இப்படிப் பல்வேறு சமூகப் பாதுகாப்புத் திட்டங்களை வழங்கி, ஏழை எளிய மக்களை சமூகப் பாதுகாப்பு வளையத்திற்குள் வைத்துக் காப்பாற்றுகின்ற அரசாக மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு விளங்குகின்றது.



2011 ஆகஸ்ட் 10] [திரு. எம். ரெங்கசாமி]

பிற்பகல் 12-40

அதோடு நில்லாமல், நமது மாநிலத்தின் எதிர்கால வளர்ச்சிக்கும், மக்களின் முன்னேற்றத்திற்கும் தேவையான பல்வேறு திட்டங்கள் உருவாக்கப்படுவதுடன், தொலைநோக்குப் பார்வையுடன், உரிய விரிவான கட்டமைப்பு வசதிகளை உருவாக்கி விரைவான, பொருளாதார வளர்ச்சிக்கு வித்திட்டிருக்கிறீர்கள் அம்மா!

கடந்த 2009 பாராளுமன்றத் தேர்தலின்போது, நமது நாடு முன்னேற வேண்டுமென்று சொன்னால் அதன் வளர்ச்சி கிராமங்களை நோக்கி இருக்க வேண்டுமென்பதற்காக வேளாண்மைத் துறையைத் தொழில் துறைக்கு இணையான அந்தஸ்துக்கு உயர்த்துவதே ஒரே வழி என்று நீங்கள் முழங்கியதைக் கண்டு, இந்திய அரசியல் வானில் விவசாயிகளின் விடிவெள்ளியாக உங்களை இந்தியத் துணைக் கண்டமே உற்று நோக்கியது அம்மா! (மேசையைத் தட்டும் ஒலி) இன்றைக்கு, முதன்மைத் துறையான வேளாண்மைத் துறையில் இரண்டாம் பசுமைப் புரட்சி கொண்டு வந்ததன்மூலம் விவசாயிகளின் வாழ்வாதாரங்களைப் பாதுகாத்து, அவர்களின் பொருளாதாரத்தை

[திரு. எம். ரெங்கசாமி] [2011 ஆகஸ்ட் 10

உயர்த்திட நதி நீர் இணைப்பு, பாசனத் திட்டங்களின் மேம்பாடு, துல்லிய பண்ணையம் முறை சாகுபடி, தோட்டப் பயிர் சாகுபடியில் தீவிரம், தீவிரமான திருத்திய நெல் சாகுபடி, கரும்பு உற்பத்தித் திறனை அதிகரித்தல், குறு, சிறு விவசாயிகளுக்கு 100 விழுக்காடு மானியத்தில் நுண்ணீர்ப் பாசனத்திற்கான கருவிகளை வழங்குதல், விவசாயப் பணிகளுக்காக மனித ஆற்றல் குறைவால் ஏற்படும் பின்னடைவைப் போக்க நவீன வேளாண் கருவிகள் வாங்கப்பட்டு, வேளாண்மைப் பொறியியல் துறையின்மூலமாக வாடகைக்கு விடப்படுகின்ற நடவடிக்கைகள், பயிர்ப் பாதுகாப்புக்கு என விரிவான காப்பீடுத் திட்டம், சேமிப்புக் கிடங்குகள் கூடுதலாக்கப்படுவதுடன், வேளாண் உற்பத்திப் பொருட்கள் அழுகும் நிலையிலிருந்து பாதுகாத்திட நடவடிக்கை, வேளாண் கூட்டுறவு வங்கிகள்மூலம் பயிர்க் கடன் அதிகரிப்பு, கடனைத் திருப்பிக் கட்டியவர்களுக்கு வட்டியில்லாக் கடனாக ரூ.3000 கோடி வழங்குகின்ற உயர் இலக்கு இப்படிப் பல்வேறு ஒருங்கிணைந்த நடவடிக்கைகளின் வழியாக தேசப் பிதா காந்தியடிகளால் விவசாயிகள் நாட்டின் முதுகெலும்பு என்று போற்றப்படுகின்ற விவசாயிகளுடைய முன்னேற்றத்திற்கு இந்த நிதிநிலை அறிக்கையிலே வாழ வழி கண்டிருக்கிறீர்கள் அம்மா!

அருகிப் போய்க் கொண்டிருந்த கால்நடைப் பராமரிப்பிற்குப் புத்துயிர் ஊட்டும் வகையில் 28 இலட்சம் இலவச ஆடுகளையும், 60,000 கறவை மாடுகளை வழங்குவதின்மூலம் கிராமப்புற ஏழை எளியோர்களுக்குப் பொருளாதார மறுமலர்ச்சியை ஏற்படுத்தித் தந்திருக்கின்றீர்கள் அம்மா!

மீனவர்களின் நண்பனாக மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களின் அரசியல் வாரிசாக விளங்குகின்ற நீங்கள் மீனவர்களின் வாழ்க்கைத் தரம் உயர பல்வேறு மீன்பிடித் திட்டங்களை உருவாக்கி மீனவர்களின் வாழ்வாதாரத்தைப் பாதுகாத்து இருக்கின்றீர்கள் அம்மா! இலங்கை கடற்படையினரால் கொல்லப்படுகின்ற மீனவர்களைப் பாதுகாக்க நீங்கள் எடுக்கின்ற நடவடிக்கைகளைக் கண்டு மீனவ சமுதாயம் ஒட்டுமொத்தமாக உங்களைக் கண்கண்ட தெய்வமாகக் கொண்டாடுகின்றார்கள் அம்மா! (மேசையைத் தட்டும் ஒலி) கச்சத் தீவை மீட்க நீங்கள் எடுக்கின்ற நடவடிக்கையினைக் கண்டு தமிழகமே தலை வணங்குகிறது தாயே!



2011 ஆகஸ்ட் 10] [திரு. எம். ரெங்கசாமி]

தொழில் துறையில் ஒரு புதிய இலக்கை எட்டிட புதிய தொழில் கொள்கை உருவாக்கி, பன்னாட்டு முதலீடுகள் தமிழகத்தில் ஈர்க்கப்படுவதற்கான சூழலை உருவாக்கி, தொழில்கள் செழித்திட சிறப்பான உள் கட்டமைப்பு வசதிகள் உருவாக, இந்த நிதிநிலை அறிக்கையிலே பல நடவடிக்கைகளை எடுத்திருக்கின்றீர்கள் அம்மா!

சிமெண்ட் உற்பத்தியில் ஓர் புதிய இலக்காக 12 இலட்சம் டன் கூடுதல் உற்பத்தி என்பது தொழில் துறையில் நீங்கள் எடுக்கின்ற நடவடிக்கைகளுக்கு ஒரு உதாரணமாக அமைந்திருக்கின்றது அம்மா! அதுமட்டுமல்லாமல், 'விஷன் 2025' என்ற தொலைநோக்குத் திட்டத்தை முன்வைத்து மாண்புமிகு அம்மா அவர்களின் தலைமையில் தமிழ்நாடு கட்டமைப்பு மேம்பாட்டு வாரியம் ஒன்றை உருவாக்கும் திட்டம் தொழில் வளர்ச்சிக்கு ஒரு வரப் பிரசாதமாக அமைந்திருக்கிறது அம்மா!

கல்வியைப் பொறுத்தவரையில் நீங்கள் அனைவருக்கும் தரமான கல்வியைத் தர வேண்டுமென்று ஆர்வமாக சீரிய சிந்தனையுடன் செயல்பட்டுக் கொண்டிருக்கிறீர்கள் அம்மா! நான் மீண்டும் சொல்கிறேன் அனைவருக்கும் தரமான கல்வியைத் தர வேண்டுமென்று நீங்கள் சீரிய சிந்தனையுடன் செயலாற்றிக் கொண்டிருக்கின்றீர்கள் அம்மா! கல்வி இடைநிற்றலைத் தடுப்பதற்கு ஆக்கபூர்வமான நடவடிக்கைகள், பள்ளிகளின் தரம் உயர்த்தப்படும் நடவடிக்கைகள், பல கல்லூரிகளை உருவாக்க அனுமதி ஆகிய நடவடிக்கைகளால் தமிழகத்தைக் கல்வி வளர்ச்சியிலே இந்தியாவில் முதன்மை மாநிலமாக ஆக்குகின்ற தங்களின் முயற்சிக்கு ஓர் அடையாளமாக நாங்கள் கருதுகின்றோம் அம்மா!

பிற்பகல் 12-45

அதேபோல, மக்கள் நல்வாழ்வுத் துறையின் வாயிலாக மிகப்பெரிய குறிக்கோளை எட்டும் நோக்கத்துடன் திட்டங்கள் தீட்டப்பட்டு இருக்கின்றன. குறிப்பாக நடமாடும் மருத்துவமனை என்ற புதிய திட்டத்தின்மூலம் தொலைதூர கிராமங்களில் இருக்கின்ற ஏழையெளிய மக்கள் சுகாதார சேவை பெறுகின்றஅரிய வாய்ப்பு இந்த நிதிநிலை அறிக்கையின்மூலம் கிடைத்திருக்கிறது அம்மா.

அதுமட்டுமல்லாமல், கிராமப்புறங்களில் இருக்கின்ற இளம் பெண்களுக்கு இலவசமாக சேனிட்டரி நாப்கின் வழங்குகின்ற திட்டத்தின்மூலமாக கிராமப்புற இளம் பெண்களிடம் ஒரு புதிய சுகாதார விழிப்புணர்வை ஏற்படுத்தியிருக்கிறீர்கள் அம்மா.

அனைத்திற்கும் சிகரம் வைத்ததைப்போல, முதலமைச்சரின் விரிவான "பொது மருத்துவக் காப்பீடு" திட்டத்தை உருவாக்கி 950 நோய்களுக்கான சிகிச்சை முறைகளை உள்ளடக்கி, காப்பீட்டுக் காலம் ஓராண்டு நீட்டிக்கப்பட்டும் (மேசையைத் தட்டும் ஒலி) ரூ.4 இலட்சம் வரை ஒரு குடும்பம் பயன்பெற வழிவகை செய்தும், மக்களின் நல்வாழ்வை முழுமையாகப் பாதுகாத்திட திட்டத்தைத் தந்திருக்கிறீர்கள் அம்மா.

அதுமட்டுமல்லாமல், கடந்த கால ஆட்சியிலே, திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய எதேச்சாதிகாரப் போக்கினால் சட்டம்—ஒழுங்கு சீர்குலைந்த நிலையை மாற்றி சட்டம்-ஒழுங்கைக் காத்திட, காவல் துறையினுடைய செயல்பாட்டை மேம்படுத்திட, நீதித் துறைக்கான கட்டமைப்பு வசதிகள் செய்து கொடுத்திட, தீயணைப்புத் துறைக்குக் கூடுதல் நிதி ஒதுக்கி, அதன் சேவையை விரிவுபடுத்திட சிறைச்சாலை நிருவாகத்திற்குக் கூடுதலான கவனம், சாலைப் பாதுகாப்பிற்கான தனிக் கவனம் மேற்கொள்ளப்பட்டு பல்வேறு பாதுகாப்பு நடவடிக்கைகள், சுற்றுச்சூழல் பாதுகாப்பை அதிகரித்திட பல திட்டங்கள், வனப் பாதுகாப்பு மற்றும் வனப் பரப்பினை அதிகரிக்க நடவடிக்கை, வேலைவாய்ப்பினை உருவாக்கி இளைஞர்கள் நலன் காக்கும் நடவடிக்கைகள், குறு, சிறு தொழில்களைப் பேணிக் காத்திட நடவடிக்கைகள், தகவல் தொழில்நுட்பத் துறைமூலம் மிகப் பெரிய கட்டமைப்புகள் உருவாக்கப்பட்டு முதலீட்டாளர்களை ஈர்க்கும் நடவடிக்கைகள், அரசு கேபிள் டி.வி. கழகத்தின் வாயிலாக குறைந்த கட்டணத்தில் ஒளிபரப்பு சேவை, சுற்றுலா வளர்ச்சிக்கான முத்தான திட்டங்கள், தமிழ் வளர்ச்சிக்கென சீரிய திட்டங்கள், அன்னதானத் திட்டங்கள் பல திருக்கோயில்களுக்கு நீட்டிப்பு, சிறுபான்மையினர் நலனுக்கென பல சீரிய திட்டங்கள் இப்படி பார்த்துப் பார்த்துச் செதுக்கும் ஒரு சிற்பியின் கைவண்ணம் போல (மேசையைத் தட்டும் ஒலி) எல்லாத் தரப்பு மக்களையும் பாதுகாத்திட, வாழ்க்கைத்



தரத்தினை உயர்த்திட, மேம்படுத்திட, புதிய திட்டங்களைத் தந்து ஒட்டுமொத்தத் தமிழகத்தையும் வளர்ச்சிப் பாதைக்குக் கொண்டு வந்திருக்கிறீர்கள் அம்மா. (மேசையைத் தட்டும் ஒலி)

மின் வெட்டுக்கென்று ஒரு அமைச்சர் இருந்ததை கடந்த கால ஆட்சியிலே நாம் பார்த்தோம். ஆனால், இன்றைக்கு தங்களின் சீர்மிகு நடவடிக்கைகளால் மிகவும் மோசமான பின்னடைவில் இருந்த மின் துறையைச் சீர்படுத்தி, நாட்டின் வளர்ச்சி மின்சார உற்பத்தியோடு நேர் விகிதாச்சாரத்தில் இணைக்கப்பட்டிருப்பதை உணர்ந்து பல்வேறு மின் உற்பத்தித் திட்டங்களின் வாயிலாக 3,800 மெகா வாட் மின்சாரம் கூடுதலாகக் கிடைத்திட வழி கண்டிருக்கிறீர்கள் அம்மா. இதனால், 2012 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் முதல் மின்வெட்டு இல்லாத மாநிலமாக தமிழகம் இருக்கும் என்ற அந்த அறிவிப்பு ஒட்டுமொத்தத் தமிழக மக்களின் வயிற்றில் பாலை வார்த்திருக்கிறது அம்மா. (மேசையைத் தட்டும் ஒலி)

நலிவடைந்த போக்குவரத்துத் துறையை சீரமைத்து நடப்பு நிதியாண்டில் 3,000 புதிய பேருந்துகள் இயக்கப்படும் என்ற அறிவிப்பு மக்களுக்கு மகிழ்ச்சி தரக்கூடிய அறிவிப்பாக இருக்கின்றது அம்மா. (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் ஆகியோருக்கான இட ஒதுக்கீடு 50 சதவிகிதமாகத் தொடரும் என்றும் ஒட்டுமொத்தத் தமிழகத்தினுடைய இட ஒதுக்கீடு 69 விழுக்காடாக நீடிக்கும் என்ற சமூக நீதி காத்த நடவடிக்கை (மேசையைத் தட்டும் ஒலி) உங்களை இந்திய துணைக் கண்டத்திலே அம்மா அவர்கள் மட்டும்தான் சமூக நீதி காத்த வீராங்கனை என்று அடையாளம் காட்டுகிறது அம்மா. (மேசையைத் தட்டும் ஒலி)

சாலைகள் மேம்பாட்டிற்கான பல திட்டங்கள், தரமான சாலைகள் சீரான பொருளாதார வளர்ச்சிக்கு ஆதாரம் என்ற மாண்புமிகு அம்மாவின் அரசின் நிலைப்பாட்டிற்கு ஒரு எடுத்துக்காட்டாக உள்ளது அம்மா.

உள்ளாட்சியின்மூலம் சீரான குடிநீர் விநியோகம், செம்மையான வடிகால் வசதிகள், ஒரு இலட்சம் சூரிய மின் சக்தியால் எரியும் தெரு விளக்குகள், சாலை வசதிகள் என்று கிராமப்புறப் பகுதிகளில் நகர்ப்புற வசதிக்கு இணையாக

எடுக்கப்பட்டிருக்கின்ற நடவடிக்கைகளால், கிராமங்களில் இருந்து நகரத்திற்கு இடம் பெயருகின்ற நிலையைத் தடுக்கும் நடவடிக்கையாக அமைந்திருக்கிறது அம்மா. அதேபோல், நகர்ப்புற வளர்ச்சிக்கென சென்னை மற்றும் அதன் புறநகர்ப் பகுதிகளுக்கென சென்னைப் பெருநகர வளர்ச்சித் திட்டம் ஒன்றையும் ஏனைய நகர்ப்புற வளர்ச்சிக்கென ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டம் ஒன்றையும் உருவாக்கி, நகரங்களில் வாழும் மக்களுக்கு ஏற்றமிகு திட்டங்களைத் தீட்டியிருக்கிறீர்கள் அம்மா.

அதோடு, தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தின்மூலம் 2011 முதல் 2016 ஆம் ஆண்டுகள் வரையிலான கால அளவில் ரூ.10,786 கோடி மதிப்பில் ஒரு கோடியே 72 இலட்சம் குடியிருப்புகளைக் கட்ட திட்டமிட்டிருப்பது, வீடில்லாதவர்களுக்கு ஒரு நம்பிக்கை ஒளியாக விளங்குகிறது அம்மா.

பிற்பகல் 12-50

வணிகர் நலன் காத்திட பல்வேறு நடவடிக்கைகள், நிலுவைத் தொகைகளை வசூலிக்கும்பொருட்டு சமாதான் திட்டத்தை மீண்டும் செயல்படுத்த முன் வந்திருப்பது மிகுந்த வரவேற்பைப் பெற்றுள்ளது அம்மா. ஏறிய விலைவாசியை இறக்க எவருமே நினைக்காதபொழுது அதிசயத்தின் அதிசயமாக விலையேற்றத்தைத் தடுக்க முன்பேர வர்த்தக ஆணையத்தின் மூலமாக இன்றியமையாத பொருள்களை அப்பட்டியலில் இருந்து நீக்கிட வழிவகை செய்திடும் திட்டமும், அதேபோல, விலைவாசியைக் கட்டுக்குள் வைத்திட ரூபாய் 50 கோடி தொடக்க நிதி இருப்புடன் விலைக் கட்டுப்பாடு நிதியம் ஒன்றை உருவாக்கி இருப்பதும் வரலாற்றுத் திருப்புமுனையாக இருக்கிறது அம்மா. கட்டப் பஞ்சாயத்து, ரவுடியிசம் மற்றும் பண பலத்தால் எதையும் சாதிக்கலாம் என்று இறுமாப்பு கொண்டு செயல்பட்டவர்கள், மக்கள் அளித்த தீர்ப்பால் இன்று இருந்த இடம் தெரியாத நிலை ஏற்பட்டிருக்கிறது அம்மா.

அதேபோல, நில அபகரிப்பு என்ற புதிய அத்தியாயத்தைத் தமிழகத்தில் அரங்கேற்றியவர்கள் இன்றைக்கு அவர்கள் விதைத்த வினையின் பயனை அறுவடை செய்து கொண்டிருக்கிறார்கள் அம்மா. ஆனால், செய்த தவறை மூடி மறைக்க அவர்களின்



தலைவர், முன்னாள் முதல்வர் கருணாநிதி பொய் வழக்கு என்று முகாரி பாடிக் கொண்டிருக்கின்றார். இதனை தமிழ்நாட்டு மக்கள் வாலறுந்த நரியின் ஓலமாகத்தான் பார்க்கிறார்களே தவிர அனுதாபத்துடன் பார்க்கவில்லை அம்மா. உண்மையிலேயே மகிழ்ச்சியில் இருக்கின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

தமிழ், தமிழ் என்று சொல்லி தன்னை மட்டுமே வளர்த்துக் கொண்டவர்கள் தமிழ் வளர்ச்சிக்காக என்று செம்மொழி மாநாடு என்ற பெயரில் சுய தம்பட்ட மாநாட்டை நடத்தி, தமிழறிஞர்களின் தீராக் கோபத்திற்கு ஆளாகி இருக்கின்றார்கள் அம்மா. அதைப்போல, இன்றைக்கு திராவிட உணர்வு, தமிழ் உயர்வு என்றெல்லாம் சொல்லி, மற்றவர்களை வசைபாட அதைப் பயன்படுத்துவோர்கள் நமது தொப்புள் கொடி உறவான இலங்கைத் தமிழர்கள் படுகொலை செய்யப்பட்ட பொழுது கொலை பாதகர்களுக்கு துணை போன கொடுமையை தமிழர்களுடைய நெஞ்சம் இன்னும் மறக்கவில்லை அம்மா. ஆனால், தமிழர்க்கு ஓர் இன்னல் என்றால் பொங்கியெழுந்து போராடும் போர்ப்படைத் தலைவியாக இன்றைக்கு இலங்கைத் தமிழர்களுக்காக நீங்கள் இயற்றிய தீர்மானத்தைப் பார்த்து தமிழர்கள் நெஞ்சமெல்லாம் நன்றியுடன் உங்களை நினைத்துப் பார்க்கின்றார்கள் அம்மா. (மேசையைத் தட்டும் ஒலி) இன்றைக்கு அமெரிக்க வல்லரசு மட்டுமல்லாமல், உலக நாடுகளின் கவனத்தை எல்லாம் இலங்கை அரசுக்கு எதிராகக் கொண்டு வந்திருக்கின்ற பெருமை உங்களையே சாரும் அம்மா. இப்படி ஒட்டுமொத்தத் தமிழகமே போற்றிப் பாராட்டும் வகையில் மக்கள் நலன் காக்கும் சீரிய திட்டங்களை, பொருளாதார வளர்ச்சிக்கெனப் பல்வேறு திட்டங்களை உள்ளடக்கிய இந்த நிதிநிலை அறிக்கையினை அளித்த மாண்புமிகு அம்மா அவர்களுக்கு எனது நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அத்துடன், என்னுடைய தொகுதி சம்பந்தப்பட்ட சில கோரிக்கைகளை மாண்புமிகு அம்மா அவர்களிடம் வைக்க விரும்புகின்றேன். தஞ்சைத் தொகுதியிலே, மாண்புமிகு அம்மா அவர்கள் எட்டாவது உலகத் தமிழ் மாநாடு தங்கள் தலைமையில் நடத்தியதற்குப் பின்புதான் தஞ்சையிலே பல்வேறு வளர்ச்சிப் பணிகளும், மேம்பாட்டுத் திட்டங்களும் கொண்டு வரப்பட்டன. ஆனால், அதற்குப் பின்னால், தொடர்ச்சியாக திராவிட

[திரு. எம். ரெங்கசாமி] [2011 ஆகஸ்ட் 10

முன்னேற்றக் கழகத்தின் கையிலே தஞ்சை தொகுதி இருந்ததன் காரணமாக எந்த வளர்ச்சியும் பெறாமல் இந்தத் தொகுதி மிகவும் பிற்படுத்தப்பட்ட தொகுதியாக இன்றைக்கு மாறியிருக்கிறது அம்மா. எனவே, மீண்டும் அம்மாவினுடைய ஆட்சியிலே தஞ்சை புனரமைக்கப்பட வேண்டுமென்று என்னுடைய வேண்டுகோளாக இந்த நேரத்திலே வைக்கிறேன் அம்மா. தஞ்சையைப் பொறுத்தவரை, மாண்புமிகு அம்மா அவர்கள், எட்டாவது உலகத் தமிழ் மாநாடு கண்டபொழுது உருவாக்கிய புறவழிச்சாலைகள் இன்னும் முழுமைப்படுத்த முடியாத பகுதிகளாக, சில எஞ்சிய பகுதிகளாக இருக்கின்றன. எனவே, அதை முழுமையாக நிறைவேற்றித் தர வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கின்றேன் அம்மா.

அதேபோல, தஞ்சைக்கு நீங்கள் தேர்தல் பிரச்சாரத்திற்கு வந்தபோது பல் மருத்துவக் கல்லூரி ஒன்று துவக்கப்படும் என்று வாக்குறுதி அளித்தீர்கள் அம்மா. அந்த வாக்குறுதியைச் செயல்படுத்தி, தஞ்சையிலே பல் மருத்துவக் கல்லூரி ஒன்றை உருவாக்கித் தர வேண்டுமென்று வேண்டுகிறேன் அம்மா. அதேபோல, தஞ்சையிலும், தஞ்சையைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் அரசு பொறியியற் கல்லூரி இல்லாத நிலை இருக்கிறது அம்மா. எனவே, தஞ்சைத் தொகுதியிலே ஒரு அரசு பொறியியற் கல்லூரியை உருவாக்கித் தர வேண்டுமென்று உங்களை வேண்டுகிறேன் அம்மா.

அது மட்டுமல்லாமல், தஞ்சை மக்களின் போக்குவரத்து நெருக்கடிகளைப் போக்கிடும் வகையில் சாந்தப்பிள்ளை கேட் அருகில் இரயில்வே மேம்பாலம் அமைத்துத் தர வேண்டுமென்ற தஞ்சை மக்களுடைய நீண்டகால கோரிக்கையை உங்கள் முன்னால் வைக்கின்றேன் அம்மா.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிக்கைகளை மாண்புமிகு அம்மா அவர்களிடத்திலே எழுதிக் கொடுத்து விடுங்கள்.

**திரு. எம். ரெங்கசாமி:** எனவே, என்னுடைய தொகுதியினுடைய கோரிக்கைகள் அத்தனையையும் மாண்புமிகு அம்மா அவர்கள் தீர்த்து வைக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, இந்த நிதிநிலை அறிக்கையின் மீதான விவாதத்திலே எளியவனான எனக்குப் பேசுவதற்கு வாய்ப்பளித்த மாண்புமிகு அம்மா அவர்களுக்கு மீண்டும் நன்றியைத் தெரிவித்து அமருகிறேன். வணக்கம்.



2011 ஆகஸ்ட் 10]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசும்போது 2011-லிருந்து 2016-இல் ஒரு கோடியே 72 இலட்சம் வீடுகள் என்று குறிப்பிட்டார்கள். ஒரு இலட்சத்து எழுபத்து இரண்டாயிரம் வீடுகள் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

பிற்பகல் 12—55

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இந்திய கம்யூனிஸ்டு (மார்க்சிஸ்ட்) கட்சி சார்பில் மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். ராமமூர்த்தி அவர்கள்.

***திரு. ஆர். ராமமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் விழுப்புரம் மாவட்டம், விக்கிரவாண்டி தொகுதியைச் சேர்ந்தவன். என்னுடைய தொகுதி புதியதாக உருவாக்கப்பட்ட தொகுதி. எனவே, இந்தச் சட்டப் பேரவைக்கு நான் முற்றிலும் புதியவன். இந்தச் சட்டமன்றத் தேர்தலிலே என்னை வெற்றி பெற செய்ததற்காக, சுடும் வெயிலையும் பாராது, என்னுடைய வெற்றிக்காக விழிமாநகரம் வந்து பிரச்சாரம் செய்த தமிழக முதல்வர் மாண்புமிகு அம்மா அவர்களுக்கு என்னுடைய நன்றியை நான் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதேபோன்று, தேசிய முற்போக்கு திராவிடக் கழகத்தினுடைய தலைவர் கேப்டன் அவர்களுக்கும் (மேசையைத் தட்டும் ஒலி), கூட்டணிக் கட்சிகளினுடைய தோழர்களுக்கும், தலைவர்களுக்கும் என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

பேரவைத் தலைவர் அவர்களே, அம்மா அவர்கள் அனுமதித்த புத்தாக்கப் பயிற்சியிலே நானும் கலந்துகொண்டேன். புதியதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களுடைய கன்னிப் பேச்சு எப்படி இருக்க வேண்டும் என்று ஒரு சுருக்கமான முன்னுரையை நீங்கள் தந்தீர்கள். நான் பேசுகிற பேச்சு உங்களுடைய, முன்னுரையினுடைய வரையறைக்குள் வருகிறதா அல்லது விளிம்பை மீறி வெளியே வருகிறதா என்பதைப் பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள்தான் கூற வேண்டுமென்று

சொல்கிற அதே நேரத்திலே, கன்னிப் பேச்சு வகையறாவிலே நான் சேர்ந்திருக்கிறேன். கன்னிப் பேச்சு என்ற வகையிலே என்னுடைய பேச்சு சில நிமிடங்கள் நீளும் என்று சொன்னால், ஒரு கன்னிப் பேச்சாளன் என்ற வகையிலே பேச்சை முடி என்று பெல்லை அழுத்துவதிலே கையை நீளச் செய்யாமல் நீங்கள் தவிர்க்க வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

இந்த நிதிநிலை அறிக்கை சம்பந்தப்பட்ட வகையிலே அதனுடைய அனைத்து அம்சங்களையும் பொதுவாகவும், குறிப்பாகவும் மார்க்சிஸ்ட் கம்னியூஸ்டு கட்சி சார்பிலே நான் வரவேற்கிறேன். பொதுவாக, நிதிநிலை அறிக்கையிலே உள்ள அம்சங்களைச் சொல்லி மகிழ்ந்ததை நான் கேள்விப்பட்டிருக்கிறேன். ஆனால், இந்தச் சட்டமன்ற வரலாற்றிலேதான் நிதிநிலை அறிக்கையிலே சொல்லியிருக்கிற அம்சங்கள் உண்மைதானா என்று கிள்ளி மகிழ்ந்ததை நான் பார்த்திருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதுவும் குறிப்பாக, எங்களுடைய பாசமிகு இந்திய கம்யூனிஸ்டு கட்சித் தோழர்கள் விரும்பிய வரை, தேவையான வரை கிள்ளி மகிழ்ந்திருக்கிறார்கள் என்பதையும் இந்த நேரத்திலே நான் மகிழ்ச்சியோடு சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

நிதிநிலை அறிக்கை சம்பந்தப்பட்ட வகையிலே, பொதுவாக அறிக்கையைக் கடுமையாக விமர்சனம் செய்வதிலேதான் போட்டியிருக்கும் என்று நான் பார்த்திருக்கிறேன், படித்திருக்கிறேன். ஆனால், இந்த நிதிநிலை அறிக்கை சம்பந்தப்பட்ட வகையிலே, பேசுகிறவர்களெல்லாம் யார் அதிகமாக மார்க் போடுவது என்றுதான் இங்கே பேசுவதை நான் பார்த்துக்கொண்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) ஏனென்று சொன்னால், கருணாநிதி அவர்கள் கலர் டிவி.-யைக் கொடுத்து மக்கள் கதையை முடிக்க நினைத்தபொழுது, அவர் கொடுத்த கலர் டிவி.-யே அவர் கதையை முடித்துவிட்டது என்பதுதான் (சிரிப்பு) (மேசையைத் தட்டும் ஒலி) தமிழக சட்டமன்ற வரலாறாக இருக்கிறது. அதுமட்டுமல்ல, தேர்தல் முடிவுக்கு பின்னால், அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தோடு கூட்டணி வைத்த கட்சிகளெல்லாம், தேர்தலிலே மகத்தான வெற்றிப் பெற்றதை வைத்து மகிழ்ச்சியோடு இருக்கிறோம். ஆனால், திராவிட முன்னேற்றக் கழகத்தோடு



கூட்டணி வைத்தவர்கள் எல்லாம் ஏன் தோற்றோம் என்று ஆராய்ச்சி செய்வது மட்டுமல்ல, (மேசையைத் தட்டும் ஒலி) இந்தத் தோல்விக்கு யார் காரணம் என்ற ஆராய்ச்சியிலே பெரியளவில் ஈடுபட்டிருக்கிறார்கள் என்பதுதான் இங்கே ஒரு முக்கியமான செய்தியாக நான் சொல்ல விரும்புகிறேன். இந்த நிதிநிலை அறிக்கை சம்பந்தப்பட்ட வகையிலே எல்லா அம்சங்களையும் ஒரே நேரத்திலே பேசுவது என்பது சாத்தியமல்ல என்பது என்னுடைய தாழ்மையான கருத்து.

பிற்பகல் 1-00

இந்த நிதிநிலை அறிக்கையிலே பெரிய highlight ஆக நான் பார்க்கின்ற விஷயம் என்னவென்று சொன்னால், There is a scientific understanding of every problem. Ultimately that has lead the scientific approach to solve the problems (மேசையைத் தட்டும் ஒலி) என்பதுதான் என்னுடைய தாழ்மையான கருத்து. ஒருசில அம்சங்களை மட்டும் கூறி நான் விடைபெறலாம் என்று நினைக்கின்றேன்.

விவசாயம் சம்பந்தப்பட்ட வகையிலே, இந்த நிதிநிலை அறிக்கையிலே ஒரு major emphasize இருக்கிறது என்பதுதான் என்னுடைய கருத்து. குறிப்பாக, விவசாயத்திலே ஏற்பட்டிருக்கின்ற வீழ்ச்சி, அந்த வீழ்ச்சியிலிருந்து தமிழக மக்களைப் பாதிப்பில்லாமல் பாதுகாக்க வேண்டுமென்ற முயற்சி, விவசாயத்தினுடைய பல அம்சங்களை ஒருங்கிணைத்து, பாசன வசதியாக இருந்தாலும் சரி அல்லது விவசாயிகளுக்கு தேவையான உரம், பூச்சிமருந்து, உர விநியோகமாக இருந்தாலும் சரி அல்லது பல்வேறு விதமான பாசன வசதிகளாக இருந்தாலும் சரி, எல்லா விஷயங்களிலும் ஒரு விஞ்ஞானபூர்வமான ஆய்வு. அதைத் தீர்க்க வேண்டுமென்ற முயற்சி பாராட்டுக்குரியது என்று நான் கருதுகின்றேன். அதுமட்டுமல்ல, விவசாயிகளுடைய உற்பத்தித் திறனை, விவசாய உற்பத்தியைப் பெருக்கினால் மட்டும் போதாது. விவசாயிகளுடைய தனி நபர் வருமானத்தைப் பெருக்குவதன்மூலம்தான் விவசாயி வாழ்வான் என்பது இந்த நிதிநிலை அறிக்கையினுடைய அழுத்தமாக நான் கருதுகிறேன்.

ஏனென்று சொன்னால், எம்.எஸ். சுவாமிநாதன் அவர்களுடைய குழு அறிக்கையிலே விவசாயத்தைப் பற்றி கவலைப்படுவதைவிட விவசாயியைப் பற்றி கவலைப்படுவதுதான் சாலப்

[திரு. ஆர். ராமமூர்த்தி] [2011 ஆகஸ்ட் 10

பொருத்தமுடையதாக இருக்கும் என்று நம்முடைய மதிப்பிற்குரிய விஞ்ஞானி எம்.எஸ். சுவாமிநாதன், அவர்களுடைய அறிக்கையிலே கூறியிருக்கிறார்கள். வருத்தத்திற்குரிய விஷயம் என்னவென்று சொன்னால், இந்த நேரம் வரை மத்திய அரசு எம்.எஸ். சுவாமிநாதன் அறிக்கையை அமல்படுத்தவில்லை என்பதுதான். அதுமட்டுமல்ல, விவசாயத்திலே அந்த crop pattern-இலிருந்து மற்றவற்றிலும் பல்வேறு வகைகளிலே நவீனத்தைப் புகுத்தி பிரச்சினைகளைத் தீர்க்க வேண்டுமென்று நிதிநிலை அறிக்கையிலே சொல்லியிருப்பது உண்மையிலேயே பாராட்டிற்குரிய விஷயம் என்று நான் கருதுகிறேன்.

அதேபோன்று வெண்மைப் புரட்சி. இன்றைக்கு கிராமப்புறங்களிலே விவசாயம் பெரிய அளவில் நலிந்துவிட்டது என்பது மட்டுமல்ல; விவசாயம் இலாபகரமான தொழிலாக இல்லை என்பது மட்டுமல்ல; விவசாயம், விவசாயத் தொழில் நலிந்துபோன நிலையிலே, கிராமப்புறங்களிலே இருக்கின்ற விவசாயத் தொழிலாளிகளுக்கு வேலையில்லாத சூழ்நிலையில், கிடைக்கின்ற வேலையிலும் போதுமான கூலி இல்லாத சூழ்நிலையில், அவர்கள் வறுமையிலே இருந்து விடுபடச் செய்ய, அவர்கள் வறுமைக் கோட்டிலிருந்து மேலே எழுந்து நிற்க, கறவை மாடு வழங்குவதும், இலவச ஆடுகள் வழங்குவதும், ஒரு மிகப் பெரிய அளவிலே அவர்களுக்கு உதவியாக இருக்கும் என்று நான் கருதுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இன்னொரு அம்சம் என்னவென்று சொன்னால், சமீபகாலமாக சில அறிவு ஜீவிகள் ஏதோ இலவசத்தைத் தந்ததாலே மட்டும் சோம்பேறிகளாகிவிடுவார்கள் என்ற ஒரு கருத்தைப் பரப்புவதற்கு முயற்சி செய்கின்றார்கள். அவர்கள்கூட இலவசமாக கறவை மாடு தருவதையும், ஆடுகள் தருவதையும் எதிர்க்கவில்லை என்பது சந்தோஷத்திற்குரிய விஷயம்.

பிற்பகல் 1-05

தேர்தல் பிரச்சாரத்திலே ஒரு பேச்சாளர் பேசினார். அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வந்தால் அம்மா கொடுக்கின்ற கறவை மாடும், ஆடும் குட்டிபோடுமா? போடும். ஆனால் கலைஞர் கொடுக்கின்ற கலர் டி.வி. குட்டி போடுமா என்று கேட்டார். அவர் சொன்னார், இந்த மாடுகளும், ஆடுகளும் போடுகின்ற சாணத்திலே இருந்து எரு கிடைக்கும். பசு தருகின்ற பாலிலிருந்து பணம் வரும். கலைஞர் டி.வி-யிலே இருந்து எது வரும் என்று கேட்டார். அதுமட்டுமல்ல, இன்னும் ஒன்றையும் அவர் சொன்னார். கலைஞருடைய டி.வி-யிலே வரும் மானாட மயிலாட நிகழ்ச்சியைப் பார்க்கின்றபோது முதியோர்கள்கூட உணர்ச்சிவசப்பட்டு மக்கள் பெருக்கத்திற்குத்தான் செல்வார்கள். ஆனால், அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு தருகின்ற கறவை மாடும், ஆடும் குடும்பத்திற்கு வருமானத்தை உருவாக்க உதவும் என்று அவர் பேசினார். உண்மையைச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், மீதி பேர் பேசிய, யாருடைய பேச்சுமே எடுபடவில்லை. அவர் பேச்சுத்தான் அதிகமாக எடுபட்டது. ஏனென்று சொன்னால், இன்றைக்கு கிராமப்புறங்களில் ஆடு, மாடு என்பது ஒரு முக்கியமான அம்சம் மட்டுமல்ல. குறிப்பாக, கறவை மாடுகள் என்று சொன்னால், கிராமங்களில் வறிய குடும்பங்களில் கறவைப் பசுக்களை தெய்வமாக, they attach some sanctity என்று ஒரு ஏற்பாடு கிராமப்புறங்களிலே இருக்கிறது. அநேகமாக, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு தரப்போகிற பசுக்களை யாரும் விலங்காகப் பார்க்கப் போவது இல்லை. நிச்சயமாக அவற்றிற்கு லக்ஷ்மி, சரஸ்வதி என்றுதான் பெயர் வைக்கப்போகிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அநேகமாக தமிழ்நாடு முழுவதும் உள்ள வறிய குடும்பங்களில் லக்ஷ்மியும், சரஸ்வதியும் உலா வரப்போகிற ஒரு காட்சிதான் நடக்கப் போகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) ஏனென்று சொன்னால், கறவை மாட்டைப் பொறுத்தவரை அவற்றை வாழும் தெய்வங்களாகத்தான் பார்க்கிறார்கள். கறவை மாட்டை அவர்கள் லக்ஷ்மியாகப் பார்க்கிறார்கள் என்று சொன்னால், அந்த லக்ஷ்மியை கொடுத்த லக்ஷ்மியை எப்படிப் பார்ப்பார்கள் என்பதுதான் முக்கியமான விஷயம். (மேசையைத் தட்டும் ஒலி)



2011 ஆகஸ்ட் 10] [திரு. ஆர். ராமமூர்த்தி]

அடுத்து, பெண் சிசுக் கொலை சம்பந்தப்பட்ட வகையிலே, அதைத் தடுக்க வேண்டும் என்பதற்காக பல்வேறு விஷயங்கள் நிதிநிலை அறிக்கையிலே சொல்லப்பட்டிருக்கின்றன. குறிப்பாக, திருமண உதவித் திட்டம், பெண் குழந்தை பிறந்தால் வைப்பு நிதி, அதேபோல தொட்டில் குழந்தைத் திட்டம் என்று ஏராளமானத் திட்டங்கள் பெண்களுக்காகச் சொல்லப்பட்டிருக்கின்றன. ஒரு வருத்தத்திற்குரிய விஷயம் என்ன என்று சொன்னால், பெண்களின் பிறப்பு விகிதம் என்பது

குறைந்து கொண்டே போவது ஒரு மிகப் பெரிய ஆபத்தான விஷயம் என்பதை இந்த நேரத்திலே நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அதுவும், குறிப்பாக விழுப்புரம், தருமபுரி, அரியலூர், சேலம் போன்ற மாவட்டங்களிலே பெண் பிறப்பு விகிதாச்சாரம் குறைந்து கொண்டே வருகிறது. உண்மையிலேயே, அது ஒரு major social issue - பெரிய சமூகப் பிரச்சினையாக இந்தப் பெண் பிறப்பு விகிதம் குறைவு இருக்குமென்று நான் நினைக்கிறேன். இப்பொழுதே தமிழ்நாட்டிலே தமிழ் பையனுக்கு தமிழ் பெண் கிடைப்பது என்பது சிரமமாக இருக்கிறது. ஏன் என்று சொன்னால், தமிழ்ப் பெண் கிடைக்காத சூழ்நிலையிலே அண்டை மாநிலங்களுக்குச் சென்று பெண் தேடுகிற ஏற்பாடுகள் இப்போதே ஆரம்பித்திருக்கின்றன. எனவேதான், இந்தப் பெண் பிறப்பு விகிதத்தை உயர்த்துவதற்கு அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு எடுத்திருக்கிற முயற்சியை மார்க்சிஸ்டு கம்யூனிஸ்டு கட்சியினுடைய சார்பிலே நான் பாராட்ட விரும்புகிறேன்.

நீங்கள் 'தாலிக்குத் தங்கம்' என்று தேர்தல் பிரச்சாரத்திலே சொன்னபோது, அதை நம்புவதற்கு பல பேர் மறுத்தார்கள். தாளிக்க வெங்காயமே இல்லாத சூழ்நிலையில் தாலிக்குத் தங்கமா என்று சிறுமைப்படுத்தியவர்களும் உண்டு. ஆனால், 'தாலிக்குத் தங்கம்' நிகழ்ச்சியை தொடங்கி வைத்த பின்னால்தான், இது கதை அல்ல, நிஜம் என்று நம்பினார்கள். ஏனென்று சொன்னால், பெண்களுக்காக இப்படிப்பட்ட பல்வேறு விஷயங்களை அறிவித்து இன்றைக்கு அமல்படுத்தியிருப்பது என்பது உண்மையிலேயே மிகப் பெரிய அளவுக்கு பாராட்டுக்குரிய அம்சங்கள் என்று நான் நினைக்கிறேன்.

அதிலும் குறிப்பாக, தமிழ்நாட்டிலே இருக்கிற பெண்கள் இன்றைக்கு உயர்நிலைப் பள்ளியிலிருந்து மேல்நிலைப் பள்ளி வரை, அதுமட்டுமல்லாமல் "ஐ.ஏ.எஸ்".-இலிருந்து ஐ.பி.எஸ். வரை, ஏன் Chartered Accountants Exam வரை, தமிழ்நாட்டிலே பெண்கள் முதல் இடத்தை வகிப்பது என்பது உண்மையிலே ஒரு பெருமைக்குரிய விஷயம். அந்த வகையிலே பெருமைப்படக்கூடிய இந்தப் பெண்களுக்கு இன்று வரை 33 சதவீத இட ஒதுக்கீடு இல்லை என்பது வருத்தத்திற்குரிய விஷயம். நம்முடைய மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களை இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்வதெல்லாம், தமிழ்நாட்டிலே



அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகக் கூட்டணிக்கு ஏற்பட்ட மகத்தான வெற்றி, தமிழக அரசியலிலே உங்களுக்கு ஒரு மிகப்பெரிய முக்கியத்துவத்தை அளித்திருக்கிறது. எனவே, அதைப் பயன்படுத்தி இடதுசாரி கட்சிகளோடு இணைந்து, பல மாதர் அமைப்புகளோடு இணைந்து, 33 சதவீத இட ஒதுக்கீடு கேட்கிற அரசியல் கட்சிகளோடு ஒன்றுபட்டு, 33 சதவீத இட ஒதுக்கீட்டினை பாராளுமன்றத்திலே நிறைவேற்றுகிற ஒரு முயற்சியைத் தாங்கள் எடுக்க வேண்டுமென்று மார்க்சிஸ்டு கம்யூனிஸ்ட் கட்சி சார்பிலே நான் உங்களைக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, முக்கியமான விஷயம். தமிழ்நாடு முழுமைக்கும் கிராமப்புறங்களில் இருக்கிற சாதாரண ஏழையெளிய மக்கள் அரசுப் புறம்போக்கில் 20, 30 ஆண்டுகாலமாகத் தொடர்ந்து குடியிருந்து வருகிறார்கள். அப்படிப்பட்ட மக்களுக்கு இருக்க வீடு இருக்கிறது. வீட்டிற்கு வரி கட்டியதற்கான ரசீது இருக்கிறது. ரேஷன் கார்டு இருக்கிறது. அது அல்லாமல், வாக்காளர் ஜாவிதாவிலே அவர்கள் பெயர் இருக்கிறது. ஊரக வேலைவாய்ப்புத் திட்ட job card—லே பெயர் இருக்கிறது. ஏன் ஆஜர் பட்டியலிலேகூட பெயர் இருக்கிறது. ஆனால், அவர்களுக்கென்று இந்த நேரம் வரையில் பட்டா இல்லாதது உண்மையிலேயே வருத்தத்திற்குரிய விஷயம். அந்த வகையிலே அரசுப் புறம்போக்கு நிலங்களிலே குடியிருக்கிற அந்த மக்களுக்குப் பட்டா வழங்குவதற்கான ஏற்பாட்டை அது ஒரு முக்கியமான பிரச்சினையாக இருப்பதால் அதைச் செய்ய வேண்டும் என்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

பிற்பகல் 1—10

அதேபோன்று, வருகிற பஞ்சாயத்துத் தேர்தலில் ஒன்றிய கவுன்சிலர்கள், வார்டு மெம்பர்கள் தலைவர்களைத் தேர்ந்தெடுப்பதற்குப் பதிலாக ஒன்றியப் பெரும் தலைவர், நகர்மன்றத் தலைவர், மாவட்ட ஊராட்சி பஞ்சாயத்துத் தலைவர் போன்ற பொறுப்புகளுக்கு நேரடியாகத் தேர்வு செய்கிற முறையைக் கொண்டு வரவேண்டும் என்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். ஏனென்று சொன்னால், பஞ்சாயத்துத் தேர்தலிலே, நகர்மன்றத் தேர்தலிலே இந்த ஒன்றியக் கவுன்சிலர்மூலம் தேர்ந்தெடுப்பது என்பது ஒரு பெரிய சிக்கலை

ஏற்படுத்துகிறது என்று இந்த நேரத்திலே கூறி அப்படிப்பட்ட தேர்வு முறையைக் கொண்டு வர வேண்டுமென்று நான் விரும்புகிறேன். *(மணியடிக்கப்பெற்றது)*

தொகுதி கோரிக்கை என்று வருகிறபோது விழுப்புரத்திற்கு அடுத்து தீயணைப்பு நிலையம் இல்லை. எனவே விக்கிரவாண்டியிலே ஒரு தீயணைப்பு நிலையம் வேண்டும் என்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

விக்கிரவாண்டி தொகுதிக்குள்ளே இருக்கிற அரசு மருத்துவக் கல்லூரியிலே மருந்து இல்லை, மருத்துவர் இல்லை, மருத்துவ வசதி இல்லை, ஆனால், ஒரு மருத்துவமனை மட்டும் இருக்கிறது. அதற்கு வேண்டிய வசதிகளைச் செய்து தரவேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

விக்கிரவாண்டி தொகுதியிலே ஒரு அரசு மகளிர் கல்லூரியைத் துவக்க வேண்டுகிறேன். தொகுதி முழுவதும் இருக்கிற சாதாரண ஏழையெளிய மக்களுக்குப் பட்டா தருவதற்கான ஏற்பாடு செய்து தரவேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

விழுப்புரம் மாவட்டத்தில்தான் கரும்பு உற்பத்தி அதிகம் என்கிற காரணத்தால், அந்த உபபொருட்களைப் பயன்படுத்தி ஒரு காகித ஆலையைத் திறப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

விக்கிரவாண்டியில் Bus Depot இல்லாத காரணத்தால் அதை உடனடியாகத் திறக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

விக்கிரவாண்டி பேரூராட்சியில் விக்கிரவாண்டி, காணை, கெடார், அன்னியூர் போன்ற ஆரம்ப சுகாதார நிலையங்களை மேம்படுத்தி எல்லா மருத்துவ வசதிகளையும் பெற உதவி செய்ய வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

தொகுதி முழுவதும் வெறும் கிராமங்களைக் கொண்ட பின்தங்கிய தொகுதியாக இருக்கிற காரணத்தால் சாலைகள் அனைத்தும் குண்டும் குழியுமாக இருக்கின்றன. அவற்றைச் சரி செய்து தர வேண்டுமென நான் கேட்டுக்கொள்கிறேன். விக்கிரவாண்டி National Highways–ஐ ஒட்டி இருக்கிற காரணத்தால் ஏராளமான விபத்துகள் நடப்பதற்கு வாய்ப்பு



இருக்கிறது. விபத்துத் தடுப்பு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நந்தன் கால்வாய் சீரமைப்புத் திட்டம் ஒன்று நீண்ட காலமாக கிடப்பிலே போடப்பட்டிருக்கிறது. இரண்டு நதிநீர்களை இணைத்து அந்தத் திட்டத்தை நிறைவேற்ற வேண்டிய அவசியம் இருக்கிற காரணத்தால் அவற்றுக்கான... *(குறுக்கீடு)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பு. வெற்றிவேல் அவர்கள். *(குறுக்கீடு)* மாண்புமிகு உறுப்பினர் ஏதோ கருத்து தெரிவிக்க வேண்டும் என்று நினைக்கிறார்.

**திரு. பு. வெற்றிவேல்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களுக்கு வணக்கம். நானும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களும் உலக சுகாதார அமைப்பின் கூட்டத்திற்குச் சென்றிருந்தோம். அப்போது தமிழ்நாட்டிலே பெண் குழந்தைகளுடைய கணக்கெடுப்பைப் பற்றிக் கூறியிருந்தார்கள். அங்கே பேசும்பொழுது தமிழ்நாட்டில் 1000 ஆண் குழந்தைகளுக்கு 950 பெண் குழந்தைகள் இருக்கின்றன, 50 தான் குறைவு என்று அங்கே கணக்கு சொல்லப்பட்டது. பெண் குழந்தைகள் 50 குறைவாக இருப்பதற்குக் காரணம் மாண்புமிகு அம்மாவினுடைய தொட்டில் குழந்தைகள் திட்டம். அது இல்லையென்றால், அம்மாவினுடைய தீர்க்க தரிசனம் இல்லையென்றால், அந்த 50 பெண் குழந்தைகள்தான் குறைவு என்பது போய் மற்ற மாநிலங்களைப் போல 200, 300 என்று ஆகியிருக்கும். பல மாநிலங்களில் 1000-க்கு 700 பெண் குழந்தைகள்தான் இருக்கின்றன. ஆனால், தமிழ்நாட்டில் கருணாநிதி ஆட்சியில் தொட்டில் குழந்தைகள் திட்டம் நிறுத்தப்பட்டும்கூட அம்மாவினுடைய தொட்டில் குழந்தைகள் திட்டத்தினால்தான் 1000–க்கு 950 பெண் குழந்தைகள் இன்றும் இருக்கிறார்கள். அந்தத் திட்டத்தை இன்று அம்மா அவர்கள் இன்னும் 5 மாவட்டங்களுக்கு விரிவாக்கி இருக்கிறார்கள். தாலிக்குத் தங்கம் கொடுக்கும் திட்டம், பெண் குழந்தைகள் பிறந்தால் 50 ஆயிரம் ரூபாய் வைப்புத் தொகை கொடுக்கிற திட்டம், இவற்றால் பெண் குழந்தைகளை வளர்க்கப் பெற்றோர்கள் முன்வருவார்கள் என்பதைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

*பிற்பகல் 1-15*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். ராமமூர்த்தி அவர்கள்.

**திரு. ஆர். ராமமூர்த்தி**: திருநங்கைகளுக்கென்று ஒரு நல வாரியம் அமைக்கப்பட்டு இருக்கிறது. ஆனால் இதுவரையில் அது செயல்படவில்லை என்பது ஒன்று. இரண்டாவது அவர்களுக்கென ரேஷன் கார்டு இன்று வரை முறையாக கிடைக்கப்பெறவில்லை. மூன்றாவது மகளிர் சுய உதவிக் குழுக்களை அமைக்கிறபோது அவர்களையும் இணைத்து அவர்களுக்கான உதவிகளைச் செய்ய வேண்டும் என்ற மூன்று கோரிக்கைகளை திருநங்கைகளுக்காக வைத்து, எனக்குப் பேச வாய்ப்பளித்த பேரவைத் தலைவர் அவர்களுக்கு நன்றி தெரிவித்து அமருகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜெ. குரு என்கிற குருநாதன் அவர்கள்.

**திரு. ஜெ. குரு என்கிற குருநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2011-2012 ஆம் ஆண்டின் நிதிநிலை அறிக்கையில் எனக்குப் பேச வாய்ப்பளித்தமைக்கு நன்றியையும் வணக்கத்தையும் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும் எனது வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழகத்தின் தலையாய தொழிலான வேளாண்மை உற்பத்திப் பெருக்கு நடப்பு ஆண்டில் 1 கோடியே 15 இலட்சம் டன்னாக உற்பத்தி செய்யவும், விவசாயிகளின் வருமானத்தை 5 ஆண்டுகளில் இரண்டு முதல் மூன்று மடங்காகப் பெருக்கவும் தமிழக அரசு இலக்கு நிர்ணயித்து இருப்பதை பாட்டாளி மக்கள் கட்சி சார்பாக வரவேற்கிறோம். அதேநேரத்தில், விவசாயக் கடனைத் திருப்பிச் செலுத்தும் விவசாயிகளுக்கு வட்டி இல்லாக் கடனாக 3 ஆயிரம் கோடி ரூபாய் வழங்கப்படும் என்ற அறிவிப்பு வரவேற்கத்தக்கது. அதேசமயம், இயற்கை இடர்பாடுகளால் விவசாயம் நலிவடையும்போது கடனைச் செலுத்தாத விவசாயிகளுக்கு வட்டிச் சலுகை வழங்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கின்றோம்.



ஆறுகள் இணைப்புத் திட்டத்தை வரவேற்கிறோம். இரண்டாவது பசுமைப் புரட்சிக்கு அரசு உறுதி பூண்டிருந்தாலும், தனியார் நிறுவனங்களுக்காக விவசாய நிலங்களைத் தாரைவார்க்க நில வங்கி ஏற்படுத்துவதை மறுபரிசீலனை செய்ய வேண்டும் எனக் கேட்டுக்கொள்கின்றோம். தவிர்க்க முடியாத காரணங்களால் விவசாய நிலங்களைக் கையகப்படுத்தும்போது சந்தை மதிப்பு விலையில் மூன்று மடங்கு விலை தரவேண்டும் என்ற மத்திய அரசின் சட்டத்தைத் தமிழக அரசு கருத்திற்கொண்டு செயல்படுத்த வேண்டுமெனக் கேட்டுக்கொள்கின்றோம்.

பல ஆண்டுகளாக வேளாண்மை உற்பத்தி, வேளாண்மைத் துறைக்கெனத் தனி நிதிநிலை அறிக்கை தாக்கல் செய்ய வேண்டும் என எங்களுடைய தமிழினப் போராளி மருத்துவர் ஐயா அவர்கள் வலியுறுத்தி வருகிறார்கள். அந்தத் திட்டம் கர்நாடக மாநிலத்தில்கூட வேளாண்மைத் துறைக்கு தனி நிதிநிலை அறிக்கை தயார் செய்யப்படுகிறது. நமது தமிழக அரசும் அந்தத் திட்டத்தைக் கொண்டு வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றோம். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனியாக அதற்கு ஒரு நிதிநிலை அறிக்கை தேவையில்லை. இங்கே நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்டுள்ள திட்டங்களின்படி உலக வரலாற்றில் வேளாண்மைத் துறை உற்பத்தியில் தமிழகம் முதலிடத்தைப் பெறும் என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. ஜெ. குரு என்கிற குருநாதன்:** மாணவர்களின் கல்வித் திறனை மேம்படுத்த அரசு உயர்நிலைப் பள்ளி மாணவர்களுக்கு 1,500 ரூபாயும், மேல்நிலைப் பள்ளி மாணவர்களுக்கு 2,000 ரூபாயும் மற்றும் இலவச சீருடை, மடிக்கணினி வழங்கும் திட்டத்தைப் பாட்டாளி மக்கள் கட்சி சார்பாக வரவேற்கிறோம். இந்த நிதிநிலை அறிக்கையில் ஆசிரியர் நியமனம் குறித்து எவ்வித அறிக்கையும் வராதது, மாணவர்களின் கல்வித் தரத்தை எவ்விதத்தில் மேம்படுத்தும் எனத் தெரியவில்லை. பதிவு மூப்பு

அடிப்படையில் ஆசிரியர்களுக்கு வேலைவாய்ப்பும், ஆசிரியர் தேர்வும் அதிக அளவில் பள்ளிகளின் தரத்தை உயர்த்துவது பற்றியும் வரும் கல்வித் துறை மானியக் கோரிக்கையில் இடம்பெற வேண்டுமெனக் கேட்டுக்கொள்கின்றோம்.

கிராமம் மற்றும் நகர்ப்புற மக்களுக்கு வீடு தேடி சென்று மருத்துவம் அளிப்பதற்காக நடமாடும் மருத்துவமனைத் திட்டத்தை பாட்டாளி மக்கள் கட்சி இளைஞர் அணித் தலைவர் அன்புமணி இராமதாஸ் அவர்கள் மக்கள் நல்வாழ்வு நடுவண் அமைச்சராக இருந்தபோது வலியுறுத்தி வந்திருக்கின்றார். அந்தத் திட்டத்தை இப்போது செயல்படுத்தியிருப்பதை வரவேற்கின்றோம். தமிழகத்தில் பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட, பட்டியல் இன மற்றும் பழங்குடி இன மக்களுக்கு இடஒதுக்கீடு கிடைப்பதை உறுதி செய்யும் வகையில் பிற்படுத்தப்பட்டோர் ஆணையத்தின்படி 69 விழுக்காடு இடஒதுக்கீடு தொடரும் என்று தமிழக அரசு அறிவித்து இருப்பது மகிழ்ச்சியே. எங்கள் மருத்துவர் அய்யா அவர்கள் நீண்டகாலமாக சாதிவாரியான கணக்கெடுப்பு நடத்த வேண்டும் என்று போராடி வருகிறார். மேலும், உச்ச நீதிமன்ற வழிகாட்டுதலின்படி சாதிவாரி மக்கள் தொகை கணக்கெடுப்பை உடனடியாக நடத்த வேண்டும் என்று தமிழக அரசைக் கேட்டுக்கொள்கின்றோம்.

பிற்பகல் 1-20

தமிழக அரசு இலவச வீடு கட்டித் தரும் திட்டமான பசுமை வீடுகளுக்கு 1,80,000/- ரூபாயும், இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டத்திற்கு 1,00,000/- ரூபாயும் வழங்குவது மக்களைப் பிரிவினைப்படுத்திவிடும் என்பதால் அனைவருக்கும் ஒரே செலவில், அனைத்து வசதிகளுடன் ஒரே திட்டமாகச் செயல்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

எனது தொகுதி சார்ந்த சில கோரிக்கைகளை இங்கே வைக்கிறேன். கும்பகோணம்-சென்னை... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.





**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் பசுமைக் குடியிருப்புத் திட்டத்தைப் பற்றி இங்கே கூறினார்கள். மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தேர்தல் அறிக்கையிலே ஒரு புதுமையான திட்டத்தை, அதே நேரத்தில், வசதி படைத்தவர்கள் வாழக்கூடிய ஒரு நல்ல சூழ்நிலையை உருவாக்குவதற்கேற்ப ஏழைகளும் அந்த வாழ்க்கையை வாழவேண்டும் என்பதற்காக பசுமைக் குடியிருப்புத் திட்டத்தை உருவாக்கிக் கொடுத்திருக்கிறார்கள். அதற்கு தமிழக அரசு 1,80,000/— ரூபாய் ஒதுக்கியிருக்கிறது. இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டம் மத்திய அரசின் வாயிலாகக் கிடைக்கின்ற திட்டம். அந்தத் திட்டம் 200 சதுர அடிகளைக் கொண்டது. புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கொண்டு வந்த திட்டம் 300 சதுர அடிகளைக் கொண்டது. இங்கே, புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தமிழகத்திலே வாழ்கின்ற ஏழை மக்களைப் பிரிவினை செய்யக்கூடாது என்பதற்காகத்தான் மத்திய அரசு கொடுக்கின்ற 33,000/- ரூபாயைச் சேர்த்து கூடுதலாக 67,000/- ரூபாய் கொடுத்து 1,00,000/- ரூபாயாக ஒதுக்கியிருக்கிறது. நீங்கள் இதைப் பார்க்க வேண்டும். பசுமைக் குடியிருப்புத் திட்டத்தில் வீடு கட்டுவதற்கு ஒரு சதுர அடிக்கு 500/- ரூபாய் என்று 1,50,000/- ரூபாய் பசுமைக் குடியிருப்புத் திட்டத்திற்குக் கொடுக்கப்படுகிறது. அதேபோல, இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டத்திற்கும் ஒரு சதுர அடிக்கு 500/- ரூபாய் வீதம் 200 சதுர அடிக்கு 1,00,000/- ரூபாய் கொடுக்கப்படுகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜெ. குரு என்கிற குருநாதன் அவர்கள்.

**திரு. ஜெ. குரு என்கிற குருநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதி சம்பந்தப்பட்ட கோரிக்கை. கும்பகோணம்-சென்னை தேசிய நெடுஞ்சாலையில் அமைந்துள்ள அணைக்கரை பாலம் கடந்த மூன்று வருடங்களாகப் பழுதடைந்து இருக்கிறது. அதனால் கும்பகோணத்திற்குப் படிக்கச் செல்லும் மாணவர்களும், பொதுமக்களும் அவதிப்படுகிறார்கள். உடனடியாக மாற்றுப் பாலம் அமைத்து மக்கள் குறையைத் தீர்க்க வேண்டும் என்று தமிழக அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. ஜெ. குரு என்கிற குருநாதன்] [2011 ஆகஸ்ட் 10

மேலும் மதனத்தூர், நீலத்தொழுவூர், கொள்ளிடம் ஆற்றின்மேல் கட்டப்பட்டுவரும் மேம்பாலப் பணிகளை விரைவாக முடிக்க துரித நடவடிக்கை எடுக்கவேண்டுமாய் தமிழக அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

மிகவும் பின் தங்கிய தொகுதியான ஜெயங்கொண்டம் சட்டமன்றத் தொகுதிக்கு அரசு மகளிர் கல்லூரியும், அரசு தொழில்நுட்பக் கல்லூரியும், நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் பாதாள சாக்கடைத் திட்டம், சிறுவர் பூங்கா மற்றும் புறவழிச் சாலைத் திட்டத்தைக் கொண்டுவர தமிழக அரசைக் கேட்டுக்கொள்கின்றேன்.

வருடத்திற்கு சுமார் 4 இலட்சம் நோயாளிகள் பயன்பெறும் ஜெயங்கொண்டம் வட்டார மருத்துவமனைக்கு சி.டி. ஸ்கேன் மற்றும் அவசர ஊர்தியும் வழங்கிட தமிழக அரசைக் கேட்டுக்கொள்கின்றேன். இடியும் தருவாயிலுள்ள ஜெயங்கொண்டம் பேருந்து நிலையத்தைப் புதியதாகக் கட்டிக்கொடுக்க தமிழக அரசைக் கேட்டுக்கொள்கின்றேன்.

மக்கள் பயன்பாட்டிலுள்ள ஜெயங்கொண்டம் நகராட்சிக்குட்பட்ட ஏரிகளான ஆவேரி, கொக்கனேரி, உய்யகொண்டான் ஏரி, புதுவனேரி, இடையான்குளம் ஏரி, பழுப்பனேரி ஆகிய ஏரிகளில் சாக்கடைநீர் கலந்து மாசுபட்டுள்ளதால் அதைத் தூர் வாரி, தூய்மையான ஏரிகளாக மாற்றித் தரும்படி தமிழக அரசைக் கேட்டுக்கொள்கின்றேன்.

ஜெயங்கொண்டம் தீயணைப்பு நிலையத்தில் இரண்டு வாகனங்கள் மக்கள் பயன்பாட்டிற்காக இருந்தன. தற்போது ஒன்றுதான் இயங்கிக் கொண்டிருக்கிறது. ஆகையால் ஒரு வாகனம் ஒதுக்கீடு செய்யுமாறு அரசைக் கேட்டுக்கொள்கின்றேன்.

எனது தொகுதிக்குட்பட்ட தா.பழூரில் அரசு தொழிற்பயிற்சி நிலையம், தீயணைப்பு நிலையம், கழிவறைக் கட்டடத்தோடுகூடிய பேருந்து நிலையம், கிடங்கு வசதியுடன்கூடிய நெல் கொள்முதல் நிலையம் முதலியன அமைத்துத் தருமாறு தமிழக அரசைக் கேட்டுக்கொள்கின்றேன். தா.பழூரில் அமைந்துள்ள அரசு மருத்துவமனையில் உயிர் காக்கும் மருந்தான விஷக்கடி மருந்து இல்லை. இதனால் நிறைய உயிர் இழப்புகள் ஏற்படுகின்றன. அதனால் விஷக்கடி மருந்தை வழங்கி உயிர் இழப்பைத் தடுக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.



2011 ஆகஸ்ட் 10] [திரு. ஜெ. குரு என்கிற குருநாதன்]

அரியலூர் மாவட்டம், குருவாடி கிராமத்தில் கொள்ளிடம், பொன்னாறு தலைப்பு உள்ளது. இதில் நீர் வரத்து அதிகம் வருவதால் வருடா வருடம் மணல் மூட்டைகளால் தடுப்பு செய்ய வேண்டியிருக்கிறது. இதில் நிரந்தரமாகத் தடுப்பு (Shutter) அமைத்து பாசன வசதி மேம்பட பொன்னாற்று வாய்க்காலைப் பராமரிப்பு செய்யவேண்டும் எனத் தமிழக அரசைக் கேட்டுக்கொள்கின்றேன்.

பிற்பகல் 1-25

டெல்டா பகுதியிலே இருக்கின்ற விவசாயிகளுக்குக் கிடைக்கும் சலுகைகள் அரியலூர் மாவட்ட விவசாயிகளுக்கும் கிடைக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கின்றேன்.

இராஜேந்திர சோழனால் உருவாக்கப்பட்ட சோழரெங்கம் என்ற பொன்னேரியை ஆழப்படுத்த வேண்டும். கொள்ளிடம் ஆற்றிலிருந்து பிரிந்துவரும் பொன்னாற்றுக் கால்வாயைப் பொன்னேரியில் இணைக்க வேண்டுமெனத் தமிழக அரசைக் கேட்டுக்கொள்கின்றேன்.

எனது தொகுதிக்குட்பட்ட ஜெயங்கொண்டம், உடையார்பாளையம், ஆண்டிமடம், மீன்சுருட்டி ஆகிய ஊர்களில் வாரச் சந்தைகள் கீற்றுக் கொட்டகைகளில்தான் நடைபெற்று வருகின்றன. ஆகவே, மின் வசதி, கழிப்பிட வசதியுடன்கூடிய புதிய வாரச் சந்தை வணிக வளாகம் கட்டித் தருமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

எனது தொகுதிக்குட்பட்ட, வனத் துறை கட்டுப்பாட்டிலுள்ள அழகாபுரம் முதல் திருப்புவனம் வரை செல்லும் சாலை மற்றும் சிலம்பூர் முதல் இடையக்குறிச்சிவரை செல்லும் சாலையைத் தமிழக அரசு கையகப்படுத்தி, சாலையை மேம்பாடு செய்து தருமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

இராஜேந்திர சோழனால் உருவாக்கப்பட்ட கங்கைகொண்ட சோழபுரம் பிரகதீஸ்வரர் ஆலயம் அங்கு அமைந்துள்ளது. இது மிகப் பெரிய சுற்றுலாத் தலம். அங்கே வெளிநாட்டவர்களும் வருகிறார்கள். ஆனால், அங்கு சுற்றுலாப் பயணிகளுக்கு வேண்டிய அடிப்படை வசதிகள் எதுவும் இல்லை. உணவு விடுதி, தங்கும் விடுதி, சிறுவர் பூங்கா போன்ற வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கின்றேன்.

அரியலூர் மாவட்டத்தில் பழங்குடியின இருளர் மக்கள் வசிக்கின்றார்கள். அவர்கள் ஜாதிச் சான்றிதழ் கேட்டால், அதிகாரிகள் அரியலூர் மாவட்டத்தில் இருளர் சமுதாயம் பதிவேட்டில் இல்லை என்று சொல்லி, ஜாதிச் சான்றிதழ் கொடுக்க மறுக்கிறார்கள். ஆகவே, இருளர் சமுதாயம் பதிவேட்டில் இடம் பெறவும், வருங்காலங்களில் தடையின்றி ஜாதிச் சான்றிதழ் வழங்கிடவும், தமிழக அரசைக் கேட்டுக்கொள்கின்றேன்.

அதேபோல், இராஜேந்திர சோழன் நினைவு வளைவு அமைக்க வேண்டும். யுனெஸ்கோவினால் அங்கீகாரம் பெற்ற இராஜேந்திர சோழனால் கட்டப்பட்ட கங்கைகொண்ட சோழபுரம், பிரகதீஸ்வரர் ஆலயம், தேசிய நெடுஞ்சாலையிலிருந்து ஒரு கிலோ மீட்டர் தூரத்தில் உள்ளது. அது, அதிகமாக வெளிநாட்டினர் வந்துசெல்லும் சுற்றுலாத் தலமாக விளங்குகிறது. ஆகவே, தேசிய நெடுஞ்சாலையில் இராஜேந்திர சோழன் நினைவு வளைவு ஒன்றை அமைத்துத் தருமாறு தமிழக அரசைக் கேட்டுக்கொள்கின்றேன்.

இந்தப் பேரவையில் இலங்கையில் படுகொலை செய்யப்பட்ட தமிழினப் படுகொலையைக் கண்டித்ததோடு, இராஜபக்சேவை போர்க் குற்றவாளியாக அறிவித்து பொருளாதாரத் தடை விதிக்க வேண்டுமென்று ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்மானத்தைக் கொண்டு வந்ததற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைப் பாராட்டுகின்றோம். (மேசையைத் தட்டும் ஒலி) அதே நேரத்தில் தமிழ் ஈழத்தில், இலங்கையில் தமிழ் மக்கள் பாதுகாப்பாக வாழ வேண்டுமென்று சொன்னால், தனி ஈழம் ஒன்றுதான் சரியான தீர்வு. இதை, 2009—ல் நாடாளுமன்றத் தேர்தலில், மாண்புமிகு முதல்வர் அவர்கள் பொதுக் கூட்டங்களில் தேர்தல் நேரத்தில் பேசும்போது முதலில் சொல்லியிருக்கின்றார்கள். மீண்டும் மத்தியிலே எங்கள் ஆட்சி அமைந்தால், இங்கிருந்து இராணுவத்தை அனுப்பி, தமிழ் மக்களுக்குத் தனி நாடு வாங்கித் தருவோம் என்று சொல்லியிருக்கின்றார்கள். அந்த வகையில், தமிழ் ஈழம் அமைய வேண்டும், ஈழத் தமிழ் மக்களுக்குத் தனி நாடு கிடைக்க வேண்டும் என்ற ஒரு தனி நபர் தீர்மானத்தினை நான் பேரவைத் தலைவர் அவர்களிடம் கொடுத்திருக்கின்றேன். அந்தத் தீர்மானத்தை இந்தப் பேரவையில் ஆதரித்து, அதை நிறைவேற்றித்



தர வேண்டுமென பேரவைத் தலைவரின் மூலமாகக் கேட்டுக்கொண்டு, விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இந்த நிதிநிலை அறிக்கையிலே ஆசிரியர்கள் நியமனம் பற்றி எதுவும் சொல்லப்படவில்லை என்று சொல்லியிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஏற்கெனவே இந்தச் சட்டமன்றத்தில் உறுப்பினராக இருந்திருக்கிறார்கள். நிதிநிலை அறிக்கையிலே, ஏதாவது புதிதாக கொள்கைகள் இருந்தாலோ, புதிய திட்டங்கள் இருந்தாலோ அறிவிக்கப்படும். ஆசிரியர்கள் நியமனம் என்பது, ஆண்டுதோறும் எடுக்கப்படுவது. அது, கல்வித் துறையினுடைய மானியக் கோரிக்கையிலே அறிவிக்கப்படும். கடந்த ஆட்சியிலே 3,605 ஆசிரியர்கள் தேர்வு செய்யப்பட்டார்கள். அதில், சில முறைகேடுகள் செய்யப்பட்டு, நாங்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற உடனே எங்களிடம் முறையிட்ட பிறகு, அதில் 4 பேர் உயர் நீதிமன்றத்திற்குச் சென்றார்கள். அதை முறையாக ஆராய்ந்தபோது, அதில் மேலும் 47 பேர் விடுபட்டது தெரிந்து, முழுமையாக ஆய்வு செய்து, இப்போது அவர்களை நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. மீதி ஆசிரியர்கள் நியமனம் பற்றி கல்வி மானியக் கோரிக்கையிலே அறிவிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.பி. முத்துக்குமரன் அவர்கள்.

**திரு. எஸ்.பி. முத்துக்குமரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் புதுக்கோட்டை சட்டப் பேரவைத் தொகுதியைச் சார்ந்தவன். புதுக்கோட்டை சட்டப் பேரவைத் தொகுதியில், முதன்முதலாக எனக்குப் போட்டியிடுவதற்கு வாய்ப்பளித்த இந்திய கம்யூனிஸ்டு கட்சியினுடைய தமிழ் மாநிலக் குழுவிற்கும், புதுக்கோட்டை சட்டப் பேரவைத் தொகுதியில் போட்டியிட்ட எனக்கு, தேர்தல் பிரச்சாரக் காலத்தில் வருகை தந்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பிரச்சாரம் செய்து

எனது வெற்றிக்கு அடித்தளம் இட்டிருக்கிறார்கள். அவர்களுக்கும், இந்திய கம்யூனிஸ்டு கட்சியினுடைய மாநிலச் செயலாளர் தோழர் திரு. தா. பாண்டியன் அவர்களுக்கும், மூத்தத் தலைவர் தோழர் திரு. ஆர். நல்லகண்ணு அவர்களுக்கும், இந்திய கம்யூனிஸ்டு கட்சியினுடைய தேசிய செயலாளர் தோழர் திரு. டி. ராஜா அவர்களுக்கும், கூட்டணிக் கட்சியினுடைய நண்பர்கள், தேசிய முற்போக்கு திராவிடக் கழகத்தைச் சார்ந்த கேப்டன் அவர்களுக்கும் மற்றும் நம்முடைய கூட்டணிக் கட்சியினுடைய முன்னணித் தலைவர்கள் அத்தனை பேருக்கும், அரும்பாடுபட்டு வெற்றியடைய வைத்த அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய முன்னணி நிர்வாகிகள், வாக்காளப் பெருமக்கள் அத்தனை பேர்களுக்கும் இந்த நேரத்தில் எனது நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 1-30

புதுக்கோட்டை சட்டப் பேரவைத் தொகுதியிலிருந்து முதன்முறையாக இந்த அவைக்கு வருகை தந்திருக்கக்கூடிய நான் இந்த நிதிநிலை அறிக்கையில் பல்வேறு சிறப்பு அம்சங்களையெல்லாம் இங்கு பார்க்கிறபோது உண்மையிலேயே சிறப்பானதொரு நிதிநிலை அறிக்கை, வரவேற்கத்தக்க நிதிநிலை அறிக்கை என்பதனை இந்த நேரத்தில் பதிவு செய்ய விரும்புகிறேன். நிதிநிலை அறிக்கையில் முதன்மைத் துறையான வேளாண்மைத் துறைக்கு பல்வேறுவிதமான சிறப்பு அம்சங்களைத் தமிழக அரசு அறிவித்திருக்கிறது. நிதிநிலை அறிக்கையிலே அதுபற்றி குறிப்பிடப்பட்டிருக்கிறது. இந்த நிதிநிலை அறிக்கையிலே குறிப்பிட்டிருக்கக்கூடிய அனைத்து அம்சங்களைப் பற்றி குறிப்பிடுவதற்கு உரிய நேரம் இல்லையென்பதால், ஒருசில கருத்துகளை மட்டும் நான் இங்கே தெரிவிக்க விரும்புகிறேன். இந்த வேளாண்மைத் துறையில் வேளாண்மையைச் சார்ந்திருக்கக்கூடிய விவசாயப் பெருமக்கள் கடந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியால் பல்வேறு காரணங்களால் அந்தத் துறையையே சீர்குலைத்து வைத்திருந்த நேரத்தில், அந்தத் துறையை விட்டு வெளியேறிவிடுவோமா என்று இருந்த எண்ணத்தில் மீண்டும் அதற்கு புத்துயிரூட்டுகிற பல்வேறு சிறப்புத் திட்டங்கள், இந்த வேளாண்மைத் துறையைச் சார்ந்த திட்டங்கள், இந்த நிதிநிலை அறிக்கையிலே இடம் பெற்று இருப்பதாக நான் கருதுகிறேன். அதோடு சேர்த்து இன்றைக்கு விவசாயப் பெருமக்கள் தொடர்ந்து பெரும் நஷ்டத்திற்கு ஆளாகி வரக்கூடிய ஒரு பிரச்சினை புதிதாக எழுந்திருப்பதையும் இந்த நிதிநிலை அறிக்கையிலே சுட்டிக்காட்டப்பட்டிருப்பதாக நான் அறிகிறேன். அந்த பாதிப்பு என்னவென்றால், பருவ நிலை மாற்றத்தின் காரணமாக விவசாயிகளுக்கு இன்றைக்கு பருவ காலமே மாறி வருகிறபோது அவர்கள் எந்தக் காலத்தில் எந்தப் பயிரை முன்னெடுத்துச் செல்வது என்பது தெரியாமல் தடுமாறி பெரும் நஷ்டத்திற்கு ஆளாகக்கூடிய ஒரு சூழ்நிலை இருக்கிறது. அப்படி பருவ நிலை மாற்றத்தின் காரணமாக வரக்கூடிய பாதிப்புகளை வேளாண்மைத் துறை நன்கு உணர்ந்து அதில் ஏற்படக்கூடிய பாதிப்பிலிருந்து அவர்கள் விடுபட, விவசாயிகளுக்கு உரிய நிவாரணங்களையும் வழங்குவதற்கு முன்வர வேண்டுமென்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். அதோடு இன்றைக்கு விளை நிலங்கள் தமிழகத்தில்... (குறுக்கீடு)



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், பருவ நிலைகள் மாறுகின்ற நேரங்களில் விவசாயிகள் விவசாயம் செய்கின்றபோது பெரும் நஷ்டம் ஏற்படுகிற நிலை இருக்கிறது; அவர்களுக்கு உரிய பாதுகாப்பு வேளாண்மைத் துறையால் அளிக்கப்பட வேண்டுமென்று குறிப்பிட்டார்கள். அவர்களுக்குப் பயிர் இன்சூரன்ஸ் திட்டம் போன்ற திட்டம் இருக்கின்றது. அதிலே முழுமையான பாதுகாப்பு அவர்களுக்கு அளிக்கப்படும். இரண்டாவதாக, இந்தத் துறையின்மூலம் தட்பவெப்ப நிலைகளை ஆய்ந்து விவசாயிகளுக்குத் தக்க அறிவுரை வழங்குவதற்கும் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சி அதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கிறது என்பதை நான் தங்கள்மூலம் உறுப்பினர் அவர்களுக்கு மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.பி. முத்துக்குமரன் அவர்கள்.

**திரு. எஸ்.பி. முத்துக்குமரன்:** மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றி. தமிழகத்தில் விளை நிலங்கள்

பரவலாக ரியல் எஸ்டேட் நிறுவனங்களினுடைய கைக்குச் சென்று கொண்டிருக்கின்றன. இந்த விளை நிலங்களை நாம் ஒரு வரையறைக்குள் கொண்டுவரவில்லையென்று சொன்னால், எதிர்காலத்தில் உணவுத் தட்டுப்பாடுகூட வந்து விடுமோ என்கிற அளவுக்கு ரியல் எஸ்டேட் நிறுவனங்களின் கைக்கு நிலங்கள் மாறுகிற இந்த நிலையில் நம்முடைய தமிழக அரசாங்கம் இதில் சிறப்புக் கவனம் செலுத்தி அவற்றைத் தடுத்து நிறுத்துவதற்குரிய முன்முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

வேளாண்மை விற்பனைத் துறைமூலம் இன்றைக்கு பல்வேறுவிதமான அறிவிப்புகள் வரவேற்கத்தக்க அளவில் வெளியிடப்பட்டிருக்கின்றன. அவை அறிக்கையிலே தெரிவிக்கப்பட்டிருக்கின்றன. இந்த அறிவிப்புகளோடு சேர்த்து கூடுதலாக வேளாண்மை விற்பனைப் பொருட்களில் இன்றைக்கு, நேரடி நெல் கொள்முதல் நிலையங்களை அமைத்து எப்படி நெல் போன்ற பொருள்களையெல்லாம் கொள்முதல் செய்கிறோமோ அதோடு இதர விவசாயிகள் உற்பத்தி செய்யக்கூடிய பொருள்களையும் வேளாண் விற்பனை நிலையத்தின் மூலமாக கொள்முதல் செய்து, அந்த வேளாண் விற்பனைக் குழு என்பது விவசாயிகளிடமிருந்து கொள்முதல் செய்து மொத்தச் சந்தைகளில் விற்பனை செய்ய ஒரு இடைமட்ட அலுவலாக அது மாற்றப்பட வேண்டுமென இந்த நேரத்தில் இந்த அறிக்கையை செழுமைப்படுத்துகிற செய்தியாகவும் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

பிற்பகல் 1-35

அதோடு, இன்றைக்கு நிதிநிலை அறிக்கையிலே தெரிவிக்கப்பட்டிருக்கிற மாநில நதிகள் இணைப்புத் திட்டம், மிகச் சிறப்பான திட்டம் ஆகும். தமிழக மக்களுடைய எதிர்காலத்தினுடைய வாழ்வாதாரம் சம்பந்தப்பட்ட திட்டம். இந்தத் திட்டத்திற்கு ஒதுக்கியிருக்கக்கூடிய நிதியினை மத்திய அரசாங்கத்திடமிருந்து கோருகிற அதேநேரத்தில் முதல் கட்டமாக இதனை துவக்குவதற்கு 60 கோடி ரூபாயை அரசு ஒதுக்கி, இந்தத் திட்டத்தை உடனடியாக துவக்குவதற்காகவும் இங்கு அறிவிக்கப்பட்டிருக்கிறது. அதில் எங்களுடைய புதுக்கோட்டை மாவட்டம் சார்ந்திருக்கக்கூடிய வெள்ளாறு, அக்னி ஆறு



உள்ளிட்ட திட்டங்களும் இதிலே இடம் பெற்றிருக்கிறது. இந்தத் திட்டத்திற்காக நாங்கள் நீண்டகாலம் பல்வேறு போராட்டங்களை, இயக்கங்களையெல்லாம் கடந்த ஆட்சியிலே நடத்தியிருக்கிறோம். இப்பொழுது புதுக்கோட்டை மாவட்டம் சார்ந்திருக்கக்கூடிய, அதேபோன்று சிவகங்கை உள்ளிட்ட தாமிரபரணி வரைக்கும் செல்லக்கூடிய அந்தத் திட்டம் இப்பொழுது அறிமுகம் செய்யப்பட்டிருக்கிறது. இந்தத் திட்டம் சிறப்பாகச் செயல்படுவதற்கு முதற்கட்டமாக ஒதுக்கியிருக்கக்கூடிய நிதியானது 60 கோடி ரூபாய் என்பது போதுமானதுதானா? இன்னும் தேவைப்படுகிற அளவிற்கு அதனை முதல் கட்டத்தில் கூடுதலாக ஒதுக்கித் தர வேண்டுமென இந்த நேரத்தில் நான் தெரிவித்துக் கொள்கிறேன். வறுமை ஒழிப்புத் திட்டம், இன்னும் பல்வேறு...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. முத்துக்குமரன், ஒரு நிமிடத்தில் உரையை முடித்துவிடுங்கள்.

**திரு. எஸ்.பி. முத்துக்குமரன்:** சரி, முடித்துவிடுகிறேன். இன்னும் பல்வேறு சிறப்பான திட்டங்கள் இருக்கின்றன. இந்த அவையில் ஒன்றிரண்டு விஷயங்களை நான் நினைவுபடுத்த விரும்புகிறேன். நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இலங்கைத் தமிழர்களின் உரிமைகளை நிலைநாட்டுவதற்காக இந்த மன்றத்தில் முக்கிய தீர்மானத்தை நிறைவேற்றி, உலகம் முழுவதும் இருக்கக்கூடிய தமிழ் மக்கள் இன்றைக்குத் தலைநிமிர்ந்து நிற்பதற்கான ஒரு வாய்ப்பினை உருவாக்கிக் கொடுத்தார்கள். அந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்ட பின்பு, இலங்கையிலே நடைபெற்ற உள்ளாட்சித் தேர்தலில் நம்முடைய தமிழர் கூட்டமைப்புகள் வெற்றியடைந்து, இலங்கையிலும் இன்றைக்குத் தமிழ் மக்கள் தலை நிமிர ஒரு வாய்ப்பு ஏற்பட்டிருக்கக்கூடிய இந்த நேரத்தில், இன்றைக்கு இலங்கை அதிபர் ராஜபக்சே அவர்களுடைய சகோதரர், பாதுகாப்புத் துறையினுடைய செயலாளர் அவர்கள், நம்முடைய இந்த மன்றத்தில் நிறைவேற்றிய அந்தத் தீர்மானத்தைக் கேவலமாகப் பேசியதோடு, ஏதோ அரசியல் ஆதாயத்திற்காக நிறைவேற்றப்பட்ட தீர்மானமாக இவற்றையெல்லாம் குறிப்பிட்டிருக்கிறார்கள். அது நம்முடைய இறையாண்மையோடு சம்பந்தப்பட்ட விஷயம். இதற்கு நாம்

[திரு. எஸ்.பி. முத்துக்குமரன்][2011 ஆகஸ்ட் 10

மேலும் அடுத்தகட்ட முன் முயற்சிகளை மத்திய அரசின் வாயிலாக உரிய நெருக்கடிகளைக் கொடுத்து, அவற்றைத் தீர்க்க வேண்டும். இன்றைக்கு மீனவர்களுடைய பிரச்சினை பெரிதாக இருந்து கொண்டிருக்கக்கூடிய இந்தச் சூழ்நிலையிலும், மீனவர்களுக்குரிய பாதுகாப்புத் திட்டத்தை உருவாக்கிக் கொடுத்திருப்பதையும் வரவேற்று, மீனவர்களுக்கு இலங்கை கடற்படையினரால் ஏற்படக்கூடிய பாதிப்பையும் தடுத்து நிறுத்துவதற்கு இந்த அரசு முன் முயற்சிகளை நிச்சயமாக மேற்கொள்ளும். மத்திய அரசாங்கம் பார்த்துக் கொண்டிருந்தாலும், நம்முடைய தமிழக அரசு எடுத்திருக்கக்கூடிய முயற்சி வெற்றியடையும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

புதுக்கோட்டை சட்டப் பேரவை தொகுதி என்பது மிகவும் வறட்சி நிலையைச் சார்ந்திருக்கக்கூடிய தொகுதி. இந்தத் தொகுதியில் ஒரு மருத்துவக் கல்லூரி அமைப்பதற்கு அறிவிப்பு வெளியாகி, அது நீண்ட காலமாக இருக்கிறது. அதனை அமைத்துத் தர வேண்டுமென இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடு) ஒன்றே ஒன்று. நன்றி மட்டும் சொல்லி முடித்துவிடுகிறேன்.

**தொகுதி கோரிக்கைகள்:** புதுக்கோட்டையில் அரசு கால்நடைப் பண்ணையில் சுமார் 1000 ஏக்கர் நிலம் உள்ளது. இந்த இடத்தில் கால்நடை மருத்துவக் கல்லூரி அமைக்கக் கேட்டுக்கொள்கிறேன்.

கொள்ளிட உபரி நீர் திட்டத்தை நிறைவேற்றி புதுக்கோட்டை மாவட்ட விவசாயிகளைக் காப்பாற்ற கேட்டுக்கொள்கிறேன்.

புதுக்கோட்டையில் அரசு பாலிடெக்னிக் கல்லூரி அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

புதுக்கோட்டை நகர மக்களுக்கு தினமும் குடிநீர் வழங்க சிறப்புத் திட்டம் வகுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோல, புதுக்கோட்டை சட்டமன்றத் தொகுதி முழுமைக்கும் பாதுகாக்கப்பட்ட காவேரிக் குடிநீர் வழங்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

புதுக்கோட்டை நகரத்தில் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு உருவாக்கும் வகையில் கனரக தொழிற்சாலைகள் அமைத்துத் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.



2011 ஆகஸ்ட் 10] [திரு. எஸ்.பி. முத்துக்குமரன்]

புதுக்கோட்டை அருகில் காவேரி மில் இருந்த இடத்தை சென்ற ஆட்சியில் தி.மு.க.—வினர் அபகரித்து வைத்துள்ளனர். இந்த இடத்தை மீட்டு ஏதேனும் கனரகத் தொழிற்சாலை அமைத்துத் தருமாறு பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

புதுக்கோட்டை நகரில் உள்ள சுமார் 20,000 குடும்பங்களுக்கு குடிமனைப் பட்டா வழங்க வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.

புதுக்கோட்டை நகரில் பாதாளச் சாக்கடை என்ற பெயரில் சாலைகள் முழுவதும் பழுதடைந்துள்ளன. இதனை உடனடியாக மராமத்து செய்து தருமாறு பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

புதுக்கோட்டை தொகுதியில் உள்ள ஆதணக் கோட்டையில் முந்திரி தொழிற்சாலை அமைத்துத்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

புதுக்கோட்டை தொகுதி கறம்பக்குடி வட்டாட்சியர் அலவலகத்திற்கு புதிய கட்டடம் அமைத்துத் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

ஆலங்குடியில் மின்சார வாரிய செயற் பொறியாளர் அலுவலகம் உருவாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

புதுக்கோட்டை தொகுதி மழையூரில் வனஸ்பதி தொழிற்சாலை அமைத்துத் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

புதுக்கோட்டை அரசு பொறியியல் கல்லூரி அமைத்துத் தருமாறு பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

புதுக்கோட்டை தொகுதியில் உள்ள மழையூரை மையமாகக் கொண்டு புதிய ஊராட்சி ஒன்றியம் அமைத்துத் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

புதுக்கோட்டையில் ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகம் அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நம்முடைய சபாநாயகர் அவர்களுக்கு இடையூறு செய்யாமல் முடித்துக் கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நன்றி. அடுத்து மாண்புமிகு உறுப்பினர் திருமதி ம. சக்தி அவர்கள்.

பிற்பகல் 1—40

*திருமதி ம. சக்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே வணக்கம். உண்மைக்கும், உழைப்பிற்கும் விலாசம் தந்து, எளியோரையும் அரியணையில் அமர வைத்து, சமதர்மத்தை நிலைநாட்டிய, தர்மத்தின் தலைமகளே, வீரத்தின் விளைநிலமே, மாதர்குல மாணிக்கமே, பாசத்தின் பிறப்பிடமே, பன்மொழிகள் கற்றுணர்ந்த பல்கலைக்கழகமே, பார் திரண்டு பாராட்டும் பண்பாட்டுப் பெட்டகமே, தமிழினத்தின் வரமே, தமிழ் தாய் தவமே, சமூக நீதி காத்த எங்கள் குல விளக்கே அம்மா, சமூக அந்தஸ்தில் கடைகோடியில் இருந்த என்னை ஒன்றிய கழக இணைச் செயலாளராக்கி, மாவட்ட மகளிர் அணிச் செயலாளராக்கி, கழகத் தலைமைச் செயற்குழு உறுப்பினராக்கி, இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க சட்டப் பேரவையில் சீர்காழி தனி தொகுதியிலிருந்து முதல் பெண் சட்டமன்ற உறுப்பினராக அமர வைத்து அழகு பார்க்கின்ற என் தாயே, அம்மா தங்கள் பொற்பாதங்களில் இந்த எளியவளின் கோடானு கோடி நன்றி மலர்களைக் காணிக்கையாக்கி வணங்கி மகிழ்கின்றேன் தாயே! (மேசையைத் தட்டும் ஒலி)

குடும்ப ஆட்சி நடத்திய குள்ளநரிக் கூட்டத்தை, கோட்டையை விட்டு விரட்டி, அதர்மத்தை தர்மத்தால் வென்று, மூன்றாவது முறையாக தமிழக முதல்வராக எங்கள் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களை ஆட்சி அரியணையில் அமர வைத்து அழகு பார்க்கின்ற தமிழக மக்களுக்கு இந்த மாமன்றத்தின் சார்பாக எனது நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாசியோடு, வாக்களித்து வெற்றிபெறச் செய்த சீர்காழி சட்டமன்றத் தொகுதி மக்களுக்கு நன்றியினைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

புல்லைவிட பணிவும், பூவைவிட பொறுமையுமான எங்கள் நாராயிணியே, தீயசக்தியைத் தொலைத்து தமிழகத்தின் பெருமைகளை துப்பு துலக்குகின்ற இறைவனது படைப்பே, எங்கள் தாயே, கருணாநிதியின் கையில் திருவோடாக இருந்த தமிழகம் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அர்ப்பணிப்பால் அமுதசுரபியாகிவிட்டது இந்த நிதிநிலை அறிக்கை.

ஒருவருக்கு ஒரு பார்வை, மாண்புமிகு புரட்சித் தலைவி முதல்வர் அம்மா அவர்களுக்கு ஒவ்வொன்றுக்கும் ஒரு பார்வை. அதுவும்



தொலைநோக்குப் பார்வை. இப்படி அனைத்துத் தரப்பு மக்களின் நலன்களையும் கருத்தில் கொண்டு எங்கள் அம்மா அவர்களால் தயாரிக்கப்பட்ட சிறப்புமிக்க நிதிநிலை அறிக்கையை விமர்சிக்க, அன்னக் காவடியாய் அரசியலில் புகுந்து ஆசிய பணக்காரனாய் விளங்கி, அலைவரிசை ஊழலில் உலகப் பணக்காரனாய் உயர்ந்த அரசியல்வாதி அல்ல, வியாதி கருணாநிதியே உனக்கு ஏது தகுதி?

அம்மா, தாங்கள் சிந்தித்தால் சீரிய திட்டங்கள் உருவாகின்றன. கண் அசைத்தால் கயவர்கள் ஓடி ஒளிகின்றனர். நாவசைத்தால், நாடே செவி சாய்க்கின்றது. விரல் அசைத்தால் வெற்றி குவிகின்றது. அலைமகளும், மலைமகளும், கலைமகளும் கலந்து உதித்த எங்கள் இரட்டை இலை திருமகளே, ஈகைப் பெருமகளே, (மேசையைத் தட்டும் ஒலி) அன்னைத் தமிழகம் கண்டெடுத்த அரசியல் அகராதியே, உலகத் தமிழர்களின் ஒப்பற்ற தாயே அம்மா, தங்களின் கடந்த ஆட்சியின் சாதனைகளையும், ஆளுமைத் திறமைகளையும் பாராட்டி பிரிட்டிஷ் பாராளுமன்றத்தில் உள்ள பிரபுக்கள் சபையால் (House of Lords, London) இந்தியாவின் தலைசிறந்த அரசியல் பெண்மணி என்று தேர்வு செய்து, தங்களுக்கு விருது வழங்கி பாராட்டினார்கள் அன்று. இன்றோ ஒரு வல்லரசே அம்மா அவர்களின் நல்லரசைப் பாராட்டிச் சென்றிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) தமிழ்நாட்டில் மட்டுமல்ல, இந்தியாவிலும் ஏன் உலக அளவில் வாழுகின்ற இன, மொழி, மத வேறுபாடின்றி ஒட்டுமொத்த பெண் சமுதாயமே தாங்கள் ஒருவரால் தலைநிமிர்ந்து நிற்கின்றது அம்மா.

பெண்ணினத்தின் பெருமையே அம்மா. பெண்ணுக்கு சம உரிமை கிடைக்காத வரை இந்த மண்ணுக்குப் பெருமை சேராது என்று அறிந்து மகளிருக்காக மகத்தான மாபெரும் திட்டங்களைச் செயலாற்றுகின்றீர்கள் அம்மா. ஏழைப் பெண்களின் திருமணத்திற்கு நிதியுதவியும், அதோடு தங்கத்தையும் தாய்வீட்டுச் சீதனமாய் வழங்குகின்ற தாயுள்ளம் கொண்ட தங்கத் தாரகையே அம்மா, இந்தச் சிறப்புமிக்க திட்டத்தின்மூலம் பெண் கல்வியும் ஊக்குவிக்கப்படுகின்றது அம்மா.

அம்மா, கர்ப்பிணிப் பெண்களுக்கு கர்ப்பக்கால நிவாரண நிதியோடு, 24 மணி நேரமும் அனைத்து நாட்களிலும் மகப்பேறு

மருத்துவ வசதியோடு, நோய்த் தடுப்பு ஊட்டச்சத்தையும் வழங்குகின்ற அன்னையே, கருணையின் பிறப்பிடமே அம்மா.

பெண் சிசுக் கொலையைத் தடுக்க தொட்டில் குழந்தைத் திட்டத்தைத் தந்து இந்தியாவில் ஏன் தமிழ்நாட்டில் இதோ இன்னொரு அன்னை தெரசா என்று உலகத்தையே உற்று நோக்கிட வைத்த அன்னையே அம்மா. பெண் இனத்திற்குத் தாயின் கருவறையே கல்லறையாக மாறுவதைக் கண்டு அம்மா அவர்களின் கடந்தகால ஆட்சியில், தாயின் வயிற்றில் வளரும் குழந்தை ஆணா, பெண்ணா எனக் கண்டறியும் மருத்துவ முறைக்குத் தடைச் சட்டத்தைப் போட்ட பெண்ணின பேரொளியாம், பேரறிவுப் பெருந்தகையாம் நம் அன்னை திருமகள் அம்மா.

பிற்பகல் 1-45

கிராமப்புறங்களில் வாழும் ஏழை, எளிய இளம் பெண்களுக்கு இலவசமாய் சானிடரி நாப்கின் வழங்க ஆணையிட்ட, பெண்கள் நலன் காக்க உதித்து வந்த தாய் உருவ தெய்வமே அம்மா, அல்லல்பட்ட அடித்தட்டு மக்களின் வாழ்வாதாரம் உயர, 6 இலட்சம் குடும்பங்களுக்கு 4 ஆடுகளும், ஒரு கறவை மாடும் வழங்க இருக்கும் தாயே, பள்ளி மாணவ, மாணவிகளுக்கு இலவசச் சீருடை வழங்குவதிலே, சிறப்பாக 6 ஆம் வகுப்பும் அதற்கு மேல் படிக்கும் பெண்களுக்குப் பாவாடை தாவணிக்குப் பதில் சல்வார் கமிஸ் வழங்கப்படும் என தாயுள்ளத்தோடு அறிவித்துள்ள எங்கள் தாயே, ஏழைகளின் ஏந்தலே அம்மா. நாடு சுதந்திரம் அடைந்து 64 ஆண்டுகள் ஆகியும் சீர்காழி தொகுதியில் பேருந்து வசதியில்லாத சுமார் 500 குடும்பங்கள் வாழும் கொடியம்பாளையம் என்ற மீனவ கிராமத்திற்கு மாண்புமிகு புரட்சித் தலைவி, தமிழக முதல்வர் அம்மா அவர்கள் ஆட்சி அரியணையில் அமர்ந்த 28-ஆவது நாளே பேருந்து விடுவதற்கு ஆணையிட்ட அம்மா அவர்களுக்கு மீனவ கிராமத்தின் சார்பாக அம்மா அவர்களின் பாதங்களில் நன்றியைக் காணிக்கையாக்குகின்றேன்.

சீர்காழி தொகுதியில் பல ஆண்டுகளாக தூர் வாராமல் தூர்ந்து போய் பாசனத்திற்குப் பயனற்றுப்போன திருவாலி ஏரியைத் தூர் வாரி, காண்போர் கண் கவரும் வகையில் விவசாயிகளை மனம் மகிழச் செய்த அன்புத் தாயே, விவசாயிகளின் சார்பாக நன்றியினைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.



மேலும், இந்த நிதிநிலை அறிக்கையில் பழையாறு கிராமத்திற்கு ரூ.27.56 கோடியை ஒதுக்கி நவீன மீன்பிடி துறைமுகத்தை அமைக்க ஆணையிட்ட மாண்புமிகு புரட்சித் தலைவி தமிழக முதல்வர் அம்மா அவர்களுக்கு நன்றியினைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

அம்மா, சீர்காழி பகுதிக்கு ஓர் அரசு கலைக் கல்லூரியையும், தொழில்நுட்பப் பயிற்சி நிலையத்தையும் வழங்க மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்கி வேண்டிக்கொள்கிறேன்.

சீர்காழி தொகுதியில் எருக்கூரில் தேசிய நெடுஞ்சாலை ஓரமாக இயங்கி வரும் நவீன அரிசி ஆலையில் உமியை எரிபொருளாகப் பயன்படுத்துவதால் காற்றில் கரி கலந்து விவசாயப் பயிர்களும், பொதுமக்களும் பாதிக்கப்படுவதோடு வாகனத்தில் செல்வோருக்கு சாம்பல் பட்டு கண் எரிச்சலை உண்டாக்கி அடிக்கடி சாலை விபத்துகள் ஏற்படுகின்றன. ஆகவே, உமிக்குப் பதில் எரிவாயுமூலம் இயங்க மாண்புமிகு புரட்சித் தலைவி, தமிழக முதல்வர் அம்மா அவர்கள் கருணைகூர்ந்து நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று பாதம்தொட்டுக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கண்ணை மறைக்கின்ற காலம் வரும்பொழுது, தர்மம் வெளியேறலாம். தர்மம் அரசாளும் தருணம் வரும்பொழுது, தர்மத்தாய் அரசாளும் தருணம் வரும்பொழுது, தவறு என்ற திராவிட முன்னேற்றக் கழகம் வெளியேறிவிட்டது அம்மா.

பெண்ணினத்தின் கண்ணியம் காக்க முனையும் பெண்ணிய சக்தியாம் அன்னையே, இந்த எளியவளுக்கு வரலாற்றுச் சிறப்புமிக்கப் பேரவையில் கன்னிப் பேச்சுப் பேச வாய்ப்பளித்த புரட்சித் தலைவி, மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்களின் பாதங்களில் மீண்டும் எனது நன்றியைக் காணிக்கையாக்கி வணங்கி, இப்பிறவியில் மட்டுமல்ல, எப்பிறவி எடுத்தாலும் இந்த எளியவள் தங்களுக்கு நன்றி உள்ளவளாக இருப்பேன் அம்மா. நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: அடுத்து மாண்புமிகு உறுப்பினர் திரு. ர.ம. பாபு முருகவேல் அவர்கள்.

****திரு. ர.ம. பாபு முருகவேல்:*** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது கன்னிப் பேச்சைத் துவங்குவதற்கு முன்பாக, வழக்கறிஞர் துறையிலே எனக்கு குருவான திரு. எஸ். வெங்கடேசன் அவர்களின் வகுப்புத் தோழர் என்ற வகையிலே தாங்களும் இந்த மாமன்றத்திலே தெரியாமல் இழைக்கும் பிழைகளைப் பொறுத்து, மக்கள் பிரச்சினைகளைப் பேச நீண்ட நேரம் அனுமதிக்க வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கின்றேன்.

*பிற்பகல் 1-50*

வறுமையை ஒழிக்க வேண்டும், லஞ்சலாவண்யமற்ற ஒரு நல்லாட்சி மலர வேண்டும் என்ற மகத்தான சிந்தனையுடன் கடந்த 2005 ஆம் ஆண்டு தேசிய முற்போக்கு திராவிடக் கழகம் என்ற மாபெரும் இயக்கத்தை உருவாக்கிய நாள் முதல் அதனோடு ஒரு அடிப்படைத் தொண்டனாய் இணைத்துக்கொண்ட என்னை கடந்த 12 ஆண்டுகளாக சமூக நீதிக்காகவும், ஒடுக்கப்பட்ட மக்களுக்காகவும் நீதிமன்றங்களிலே குரல் கொடுத்துக்கொண்டிருந்த இந்தச் சாமானியனுக்கு கடந்த 2006 ஆம் ஆண்டு நடந்த உள்ளாட்சித் தேர்தலிலே, கட்டவிழ்த்து விடப்பட்ட அராஜகங்களை எதிர்த்து சென்னை உயர் நீதிமன்றத்தில் தேசிய முற்போக்கு திராவிடக் கழகத்தின் சார்பிலே தொடர்ந்த வழக்கில் என்னையும் பங்குபெறச் செய்து, அதன் பின்னால் நடந்த தொடர் அடக்குமுறைகளிலும், தொடர் சட்ட விதி மீறல்களிலும் பங்கெடுக்க, வழக்கறிஞர் என்ற முறையிலே குரல் கொடுக்க அனுமதி அளித்து, 2009 ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட, கேப்டன் தொலைக்காட்சிக்கு சட்ட ஆலோசகராக இருந்து பணியாற்ற எனக்கு ஆணையிட்டு, பல சிறப்புகள் மிக்க மாபெரும் வரலாற்று நிகழ்வுகளை நிகழ்த்திய இந்த மாமன்றத்திலே பங்குபெற, வயதிலேயும், அனுபவத்திலேயும் அறியாதவனான எனக்கும் ஒரு வாய்ப்பு தந்து, என்னை ஆரணி சட்டமன்ற வேட்பாளராக அறிவித்து, மக்கள் ஒரு நல்லாட்சி ஏற்பட வேண்டும் என்று எதிர்பார்க்கிறார்கள், அவர்கள் பணத்திற்காக தங்களுடைய ஓட்டை விலை பேசத் தயாராக இல்லை, எனவே, பண பலத்தைக் கண்டு அஞ்ச வேண்டாம், வெற்றி நமக்காகக் காத்திருக்கின்றது என்று கடந்த 24—3—2011 அன்றே வெற்றிச் செய்தியைச் சொன்ன தீர்க்கதரிசி, நீதிமன்றத்திலிருந்து சட்டமன்றத்திற்கு என் திசையை மாற்றிய



திசைகாட்டி, என்னை கரையேற்றிய கொலம்பஸ், என் குல சாமி, எங்களின் இதய முரசு, புரட்சிக் கலைஞர், டாக்டர் கேப்டன் அவர்களுக்கும், (மேசையைத் தட்டும் ஒலி) தேர்தல் அறிவித்த நாள் முதல், தமிழகத்தில் மக்கள் ஆட்சி மலர வேண்டும், ஜனநாயகம் மீண்டும் தழைத்தோங்க வேண்டும் என்ற ஒரு மகத்தான சிந்தனையுடன், தன் குடும்பத்தையும், தன் மக்களையும் மறந்து, தமிழக மக்களின் நலனை மட்டுமே மனதில்கொண்டு, என் தலைவன் ஒரு திசையில் இருந்தும், எங்களின் அண்ணியார் ஒரு திசையிலிருந்தும், தமிழகத்தில் உள்ள ஏறத்தாழ அனைத்துத் தொகுதிகளிலும் காலநிலைகளையும் பொருட்படுத்தாமல், கூட்டணி வேட்பாளர்களின் வெற்றிக்காகவும், குறிப்பாக எனது தொகுதியில், எனது வெற்றிக்காகவும், அரும்பாடுபட்ட எங்களின் மாதர்குல மாணிக்கம், மரியாதைக்குரிய எங்களின் அண்ணியார் அவர்களுக்கும், (மேசையைத் தட்டும் ஒலி) என்னை வேட்பாளராக பரிந்துரை செய்த தேசிய முற்போக்கு திராவிடக் கழகத்தின் மாநில இளைஞர் அணிச் செயலாளர், மரியாதைக்குரிய அண்ணன் எல்.கே. சுதீஷ் அவர்களுக்கும், கடந்த 30—03—2011 அன்று செய்யாரிலே நடந்த வேட்பாளர்கள் அறிமுகக் கூட்டத்திலே என்னை ஆரணியின் சட்டமன்றத் தொகுதி வேட்பாளராக அறிமுகப்படுத்தி, இன்முகத்தோடு வெற்றி பெற வாழ்த்துகள் என்று அன்புள்ளத்தோடு வாழ்த்திய மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கும், இவை எல்லாவற்றிற்கும் மேலாக ஏறத்தாழ 14 நாட்களுக்குள்ளாகவே, என்னை தங்கள் வீட்டுப் பிள்ளையாக அவர்களுள் ஒருவனாக, மனதார ஏற்று, எனக்காக, அயராது பாடுபட்ட தேசிய முற்போக்கு திராவிடக் கழக அன்பு உடன்பிறப்புகளுக்கும் மற்றும் கூட்டணிக் கழக முன்னோடிகளுக்கும், ஒரு மாபெரும் வெற்றியினை எனக்கு வழங்கி மக்கள் சேவையாற்றப் பணித்த என் அன்பு ஆரணி சட்டமன்றத் தொகுதி வாழ் அனைத்துச் சொந்தங்களுக்கும், என் இந்த கன்னிப் பேச்சின் வாயிலாக மனமார்ந்த நன்றியினை, வார்த்தைகளால் நன்றி என்று கூறி முடிக்காமல், என் மக்கள் பணியின்மூலம் உங்களுக்குச் சொல்கின்றேன் நன்றி. உங்கள் குறைகளை உடனுக்குடன் போக்குவதிலே சொல்கின்றேன் நன்றி. உங்கள் குரலாக என் குரலை இந்த மாமன்றத்திலே பதிய வைப்பதன்மூலம் சொல்கின்றேன் நன்றி. உங்களால் பெற்ற இந்த வெற்றியின் மூலமாக நான் அடைந்த ஆனந்தத்தின் வாயிலாக

வரும் ஆனந்தக் கண்ணீரினால் உங்கள் பொற்பாதங்களை நனைத்து சொல்கின்றேன் நன்றி, நன்றி, நன்றி. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** Subject-க்கே 5 நிமிடங்கள் பொறுத்து இப்பொழுதுதான் வருகிறீர்கள்.

**திரு. ர.ம. பாபு முருகவேல்:** அதனால்தான் முதலிலேயே சொல்லிவிட்டேன், பேரவைத் தலைவர் அவர்களே, நேரம் கொஞ்சம் கூடுதலாகக் கொடுங்கள் என்று கேட்டுக்கொண்டேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் பேசிக்கொண்டேயிருங்கள்.

**திரு. ர.ம. பாபு முருகவேல்:**

"இதனை இதனால் இவன்முடிக்கும் என்றாய்ந்து
அதனை அவன்கண் விடல்"

என்ற திருவள்ளுவரின் குறளுக்கு ஏற்ப, கடந்த 4-8-2011 ஆம் தேதியன்று, மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களால் இந்த மாமன்றத்திலே சமர்ப்பிக்கப்பட்ட 2011-2012 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையினைப் பொறுத்தவரை, எங்கள் தலைவர், மரியாதைக்குரிய புரட்சிக் கலைஞர், டாக்டர் கேப்டன் அவர்கள் அன்றையதினமே கூறியதைப்போல, தாக்கல் செய்யப்பட்ட நிதிநிலை அறிக்கையானது, மக்கள் நலனை மனதிலே கொண்டு, அனைத்துத் துறை மற்றும் அனைத்துத்தட்டு மக்களுக்கும் பயனளிக்கக்கூடிய வகையிலே எந்தவித வேறுபாடுமின்றி, துறை வாரியாக யாருக்கும் எந்தவித ஏற்றத்தாழ்வும் காட்டாதவண்ணம், நமது இந்திய அரசியல் அமைப்பிலுள்ள 3 முக்கியப் பிரிவுகளான Administrative, Judiciary, Executive ஆகிய அனைத்தையும் எண்ணத்தில் ஏற்றி அதற்கு முக்கியத்துவம் கொடுக்கும் வகையிலே தாக்கல் செய்யப்பட்டிருக்கின்றது இந்த நிதிநிலை அறிக்கை.

நிதிநிலை அறிக்கை தாக்கல் செய்யப்பட இருக்கின்றது; எந்தெந்தப் பொருட்களின்மீது எவ்வளவு வரி விதிக்கப் போகிறார்களோ, எந்தெந்தப் பொருட்களின் விலை கணிசமாக உயரப் போகின்றதோ என்று, கடந்த கால ஆட்சியின்போது மக்களின் மனதிலே குமுறலாக இருந்தது. அந்த அச்ச



உணர்வைப் போக்கி, எந்த ஒரு பொருளிலும் 1 சதவிகிதம்கூட வரியே இல்லாத, அதேநேரத்தில், கடந்த காலங்களிலே இல்லாத வகையிலே ரூ.1,00,000 கோடிகளுக்கும் மேலான வரவு-செலவுத் திட்டத்தையும், இந்தத் திருத்த வரவு-செலவுத் திட்டத்தின்மூலம் ரூ.8,900 கோடி அளவிற்குச் சலுகைத் திட்டங்களும், மக்களுக்கு வழங்கி அதோடு மட்டும் நின்றுவிடாமல், கடந்த ஆண்டு ஏற்பட்ட ரூ.2,720/- கோடி வருவாய் பற்றாக்குறையையும் ஈடுசெய்து, இந்த நிதிநிலை அறிக்கையின் முத்தாய்ப்பாய், அரசுக்கு ஒரு இன்ப நிகழ்வாய், 2011—2012 ஆம் ஆண்டில் 173.87 கோடி ரூபாய் உபரி வருவாய் ஏற்படக்கூடிய வகையிலே தயாரிக்கப்பட்டிருக்கின்ற இந்த நிதிநிலை அறிக்கை, மாண்புமிகு முதல்வர் அவர்களின் அனுமதியோடு இந்த மாமன்றத்திற்கும், நம் தமிழக மக்களுக்கும் வழங்கி, தாங்கள் வாக்களித்தது வீண்போகவில்லை. நாம் நல்லவர்களுக்குத்தான் வாக்களித்துள்ளோம் என நம் தமிழக மக்கள் மகிழ்ச்சி அடையக்கூடிய வகையிலே தாக்கல் செய்யப்பட்டுள்ள இந்த நிதிநிலை அறிக்கையினை, தேசிய முற்போக்கு திராவிடக் கழகத்தின் சார்பிலேயும், எனக்கு வாக்களித்து வெற்றி பெறச் செய்த என் ஆரணி சட்டமன்றத் தொகுதி மக்களின் சார்பாகவும், வாழ்த்துகளையும், நன்றிகளையும் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் அனுமதியோடு இந்த நிதிநிலை அறிக்கையிலே மிகச் சிறந்தவற்றைப் பாராட்டி, அதோடு அதனுடன் இணைந்த என் தொகுதி மக்களின் தேவைகளையும் இந்த மாமன்றத்திலே பதிய வைத்து மாண்புமிகு தமிழக முதல்வரின் கவனத்திற்குக் கொண்டு செல்ல விரும்புகின்றேன்.

பிற்பகல் 1-55

இந்த அரசு பொறுப்பேற்ற உடனேயே கைவிலங்கை உடைத்து காற்றிலே கலந்துவிட்டதைப் போன்ற உணர்வு தமிழக மக்களிடையே ஏற்பட்டுவிட்டது. அதன் வெளிப்பாடாக அடுத்தவர் சொத்திற்கெல்லாம் ஆசைப்பட்டவர்கள் தற்காலிகமாக நீதிமன்ற ஆணையின்படி சிறைச்சாலையின் சொத்தாக ஆக்கப்பட்டிருக்கின்றனர். சட்டம்—ஒழுங்கைப் பேணிக் காப்பதிலே இந்த அரசு மிகுந்த கவனம் கொண்டுள்ளதை இந்த நிதிநிலை அறிக்கை தெள்ளத்தெளிவாகக் காட்டுகின்றது.

[திரு. ர.ம. பாபு முருகவேல்] [2011 ஆகஸ்ட் 10

எனது ஆரணி தொகுதியிலே இயங்கிக்கொண்டிருக்கும் தாலுகா மற்றும் அனைத்து மகளிர் காவல் நிலைய கட்டடங்கள் பணிபுரியவே, பயன்படுத்தவே தகுதியற்றவையாக உள்ளன. எனவே, இரண்டிற்கும் தனித் தனியாகப் புதிய கட்டடங்கள் கட்டித் தந்து மிகப் பெரிய காவல் எல்லையை கொண்டுள்ள தாலுகா காவல் நிலையத்தின் எல்லையை இரண்டாகப் பிரித்து தேவிகாபுரம் அல்லது சேவூரை தலைமையகமாகக் கொண்டு ஒரு புதிய காவல் நிலையத்தை ஏற்படுத்தித் தருமாறு அன்போடு வேண்டுகின்றேன்.

சிறைத் துறைகளும், நீதிமன்றங்களும் குற்றவாளிகளை சமூக அடிப்படையிலே திருத்துவதாக இருக்க வேண்டும். ஆனால், ஆரணியிலே இருக்கக்கூடிய சார்புச் சிறைச்சாலையானது எந்தவித அடிப்படை வசதிகளும் இல்லாததாக இருக்கின்றது. எனவே, அதற்கு ஒரு புதிய கட்டடம் அனைத்து வசதிகளோடு கட்டித் தருவதோடு, சிறைத் துறை ஊழியர்களுக்குக் குடியிருப்பு வளாகமும் கட்டித் தந்து, ஏற்கெனவே, அரசால் அனுமதிக்கப்பட்ட விரைவு நீதிமன்றம் இன்னும் தொடங்கப்படாமலேயே உள்ளது, அதை உடனே திறந்து செயல்படச் செய்து, கடந்த ஆட்சியிலே தொடக்கம் முதல் முடிவு வரை ரூபாய் 300/-கோடி நீதித் துறைக்காக ஒதுக்கியதாகக் கூறினார்கள். ஆனால், அதை அவர்கள் முறையாகச் செலவிட்டார்களா என்பது அவர்களுக்குத்தான் தெரியும். ஆனால், இந்த நிதிநிலை அறிக்கையில் கூறியுள்ள 252/-கோடி ரூபாயை நல்லமுறையிலே செலவிட்டு நீதி நிர்வாகம் திறம்பட செயல்பட உதவ வேண்டும் என்று அன்போடு வேண்டுகின்றேன்.

அதேபோல, சாலைப் பாதுகாப்புத் திட்டத்தின் ஒரு பகுதியாக குடித்துவிட்டு வாகனத்தை இயக்கி, அதனால் விபத்து ஏற்படுத்தி, உயிர் இழப்பு ஏற்படுத்தும் ஓட்டுனரின் உரிமத்தை உடனே இரத்து செய்ய ஆவன செய்யும் சட்டத்தையும் கொண்டுவந்து மக்களின் உயிர்காக்கும் கடமையையும் அரசு மேற்கொள்ள வேண்டுமென்று அன்போடு வேண்டுகின்றேன்.

தமிழகத்தின் பெரும்பகுதி விவசாய நிலங்களாக உள்ளபோதிலும் இந்த நிதிநிலை அறிக்கையில் கூறியுள்ளதைப்போல மீண்டும் ஒரு பசுமைப் புரட்சியை ஏற்படுத்தி, அதன்மூலம் விவசாயம் செழித்தோங்கி, விவசாயிகளின் நலனைப் பேண முடியும் எனத் தெளிவுப்படுத்துகின்றது. ஏற்கெனவே, நேரடி கொள்முதல் நிலையங்களைத் தொடங்கி விவசாயிகளின் நெஞ்சிலே பால் வார்த்ததைப்போல உரிய DTCP அனுமதி பெறாத வீட்டுமனைகளுக்கு எந்த அடிப்படை வசதியும் தராமல், குறைந்தது 1,200 சதுர அடிகளில் கட்டப்படும் வீடுகளில் கட்டாயம் ஒரு மரம் வளர்க்க வேண்டுமென்ற சட்டத்தையும் கொண்டுவந்து, உலக வெப்பமயமாதலைத் தடுப்பதில் நம் தமிழகம் சிறிய பங்களிப்பை அளிக்க வேண்டுமென்று அன்போடு வேண்டுகின்றேன்.



2011 ஆகஸ்ட் 10] [திரு. ர.ம. பாபு முருகவேல்]

மீனவர்களின் வாழ்வாதாரத்தில் அக்கறை கொண்டதாக இருக்கின்ற இந்த நிதிநிலை அறிக்கையில், அதனுடன் இணைந்து ஒவ்வொரு விசைப் படகிலும் ஒரு செயற்கைக்கோள் செல்லிடைபேசி (Satellite Cell Phone) ஒன்று இலவசமாகத் தந்து மீனவர்களின் உயிர் காக்க நடவடிக்கை எடுத்து, மேலும் மீனவர்களை மகிழ்ச்சிக் கடலில் ஆழ்த்த வேண்டுமென்று அன்போடு வேண்டுகின்றேன்.

ரூபாய் 745.49 கோடி செலவில் 104 அணைக்கட்டுகள் புனரமைக்கப்படும் என்ற செய்தியை, நீராதாரத்தைப் பெருக்க இந்த அரசு காட்டும் முயற்சியை தேசிய முற்போக்கு திராவிடக் கழகம் மனதாரப் பாராட்டுகிறது. அதோடு இணைந்து மாண்புமிகு முதல்வரின் கடந்தகால ஆட்சியிலே கொண்டு வரப்பட்ட மிக முக்கியமான மழைநீர் சேகரிப்புத் திட்டத்தை மீண்டும் கட்டாயமாக அமல்படுத்தி அதன்மூலம் மழைக்காலத்தில் பெய்யும் மழையின்மூலம் ஏறத்தாழ ஒன்றரை ஆண்டுகளுக்கு நிலத்தடி நீரைப் பாதுகாக்க அரசு ஆணையிட வேண்டுமென்று நான் அன்போடு வேண்டுகின்றேன்.

நீராதாரத்தை முற்றிலும் கெடுக்கக்கூடிய 60 மைக்கிரானுக்குக் குறைவான பாலித்தீன் பைகளுக்கு விதிக்கப்பட்டிருக்கின்ற தடை எங்களைப் போன்ற சமூக ஆர்வலர்களிடையே மட்டற்ற மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. அதோடு இணைந்து, புவி வெப்பமயமாதலைத் தடுப்பதிலே நம் தமிழ்நாடு மிகச் சிறந்த பங்களிப்பை வழங்குகிறது என்பதை உணர்த்தும்விதமாக இந்த அரசு வழங்கும் மக்களுக்குப் பயனளிக்கக்கூடிய பல இலவசத் திட்டங்களிலே அனைத்து இல்லங்களுக்கும் 4 சி.எப்.எல். விளக்குகள் வழங்கி புவி வெப்பமயமாதலைத் தடுக்க இன்றே ஆணையிட அன்போடு வேண்டுகின்றேன்.

காட்டு விலங்குகளின்மூலம் ஏற்படும் உயிரிழப்புக்கு ரூபாய் 3 இலட்சம் வழங்கி அவர்களின் குடும்பங்களில் சிறிதளவு மகிழ்ச்சியை இந்த அரசு ஏற்படுத்தியிருப்பதை மனதார வரவேற்கின்றோம்.

விஷம்போல ஏறிக்கொண்டிருக்கும் விலைவாசியைக் கட்டுக்குள் கொண்டு வருவோம் என்ற செய்தியே மக்களுக்கு இனிப்பிலே தேன் கலந்து தந்ததைப்போல் இருக்கின்றது. அதோடு பொது விநியோகத் திட்டத்தின்மூலம் எனது ஆரணி தொகுதிக்கு 3 நேரடி நெல் கொள்முதல் நிலையமும், 4 பகுதி நேர நியாய விலைக் கடைகளையும் திறக்க ஆணையிட்ட மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கு இந்த நேரத்திலே நன்றி தெரிவித்துக்கொள்கின்றேன்.

இருண்டு கிடந்த தமிழகத்தை மீட்டெடுத்து கூட்டணிமூலம் ஜனநாயக ஆட்சியை மலரச் செய்து, வரும் 2012 ஆகஸ்ட் மாதத்திற்குள் மின்தடை முழுவதுமாக நீக்கப்படுமென்ற செய்தி மக்களுக்குத் தன் தாயின் கையால் நிலாச்சோறு உண்ட மகிழ்ச்சியைத் தந்திருக்கிறது. மேலும், கடல் காற்றின்மூலம் மின்சாரம் தயாரித்து அதன்மூலம் மின் சுமையைக் குறைக்கலாம் என்ற மகிழ்ச்சியான செய்தியும், இந்த நிதிநிலை அறிக்கையிலே இயற்கை வளத்தை மிகச் சரியாக எவ்வாறு கையாளலாம் என்பதை அழகாகத் தெளிவுப்படுத்தியிருக்கின்றது.

அதோடு எனது ஆரணி சட்டமன்றத் தொகுதிக்கு சுமார் 180 புதிய மின் மாற்றிகள் தேவைப்படுகின்றன. எனவே, உடனடியாக அரசு அவற்றை ஒதுக்கித் தந்து விவசாயிகளின் நலன் காக்க அன்போடு வேண்டுவதோடு, எனது தொகுதியிலுள்ள அனைத்து அரசு அலுவலகங்கள், மாணவ, மாணவியர் விடுதிகள், அரசு மருத்துவமனைகள், ஆரம்ப சுகாதார நிலையங்கள், கல்வி நிலையங்களில் Solar Energy System அமைத்துத் தந்து மின் சிக்கனத்தைக் கடைப்பிடிக்க ஆணையிடுமாறு அன்போடு வேண்டுகின்றேன்.

சுற்றுலாவிற்கு அதிக முக்கியத்துவம் தந்து நமது தமிழ்ப் பண்பாட்டை உலகறியச் செய்யும் முயற்சியாக இருக்கிறது, இந்த நிதிநிலை அறிக்கை. அதோடு ஏறத்தாழ 800 ஆண்டுகள் பழமையான தேவிகாபுரத்திலே உள்ள பெரியநாயகி உடனுறை கனகபுரீஸ்வரர்



கோயிலை சுற்றுலாத் தலமாக அறிவித்து, மலைமீது உள்ள சிவனை சென்று தரிசிப்பதற்கு ஏற்கெனவே அனுமதிக்கப்பட்ட மின்னொளி வசதியுடன்கூடிய தரமான சாலை வசதியை உடனே நிறைவேற்றவும். . .

பிற்பகல் 2—00

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன்னனுமதியுடன் அவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**திரு. ர.ம. பாபு முருகவேல்:** பெரியநாயகிக்கு ஒரு மரத் தேர் வழங்கியும், காமக்கூரில் உள்ள பாடல் பெற்ற...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் இன்னும் எவ்வளவு நேரம் எடுத்துக்கொள்ளப் போகிறீர்கள்? நாங்கள் எல்லாம் பாவம் இல்லையா?

**திரு. ர.ம. பாபு முருகவேல்:** இன்னும் கொஞ்சம்தான் இருக்கிறது My Lord. காமக்கூரில் உள்ள பாடல் பெற்ற தலமான சிவன் கோயிலுக்கு ஒரு தேரும் வழங்கி அரசு ஆணையிட அன்போடு வேண்டுகின்றேன்.

பெயருக்குப் பல மாநாடுகளைப் போட்டுத் தமிழை வளர்க்காமல், குடும்ப உறுப்பினர்களுக்கு மகிழ்ச்சியளிக்கக்கூடிய வகையிலே மாநாடுகளை நடத்தி தமிழை வளர்க்காமல், பாராட்டுப் பத்திரம் வழங்கி, பொற்கிழி தந்து தமிழை வளர்க்காமல், தமிழனை கொத்துக் கொத்தாகக் கொன்று தமிழை வளர்க்காமல், அழகாக 9 வரிகளிலே தமிழின் வளர்ச்சிக்கு அருமையான அடித்தளம் போட்டதற்கு மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

எழுத்தறிவித்தவன் இறைவன் ஆவான் என்பதன் அடிப்படையிலும், ஓய்வு பெற்ற தலைமை ஆசிரியரின் மகன் என்பதன் அடிப்படையிலும் பள்ளி மற்றும் உயர் கல்விக்கு மிக முக்கியத்துவம் அளிக்கின்ற வகையிலே உள்ளது இந்த நிதிநிலை அறிக்கை. இதனோடு இணைந்து எனது ஆரணி தொகுதியில் உள்ள பள்ளிகளின் தரத்தை உயர்த்தி ஆரணியில் ஒரு அரசு பெண்கள் கலைக் கல்லூரியும், அரசு செவிலியர் கல்லூரியும் அமைத்துத் தர ஆணையிட வேண்டுமென்றும், அரசு ஆண்கள் மற்றும் பெண்கள் மேல்நிலைப் பள்ளிகளில் அரசு அனுமதித்துள்ள

[திரு. ர.ம. பாபு முருகவேல்] [2011 ஆகஸ்ட் 10

எண்ணிக்கையைவிட ஒவ்வொரு வகுப்பிலும் ஏறத்தாழ 150—லிருந்து 200 மாணவர்கள் பயிலக்கூடிய ஒரு அவல நிலை இருந்துகொண்டிருக்கின்றது. இந்த நிலையை நீக்கி 2 பள்ளிகளுக்கும் கூடுதலாகக் கட்டடங்கள் கட்டித் தந்து மாணவ, மாணவிகளின் நடைமுறைச் சிக்கல்களை களைந்து, கூடுதலாக தேர்ச்சி விகிதம் பெறுவதற்கு அரசு ஆவன செய்ய வேண்டுமென்று மிகுந்த நம்பிக்கையோடு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் நேற்றைய பேரவை நிகழ்வின்போது மாண்புமிகு முதல்வர் அவர்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க, பேரவையில் ஒலிவாங்கிகளின் உயரத்தை உயர்த்தித் தந்ததைப்போல, தாங்கள் அறிவித்ததைப்போல மின் அஞ்சலில் வரும் தகவல்களை நாங்கள் பார்த்துத் தெரிந்துக்கொள்வதற்கு சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவருக்கும் ஒரு மடிக்கணினி வழங்குவதற்கு மாண்புமிகு முதல்வர் அவர்களிடத்திலே நீங்கள் சிபாரிசு செய்வீர்கள் என்ற நம்பிக்கையோடு என்னுடைய உரையைத் தொடர்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

சுவர் இருந்தால்தான் சித்திரம் வரைய முடியும் என்பதற்கிணங்க, நம் மக்கள் நலமாக இருந்தால்தான் நாட்டின் நலம் நன்றாக இருக்கும் என்பதை எடுத்துரைக்கும் வகையிலே, மக்கள் நலனில் அக்கறைகொண்டு மருத்துவம் படித்த ஒருவரையே மக்கள் நல்வாழ்வுத் துறைக்கு அமைச்சராக்கியுள்ளது இந்த அரசு. எனது ஆரணி தொகுதியிலுள்ள தாலுகா அரசு மருத்துவமனை எந்தவித அடிப்படை வசதியும் இல்லாத நிலையில் இருக்கின்றது. எனவே, அதன் தரத்தை உயர்த்தி, அனைத்து மருத்துவ உபகரணங்களும் அளித்து, காலிப் பணியிடங்களை நிரப்பி, அவசர ஊர்தி, அமரர் ஊர்தி போன்றவற்றையும் அளித்து, தமிழகத்தில் உள்ள அனைத்து மகளிர் பள்ளி, கல்லூரிகளில் இலவச சானிடரி நாப்கின் வழங்கும் இயந்திரங்களை அரசு நிறுவி, மாணவிகளின் நலன் காக்க வேண்டுமென்று அன்போடு வேண்டுகின்றேன். பொது மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தை விரிவுபடுத்தி, மக்கள் நலனில் இந்த அரசு கடந்த காலங்களைவிட மிகுந்த அக்கறையுடன் உள்ளது என்பதை நிரூபித்துள்ளது. நடமாடும் மருத்துவமனைகள் 108 போல் அல்லாமல் 109-ஆவதாக இருக்கும் என்பதை நிரூபித்திருக்கின்றது இந்த நிதிநிலை அறிக்கை.



2011 ஆகஸ்ட் 10] [திரு. ர.ம. பாபு முருகவேல்]

நெசவாளர்கள் மற்றும் வேளாண் தொழிலாளர்கள் நலன் காக்க ரூ.324.19 கோடி ஒதுக்கி உங்களுக்காக நாங்கள் இருக்கின்றோம் என்பதை இந்த நிதிநிலை அறிக்கை தெளிவுபடுத்தியிருக்கின்றது. இதனால் பெரும் பகுதி நெசவாளர்களையும், விவசாயிகளையும் கொண்ட எனது ஆரணி தொகுதி மக்கள் மட்டற்ற மகிழ்ச்சியில் உள்ளனர். அவர்களுக்கு மேலும் மகிழ்ச்சி அளிக்கக்கூடிய வகையிலே, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் பட்டுக்குப் பெயர் போன ஆரணி நகரில் ஒரு பட்டு வர்த்தக மையம் அமைக்க ஆணையிடுவீர்கள் என்ற மிகுந்த நம்பிக்கையோடு இதையும் ஒரு கோரிக்கையாக இந்த மாமன்றத்திலே பதிய வைக்கின்றேன்.

ஊராட்சி, பேரூராட்சி, நகராட்சி இந்த மூன்றும் கலந்த ஆரணி தொகுதியில் ஊரக மற்றும் நகர்ப்புறங்களுக்கு என இந்த நிதிநிலை அறிக்கையில் தனிக் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. உள்ளாட்சியிலும் ஒரு நல்லாட்சி ஏற்பட வழிவகையாக ஆரணி நகராட்சியில் அள்ளப்படும் குப்பைகளைச் சேகரிக்க ஆரணிக்கு அருகில் சுமார் 12 ஏக்கர் நிலத்தை அரசு ஒதுக்கித் தந்து சாலை, குடிநீர், மின் விளக்கு வசதிகளைச் சீர் செய்து பராமரிக்க ஆணையிட்டு நகராட்சிக்கு கூடுதல் நிதி ஒதுக்கித் தர வேண்டுமென்று அன்போடு வேண்டுகின்றேன்.

காவிரி குடிநீர் திட்டத்தின்மூலம் ஆற்காடு வரை உள்ள திட்டத்தில் ஏற்கெனவே ஆரணிக்கு ஆற்காட்டிலிருந்து வரும் குடிநீர்க் குழாய்களைப் பயன்படுத்தி நீர் சேகரிக்கும் கிணறுகளுக்கு இணைப்பை மட்டும் வழங்கி ஆரணி மக்களின் குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்க்க அன்போடு வேண்டுகின்றேன்.

பேருந்து செல்லாத கிராமங்களே இல்லையென்ற நிலை உருவாக வேண்டுமென்ற எண்ணத்தின் வெளிப்பாடு இந்த நிதிநிலை அறிக்கையிலே சொல்லப்பட்டிருக்கின்றது. எனது ஆரணி தொகுதியில் சாலை வசதி முற்றிலுமே இல்லாத மேலேரி, சின்னப்பாண்டி போன்ற கிராமங்களுக்கும், பஸ் வசதி இல்லாத ஊர்களுக்கும் சாலை மற்றும் பேருந்து வசதிகளை ஏற்படுத்தித் தர வேண்டுகின்றேன். அதோடு ஆரணி மக்களின் நெடு நாள் கனவான கடந்த ஆட்சிக்காலத்தில் கைவிடப்பட்ட போக்குவரத்து நெரிசலைப் பெருமளவிற்குக் குறைக்க உதவும் ஒரு ஒருங்கிணைந்த பேருந்து நிலையம் அமைக்க அரசு ஆணையிட வேண்டுகின்றேன். ஏனெனில், தற்போது உள்ள மக்கள்தொகை மற்றும் சிறு

வியாபாரிகளின் கணிசமான உயர்வாலும், பேருந்து நிறுத்தம் இருந்த இடங்களில் கடந்த ஆட்சிக்காலத்தில் இலாப நோக்கத்தோடு மக்கள் நலத்தைக் கருத்தில்கொள்ளாமல் வணிக வளாகங்கள் கட்டப்பட்டதினால் பேருந்து வந்து தங்கிச் செல்ல இயலாத அவல நிலை உள்ளது. எனவே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் இந்த அவல நிலையைப் போக்க ஆணையிட வேண்டுமென்று அன்போடு வேண்டுகின்றேன்.

படிப்பிற்காக இனி நாம் பின்தங்கி இருக்க வேண்டிய நிலை இல்லை என்பதை நினைவூட்டி நமக்காக இந்த அரசு இருக்கின்றது என்பதைச் சுட்டிக்காட்டும்விதமாக ஆதி திராவிடர், பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் ஆகியோருக்கு கல்வி உதவித் தொகையும், அதை உயர்த்தி ஊக்கத் தொகையும் வழங்கி, ஆண்டு திட்ட ஒதுக்கீட்டில் ஏறத்தாழ 21 விழுக்காடுகள் ஆதி திராவிடர் நலனுக்கும், 69 விழுக்காடுகள் பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் நலனுக்காகவும் ஒதுக்கியுள்ளதை தேசிய முற்போக்கு திராவிடக் கழகம் மனதாரப் பாராட்டுகின்றது.

பிற்பகல் 2-05

பெண்கள் நாட்டின் கண்கள் என்பதற்கிணங்க, எங்களின் இதய முரசு புரட்சிக் கலைஞர் டாக்டர் கேப்டன் அவர்களின் எண்ணம்போல, இந்த நிதிநிலை அறிக்கையிலே தொட்டில் குழந்தைகள் திட்டத்திற்காக ரூ.47.45 இலட்சமும், மகப்பேறு காலத்தில் உதவித் தொகையும், திருமண வயதில் காத்திருக்கும் எனதருமை சகோதரிகளுக்குத் திருமண உதவித் தொகையுடன் 4 கிராம் தங்கமும் வழங்கி சிறப்பு செய்துள்ளதற்குப் பாராட்டுதல்களையும் நன்றியையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

தேசிய முற்போக்கு திராவிடக் கழகத்தில் மாற்றுத் திறனாளிகளுக்கு என்று ஒரு தனி அணியே உருவாக்கப்பட்டுள்ளதைப்போல இந்த நிதிநிலை அறிக்கையிலே மாற்றுத் திறனாளிகளுக்கு உள்ள சலுகைகளோடு, மனநிலை தவறி தெருக்களிலே உள்ள அனைவரையும் ஒருங்கிணைத்து, அவர்களின் வாழ்க்கையிலும் இன்பம் வீச இந்த அரசு ஆவன செய்யும் என்ற மிகுந்த நம்பிக்கை உள்ளது. (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன் அவர்கள்.



**திரு. சு. குணசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள் நட்புக்கு இலக்கணமாக இருக்கின்றீர்கள். உங்களோடு படிக்கவில்லையே என்ற வருத்தம் இப்பொழுதுதான் எங்களுக்கு ஏற்படுகிறது. (சிரிப்பு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ர.ம. பாபு முருகவேல் அவர்கள்.

**திரு. ர.ம. பாபு முருகவேல்:** திருநங்கைகளின் நலனிலே அக்கறை உள்ள அரசு அவர்களின் பாலினத்தைக் குறிக்கின்ற வகையிலே அனைத்து விண்ணப்பங்களிலும் தனிப் பகுதி ஒதுக்கி, மாவட்டந்தோறும் தொழில் பயிற்சி மையங்களை ஏற்படுத்தி, அதன்மூலம் வரும் வருவாயை அவர்களுக்கே செலவு செய்து, அவர்கள் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த வேண்டுமென்று அன்போடு வேண்டுகின்றேன்.

கடந்தகால ஆட்சியாளர்களைப்போல் இலங்கைத் தமிழ் அகதிகள் நலனிலே அக்கறை உண்டு என்று மேடைக்கு மேடை நடிக்காமல், உண்ணாவிரதம் இருக்காமல், அவர்கள் வாழ்வாதாரத்திலே அக்கறை செலுத்தாமல், உங்களுக்காக உண்மையாக நாங்கள் இருக்கின்றோம் என்று செயலிலே காட்டி, அவர்களின் நீண்டநாள் கனவினை நிறைவேற்றி, நமது தொப்புள் கொடி உறவுகளின் நெஞ்சிலே பால் வார்த்த, இந்த நிதிநிலை அறிக்கைக்கு என் சிரம் தாழ்ந்த நன்றிகள் கோடி.

நம்மில் ஒருவராக இருக்கும் பத்திரிகைத் துறையினருக்கும் மகிழ்ச்சி அளிக்கக்கூடியதாக இருக்கிறது இந்த நிதிநிலை அறிக்கை.

அரசுக்கு முக்கியமான வருவாயைத் தரக்கூடிய வணிக வரித் துறையிலே, அதை மேலும் சீர்திருத்தக்கூடியதாக உள்ளது இந்த நிதிநிலை அறிக்கை. அதனுடன் இணைந்து ஏற்கெனவே எனது ஆரணி தொகுதியில் தேவிகாபுரத்தில் இயங்கிக் கொண்டிருந்த சார்-பதிவாளர் அலுவலகத்தை மீண்டும் திறந்து இயக்கிடவும், எனது சொந்த ஊரான தேசூரில் மூடிய சார்-பதிவாளர் அலுவலகத்தைத் திறந்து இயக்கி, மக்கள் பட்டுக்கொண்டிருக்கக்கூடிய நெடுநாள் சிரமத்தை நீக்கிட, மாண்புமிகு தமிழக முதல்வர் ஆணையிட அன்போடு வேண்டுகின்றேன்.

தொகுதி மறுசீரமைப்பில் எனது ஆரணி சட்டமன்றத் தொகுதியில் செய்யாறு வட்டத்திலிருந்து 14 பஞ்சாயத்துகள் புதிதாக இணைந்துள்ளன. இவர்களின் நிருவாகச் சிரமத்தையும், நடைமுறைச் சிக்கல்களையும் போக்கி, ஆரணி தாலுகாவுடன் இணைத்து, நீதித் துறை எல்லையையும் விரிவுபடுத்தி, அவர்களின் நெடுநாளைய குறையைக் களைய அன்போடு வேண்டுகின்றேன்.

தமிழகத்திலுள்ள அனைத்து அரசு கூட்டுறவு சர்க்கரை ஆலைகளிலும் பணிபுரியும் அனைத்துத் தொழிலாளர்களையும் நிருவாகப் பணியில் உள்ளவர்களைப்போல நிரந்தர அரசு ஊழியர்களாக மாற்றி, அவர்களின் ஏறத்தாழ 20 வருட போராட்டத்திற்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் விடிவு தந்து, அவர்கள் அனைவரையும் அரசு ஊழியர்களாக்கி செய்யாறு சர்க்கரை ஆலையைப்போல் அனைத்து சர்க்கரை ஆலைகளிலும் தானே தனது தேவைக்கு மின்சாரம் தயார் செய்து, தேவை போக அரசுக்கும் தந்து உதவக்கூடிய வகையில் அரசு ஆவன செய்ய அன்போடு வேண்டுகிறேன். (மணியடிக்கப்பெற்றது) ஒரு நிமிடத்தில் முடித்துவிடுகிறேன்.

கடந்த 1987 ஆம் ஆண்டு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் முதலமைச்சராக இருந்தபொழுது நேரடி உதவி ஆய்வாளர்களாகப் பணியமர்த்தப்பட்டவர்களில் பெரும்பாலானோர் இன்று வரை துணைக் கண்காணிப்பாளர்களாக பதவி உயர்வு தரப்படாமலேயே ஆய்வாளர்களாக உள்ளனர். கடந்த பல ஆண்டுகளாக நேரடி உதவி ஆய்வாளர் பணித் தேர்வு தொடர்ந்து நடந்து கொண்டிருக்கக்கூடிய அளவினைப்போல, பதவி உயர்வு மற்றும் பணியிடங்களை அதிகப்படுத்தி பதவி உயர்விற்காகக் காத்திருக்கும் காவல் ஆய்வாளர்களுக்குப் பதவி உயர்வு தந்து, பணியிடங்களை அதிகரிக்குமாறு அன்போடு வேண்டுகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர், நீங்கள் 21 நிமிடங்கள் பேசியுள்ளீர்கள். உங்களுக்கு மகிழ்ச்சியாக இருக்குமென்று நான் கருதுகின்றேன்.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை 11-8-2011 (வியாழக்கிழமை) காலை 10—00 மணிக்குக் கூடும். வணக்கம்.



பின்னர், பேரவை பிற்பகல் 2-08 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

## 6. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### (அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

17. 2009-2010 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத்தின் ஐம்பத்து இரண்டாவது ஆண்டறிக்கை. [1962 ஆம் ஆண்டு சேமிப்புக் கிடங்கு நிறுவனச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 58/1962) 31 (11) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்)

18. 2009-2010 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மூலிகைப் பண்ணைகள் மற்றும் மூலிகை மருந்துக் கழகத்தின் இருபத்து ஏழாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்)

19. 2009-2010 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மின்னணு நிறுவனத்தின் முப்பத்து மூன்றாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்)

### (ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

15. உடுக்குறியிடாத வினாக்கள்-விடைகள் பட்டியல். (முதலாவது பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 50 வரை)

▲ ▲ ▲ ▲